தச்சனின் கதை

சிலுவைச் சித்தர்
ஜோசப் மோகன்குமார்

தச்சனின் கதை

(பொதுவுடமைச் சித்தாந்தத்தின் முதல் போராளி இயேசுவின்
வாழ்க்கை வரலாறு புதுக்கவிதையில்)

‘சிலுவைச் சித்தர்’

ஜோசப் மோகன் குமார்

பன்னாட்டுக் கிறித்தவத் தமிழ்ச் சங்கம்

(A unit of ILCC - Govt.Reg. No: 00433/22)

**(NITA Aayog Government Of India Ngo Darpan Unique
ID No. For ILCC : TN / 2022/0321174)**

தபால் பெட்டி எண்: 5313, கோடம்பாக்கம்,
சென்னை - 600 024, தென் இந்தியா.

தச்சனின் கதை!

''சிலுவைச் சித்தர்''

ஜோசப்மோகன் குமார்

2022

copyright by @

L. ஜோசப்மோகன் குமார்

வெளியீடு :

பன்னாட்டுக் கிறித்தவத் தமிழ்ச் சங்கம்
(A unit of ILCC - Govt.Reg. No: 00433/22)

(NITA Aayog Government Of India Ngo Darpan Unique ID No. For ILCC : TN / 2022/0321174)

தபால் பெட்டி எண்: 5313
கோடம்பாக்கம்
சென்னை - 600 024
தென் இந்தியா.
மின்னஞ்சல் : bishopjmk@gmail.com

விலை : 600/-

“தச்சனின் கதைக்கு” தடம் அமைத்துக் கொடுத்த,
என் தந்தைக்கு சமர்ப்பணம்!”

“செஞ்சொல்மாமணி” Rev.Dr.S. இலாரன்ஸ் அடிகளார்
தோற்றம் - 4.11.1939 மறைவு - 4.12.1996

சிலுவைச் சித்தரின் உயிரோவியம்



(மாண்புமிகு. வைகோ அவர்களின் அணிந்துரை)

மனிதநேயத்தின் அடையாளமாய் மண்ணுலகில் வாழும் மனிதர்களால் போற்றப்படும் இயேசுவின் வாழ்க்கைச் சக்கரத்தை தனது மனப்பரப்பில் ஓடவிட்டு, சிலுவைச் சித்தர் ஜோசப்மோகன் குமார் எழுதியுள்ள, 'ஒரு தச்சனின் கதை' எனும் நூல் புதுக்கவிதைப் பூக்களால் தொடுக்கப்பட்டுள்ளது. கவிதைகள் படிக்க படிக்க தித்திக்கிறது. எழுதுகோலை தூரிகையாக்கி வார்த்தை மை எடுத்து இவர் தீட்டியுள்ள கவிதைகளை வெறும் எழுத்துக்களாக பார்க்க முடியவில்லை. ஒவ்வொரு கவிதையும் உயிர்பெற்ற ஓவியமாகவே புத்தகம் முழுவதும் நிறைந்திருக்கிறது.

புத்தகத்தின் முதல் பக்கம் தொடங்கி முற்றுப்பெற்ற பக்கம் வரை வர்ணனை மழைகளால் படிக்கின்றவர்களின் இதயங்களை நனைத்திருக்கிறார். சிலுவைச் சித்தர் வார்த்தைகளைத் தேடித் தேடி கையாண்டிருப்பதாகத் தெரியவில்லை. இயல்பாகவே இவரது குருதியோட்டத்தில் குழைந்தும், குவிந்தும் கிடக்கிறது கவிதை! இயேசுவின் பிறப்பை,

மாட்டுத் தொழுவத்தின்
மத்தியத் தலையில்
நட்சத்திரம்
நங்கூரமிட்டது!

என்று குறிப்பிட்டு இருக்கிறார். என்ன அற்புதமான சிந்தனை தொழுவத்தில் பிறந்த தூயவராம் இயேசுவின் பிறப்பை இதைவிட கவித்துவமாக யாராலும் சொல்லமுடியாது என்றே எனக்குத் தோன்றுகிறது!

தனது பன்னிரெண்டு வயதில் தனது தந்தையோடு சேர்ந்து தச்சுத் தொழிலை இயேசு கற்றுக் கொண்டதை,

மனிதர்களை,
இழைப்பதற்கு முன்
மரங்களை
இழைத்து
மாதிரி பார்த்தது
மனித ஆலயம்!

என்கிறார்.

இந்த வரிகளில் கவிதைகயின் ஆளுமையும் இருக்கிறது! கருத்தின் முழுமையும் இருக்கிறது.

கடுகுச் சூரியனை
காணவில்லையே?

கடலில் விழுந்த
நட்சத்திர மீன்
கண்டுபிடிப்பது எப்படி?

உயிரைத் தொலைத்துவிட்டு
ஊருக்குத் திரும்புவதா?

இயேசுவின் பெற்றோரான மரியாளும், யேசேப்பும் யூதர்கள் கொண்டாடும் பஸ்கா பண்டிகையில் தனது மகனை தொலைத்துவிட்டு அழுது புலம்புவதை இவ்வாறு நெஞ்சம் நெகிழ தந்திருக்கிறார்.

'தாசியின் தைல அபிஷேகம்' என்ற தலைப்பிலான கவிதையில்,

அவள்...
வாடகைக்கு சுகம்தரும்
வசந்தம்!

தன் பசியைத் தணிக்க
பிறர் பசிக்குப்
பிய்கப்படும் ரொட்டித்துண்டு!

என்கிறார்.

ஒரு பெண் வாழ்க்கை வழிதவறி, நெறிதவறி, தன்னுடைய பயணத்தை பண்பாட்டுக்கு விரோதமான பாதையில் தொடர் வதற்கு அவளது பசியே காரணம் என்று எழுதியிருப்பதன் மூலம் விபச்சாரிகள் உருவாகுவதில்லை; இல்லாமை உருவாக்குகிறது என்ற உண்மையான உண்மையை உணர்த்தி இருக்கிறார்.

இயேசுவின் மன்னிக்கும் குணம் குறித்து தீட்டியுள்ள கவிதையில்,

ஆணிகளையே
மன்னித்த உதடுகள்
அருகம்புல்லை
சபிக்குமா?

என்ற வரிகள் குன்றின் மேலிட்ட விளக்காய் பிரகாசிக்கிறது.

கருணை உருவாய் கற்பகத்தருவாய் உலாவந்த இயேசுநாதர் தன்னுடைய வாழ்நாளில் நிகழ்த்திய அற்புதங்களை கவிதை நீரோடையாக புத்தகம் முழுவதும் ஓடவிட்டு இருக்கிறது.

முப்பது வெள்ளிக் காசுகளுக்காக இயேசுவைக் காட்டிக் கொடுத்த கயவன் யூதாஸ் உலகெங்கும் வாழும் கிறிஸ்துவ மக்களின் மனங்களில் ஒரு கரும்புள்ளியாகவே பதிந்து இருக்கிறான்!

இனி எத்தனை நூறாண்டுகள் ஆனாலும் யூதாஸ் என்கிற அந்தத் துரோகப் பெயர் தூய்மை பெறாது.

நம்பிக்கை எனும் தீபத்தை அணைக்கிற நயவஞ்சகர்களுக்கு வரலாற்றின் பக்கங்களில் இடம் கிடையாது.

காட்டிக் கொடுத்த கயவன் யூதாஸை நெருப்பு வார்த்தைகளால் சாடுகிறார் சிலுவைச் சித்தர்,

பருகிய தாய்மடியை
பற்களால் கடித்த
பச்சோந்தி யூதாஸ்!
காலத்தின் அடிக்குறிப்பில்
கரும்புள்ளி எச்சமானான்!

என்கிறார்.

இயேசுவை குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி ஆபாச வார்த்தைகளால் கொடியவர்கள் அர்ச்சனை செய்த காட்சியை நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறார் கவிஞர்!

சிவப்புச் சூரியன்
சிறைக்கு வந்தது!
வக்கிர வண்டுகள்
ரோஜாவைப் பிழிந்து
ரத்த அத்தரை
ரசித்துச் சுவைத்தன!

சிலுவைச் சித்தர் எழுத்துக்களில் கவிதை இல்லை.

கவிதைகளே அவர் எழுத்துக்கள் முழுவதும் வியாபித்துக் கிடைக்கின்றன.

''பூமியைக் கைபந்து விளையாடிய புல்லுருவிகள்'' எனும் தலைப்பில் மகுடமாய் அமைந்திருக்கிறது கவிதையில்,

ஒப்பாரிகளின்
தீ முத்தங்களால் –
தேகத்தில் கொப்புளங்களுடன்
தேசிய கீதம்!

என்கிறார்.

இயேசு எனும் தேசிய கீதத்தை அற்பர்களின் ஒப்பாரிகள் அர்ச்சித்ததைப் பற்றி எழுதப்பட்டு உள்ள கவிதை ஈட்டியின் கூர்மைகொண்டு எழுந்து நிற்கிறது. எதிரிகளின் இதயத்தை குத்திக் கிழிக்க வாய்ப்பு இல்லையே என்கிற ஏக்கத்தோடு!

இயேசுவின் வாழ்க்கை வரலாற்றை விரல் நுனியில் வைத்து தனது கவிதைகளால் வித்தகம் புரிந்திருக்கிற சிலுவைச் சித்தர். ஜோசப் மோகன் குமார் கவிதை, வானத்தில் ஜொலிக்கும் நட்சத்திரம் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகம் எழவில்லை.

இயேசுநாதர் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறார். அழுகை ஒலிகளில் உலகம் ஆழ்ந்து கிடக்கிறது. தனது செல்லமகன் திருக்குமாரன் இயேசு, சிலுவையில் அறையப்பட்டு இருக்கிற காட்சியைப் பார்த்து அவரது தாய் மரியாளின் உள்ளம் தவியாய் தவிப்பதை,

'தாய் மரியாளுக்குத்
தன் கருப்பையே
சிலுவையில் தொங்குவதுபோல்
சிந்தனைக்குள் ரத்தம் சொட்டியது,'

என்கிறார் கவிஞர்.

புத்தகம் முழுவதும் கவிதைத் தேன்கூட்டை கட்டியிருக்கிறார்.

'ஒரு தச்சனின் கதை' என்ற இந்தக் கவிதைப் புத்தகம் ஒவ்வொரு கிறிஸ்துவ மக்களின் கையில் இருக்கவேண்டிய கவிதை பைபிளாகவே நான் கருதுகிறேன். இலக்கியங்களை ருசித்து வாழும் மக்களுக்கு சிலுவைச் சித்தரின் இந்தக் கவிதை நூல் அள்ள அள்ளக் குறையாத அட்சயப் பாத்திரமாகும்.

வாழ்க கவிஞர் ஜோசப் மோகன் குமார்!

வளர்க அவரது எழுத்தோவியம்!

தங்களன்புள்ள,

வைகோ
''தாயகம்''
மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்

கருப்புக் குயிலின் நெருப்புக் கவிதை

(செவாலியர் Dr.V.G. சந்தோசம் அவர்களின் அணிந்துரை)

எல்லைகளைத் தாண்டி, எதிர்த்துவிடும் சூறாவளி சூழற் காற்றை தன் வலிமை மிக்க இரும்பு இறக்கைகளைக் கொண்டு கிழித்து அலுமினியப் பறவையாய்ப் பயணித்திருக்கிறது இந்த சிலிகான் கவிதைப்பறவை.

இது தன் கூரிய அலகுகளால் பூமியை மட்டுமல்ல வானத்தையும் கீறி வைத்தியம் பார்த்திருக்கிறது.

பொத்தலாகிப் போயிருக்கும் ஓசோன் வளி மண்டலத்தை ஒட்ட வைக்கும் கஜகர்ண பிரயத்தனமும் எடுத்திருக்கிறது.

பதவி சிம்மாசன பெட்டிக்குள், பதுங்கிக் கிடக்கும் முகமூடி மனிதர்களின் முகத்திரையைக் கிழித்து முச்சந்திக்குக் கொண்டு வரும் இந்த அக்கினிக் குஞ்சு மகாகவி பாரதியின் நிமிர்ந்த மீசையை எழுதுகோலாக்கி எழுந்து வந்திருக்கிறது; எழுத வந்திருக்கிறது!

ஜோசப் மோகன் குமார் எனும் இந்த புதுக்கவிதை வானம் பாடியின் பூபாளச் சிந்தனைகள் ஆழ்கடலின் அலைகளாக ஆர்ப்பரிக்கும் அமில எழுத்துக்களாய் தீமைகளைச் சுட்டெரிக்கும் என்பது, இந்நூலைப் படிக்கும் ஒவ்வொரு உள் மனதிற்கும் புரியும்; விளங்கும்! ஆன்மீக நூல் தான் இது! ஆனால், ஆண்டவரின் பிரதிநிதியாக ஆங்காங்கே அணுகுண்டுகளை விதைத்திருக்கிறார்!

புதுக்கவிதைதான்! ஆனால், புனலிலும் கனலிலும் புது சோதனை பெற்று புத்தம்புது சொல்லாக்கமும் சொற் பிரயோகமும் பார்க்கும்போது, இவர் பயன்படுத்தும் ஒவ்வொரு சொல்லும் எந்த அகராதியில், நிகண்டுகளில் புஷ்பித்தன? இவர் மூளைச் சுரப்பிக்குள் பூத்த முத்துக்கள் தான் என்பது பெருமைக்குரியதாகும்!

ஆம், முப்பது ஆண்டுகளுக்கு முன்பாக வந்திருக்க வேண்டியவர். இப்போது வந்திருக்கிறார். (இப்போதாவது வந்திருக்கிறாரே!!)

இவரது தொலைநோக்குப் பார்வையும், இவர் கொண்டுள்ள நெஞ்சுறுதியும், வார்த்தை வாள்வீச்சும், சமூகத்தின் மேல் இவர் வைத்திருக்கும் அக்கறையையும் பார்க்கும்போது எனக்கு பாரதி யின் முகமே பிரதிபலிக்கிறத. அதனால் பாரதியின் வரிகளாலே இவரை வாழ்த்துகிறேன்.

''அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் - அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்!
வெந்து தணிந்தது காடு - தழல்
வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?
தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்''

''என்மௌனம் உடைபட்டுப்போன கவித்துவ வேளையில், புலன்களின் பௌதீகப் பரப்பில் பூக்கள் கூடி ஒரு மோட்சத்தை சிருஷ்டிக்க முனைந்தன, ''எனத் தொடங்கும் இவரது தொடக்க வுரை வார்த்தைகள் - 'தரைக்கும் வானுக்கும் இடையே நிகழ்ந்த தறிநெசவு' என்னும் இவரது என்னுரை புதுயுகத்தின் புலர்காலைப் பொழுது.

பரிசுத்த வேதாகமத்தைப் பார்த்தால்
பிதா தன்னை குயவன் என்கிறார்.
இதோ குமாரன் தச்சன் மகன் என்பதால்
தச்சன் ஆகிறார்.

விஸ்வ கர்மா வகுப்பினர் சொந்தம் கொண்டாடுவதற்கு முன்பு இக்நூலாசிரியர் 'தச்சனின் கதை' என்று கூறுவதற்குத் தன்னை முன்னிலைப்படுத்தி முத்திக் கொண்டது பாராட்டுக்

குரியது! நாமும் தச்சனின் வாரிசுகள் அல்லவா? கதை சொல்லத் தொடங்கும்போதே இவரது எழுத்துக்கள் கம்பீரமாக நிமிர்ந்து கர்வம் கொள்கின்றன! இதோ அந்தரங்கப் பிரபஞ்சம் ஆரம்பமாகிறது.

''ஆதியில் நாபியில்
அரூபவாக்கு உதித்தது!

அரூபவாக்கு
அக்கினில் பிழம்பாய்
ஜனித்தது.

பிரபஞ்சம்
பிதாவால்
பிரசவமானது!

பிதா
உயிர்திரியின்!
ஒளி உடை!

அந்தகாரம் அதை
உடுத்தவில்லை.

பூமி
பிதாவின்
சுட்டுவிரலால்
சூலானது.

சூலான பூமியே
சூதாக அவரை
மறுதலித்தது.

''அழகிகளின்
கார் கூந்தல்களில்
ஆட்சியைத் தொலைத்த
ஏரோது,
எறும்புகளை

தடியால் அடித்து
இன்புறுகிறவன்''

கிறிஸ்து காலத்து ஆட்சியாளனின் நிலை.

முதிர் வயது கிழத்தன்மையடைந்தவர்களைத் தன் புதுக் கவிதையால் மெருகூட்டுகிறார் கவிஞர்:

''சக்கரியா
எலிசபெத்
இல்லறத்தின் எல்லையில்
இளைப்பாறும் தம்பதியர்!

பருவத்தின்
பழுத்த காம்பில்
உதிரத் துடிக்கும்
உயிர் பூக்கள்!

மேலும், அந்த முதிர்வயதில் அவர்கள் பிள்ளைப்பேறு பெற்றனர்.

அதை வர்ணிக்கும் கவிஞர்,

''பிதாவின்
ஒளிச்சேர்க்கையில்
பரிசுத்த பிள்ளைகள்
பச்சையம் சேகரித்தனர்.

வாக்கின் வித்து
நீதியின் மனுவாய்
நெருப்புத் தோலுரித்தது!
யோவான் எனும்
மனு மைந்தன்
பிதாவின் பிரதி!
அருளும் சத்தியமும்
அவரது குருதி!

''வானத்தின் வாசற்படி'', என்னும் அத்தியாயத்தில் மரியாளை விமர்சிப்பதில் எம்மைக் கவர்ந்த வசந்த வரிகள்:

''விண்ணுக்கும்
மண்ணுக்கும்
மனித மின்கடத்தியான
மரியாள்
அக்கினியைப் பதியமிடும்
அதிசய நிலமானாள்.

மூலநூலான புதிய ஏற்பாட்டின் நான்கு நற்செய்தி நூல்களில் முழுமைப் பிழிவாக 'தச்சனின் கதை' பிரதிபலிக்கிறது.

புதுக்கவிதை ஊடகத்தில் புனர் ஜென்மம் எடுத்த இயேசு காவியம்.

இது,

எதைக் எடுத்துக்காட்டுவது?

எதை விட்டுவிடுவது?

எல்லாமே தேனில் ஊறிய பலாச்சுளைகள்! இவருக்குள் சங்கீதம் உண்டு, நீதிமொழிகள் உண்டு, உன்னதப்பாட்டு உண்டு. புலம்பல் உண்டு, யோபுவின் நடை உண்டு, பிரசங்கியின் பிரசங்கம் உண்டு, எல்லாமே உண்டு, சுருக்கமாக கூறுவதென்றால் இவருக்குள் தேவ திரித்துவம் உண்டு!

முடிவாக, இலக்கியம் என்பது வாழ்க்கையை உலகியல் நிகழ்வுகளை ஆராய்ந்து கூறும் அறிவியல் ஆகும். ஏனைய கலைகளைவிட நிலைபேறு வாய்ந்த கலை இலக்கிய கலையாகும். இது மனித இனத்தின் தனிப்போறன மொழியின் வெளிப்பாடு. மனத்தைப் பண்படுத்துவதும், சிந்தனையை விரிவுபடுத்துவதும் இதன் சிறப்புகள்.

அறிஞர் சி.டி.வின் செஸ்டர் கூறுகிறார்: ''இலக்கியக் கூறுகளுள் முதன்மையானது உணர்ச்சி. இது நிலையற்றது. எனினும் இலக்கியத்திற்கு நிலை பேற்றைத் தருவது உணர்ச்சியாகும். உணர்ச்சி எண்ணற்றது, அதை வரம்பிடவோ, வகைப்படுத்தவோ முடியாது,'' மேலும் அவர், ''ஓர் இலக்கியத்தில் இடம்பெறும் உணர்ச்சிகள் நியாயமானதாக, ஆற்றலுடையதாக, நிலைத்ததாக,

பலவகைப்பட்டதாக, மேம்பாடுடையதாக இருக்கவேண்டும்'' என்று கூறுகிறார். அந்த அளவில் அருள்திரு டாக்டர் சிலுவைச் சித்தர், ஜோசப் மோகன் குமார் அவர்கள் அறிஞர் வின்செண்டர் கூறும் இலக்கணங்களுக்கும் உள்பட்டு இயல்பாகவே உணர்ச்சிப் பெருமழையாகப் பொழிகிறார்.

பொதுவாக, இலக்கியத்தில் இடம்பெறும் செய்திகள் எல்லாக் காலங்களிலும், எல்லா மக்களாலும் போற்றப்பெறும் உயர்ந்த கருத்துக்களே காலந்தோறும் வெவ்வேறு செய்திகளின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது.

இந்நூலாசிரியர் தன் இலக்கிய வடிவமாக 'புதுக்கவிதையைத் தேர்ந்தெடுத்து இருக்கிறார். படைப்பாளி தன் படைப்பை அதாவது உணர்ச்சி, கற்பனை, கருத்து என்னும் கூறுகளை வெளியிடுவதற்கு மேற்கொள்ளும் உத்தியே வடிவமாகும். இலக்கிய மாளிகை சொற்களால் கட்டப்படுவது. சொற்கள் ஒருமுகமாக இயங்கி முழுமை பெறுதலே வடிவமாகும். 'எல்லா சொற்களும் பொருள் குறித்தனவே' என்று கூறுகிறார் தொல்காப்பியர்.

'தச்சனின் கதை' புதுக்கவிதை புத்தாடை புனைந்து புதுமைப் காவியமாக பரிமளிக்கிறது. இந்நூலாசிரியரின் கனமான கவிதைகள், ஆழமான பொருட்செறிவுடன், அமுதமாக, ஆங்காங்கே பொங்குமா கடலாக, புரண்டு வரும் புயலாக உலகின் ஒட்டுமொத்த புரையோடிப்போன சமுதாயச் சீர்கேடு களைக் களையெடுக்கின்ற ஒரு காவியமாகவே இந்நூலைப் படைத்துள்ளார். உலகை சீர்திருந்த சிலுவையைத் தேர்ந் தெடுத்தார் இயேசுநாதர். இக்கவிஞரோ, சிலுவை நாயகனின் கதையைத் தன் சிற்றுளியாக் கொண்டு உலகைச் செதுக்குகிறார். இந்நூலைப் படிக்கும், படித்தவர் முதல் பாமரர் வரை மனம் திரும்புவது உருகாத மனமும் உருகும் என்பது சத்தியம் அது நித்தியம்.

சிலுவைச் சித்தர் அருள்திரு டாக்டர் எல். ஜோசப் மோகன் குமார் அவர்கள் பன்னாட்டு கிறிஸ்தவ தமிழ் சங்கத்தை, உரு வாக்கி மிகத் திறம் பட இலக்கியப் பணி செய்து வருகிறார். இவர் ஒரு இறையியல் பேராயர் என்பதால், திரைப்பட உலகினர் கிறிஸ்துவை அறிந்து கொள்ளும் பொருட்டு 'கோலிவுட் டூ கொல்கொதா' என்னும் திரைப்பட திருச்சபையை உருவாக்கி,

அவர்களுக்காக இறை வழிபாடு நடத்துகின்றார்! இவருடைய தாகம், அர்த்தமுடையது! மானுடம் தழைத்தால் மட்டும் போதாது, அது ஆரோக்கியமானதாக அமைய வேண்டும் தாலந்துகள் அனைத்தின் வழியாக பெரும போராட்டங்களுக்கு மத்தியிலும் எதிர் நீச்சல் போட்டு வெற்றிகொண்டு வருகிறார்.

கவிதையோடு நின்றுவிடாமல், திரைப்படத்துறையில் இயக்குநராக புதுமைப் படைத்து வருகிறார். காற்றுக்கு வேலி இல்லை என்பது விண்ணுக்கு ஏறும் மின்சார இதயம் கொண்டு மிரட்டும் இவரது கவிதைகள் காலத்தால் அழியாதவை,

குகைக்குள் இருந்த இந்த கவிதைப் புலி குடிசைகளிலும், கோபுரங்களிலும் நுழைந்து வருகிறது.

கிறிஸ்தவ கம்பன் உண்டு!
கிடைத்துவிட்டார் எங்களுக்கோர்
கிறிஸ்தவ ஒட்டக் கூத்தன்!

ஆம்! ஒட்டக்கூத்தனின் விழிப்பும், விசாலப் பார்வையும், வீரமும் இவரிடத்தில் காண்கின்றேன். 'கிறிஸ்தவ ஒட்டக் கூத்தன்' ஜோசப் மோகன் குமார் கீர்த்தி மிகு கவிஞனாக இப்பிரபஞ்சத்தில் புகழோங்கி, மேலும் பல இலக்கியங்களைப் படைத்திட வாழ்த்துகின்றேன். இவரது இறைப்பணி சிறக்கவும், கலைப்பணி வளரவும் இறைவனை வேண்டுகிறேன்

தச்சனாக வந்த அச்சன் கிறிஸ்து! வாழ்க!

தகுந்த நேரத்தில் இந்நூலைப் படைத்த கவிஞன் வாழ்க!

என்றும் அன்புடன்

கலைமாமணி. செவாலியர். டாக்டர் வி.ஜி. சந்தோசம்
உலகத் தமிழ்ச் சங்கம்
V.G.P. நிறுவனங்கள்

தரைக்கும் வானுக்குமிடையே நிகழ்ந்த தறி நெசவு!

என்னுரை

என் மௌனம் உடைபட்டுப்போன கவித்துவ வேளையில், புலன்களின் பௌதீகப் பரப்பில் பூக்கள் கூடி ஒரு மோட்சத்தை சிருஷ்டிக்க முனைந்தன! திசைகளின் குறுக்குவெட்டு கீழ் பரப்பில், அமிழ்ந்து போனது எனது உயிர்! இயேசுவை எழுதாத போதெல்லாம் என் எழுதுகோலின் மார்பில் பால் கட்டிக் கொள்கிறது!

முறிந்த சிறகுகள் அடுக்கி வைக்கப்பட்ட ஒரு சவக் கிடங்கில், உயிர்ப்பின் வெள்ளப் பெருக்கால் குஞ்சு பொரித்து வந்தது ஒரு கொதிக்கும் சூரியன்! பிளவுபட்ட பள்ளத்தாக்கு களின் கீழ், ஒரு பாறையின் மீது படுத்துக் கிடந்த நெருப்பு நட்சத் திரம், நிமிர்ந்து நெட்டி முறிக்கிறது. அடிமைகளின் முதுகில் அமர்ந்து கொண்டு இவனது கண்ணீரை கேலி செய்தவர்களைக் கண்டு, இவனது கவித்துவக் கதிர்வீச்சுக்கள் முடங்கிப் போக வில்லை; முழு வேகத்துடன் முட்டி முளைத்தன!

போக்குவரத்து நெருக்கடியில், வாகனத்துச் சக்கரத்தினடி யில், நசுங்கிப் பிதுங்கிய நாயாக மனிதநேயம்! இயேசு கிறிஸ்துவின் பொதுவுடைமை தத்துவத்தை புரிந்துகொள்ளாமல், நிலவுடமைப் பரவல்களாக, நீதியை புதைத்துக் கொண்டிருக்கும், முதலாளி வர்க்கத்தின் முடிவுரையின் ஆரம்பம் இது!

இயேசுவின் வாழ்வில் பல பரிமாணங்களை உள்ளடக்கிய இந்த கவிதைக் களம்; வெறும் வர்ணனை மட்டுமல்ல; வர்க்கப் போராட்டத்தின் வரலாற்றுக் குரல்! இந்த நீண்ட நெடும் நெசவிற்கு என் நெற்றியை தொட்டு ஆசீர்வதித்தவர் இயேசு!

திருமறை, தன்னை அச்சுக் கோர்த்தவர்களை எண்ணி அழுகிறது! சாதி அரசியலில் சங்கமித்துக் கிடக்கும் ஆதிவழி திருச்சபைகள், இயேசுவின் இறைவாழ்வை இன்னும் ஆழமாக பின்பற்ற வேண்டும்! கதிர்களை மெல்லும் களைகளின் காலம் இது! பலிபீடங்களைச் சுற்றி பார்வோன்கள்!

ஆணிகள் அறைப்பட்ட கரங்களில் இருந்து சொட்டும் இரத்தத் துளிகளைச் சுவைக்கக் கூடியிருக்கும் சூதக ஓநாய்கள்! அழுகையில் வெம்பி வதங்கிய இருதயங்களை பரிசீலிக்கத் தவறிய பாசீசமதவாதிகள். சொல்லப்பட்டவைகளைச் சொல்லாமல், சொல்லப்படாதவைகளைச் சொல்லிக் கொண்டிருக்கும் மாயா ஜால ஊழியர்கள்! முதல் வருகையின் முக்கியத்துவத்தை மூழ் கடித்த இரண்டாம் வருகை குறித்த இரைச்சல்கள்.

வெடித்துப் பிளந்த விறகுபோல் கிடக்கும் இவனது சரீரத்தின் மீது, கண்ணுக்குத் தெரியாத ஒரு கரம் கருணையுடன் ஆசிகளைப் பொழிந்தது! இவனது மனக்கொப்புளங்களைக் கண்டால் சாம்பலும் அருவருக்கும்! அயோக்கியத்தனங்கள் கிளை பரப்பிய இவனது ஆன்மா. விண்ணரசின் விருந்து மேசைகளின் கீழ் ஒரு நாய்க்குட்டியாக அமர்ந்து தன் எஜமானனின் இரக்கத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது!

இதோ! இந்த நூற்றாண்டின் இடிபாடுகளில் சத்தியத்தை சாந்து பூசி ஒலிக்கும் இந்தக் குரல், இன்னும் பல நூற்றாண்டு களுக்குள் நுழைந்து, காற்றினுள் கலந்து, காகிதங்கள் வழியாக கண்களுக்குள் புகுந்து, இதை எதிர்கொண்டு வரவேற்கும், சிந்தனையின் ஜீவ கர்ப்பத்தில் சிதறி ஒலிக்கட்டும்!

என் தந்தையே! இந்தக் கசப்புறும் பாத்திரத்தில், இதய உதடுகள் சுவைப்பதற்கான இந்த இனிப்பு ரசத்தை எப்படி நிரப்பினீர்?

அனைத்தும் உமது கரங்களால் ஆசிர்வதிக்கப்பட்டவை! காலங்களைத் தாண்டி இந்தக் கவிதைப் பயணம் எல்லைகளை அடைய இறைவா! உம்மை வேண்டுகிறேன்!

தன் இடைவிடாத தமிழ் விடுதலை போராட்டத்திலும், நேரம் ஒதுக்கி, கவிதைகளை முழுவதும் படித்து, அன்போடு அணிந்துரை வழங்கிய மாபெரும் தலைவர், வைகோ அவர்களுக்கும், தமிழ் கவிஞர்களை தழுவி அணைத்து, தன் மோதிர விரல்களால் தட்டிக் கொடுத்து, என்னையும் அதில் இணைத்து அணிந்துரை வழங்கிய கவிச்சக்கரவர்த்தி, செவாலியே, V.G.P. சந்தோசம் அவர்களுக்கும், என்னை நேரிடையாகவும், மறைமுகமாகவும் தாங்கி வரும், அன்புச் சொந்தங்களுக்கும் என் ஆன்மாவிலிருந்து நன்றிகள்!

இறை இலக்கியத் திருப்பணியில்...

''சிலுவைச் சித்தர்''

ஜோசப் மோகன் குமார்

தலைவர்

பன்னாட்டுக் கிறித்தவத் தமிழ்ச் சங்கம்

சென்னை - 600 024

பாதையின் பருவ நிலைகள்!

1. பாகம் - 1 - பக்கம் - 21
விதைக் காலம்
(வானமும் - பூமியும்)

2. பாகம் - 2 - பக்கம் - 71
மழைக் காலம்
(சக்தியும் - முக்தியும்)

3. பாகம் - 3 - பக்கம் - 84
அறுவடைக் காலம்
(அற்புதங்களும் - ஆற்றுப்பணிகளும்)

4. பாகம் - 4 - பக்கம் - 253
கோடைக் காலம்
(இரத்தமும் - வேர்வையும்)

5. பாகம் - 5 - பக்கம் - 436
இலையுதிர்காலம்
(இருளும் - ஒளியும்)

6. பாகம் - 6 - பக்கம் - 543
வசந்தக் காலம்
(தூய்மையும் - துதியும்)

§

பாகம் 1

விதைக் காலம்!

(வானமும் – பூமியும்)

ரத்தம் சொட்டும் ரண வேர்கள்!

ஏன் சிலுவை
இதழ்கள்
துளிர்த்தது!
இதோ...!
மகிழ்ச்சி மன்னா!

மெய்யாகவேச்
சொல்லுகிறேன்;
கல்லறை புரண்டது,
கவிதைச் சூலுடைத்து
கம்பீரமாக உயிர்த்தேன்!

இரவுகளை பகலாக்கும்
இந்த உஷ்ணம்,
சூரியனைப் பிழிந்தச்
சுடுசாறு!

அடிமைகளே!
தர்மத்தின் தாழ்வாரத்திலிருந்து
தலைவன் கிளர்கிறான்;
தளைகளை அறுங்கள்!

●

அந்தரங்கப் பிரபஞ்சம்!

ஆதியின் நாபியில்
அரூபவாக்கு உதித்தது;
அரூபவாக்கு,
அக்கினி பிழம்பாய்
ஜனித்தது!

பிரபஞ்சம்,
பிதாவால்
பிரசவமானது!
பிதா,
உயிர்திரியின்
ஒளி உடை;
அந்தகாரம் அதை
உடுத்தவில்லை!

பூமி
பிதாவின்
சுட்டுவிரலால்
சூலானது;
சூலான பூமியே
சூதாக அவரை
மறுதலித்தது!

பிதாவின்
ஒளிச்சேர்க்கையில்,
பரிசுத்த பிள்ளைகள்
பச்சையம் சேகரித்தனர்!

வாக்கின் வித்து
நீதியின் மனுவாய்
நெருப்புத் தோலுரித்தது!
மனுமைந்தன்
பிதாவின் பிரதி;
அருளும் சத்தியமும்
அவரது குருதி!

இதோ!
தேவனின் திருக் குழம்புகள்
திருமைந்தனில்
தெறித்து வழிகிறது!

கைகளை உயர்த்திக்
களிகூருங்கள்;
விலங்குகள் தெறிக்க...
விடுதலையைப் பறிக்க...
அடிமைகளின் கோடரி,
அநீதியின் விலாவில்
ஆழமாக விழுகிறது!

●

சூரியனுக்கு முன் நற்செய்தி நட்சத்திரம்!

கலாச்சாரக் கலைகளின்
கலவை இயந்திரமாகப்
பாலஸ்தீனம்...
கலிலேயா,
சமாரியா,
யூதேயா என,
முத்தமிழாய்
ரத்தின கம்பளம்
விரித்திருந்தது!

முத்தமிழின்
முதற்தமிழ்
யூதேயா...
யூதர்களின்
மண் தொட்டில்!

ஆளும் அரசன்
ஏரோது...
மதுக்குவளையை
சிம்மாசனமாக்கி
மயங்கிக் கிடப்பவன்!

அடிமைகளின்
அழுகுரல்களை
பள்ளி எழுச்சிப் பாடல்களாகப்
பழகி விழிப்பவன்!

அழகிகளின்
கார் கூந்தல்களில்
ஆட்சியைத் தொலைத்த
ஏரோது,
எறும்புகளைத்
தடியால் அடித்து
இன்புறுகிறவன்!

எலும்புக் கூடுகளுக்கு
வர்ணம் அடிக்கும்
எதேச்சியதிகார ஆட்சியில்,
கசாப்பு ஆடுகளாக
மக்கள் -
கணக்கெடுக்கப்பட்டனர்!

நீதி,
நிறைமாதமாக
மூச்சுத் திணறியது!

யூதேயா!
தன்னில் ஒரு
தத்துவ அணுகுண்டு,
விதையாக
விழுவது தெரியாமல்,
உறங்கும் பைத்தியக்காரனாய்
உதடுபிளந்து கிடந்தது!

சக்கரியா,
எலிசபெத்!
இல்லறத்தின் எல்லையில்
இளைப்பாறும் தம்பதியர்!

பருவத்தின்
பழுத்த காம்பில்
உதிரத் துடிக்கும்
உயிர் பூக்கள்!

ஆலய ஆசாரியனான
சக்கரியாவின் -
இதய அடிவாரத்தில் ஒரு
ஏக்க விரிசல்!

இறைபணிக்கு
வாரிசு இல்லாதது
வருத்தம்!

தாய்மடி
தாகம் தணிக்காமலேயே
வற்றிப் போனது!
தந்தையின் மார்பு
மகனுக்கு
மைதானமாகவில்லையே?

வருத்தத்தில்,
இருபது வயது
இன்னும் கூடியது!

கண்ணீரே
காயங்களுக்கு
ஒத்தடமானது!

வானம்,
மொட்டவிழ்ந்த
விடியல் பொழுது!

தூபச்சீட்டு பெற்று,
இறை இல்லத்தை
கண்ணீரால் மொழுகினார்
சக்கரியா!

அடித்தள மக்களை
ஆலயத்தினுள்ளே,
நுழைய விடாத
நூற்றாண்டு அது!

வழிபாட்டு மனையின்
வாசலில்,
மழை மேகங்களாய்
மக்கள்!

உள்ளே...
எள் சிந்தினாலும்
இடிவிழும்
அமைதி!

வானம் தன்
முதல் கடிதத்தில்
முத்திரை குத்தியது!

வெளிச்சம்
சிறகு விரித்த
விந்தை!

மழைக்குமுன்
தூறலாய்,
இறை தூதன்
சிறகு விரித்தான்!

வெளிச்ச உதட்டிலிருந்து
வெள்ளிக் காசுகள்
விழுந்து சிதறின;

‘‘சக்கரியாவே!
துயர பிசுக்குகளைத்
துடைத்தெறி!

எலிசபெத் ஒரு இளவரசனை
ஈனுவாள்!

எலியாவின் ஈவுகளை
சுவிகரித்த அவனுக்கு,
‘யோவான்’ என
பெயரிடு!

இஸ்ரயேல் மக்களை
இறையரசுக்குத் திருப்பும்
திசைகாட்டி அவன்!’’

உறைந்த சக்கரியாவின்
உதடுகள் தந்தியடித்தன;
இடுங்கிய கண்களுக்குள்
குழப்பத்தின் கும்மி!

அச்சத்தில் வார்த்தைகளை
அரைகுறையாக
அச்சுகோர்த்தது
நாவு;

‘‘மலட்டு விதை
முளைக்குமா?
முதுமையில் இது
முடியுமா?’’

ஐயம் அப்பிய
அடர்ந்த கேள்வி!

பிரகாசம்
பேசியது;

‘‘கடவுளின் பிரதிநிதி
காபிரியல் தூதன்
நான்!
தகவல் வழங்கவே
தரைக்கு வந்தேன்!
இதோ...!
உண்மை உயிர்க்கும் வரை
ஊமையாவாய்!’’

காற்றின் ரங்கோலி
கலைந்தது!

சக்கரியாவின் நாவு,
கருமியின் பணப்பெட்டியாக
மூடிக் கொண்டது!

சைகையில் பேசிய
சக்கரியா,
மக்களின் கேள்விகளுக்கு
மத்தளமானான்!

தலையில் கவிழப்போகும்
தண்ணீர் குடத்தையறியாமல்,
போதையில் சுற்றியது
பூமி!

●

வானத்தின் வாசற்படி!

காலம் தன்
மேசையிலமர்ந்து
ஆறு மாதங்களைப்
புசித்தது!

கலிலேயாவின்
இடுப்புக் குழந்தையாக
நாசரேத்!

தாவீதின் தலைமுறையில்
இரு இதயங்களுக்கு
இனிப்பு ஒப்பந்தம்!

யோசேப்பு,
மரியாள்!

கனவு கைக்குட்டையால்
முகம் துடைக்கும்,
கல்யாண பருவம்!

மரியாள்...
சொற்களுக்குச் சிக்காத
சுகந்த கவிதை!

தங்கமுலாம் பூசாத
தாமரை முகம்!

பூக்கள் -
கன்னத்தில்
கைவைத்து
புலம்பும் அழகு!

கற்பை சுவாசமாக
கருதி வாழ்பவள்!

கற்பனைகளில் குளித்து
நிலவில் தலை துவட்டி,
திருமணத் தேதியை
தீண்டும் தருணம்,
வானத்தின் கரம்
வாசலைத் தட்டியது!

மரியாள் தனித்திருந்த
மாலைப்பொழுது,
காபிரியல் தூதன்
வெயில் கீற்றாய்
வீட்டுக்குள் நுழைந்தான்;

‘‘பெண்களுள்
பேறு பெற்றவளே,
வாழ்க!’’

மரியாளின் விழிகளில்
யுத்த கலவரம்!
வேர்வைக்கும்
வேர்த்தது!

தூதனின் குரல்
சாமரம் வீசியது;
‘‘அஞ்சாதே!
இதோ...
கடவுளின் ஒளியால்
உன்
கருவறை நிறையும்!

ஆவியின் வடிவாக
ஆண் மகவை
ஈணுவாய்!
பிறக்கும்
பிஞ்சு நிலவுக்கு,
‘இயேசு’ என
பெயர் சூட்டுவாயாக!

அவர்,
தாவீதின் தலைமுறைக்கு
தங்க கிரீடம்!

யாக்கோபின் தலைமுறைக்கு
நீதி நிழற்குடை!

இரவுகளை
விடியவைக்கும் அவரது,
இறையரசுக்கு
எல்லை இல்லை!’’

மரியாளின் நெற்றியில்
காற்றிலாடும்
கவலை இலைகள்!

உழப்படாத நிலம்,
அறுவடைக்கு ஆயத்தமா?

திருமணமாகாமல்
கர்ப்பமெனில்,
தீயை உமிழாதா
திசைகள்?

சொற்களால் கொலை செய்யாதா
சொந்தங்கள்?

தலைகுனிந்த கேள்விகளை
முகம் நிமிர்த்தினான்
தூதன்;

''பயப்படாதே!
பரிசுத்த ஆவி உன்
பாத்திரத்தில் வழியும்!
இதோ...!
எலிசபெத் தன்
தள்ளாத முதுமையிலும்
தாயாகப் பூத்திருக்கிறாள்!

இறைவனால்
இயலாதது
எதுவுமில்லை!

மரியாளின் மனது
மௌனத்தைக்
குடைபிடித்தது;

''இதோ இவள்,
இறைவனின் அடிமை!
உம் வாக்கின்படி
வாசல் திறக்கட்டும்!

வானமேகம்
வழி திரும்பியது!

விண்ணுக்கும்
மண்ணுக்கும்,
மனித மின் கடத்தியான
மரியாள்,
அக்கினியை பதியமிடும்
அதிசயநிலமானாள்!

●

தழுவிக் கொண்ட நதிகள்!

இறையியலின்
பரிசோதனைக் கூடமாகிய
சக்கரியாவின் இல்லம்!

ஆய்வின் சூத்திரமறிய
ஆர்வமுடன் நுழைந்தாள்
மரியாள்!

இறைமுகங்களை தாங்கும்
துறை முகங்கள் இரண்டிலும்,
சந்தோஷச் சாரல்!

மரியாளின் வாழ்த்து
எலிசபெத்தின் இதயத்தில்
ஈரத் தென்றலாய் வீசியது;

''ஆண்டவரின் அன்னை,
அடியாளிடம் வந்தது
ஆச்சரியம்!

உன் வசந்த வாழ்த்துக்கு
என் கருவறை பூப்பந்து,
களிப்பில் துள்ளுகிறது!''

மரியாளின் முகத்தில்
மகிழ்ச்சியின்
இசைக்குறிப்புகள்!

உற்சாகம் அணிந்த
சொற்கள் அவளது
உதடுகளில் நடனமாடின;

''என் ஆன்மா
இறைவனின் பீடத்தை
கௌரவிக்கிறது!

அவர்தன்
அடிமையின் தாழ்மையை
ஆய்வு செய்தார்!

தலைமுறைகள் என்னைப்
பாக்கியவதி எனப்
பாராட்டும்!

வானபிதா
வலிமையைப் தகர்த்து
தாழ்மையை உயர்த்தினார்!

ஏழைகளை
இரக்கத்தால் இணைத்து,
செல்வந்தர்களைச்
சிதறடித்தார்!

ஆபிரகாமின்
தலைமுறையைத் தழுவி,
இஸ்ரவேலை
இன்று உயர்த்தினார்!''

தன்னுள் புதைக்கப்பட்ட
தங்கப் புதையலுக்குத்
தலைவணங்கினாள்
மரியாள்!
கருணையின் அலைகளில்
கட்டுமரங்கள் மிதந்தன!

சிந்தனை பின்னியச் சிலந்திவலை!

மரியாள்
யோசேப்பின்
மங்கலத்திருமணம்
முடிந்தது!

வேர்வையும் தித்திக்கும்
வெட்க வேளை!
பாதங்களே சிறகுகளாகும்
பரவசம்!

பௌர்ணமியாகும் முன்பே
நிலவு,
நீர்குமிழியாய் உடைந்தது!

மரியாள்,
தானாகவே
தாயானது கண்டு,
தணலானார் யோசேப்பு!

தாய்பாலே
கள்ளிப்பாலானதே?

இதயம் உரலானது;
எண்ணம் உலக்கையானது!

யோசேப்பு தன்,
அத்தனை ஆசைக் கனவுகளையும்
அவசரமாகச் சிரச்சேதம் செய்தார்!

மல்லிகையைத் துண்டிக்க
மனசு,
கத்திரிக்கோலை
கையிலெடுத்தது!

உளைச்சலின்
உள் இரைச்சலில்
உறங்கிப் போனார்,
யோசேப்பு!

கண்களுக்குள்
பூவாணமாய்
கனவில் வந்தான்
காபிரியல் தூதன்!

சந்தேகத்தின் தலையில்
சம்மட்டி அடி விழுந்தது;

''யோசேப்பே!
சிந்தனைச் சகதியை
வழித்தெறி!
மரியாள்
நெருப்பை விடச்
சுத்தமானவள்!
ஆவியின் தூய்மையே
அவளது கரு!
உதிக்கும் சூரியனுக்கு
'இயேசு' எனப் பெயரிடு!

அவர்,
பூமியின் அழுக்குகளைப்
புரட்டித் தள்ளும்
புனித ஒளி நதி!

உறக்கம் கலைந்தவரின்
உடம்பில் நீர்விதைகள்!

திறக்கப்பட்ட கதவுக்குள்
தென்றல் நுழைந்ததும்
புழுங்கிய இதயம்
பூத்தது!

''கன்னி கர்ப்பமாகி
மகனை ஈனுவாள்;
அவருக்கு,

★'இம்மானுவேல்'
என பெயர் சூட்டுவர்!''

விதைக்கப்பட்ட இறைவாக்கு
முளைத்தது!

யோசேப்பின்
இரவு தூங்கியது;
பகல் விழித்தது!

●

★கடவுள் நம்மோடு இருக்கிறார்.

நிலத்தில் முளைத்த நட்சத்திரம்!

வேதவிதை நட்சத்திரம்
வெடித்து முளைத்தது!

வானத்தின் சாளரத்திலிருந்து
பூமிக்கு இறங்கியது
புல்லாங்குழல் ஓசை!

தாத்தா சக்கரியா
தந்தையானார்!
குழந்தையின் விழிகளில்
குட்டிச் சூரியன்கள்!

புயலின் கையடகப் பிரதி
புன்னகைத்தது!

எலிசபெத்தின் முகத்தில்
அக்கினிக்குஞ்சை இறக்கி வைத்த
ஆறுதல்!

எட்டு தினங்கள்
இலைகளாய் உதிர்ந்தன!

குழந்தைக்குப்
பேர் சூட்டும்
குதுகல விழா!

மழைகால ஈசல்களாக
மனிதர்கள்!

விழுதுக்குப்
பெயர் சூட்டுவதில்
விவாதம்!

‘சகரியா’ - எனும்
மூதைய பெயர் சூட்டுவதே
முறை;
முதியவர்கள்
முழங்கினார்கள்!

‘‘யோவான்!’’
தயங்காமல்
ஓட்டு போட்டது
தாய் குயில்!

தகராறில் தவித்த
தற்காலிகத் தேர்தலில்
தந்தையின் கரங்களுக்கே
தீர்ப்பு திணிக்கப்பட்டது!

ஊமை சக்காரியா
விரலை நாவாக்கி
வரைந்தான்;
‘‘யோவான்!’’

அது பூட்டியிருந்த
நாவுக்குச்
சுத்தியலாய் விழுந்த
சொல்!
கட்டவிழ்த
நாவு,
கடலாய் பொங்கியது!

சொற்கள்
முத்துக்குளித்து
முண்டியடித்தன;

''தூயபிதாவுக்குத்
துதிகள்!
'இரக்கத்தையையும்
விடுதலையையும்,
நீதியையும், ஒப்பந்தத்தையும்
நிறைவேற்றி
ஊழியம் புரிய
உத்தரவிடுவேன்!' என
ஆபிரகாமுக்கு
ஆண்டவர் இட்ட
ஆணை அமுலானது!

தாவீதின் வம்சம்
வானவில்லை
முண்டாசு கட்டியதை
நிலவும் நிமிர்ந்து பார்க்கும்!

யோவானே!
நீ
பாதைகளைச் செப்பனிடும்
பரிசுத்த யாத்திரை;
கடவுளின் கைரேகை!

திசைகளின்
அச்சுப் பிழைகளைத்
திருத்த வந்த
தீர்க்கதரிசி!

பாவ மன்னிப்பின்
திருமீட்பை உணர்த்தும்
திசைகாட்டி!

உலக சமாதான
உண்டியலில்
உச்சியிலிருந்து விழுந்த
ஒற்றை நாணயம்!''

தந்தையின் கீதம்
யூதேயா மலையெங்கும்
எதிரொலித்துச் சுழன்றது!

ஆம்!
எலிசபெத்துக்கு
மட்டுமல்ல,
இறையரசுக்கும் அது
தலைப்பிரசவமல்லவா?

காலத் துருத்தியில்
தீப்பொறிகள் தெறித்தன!

காட்டு மூலிகை
வீட்டை விட்டு
வெளியேறியது!

யோவானுக்கு,
கானகம் மற்றொரு
கருவறையானது!

வானமும் பூமியும்
வகுப்பறைகளாயின;
மலைவாழ் மக்கள்
மாணவர்களாயினர்!

இரவும் பகலும்
இறகு உதிர்த்தன!

இறையரசின் வருகையை
ஏற்றம் இறைத்த யோவானின்
நெருப்பு உழவில்,
நெற்றி வேர்த்தது
பூமி!

நற்செய்தி நாற்றுநட்ட
நாடோடிப் பாடலுக்கு,
வெட்டுக் கிளிகளும், தேனும்
உணவாகின!

‘இறை தூதன்
இவனே!’ எனும்
ஏசாயா வாக்கு
வழக்கில் வந்தது!

●

பெத்தலேகம் பிரவேசம்!

சர்வதேச ரோமானியச்
சக்கரவர்த்தி,
அகுஸ்துராயன்,
மக்கள் தொகை
கணக்கெடுக்க
அதிகாரிகளுக்கு
ஆணையிட்டார்!

சிரியா நாட்டின்
'சிரேணியு' ஆளுநரின் கீழ்
இந்த,
தொகை கணக்கெடுப்பு
துவங்கப்பட்டது!

தாய் மண்ணில்
தங்களைப் பதிவு செய்ய,
மக்கள்
சிரியா தேசமெங்கும்
சிற்றெறும்புகளாக
ஊர்ந்தனர்!

மரியாள்,
பௌர்ணமியாகப்
பொங்கி வழிந்தாள்!

நிறைமாத வேதம்,
நித்திரை கலையும்
நேரம்!

மூன்றடி நகர்வதற்குள்
மூச்சு அழுத்தியது!

சூரியனை
அடைகாக்கும் நிலவு,
சுனங்கியது!

கவலையில்
தந்தைக்கும்
பிரசவ வலி
வந்தது!

செங்கோலுக்கு
சிரம்தாழவேண்டுமே?

கலிலேயாவிலிருந்து
யூதேயாவுக்கு,
கட்டாயம் பெயரவேண்டும்!

●

நாசரேத்திலிருந்து
பெத்தலேகேமுக்கு
நகரத்துவங்கின
நதிகள்!

●

பெத்தலேகேம்!
வானத்தின் பிச்சையிடுதலுக்கு,
உள்ளங்கைகளை ஏந்தி
உட்கார்ந்திருந்தது!

●

சூரிய உதயம் – சுவிசேசப் பதியம்!

மனிதக் காசுகளால்
பெத்தலேகேம் உண்டியல்
பிதுங்கி வழிந்தது!

‘இடம் இல்லை!’
விடுதிகளும்
சத்திரங்களும்,
அணுகுவதற்கு முன்பே
அலறின!

மரித்தவனையும்
எழுப்பிவிடும்,
மார்கழி குளிர்!

இரவு,
நட்சத்திரப் பற்கடிப்புகளால்
நடுங்கியது!
‘தீ’ க்கும் கதகதப்பு
தேவை!

தம்பதிகள்
தவித்தனர்!

சிந்திக்க
அவகாசமில்லை;

தாமதிக்கும் நிமிடங்கள்
தற்கொலையின்
உச்சிப் பாறைகள்!

உயர்திணைகளின் தேசத்தில்
அஃறிணைகளின் இல்லமே,
ஆதரவானது!

மாட்டுத் தொழுவம்
மருத்துவமனையானது!

வைக்கோல் கற்றைகள்
தற்காலிக மெத்தையாகத்
தயாரானது!

காலமே,
பொறு!
உன் தோள்களுக்கு
சிறிது நேரத்தில்
சிறகு முளைத்துவிடும்!

பூமியே,
பொறு!
உன் தலைக்குவொரு
தங்க கிரீடம்
தத்தி வருகிறது!

மெல்ல... மெல்ல...
நீதியின் மூர்ச்சைதெளிய
நிலத்தில் விழுந்தது,
விண்வெளியின்
மழைத் துளி!
பூமியின் மேனி
புல்லரித்தது!

●

அஃறிணைகளின்
உணவு விடுதியான
அடர் கானகம்!

இரவுக்கும் குளிருக்கும்
எதிரியான நெருப்பு!

மேய்ப்பர்கள் சிலர்
உள்ளங்கைகளையே -
சிக்கிமுக்கிக் கற்களாக
உரசிக் கொண்டிருக்க,
தீயும் கண்கூச
திரு தூதன் தோன்றினான்!

அச்சம்,
ஆயர்களின் இதயங்களில்
ஆணி அறைந்தது!
பயத்தில்,
குளிரும் நடுங்கியது!

காபிரியல் தூதன்
வெதுவெதுப்பான
வார்த்தைகளை
வீசினான்;

''அஞ்சவேண்டாம்
ஆயர்களே!
இதோ...!
உலகமேய்ப்பன்
உதித்து விட்டார்!

பெத்தலேகேமில் -
துணியில் சுற்றப்பட்ட
துண்டு நிலவை,
முன்னணையில்
தரிசிப்பீர்கள்!
அதுவே வானத்தின்
அடையாள அட்டை!''

மேகதூது
மிதந்து மறைந்தது!

கண்களை கசக்கிய
ஆயர்கள்,
புயலின் சுவாசமாகப்
புறப்பட்டனர்!

●

வெளிச்சம் வியாபித்த
மாட்டுத் தொழுவம்!
கந்தலில் சுற்றப்பட்ட
கவிதை!
எதுகை மோனையாக
பெற்றோர்!
ஆயர்களின் விழிகள்
ஜெல்லிமீன்களாகத்
துள்ளின!

அஃறிணைகளோடு
உயர்திணைகளும்,
அற்புத நிகழ்வை
அசைபோட்டன!

●

மனிதமே!
உன்
பள்ளத்தாக்கை நிரப்பும்
பகுத்தறிவுக் கடல்,
ஒற்றை நீர்த்துளியாக
உறங்குகிறது!
இது,
காலம் மொழிபெயர்த்த
கவிதை நூல்!

விடியலைக்
கருத்தரித்த
விதை நெல்!

●

நீதியின் சுட்டுவிரல்!

இதோ...!
கருப்பு பூமியின்
காமாலைக் கண்களுக்கு
சொர்க்கம் விட்ட
சொட்டு மருந்து!

சுவிசேச மருத்துவ உலகின்
சோதனைக் குழாய்
குழந்தை!

பாவ நதியில்
கரைந்து போன
மண் விதைகளுக்கு
மத்தியில்,
வானம் ஊன்றிய
வைர விதை!

சுகந்தங்கள்
இசையமைத்த
ஸ்ருதி மெட்டு!

வெட்டுக் கிளிகளின்
மத்தியில்,
வண்ணத்துப்பூச்சி!

மயான கபாலங்கள்
மத்தியில்
மல்லிகை மொட்டு!

பாவநோய்களுக்குப்
பரிசுத்த மாத்திரை!
இதயங்கள் முத்துக்குளிக்கும்
இறையியல் ஜலசந்தி!

●

எழுத... எழுத...
எழுதுகோலை
ததும்ப வைக்கும்,
தத்துவ உற்றுக்கண்ணே!

அநீதியின் பற்கடிப்புகளால்
அம்மணமாக நிற்கும்
அடித்தள வர்க்கத்திற்கு
நீயொரு,
நெருப்பு நெசவு!

சமத்துவச் சக்கரத்தின்
ஆன்மீக அச்சாணியே!
அடிமைகளின் தேசியகீதமான
உன் அழுகுரல்,
திசைகளின் நடுவில்
தீக்குச்சி கிழிக்கிறது!

வாசலுக்கு வந்த
வளி மண்டலமே!
உன் பெரு மூச்சில்
கருப்பு மேகங்கள்
கலையட்டும்!

யுகங்களின்
யுத்தக் கருவியே!

எங்கள் சூரியன்
'பூர்ஷ்வா'க்களின்
பூதக் கால்களால்,
மூட்டைப் பூச்சியாக
நசுங்கிக் கிடக்கிறது!

ஏழைகளின் ரத்தத்தில்
மாளிகை விரல்கள்
மருதாணி பூசுகின்றன!

செங்கோல்களுக்கு
முன்உன்,
துரட்டிக்கோலை
துப்பாக்கியாக நிமிர்த்தும்!

கண்ணீரையும்
ரத்தத்தையும்
கலந்து பிசைந்த -
விடுதலை கீதங்களை
இசைத்தபடி - உன்
தொழுவத்தின் முன்
கூடுகிறோம்!

முட்புதராய் பூமி
முன்னால் கிடக்கிறது;
களை கொத்திகள்
காத்திருக்கின்றன!
நீர் விழிக்கும் வரை
விடியல் இல்லை!

அதற்கு முன் இது
உழைப்புக்கான
ஓய்வென்பதால்,
இன்னும் சிறிது
இளைப்பாறும்!

இரவு கழியட்டும்;
எக்காளம் ஊத
காத்திருக்கிறோம்!

நட்சத்திர யாத்திரை!

வான் வயலில்
வித்தியாச விண்மீன்,
விளைந்தது!

கீழ்திசை ஞானிகள்
மூவரின் மூளைகளுக்குள்,
உதித்த விண்மீன்
ஊஞ்சல் ஆடியது!

விண்மீன் முளைத்தால்
அரசன் பிறப்பது
ஆகாய சோதிடம்!

விண்மீனை நோக்கி
விரைந்தனர் ஞானிகள்!
மூர்க்கமான பயணம்
எருசலேமில்
முற்றுப் புள்ளியானது!

''அரசனின் பிறப்பை
அரண்மனையில்
தரிசிக்கலாம்!''

எதார்த்தமாக
எண்ணிய ஞானிகள்,
ஏரோதின் அரண்மனையில்
ஏமாளிகளாக நுழைந்தனர்!

''யூதரின் அரசன்
எங்கே?''
அப்பாவி ஞானிகளின்
அணுகுண்டு கேள்வியில்
அரசரவை அதிர்ந்தது!
ஏகாதிபத்தியத்தில்,
இரண்டு சிம்மாசனங்களா?

அரசன் ஏரோதுவின்
முகத்தில்,
ஆத்திர நிலவெடிப்புகள்!

மூவரும்
மூளை பிசகிய
மூடரா?

உத்தரவு
பறந்தது!

அரண்மனை ஞானிகள்
அரசனைச் சூழ்ந்தனர்!
வான சாஸ்திரம்
பூமியில்,
வடிகட்டப்பட்டது!
நட்சத்திரத்திற்கு
நாடிபிடிக்கப்பட்டது!

உரச... உரச...
தங்கமுகம்
தகதகத்தது;

‘‘ஆம்!
இஸ்ரயேலின் அரசன்
பெத்தலேகேமில் பிறப்பார்!
தீர்க்க தரிசனம்
தெளிவாக இருக்கிறது!’’

இடிவிழுந்த
பனைமரமாக
ஏரோது புகைந்தான்!
நரியின் முகம்
நடிப்பை அப்பியது;

‘‘அரசனைக் கண்டு
அவசியம் அறிவியுங்கள்!
பின் நான்
படைகளுடன் வந்து
பணிந்து கொள்கிறேன்!’’

செங்கல் சூளையை
நந்தவனம் என
நம்பிய ஞானிகள்,
நட்சத்திரத்தை தொடர்ந்தனர்!

மாட்டுத் தொழுவத்தின்
மத்தியத் தலையில்
நட்சத்திரம்,
நங்கூரமிட்டது!

விடியலின் பிரதியை
விழுந்து பணிந்த
ஞானிகள்;
பொன், தூபவர்க்கம்,
வெள்ளி போளத்தை
அரசனின் அவதரிப்புக்கு
அன்பளிப்பு வழங்கினர்!

•

பயணக் களைப்பில்,
உறக்கம் கண்களை
குத்தகைக்கு எடுத்தது!
ஞானிகளின்
கண்களின் கனவுச்சாலையில்
வேகத்தடையாக,
காபிரியல் தூதன்;
''அரசன் ஏரோது
அபாயத்தின் புதைகுழி!

யூதர்களின்
அரசனை கொல்ல,
யுக்தி செய்கிறான்!

கண்விழித்த ஞானிகள்
அரண்மனைக்கு எதிராக
அன்னை தேசம்
பயணித்தனர்!

பரலோகத்தின்
''கூகுள் மேப்''
பாதையைத் திருப்பியது!

அநீதியின்
திசைகாட்டி முள்,
குருடாகிக் குழம்பியது!

●

திருநாமம் பெற்ற தீபகற்பம்!

இரவும் பகலும்
எட்டுத் தினங்களை
சருகு உரித்தன!

பூவுக்கு பெயர்சூட்ட
புறப்பட்டன செடிகள்!

எருசலேம் ஆலயம்
இருகைகளை விரித்தது!

காட்டுப் புறாக்களை
காணிக்கை செலுத்தின
வீட்டுப் புறாக்கள்!

காந்த நிலவு
இரும்பு மேகங்களை
ஈர்த்தது!

சிமியோன்!
நரைத்த
நதி!

'இயேசுவை தரிசிக்காமல்
இருக்க மாட்டார்', எனும்,
இறை விருது பெற்றவர்!

நீதியின் நிலப்பட்டாவை,
கரங்களில் ஏந்தி
களித்தார் சிமியோன்;

‘‘இருளை விரட்டும்
இறை ஒளி
இதோ...!
இஸ்ரவேலருக்கான
விடுதலை வெப்பத்தை
விழிகள் சுவீகரித்தன!

இஸ்ரவேலரில் பலர்
விழுவதற்கும்
எழுவதற்கும்,
மறுதலிக்கும் சின்னமாக
மனிதகுமாரன்
நிறுவப்பட்டார்!

சிமியோனின் விழிகளில்
சிமினி விளக்குகள்!

●

வானத்தின்
வலது கரத்தை
மூதாட்டி அன்னாள் என்பவள்
முத்தமிட்டாள்!

‘விடுதலை நாயகன்!’
அன்னாளின் குரல்
ஆலயமணியாய் ஒலித்தது!

கூட்டுக்குத்
திரும்பின குயில்கள்!

இறை இலக்கணங்களை
சிறை உடைக்கவிருக்கும்
புதுக்கவிதை,
பொக்கை வாயுடன்
புன்னகைத்தது!

●

தலைக்கு வந்த இடி

கழுகுகள்
கண்விழித்தன!

புயலுக்கு முன்
மெழுகுவர்த்திகள்
போராட இயலாது!

ஏரோதின்
விஷநாவு
பூமியின் மறுபுறத்தையும்
துளைத்து துழாவும்!

வானம் சுதாரித்து
கனவில் கதவு தட்டியது;

‘‘குழந்தையைக் கொல்ல
அரசன் ஏரோது
ஆணையிடுவான்!

உத்தரவு தரும்வரை
எகிப்தில் ஒளிந்திருங்கள்!’’

பெற்றோர்,
பூவை பொட்டலங்கட்டிப்
புறப்பட்டனர்!

என் இளவரசனை
எகிப்திலிருந்தே
வரவழைத்தேன்!

வானம் முன்மொழிந்ததை
வரலாறு வழிமொழிந்தது!

●

பூக்களை கொய்தப் போர்வாள்!

ஏரோதுவின் முகத்தில்
ஏமாற்றச் சகதி!
நாடகம்,
துவங்குவதற்கு முன்பே
முடிந்து விட்டதே?

பூச்சிகள் மூன்று,
சிங்கத்தின் பிடரியை
சீண்டிவிட்டனவே?

அவமானம் -
புற்றுநோயாய்
அரித்தது!

ரத்தக் கொதிப்பேறிய
வார்த்தைகள்
கொப்பளித்தன;
''இரண்டு வயதுக்குட்பட்ட
எல்லா ஆண் குழந்தைகளையும்
இரக்கமில்லாமல் சீவுங்கள்!''

போர்வாள்கள்
பூக்களின் தலைகளை
கொய்தன!

தேசம் ரத்தத்தில்
முகங்கழுவியது!

மரணப் புகை
திசைகளை
இரும வைத்தது!

தாலாட்டு ஒப்பாரியாக,
உயிரைத் தின்றது!

பூக்களைப் பிழிந்த
ரத்தம்,
மன்னன் ஏரோதுவின்
மதுக்குவளையில்
வழிந்தது!

''ராகேல் தன்
இழந்த பிள்ளைகளுக்காக
அழுது புரண்டு
ஆறுதல் அடையாதிருந்தாள்''

- எனும் இறைவாக்கு
கண்களைத் துடைக்க
கைக்குட்டை தேடியது!

●

களம் தேடிய கவிதைகள்!

பாவமதுவைப்
பருகிப் பருகி
பலியானான் ஏரோது!

புல்கூட அவனை
புதைத்த குழியில்
முளைக்க விரும்பவில்லை!

காப்ரியேல் தூதன்
சிந்தனையில் மீண்டும்
சிறகசைத்தான்;

''பிணந்தின்னி கழுகு
பிணமாகிவிட்டது!
இனி இஸ்ரயேலுக்குள்
குடிபெயரலாம்!''

இறை குடில்,
எகிப்திலிருந்து
இடம் பெயர்ந்தது!

இஸ்ரயேல்,
வெப்பத்தில்
வெம்பிக் கிடந்தது!

பூக்களைப்
பொசுக்கியப் புகை
கலையவில்லை!

ஏரோதின் மகன்
அர்கெலயு;
தந்தையை விடத்
தலைகொழுத்தவன்!
ஏழைகளின் வேர்வையை
ஏந்திப் பருகும் பூரான்!

கால்களுக்கு கீழே
கண்ணி வெடிகள்!
சிந்தித்த யோசேப்பு
செயல்பட்டார்!

குடும்பத் தோணி
கலிலேயாவை விட்டு
நாசரேத்தில்
கரை தட்டியது!

'நசரேயன்!'
- என
இயேசுவை அழைத்த
இறைவாக்கு,
சரித்திரத்தின் சட்டையில்
பூவைச் சொருகி
புன்னகைத்தது!

●

வளர்பிறை!

காலம் ஜன்னலைத் திறந்து,
காற்று வாங்கியது!

பால் நிலவுக்கு
பனிரெண்டு வயது;
அறிவுக்கு
ஆயிரம் வயது!

நெருப்பு வளர்க்கும்
நெற்றி -
கம்பி மத்தாப்புகளாய்
கண்கள் -
படபடக்கும்
பத்துவிரல் சிறகுகள்!
சிட்டுக் குருவின் அலகு
நட்சத்திரங்களைக்
கொத்தியது!

தந்தையின் தொழிலான
தச்சுக் கலையில்
பயிற்சி பெற்றது
பட்டுப் பூச்சி!

மனிதர்களை
இழைப்பதற்கு முன்

மரங்களை
இழைத்து
மாதிரி பார்த்தது
மனித ஆலயம்!

மனிதச் சட்டங்களுக்கு முன்
மரச் சட்டங்களை
வடிவமைத்தது -
தச்சன் இயேசுவின்
தத்துவக் குறியீடா?

மாதங்கள்
நாள்களைச்
சலங்கை கட்டி
நடந்தன!

குடிசைக்குள் குற்றாலம்
குதுகலமாகக் கொட்டியது!

●

பிக்மி விருட்சம்!

யூதர்களின்
பாஸ்கா பண்டிகை!

எருசலேம்,
கல்யாணப் பெண்ணாகக்
காட்சியளித்தது!
நகரத் தெருக்கள்
நிறைமாத கர்ப்பமாக
பெருமூச்சு விட்டன!

மனித மந்தைகளை
அடைக்க முடியாமல்
கிடைவாசல் பிதுங்கியது!

பெற்றோரின்,
சுட்டுவிரலைப் பிடித்தபடி
சுட்டிச் சூரியன்
சுற்றி வந்தது!

திருவிழா முடிந்ததும்
தேனீக்கள் கூட்டம்
திரும்பியது!

பாதைகளின் மார்பில்
அடர்ந்த ரோமமாய்
அணிவகுக்கும் மக்கள்!

செட்டைகளுக்குள்
பத்திரப்படுத்தப்பட்டது
சிட்டுக் குருவி!

அங்குல அங்குலமாக
நகர்ந்த பெற்றோர்
ஆணி அடித்து நின்றனர்!

கடுகுச் சூரியனைக்
காணவில்லை!

மரியாளின்,
இதயம் நழுவி
இருளில் விழுந்தது!

தந்தையின் கண்கள்
தவித்துத் துழாவின!

வானம் தந்த
வெள்ளிக்காசு,
வீதியில் தொலைத்த
வேதனை!

கடலில் விழுந்த
நட்சத்திர மீனை
கண்பிடிப்பது எப்படி?

உயிரைத் தொலைத்துவிட்டு
ஊருக்குத் திரும்புவதா?

மூன்று தினங்கள்
முகாமிட்டு
நம்பிக்கையுடன்
நகரத்தைச் சலித்தனர்!

ஊர் ஒட்டுமொத்தமாக
உதடு பிதுக்கியது!

துளித்துளியாகத்
துப்புத் துலங்க,
கடவுளின் ஆலயத்தில்
கண்ணாம்பூச்சி முடிந்தது!

கடலின் மத்தியில்
கைக்குட்டை!

வியப்பில் தோய்ந்த
வேத ஞானிகள்...
ஆச்சரிய போதையில்
அறிஞர்கள்...

பிஞ்சு நாவு
பிழம்புகளைத் துப்பியது!

''வேத வானத்தை
விரலால் அளக்கும்
விந்தைச் சிறுவன் யார்?''

திமிங்கலங்கள்
திகைத்தன;
நெத்திலி மீனோ
நிறுத்தவில்லை!

மரியாளின் விழிகளில்
மகிழ்ச்சி மழை!
பிணமான இதயம்
உயிர்த்தது!
அக்கினி குஞ்சைத் தழுவி
வெந்து தணிந்த கூடு,
வினவியது;

‘‘எங்களை
ஏங்க வைத்தது
எதனால் மகனே?’’

ஆகாயத்தின் புகைப்படம்
அலட்சியமாக
மொழிந்தது;

‘‘என்னைத் தேடியது
ஏன்?
நான் என்
தந்தையின் இல்லத்தில்
தங்கி இருப்பதை
அறியவில்லையா?’’

-ஆம்!
ஊன் மெய் உறவு,
விதை நிலத்திற்கு
விளங்கவில்லை!

கூட்டுக்குத் திரும்பின
குயில்கள்!
புதைந்த புன்னகை
மீண்டும் பூத்தது!

●

வருடங்கள்,
புத்தக பூமியின்
பக்கங்களைப் புரட்டின!

●

பாகம் 2

மழைக் காலம்!

(சக்தியும் – முக்தியும்)

வேர்விடும் பூமி!

பூமியின் தேமலாய்,
யூதேயா பாலைவனம்!

யோவான்!

ஒட்டக ரோமத்தில்
உடை!
அடர்ந்த கானகமே
அலுவலக அறை!

சூரியனைச்
சும்மாடு சுமக்கும்,
சொப்பன விழிகள்!
அருவிகளை மிரட்டும்
அதிகாரக் குரல்!
வேங்கைகளும்
வழிவிடும்,
வீர நடை!

வெட்டுக்கிளிகளும்
காட்டுத்தேனுமே
ஓய்வு நேரத்தில்
உண்ணும் உணவு!

தீயின்
தலைப்பிள்ளையாய்,
தீர்க்கதரிசி யோவான்!

●

நிலத்தின் நெற்றிவகிடாய்
யோர்தான் நதி!
நதியின் கூந்தலைக்
கோதிவிடும் விரல்களாய்
மக்கள்!

●

திருமுழுக்குச் சலவைக்கு
திரண்டுவந்த
அழுக்கு மூட்டைகளை,
ஆவியில் சலவை செய்தன,
அக்கினி விரல்கள்!

யோவானின் நாவு
இறையியலின்
கரையான் புற்றுகளுக்குக்,
கடப்பாரையானது!

புரட்சியின் தீப்பொறியில்
அரண்மனைக்கு
அடிவயிறு பற்றியது!

நண்டுகளின் கொடுக்குகளுக்கு
நமைச்சல்!
வேங்கையின் உறுமலை
பதிவு செய்ய
வேவுப்படை விரைந்தது!

●

பரிசேயரும்
சதுசேயரும்
அக்கினியைப் பரீட்சிக்க,
ஒப்பனை முகத்துடன்
ஊடுருவி நின்றனர்!

பார்த்தீனியங்களின்
முகங்களைக் கண்டு
மூலிகை முழங்கியது;

''விரியன் பாம்புக் குட்டிகளே!
அடுத்துவரும்
அக்கினியின் கோபத்திலிருந்து
அகன்று தப்பிக்க
ஆயத்தம் செய்தவன் யார்?

ஆபிரகாம்
எம் தந்தையென
அலட்டாதிருங்கள்!

கற்பாறைகளிலும்
ஆபிரகாமின் விதைகளை
ஆண்டவர் முளைக்க வைப்பார்!

மரங்களின்
வேர்மடியில்
கோடரி இருக்கிறது!

நற்கனி தராத
மலட்டு மரங்கள்
பிளக்கப்பட்டு
எரிக்கப்படும்!

என்னிலும் பெரியவர்
பின்னால் பிரவேசிப்பார்!

அவரது
காலணிகளைக்
கழற்றவும் என்
கரங்களுக்குத்
தகுதியில்லை!

நான்
தண்ணீரில் திருமுழுக்குத்
தருகிறேன்!
அவரோ
தணலிலும் ஆவியிலும்
தருவார்!

அவரது
தூய கரங்களில்
தூற்றுக் கூடை
அமர்ந்திருக்கிறது!

கோதுமை மணிகளை
களஞ்சியத்தில் சேர்த்தபின்
கழிவுகளைக் கொளுத்துவார்!''

சுற்றிநின்ற மேகங்கள்
நெற்றி வேர்த்தன!

தணலின் தண்டனையிலிருந்து
தப்புவது எப்படி?

மக்களில் ஒருவன்
துயரத்துடன்
தூண்டிலிட்டான்;

''பாவவாழ்வுக்கு
பரிகாரம் என்ன?''

''இரண்டு ஆடைகளுடன்
இருப்பவன் ஒன்றை,
இல்லாதவனுக்கு
இலவசமாக வழங்குங்கள்!
பசித்தவனுடன் உணவை
பரிமாறிக் கொள்ளுங்கள்!

கட்டளையிட்டது
காட்டாறு!

அரசுக்கு வரிவசூலிக்கும்
ஆயக்காரர்கள்,
அதிகார
அம்பு தொடுத்தனர்;

''விதிகளுக்குமேல்
வரிவசூலிக்காதீர்!''
ஆயக்காரர்களின் முகங்கள்
அறுந்த வலையாயின!

அரசு வீரர்கள்
ஆலோசனை கேட்டனர்;

''நாங்கள்
நன்மையாக நடப்பது
எவ்வாறு?''

''அப்பாவி மக்களை
அடித்து நொறுக்காமலும்,
பொய் வழக்குகள்
புனையாமலும்,
வாங்கும் சம்பளத்திற்கேற்ப
வாழுங்கள்!''

உதிரும் சொற்களில்
உலை நெருப்பு!
இந்த
மார்தட்டும் புலிதான்,
மனித குமாரனோ?
மக்களின் சிந்தனையில்
ஆச்சரியக் குறிகள்
கூத்தாடின!

மனிதகுமாரன் நானல்ல என,
மறுதலித்த யோவான்
இருட்டு நிலங்களில்
வெளிச்சத்தை விதைத்தார்!

தலைமுழுகும் சூரியன்!

காட்டாறைச் சந்திக்கக்
கடலே வந்தது!
திசைக் காட்டிக்கு முன்
திசையே வந்து நின்றது!

இறையியலின்
கீரீன்விச் கோடு,
நதிக்கரையோரம்
நடந்து வந்தது!

வரலாற்றைப் பிளந்த
வாலிப இயேசு!

தென்றலும் கும்மியடித்து
திருமகனை வரவேற்றது!

திருமுழுக்குப் பணி
திகைத்து நின்றது!

யோவானின் முன்,
சமுத்திரம்
கைகட்டி நின்றது!

யோவானின் முகத்தில்
கலக்கத்தின் கதிர்வீச்சு!

ஆசிரியருக்கு வகுப்பெடுக்கும்
அபத்தமல்லவா இது?

சூரியனின் கையில்
மெழுகுவர்த்தியா?

தலைகுனிந்த நாவு
தயங்கி நிமிர்ந்தது;

''நான் உம்மிடம்
திருமுழுக்கு பெறுவதே
உலகமுறை;
நீர் எம்மிடம்
பெறுவது பிழை!''

பொங்கிய அலைக்கு
பூவிலங்கு போட்டது
பூமி;

''இன்று இடம் கொடு!
நீதிகள் அனைத்தையும்
நிறைவேற்றுதல் நன்று!''

இருதயத்திற்கு
அங்குசம் போட்டது
இயேசுவின் குரல்!

தாயின் பரிவோடு
தண்ணீரை அள்ளினார்
யோவான்!

சிகரம் சேவித்தது!

வானம் திறந்தது;
வழிந்தது ஒளி!

தலைக்கு மேல் புறா
உன்தை ஆவியை
உச்சியிலிருந்து
ஊற்றியது!

''இவர் எனது
இனிய மைந்தன்!
என்றும் இவரிடம்
பிரியமாயிருக்கிறேன்!

வானத்தின் குரல்
வாழ்த்துத் தந்தியடித்தது!

இறைபுத்திரனுக்கு
இரண்டாவது பிரசவம்
இது!

கைகுலுக்கியத் தென்றல்
களப்பணிக்கு விரைந்தது!

●

நங்கூரத்தை அசைக்கும் நாணல்!

தாவரங்கள்
தற்கொலை புரியும்
வறண்ட வனாந்திரம்!

தாமரைப் பூ
தணல் மீது
தவமிருந்தது!

நாற்பது தினங்கள்
உயிர் மெலிய
உபவாசம்!

எச்சிலும்
வற்றியது!

தேகப் பூ
வாடியது!

நாற்பது தினங்கள்,
முட்களில் நடந்து
முடிந்தன!

கண்கள்
தாழ்ப்பாள் திறந்தன!
ஜீவதண்ணீருக்குத்
தாகம் தவித்தது!
வறண்ட உதடுகளில்
வெப்ப வெடிப்புகள்!

கண்களை கேலிசெய்தது
கானல் நீர்!

எழக்கூடத் தெம்பில்லாமல்
இமயம் அமர்ந்திருந்தது!
'ஐயா!'

ஈரத்தில் குளித்த
இளகிய குரல்!

நியாயத் தராசு
நிமிர்ந்தது!

புனுகுப் புன்னகையுடன்
பூநாகம்!
பிச்சைக்காரனாய்
பிசாசு!
சாத்தானின் மூளை
சாதுர்யமாகச்
சிலம்பாடியது;

''நீர்
கடவுளின் மகன்;
இந்தக்
கற்களை அப்பங்களாக்கிக்
கடித்து உண்ணலாமே?''

காய்ந்த உதடு
சொற்களைச் சுரந்தது;
''மனிதன்
அப்பத்தினாலல்ல!
வானப்பிதாவின்
வார்த்தை அப்பத்தாலும்
வாழுவான் என
வாசிக்கவில்லையா?

இருளின் கரம்
இன்னொரு ஈட்டி
தீட்டியது!

ஆலயத்தின் உப்பரிகையில்
பகலை இரவு
பணிந்தது;

''தைரியமாகத்
தரையில் குதியும்!

'கடவுள் உமக்காக
கட்டளையிடுவார்!
அவரது தூதர்கள் உம்
கால்கள்
கற்களில் மோதாதபடி
கரங்கள் ஏந்துவர்'
- என எழுதியிருக்கிறதே?''

பச்சோந்திக்கு
பதிலடி;

''கடவுளாகிய கர்த்தரை
காரணமில்லாமல்
சோதிக்கதே!
- என எழுதியுள்ளதே?''

வேதாளம்
விஷவாயு
கக்கியது!

தாய்பாலைத்
திரியவைக்க
திருட்டுப் பூனை
திரும்பவும் சுற்றியது!

வானத்தின்
உச்சியில் நின்று
வளை தோண்டியது
வஞ்சக நரி;
''நீர் என்
கால்களைத் தொட்டு
கண்களில் ஒற்றினால்
சுக பூமியை உமக்குச்
சொந்தமாக்குவேன்!

வேத எரிமலை
வெடித்தது;

''அப்பாலே போ,
அலகையே!
வானபிதா ஒருவரையே
வழிபடு என
வாசிக்கவில்லையா?

இரும்பைக் கடிக்க
இயலாத எலி
ஒளிந்து கொண்டது!

நெருப்பில்
ஈ மொய்க்காதது
நிரூபணமாகியது!

கலிலேயாவில்
காலடி பதித்தது
கவிதை;
''காலம் கனிந்தது;
கடவுளின் அரசு
கதவு திறக்கிறது!''

முதல் முழக்கம்,
இருண்ட மானுடத்தின்
இதயத் துறைமுகத்தில்
இறக்குமதியானது!

பூனையாகக்
கொட்டாவி விட்ட
பூமி,
பிடரி சிலுப்பி
கர்ஜனை செய்தது!

●

பாகம் 3

அறுவடைக் காலம்

(அற்புதங்களும் – ஆற்றுப்பணிகளும்)

தாக்குதலுக்குத் தேவையானத் தளவாடங்கள்!

அலைகள்
சடுகுடு விளையாடும்,
கலிலேயாவின்
கடற்கரை!

தண்ணீர் பிரதேசத்தின்
எல்லையில் இரு
மீனவர்கள்!

அவர்கள்...
சீமோன் பேதுரு,
அவன் ரத்தம்
அந்திரேயா!
இருவர் முகங்களிலும்
சுருட்டி வைக்கப்பட்ட
வலையைப் போல்
சுருக்கங்கள்!

காலை முதல்
கடலைச் சலித்தும்
சிப்பிகூட
சிக்கவில்லை!

கடலின் கஜானா
காலியாகிப்போனதா?
இல்லை,

மாபெரும் தாயின்
மடிவற்றிப் போனதா?
தாரைவார்ப்பதால்
ஏழையானதா?

கையைப் பிசைந்த
கடலின் மீது,
எரிச்சலைத் துப்பினர்
இருவரும்!

கேள்விக்குறிகள் முன்
ஆச்சரியக் குறி நின்றது!

யார் இவர்?

தரைக்கு வந்த
பௌர்ணமியா?
தடுமாறினர்
மீனவர்!

கனவுகளின் வேடந்தாங்கல்
கட்டளையிட்டது;
''கடலின் இருதயத்திற்கு
கட்டுமரத்தைச்
செலுத்துங்கள்!''

மீனவரை
கட்டளையின் கம்பீரம்
கடிகாரமாய் முடுக்கியது!

தண்ணீரின் உள்ளங்கையில்
தள்ளாடியது கட்டுமரம்!
''வலையை வீசுங்கள்!''

கடலின் இடுப்பில்
கிச்சுகிச்சு மூட்டியது
வலை!

வயிறு நிரம்பிய
வலையை இழுத்தனர்!
அட!

கடலின் கர்ப்பபையே
வலைக்குள் வந்துவிட்டதா?
வெள்ளி மீன்கள்
துள்ளின;
மீனவரும் கூட!

''மீன்களைப்
பிடிக்கும் உங்களை
மனிதர்களைப் பிடிப்பவராக
மாற்றுவேன்!
வழி தொடருங்கள்!
கடலுக்குள்
வலை வீசியவரின்,
இதயத்தினுள்
வலைவீசியது
இயேசுவின் குரல்!

இரண்டு சொற்களும்
எழுதுகோலைப்
பின் தொடர்ந்தன!

●

கடற்கரை,
மணல் மாரப்பணிந்த
மற்றொரு பகுதி!

யாக்கோபு,
யோவான்!

உப்புக்கரிக்கும் தண்ணீரை
உழுதுவாழும்
உழைப்பாளிகள்!

படகுத்துறையில்
வலைகளுக்கு
அறுவை சிகிச்சைசெய்து,
அமர்ந்திருந்தனர்!

வெண்கலக் குரல்
வீசியது தூண்டில்;

''வலைகளைச் செப்பனிட்டு
வாழ்ந்தது போதும்!
வாழ்க்கையைச் செப்பனிட
வாருங்கள்!

நங்கையின் கூந்தலாய்
நழுவியது வலை!

சுண்டி இழுத்தது
சூரியன்!

எவரெஸ்டின் பின்னே
தொட்ட பெட்டாக்கள்
தொடர்ந்தன!

●

தண்ணீருக்குப் பதவி உயர்வு!

'கானாவூர்' எனுமொரு,
கடுகுக் கிராமத்தில்
கல்யாண வரவேற்பு!

சீடரும், தாயும்
அடைப்புக் குறிகளாய் தொடர,
மண மக்களை வாழ்த்த
மனிதகுமாரன் நுழைந்தார்!
சொர்க்கத்தின்
நேர்முக வர்ணனையாய்
திருமண வீடு,
வெளிச்சத்தில் வழிந்தது!

திருமகன்
தீவுபோல,
ஒதுங்கி உட்கார்ந்தார்!

பந்தியில் திடீரென
பற்றாக் குறை;
திராட்டை ரசம்
தீர்ந்து விட்டது!

கன்னத்தில் கைவைத்து
கவலையில்
முகம் சுருங்கியது
கல்யாண வீடு!
மரியாளின் சிந்தனை

‘மாரத்தன்’ ஓடியது;
‘‘ரசம் இல்லை!’’
கிழக்கு திசையின் காதில்
கிசுகிசுத்தாள்!
கனவு நிலவு
கடுமையில் சிவந்தது;

‘‘இதை என்னிடம்
கூறுவது ஏன்?
வேளை இன்னும்
விடியவில்லை!

மதிக்கவில்லை
மரியாள்;
பணியாட்களை
உசுப்பிவிட்டாள்;

‘‘வசந்தகுமாரன் வேண்டும்
வசதிகளைச் செய்வீர்!’’

விந்தையை
பந்தி வைக்கும்
வேளை விடிந்தது!

‘‘ஆறு கற்சாடிகளில்
நீரை நிரப்புங்கள்!’’

கட்டளையின் படி
கற்சாடிகளின்
வயிற்றை நிரப்பினர்!

கவிதைகளின் கவிதை
கண்களை மூடி
கைகளை உயர்த்தியது;

‘‘முதலில்,
பந்தியின் தலைவனுக்குப்
பரிமாறுங்கள்!’’
பந்தியின் தலைவன்
ருசித்து ரசித்தான்!
இருதயம் வரை
இனிப்பின் ஊர்வலம்!

‘‘முன்பந்தியில்
தேர்ந்த ரசமும்,
பின் பந்தியில்
தூர்ந்த ரசமும்
ஊற்றுவர்!

ஏன் இப்படி
ஒப்பற்ற ரசத்தை
ஒளித்து வைத்தீர்?’’

பந்தியின் தலைவன்
திருமண வீட்டினரிடம்
திகைத்துப் புலம்பினான்!

மரியாளின் இமைகள்
மகிழ்ச்சி முரசடித்தன!

திருமண வீடு
திராட்சை குளத்தில்
திரும்பவும் குளித்தது!

முந்தி அமரும்
முதலாளிகளுக்கல்ல,
பிந்தி அமரும்
தொழிலாளிகளுக்கே,
வேத வானுக்கு
வேளை விடிந்தது!

கடைசி பந்தி கடையவர்களுக்கே என்று
கர்த்தரின் அற்புதம் செய்ததால்
சோஷலிசம் இங்குதான்
சூலானது!

மற்றும் -
காட்டில்
கல்லை அப்பமாக்கி
தனிமனித தேவை தீர்க்காமல்,
வீட்டில்
தண்ணீரை ரசமாக்கி
தாழ்த்தப்பட்டவரின்
தாகம் தணித்து
பொதுவுடமைத் தத்துவம்
புரிந்தார்,
புரட்சி இயேசு!

இறையியலின்
இன்னொரு முகமாய்,
ரத்தம் ரசமாகுமுன்
தண்ணீர் ரசமானது
தர்மத்தின் ஒத்திகையா?

●

தேவாலயத்தினுள் சுழன்ற திருக்கைவால்!

பிரபஞ்சம்
இரவையும், பகலையும்,
இரையெடுத்தது!

கப்பர் நகூமில்
மையமிட்ட புயல்,
எருசலேமின்
இருதயத்திற்குள் நுழைந்தது!

ஊரின்
உக்கிராண அறையில்,
மனித நெல்மணிகள்
குவிந்தன!

திருமறை,
தேவாலயத்தினுள்
நுழைந்தது!

விடுதலை மாடத்தில்
விற்பனைக் கூச்சல்!

அஃறிணைகளை விற்று
சந்தையாக இயங்கியது
சன்னிதானம்!

இறைவனின் பீடத்தில்
எச்சங்களா?

உயிரும், உதடும்,
உறுமியடித்தன!

கர்த்தரின் விழிகள்
கம்யூனிஸ்ட்டுகளாயின!

சூறாவளி சுழன்றது!

விற்பனைப் பலகைகளும்,
வெள்ளிக் காசுகளும்,
புழுதியாயின!
கள்ள வியாபாரிகளின்
முதுகிலும்,
முகத்திலும்,
கர்த்தரின் சாட்டை
கணிதக் குறி வரைந்தது!

கருப்பையில் முளைத்த
கட்டிகள் உடைந்தன!

''எடுத்துச் செல்லுங்கள்!
என்
தந்தையின் இல்லத்தை
சந்தையாக்காதீர்!''

இறையியல் மாடம்
ஈழத்தின் யுத்தகளமானது!

கட்டளை இடிக்கு
காளான்கள் பொசுங்கின!

யூதர்கள் சிலர்
யுத்த விமானத்தை
வழிமறைத்தனர்;

‘‘தண்டிக்க உமக்குத்
தகுதி எது?
அதிகாரப் பதவிக்கு
அடையாள அட்டை
எது?

அக்கினி ஜுவாலை
அணையவில்லை!

‘‘இந்த
ஆலயத்தை இடியுங்கள்;
மூன்று தினங்களில்
முற்றிலும் எழுப்புவேன்!’’

திருட்டுக் கூட்டம்
திகைத்தது - பின்
நகைத்தது;

‘‘ஆகாயத்தை முட்டும்
இந்த
ஆலயத்தை எழுப்ப,
ஆண்டுகள் நாற்பத்தி ஆறு
ஆகியன!
மூடன்;
மூன்று தினங்களில்
எழுப்புவதாக
முழங்குகிறானே?

தேக ஆலயம் குறித்த
தீர்க்க தரிசனம் அது;
அறியாத சுண்டெலிகள்
அழுகல்களைத் தின்றன!

●

இரவுச் சூரியனுடன் இறையியல் பேட்டி!

நிலவு மதுக்குவளையுடன்
மேக மெத்தையில்,
சயனித்த இரவு!

பரிசேயன்,
நிக்கோதேமு!
கஞ்சாசெடிகளுக்கு
மத்தியில் ஒரு
தொட்டித்துளசி!

இயேசுவின் போதனைகளால்
ஈரப்பதமான
நிலம்!

முன்னிரவில்
முக்காடு போட்டு
முற்றத்தில் நின்றான்
நிக்கோதேமு;

''நீர் தேவனின்
திருப்போதகர்!
ஏனெனில் எவரும்
ஆண்டவனின் தயவில்லாமல்
அற்புதங்கள் நிகழ்த்த
ஆகாது!''

ஆலமரம்
அடக்கமாகப்
புன்னகைத்தது;

''மெய்யாகவேச்
சொல்லுகிறேன்;
இரண்டாம் முறை
பிறக்காதவன்
இறையரசை
எட்ட இயலாது!''

நிக்கோதேமு
குழப்பத்தின்
குழந்தையானான்;

''மனிதன்
இரண்டு முறை
பிறப்பது எப்படி?
தாயின் பிரசவத்தில்
தவணைகள் கிடையாதே?''

ஆகாயத்தின் பூக்கடை
அர்த்தங்களை
மாலை தொடுத்தது;

''திருமுழுக்கு பெற்றே
தேவ அரசில்
நுழைய வேண்டும்!

ஊன்; ஊனே!

ஆவியின் ஜனனம்
ஆவியாகும்!
மறுபிறப்பால்
மனம் குழம்பாதே!

காற்றின் ஒலியை
காதுகள் உணரும்!
ஆயினும் அது
வரும் போகும்
வழி தெரியாது!

ஆவியில் பிறந்தவனும்
அப்படியே!''

மூளையை சிக்கெடுக்க
முடியாமல் விழித்தான்
நிக்கோதேமு;

''இவைகள்
எப்படி இயலும்?

ஜீவதாவரம்,
சிந்தனைக்குள்
'ஸ்டார்ச்சுக்களைச்
செலுத்தியது;
''நீர்
இஸ்ரயேலின் போதகன்;
இறையியல் புரியாதா?
புரிந்ததை நான்
போதிக்கிறேன்;
நீரோ அதை
நிராகரிக்கிறீர்!

●

மனிதகுமாரன் கூறிய
மண்ணின் நிகழ்வுகளை
நீங்கள்,
மதிக்கவில்லை!
விண்ணின் நிகழ்வுகளையா
விசுவாசிப்பீர்கள்?

வானத்திலிருந்து
வந்தவரைத் தவிர,
வானத்தில் நுழைந்தவன்
ஒருவனுமில்லை!

மூதைய சரித்திரத்தில்
வனாந்திரச் சர்ப்பம்
தந்தை மோசேயினால்
தகுதியடைந்து போல,
மனித குமாரன்,
தன்னை விசுவாசிக்கிறவனை
முடிவில்லா வாழ்வுக்கு
முன்மொழிகிறார்!

மனிதகுமாரனை
விசுவாசிக்கிறவனுக்கு
மகிழ்ச்சி!

ஆகாயப் பிதா -
பூமியை புரட்ட அல்ல;
மனிதர்களை திரட்டவே
மனித குமாரனை
மண்ணுக்கு அனுப்பினார்!

அவரை விசுவாசிக்கிறவன்
ஆதரிக்கப்படுவான்;
அலட்சியம் செய்பவன்
தரிக்கப்படுவான்!

பூமியின் விழிகளில்
பிரகாசம் உதிக்கிறது;
மனித மடமைகள்
இருளை இச்சிக்கிறது!

இதுவே,
அக்கினித் தீர்ப்பின்
அடிப்படை விதி!

அந்தியை நேசிப்பவன்
புனித ஒளியைப்
புறக்கணிக்கிறான்;
நீதியைச் சுவாசிப்பவன்
ஒளியைத் தழுவ
ஓடிவருகிறான்!''

இறையியலை
எளிமையாக்கினார் இயேசு!

கலங்கிய குட்டையாய்
கதவைத் தட்டிய
நிக்கோதேமு,
தெளிந்த நீரோடையாகத்
திரும்பினான்!

●

நிலத்தடி நீரும் – கிணற்றடி தவளையும்!

யூதேயாவிலிருந்து
கலிலேயாவுக்கு
இயேசுவின் தலைமையில்
கனல் வீசும்,
கால்நடைப் பயணம்!

இலட்சியப் பயணத்தின்
இடைவெளியில்,
சமாரியாவின்
'சீகார்' எனும்
சிற்றூர்!

அது,
அக்கினி கரகமெடுக்கும்
யூத ஆறாம் மணி வேளை!

சூரியனுக்கு
ரத்தக் கொதிப்பு!

தேகம் முழுதும்
தாகத்தின் தாண்டவம்!

பசியும் சோர்வும்
பந்து விளையாடியது!

சிற்றுண்டி வாங்கச்
சீடர்கள் சென்றனர்!

ஒற்றை மேகம்
எழுந்தது!
எதிரில்,
துருவ நட்சத்திரமாய்
தோட்டத்துக் கிணறு!
வறண்ட பூமிக்கு
அது வரம்!

எட்டிப் பார்த்தது
இளைய வானம்!

கிணற்றின் இடுப்பு வரை
தண்ணீர் தளும்பியது!

''இரைக்கும் குடத்திற்கு
என்ன செய்வது?''
குழம்பிய பொழுதில்
குடத்துடன் ஒரு
குமரி!
தண்ணீர் இரைக்கும்
தாமரையை அழைத்தது
தடாகம்;

''தாயே!
தண்ணீர் கொடு!''
நிமிர்ந்த பெண்ணின்
நெற்றியில்
வியப்பு விரிசல்கள்!

அவள் ஒரு
சமாரிய
சந்ததிப்பூ!

யூதர்களும்
சமாரியரும்
பிறப்பால்
பிரிந்தவர்!

‘‘நீர் கேட்கும்
நீரோ யூதன்!
சமாரியப்பெண்ணிடம்
தண்ணீர் கேட்பது
இனக்குற்றமல்லவா?’’

பிற்போக்குக் குரலில்
பீதி வழிந்தது!

தாகம் இறந்தது;
தத்துவம் பிறந்தது;

‘‘தத்துவ ஈரத்தையும்,
தண்ணீர் கேட்பவரையும் பற்றித்
தகவலறிந்தால்,
நீ அவரிடம்
நிச்சயம் தண்ணீர்
வேண்டுவாய்!

அவரும் உன்
தாகம் தணிய
ஜீவதண்ணீ ர் ஊற்றுவார்!

பூவின் புத்திக்குப்
புரியவில்லை;

‘‘குடமோ
கொண்டுவரவில்லை
கிணறோ ஆழம்!
பின் எவ்வாறு நீர்,
நீர் ஊற்றுவீர்?

●

யாக்கோபிலும்
நீர் பெரியவரோ?
அவரது
மைந்தர்களும்

மந்தைகளும்
இந்தக் கிணற்று நீரை
அருந்தியதுண்டு!''

சிந்தனையின் கஜானா
சிரிப்பைச் சிந்தியது;
''இந்தத் தண்ணீரை
ஏற்றி அருந்துபவனுக்கு
தாகமுண்டாகும்!
என் ஜீவதண்ணீரை
அருந்துபவனுக்கு
என்றும் தாகமிராது!''
அது அவனுள்
பொங்கும் நீரூற்றாய்
புறப்படும்!''

நங்கையின் முகம்
நப்பாசையில் மின்னியது;
''ஆண்டவரே!
தண்ணீருக்கு அலையாமல்,
தாகத்தில் தவிக்காமல்,
எனக்கும் அந்த
உயிருள்ள நீரை
ஊற்ற வேண்டும்!''

தத்துவத் தகழி
தலை நிமிர்ந்தது;
''மங்கையே - உன்
மணவாளனை
அழைத்து வா!''

''கைம்பெண் எனக்கு
கணவன் இல்லை!''

அந்தரங்கம்
முகமூடி கலைந்து
அரங்கேறியது;

‘‘நீ
நிஜத்தை கூறினாய்!
உன்னை
ஐந்து கணவர்கள்
ஆண்டார்கள்!
உன்னை இப்போது நுகர்பவனும்
இல்லறத் துணைவன்
இல்லை!
வாடிக்கையாக வரும்
வண்டு!’’

காட்டுப் பூ
கண்ணீர் சுரந்தது;

‘‘ஆண்டவரே!
தீர்மானமாய் நீர்
தீர்க்க த்தரிசி!

ஆனாலும் ஒரு
ஐயம்!
எங்கள்
வம்ச பிதாக்கள்,
இந்த
வானைத் துளைக்கும்
மலையை வணங்கினர்;

நீர்
எருசலேமிலேயே
இறைவழிபாடு புரியலாம்
என்கிறீரே?’’

மயங்கிக்கிடந்த
மங்கையின் ஆறாம் அறிவுக்கு
மனிதகுமாரன்
தண்ணீர் தெளித்தார்;

‘‘பேதைப் பெண்ணே!
மலையிலும்
எருசலேமிலும்
மட்டுமல்ல,
எங்கும் பிதாவை
தொழும் நேரம்
துவங்குகிறது!

அறியாததை நீங்கள்
ஆராதனை செய்கிறீர்;
அறிந்ததை நாங்கள்
ஆராதனை செய்கிறோம்!

யுகத்திற்கு மீட்பு,
யூதர்களின்
வழியாக வருகிறது!

நேர்மையான ஆவியோடு
தேவனைத் தொழும்
தேதி நெருங்குகிறது!
தன்னை நேசிப்பவரைத்
தந்தையும் நேசிப்பார்!

கோதையின் கரங்கள்
குவிந்தன;

‘‘கிறிஸ்து எனும்
மேசியா வருவார்;
அனைத்தையும் அவர்
அறிவிப்பார்!’’

‘‘நீ சொன்னவரே
இதுவரை
உனக்குச் சொன்னவர்!’’

தொடர் விவாதம்
துவக்கத்தில் வந்து
முடிந்தது!

வாகனத்தை தவறவிட்ட
வழிப்பயணிகளாய்
சிற்றுண்டியுடன் வந்தனர்
சீடர்!

ஆண்டவர்,
அழகியுடன் விவாதிப்பது
ஆச்சரியம் தந்தது!

மௌனத்தை
உதட்டில் உடுத்தி
உணவைப் பிரித்தனர்!

மழை நின்றபின்
குடை எதற்கு?

உலகத்தின் உணவு
உண்ண மறுத்தது;

''நான்
உண்ணும் உணவு
இதுவல்ல;
தேவ சிந்தனையை
செய்து முடிப்பதே
என் சிறந்த உணவு!
இதோ...
அகன்ற வயல்வெளிகள்
அறுப்புக்கு
ஆயத்தமாக இருக்கின்றன!

அறுப்பவனுக்கும்
விதைப்பவனுக்கும்
ஆனந்தம்!
நீங்கள்
விதைக்காத நிலத்தின்,
அறுப்பு வேலைக்கு
அனுப்பினேன் உங்களை!

அறுப்பவன்
கூலி பெறுவான்!
அடுத்தவர் உழைப்பால்
பெருகிய பலனைப்
பெற்றீர்கள்!

விதைப்பவனும்
அறுப்பவனும் வேறு
– எனும்
பழமொழி இங்கு
வழக்குக்கு வந்தது!

●

சீகாரின் செவிக்குள்
சமாரியப் பெண்
சங்கூதினாள்!

திருவிழா கூச்சலுடன்
திரண்டது கிராமம்!

பரிசுத்த நிலவைச்சுற்றி
பந்தலிட்டு அமர்ந்தனர்
பாமர மக்கள்!

இலவம் பஞ்சாய்
இருதினங்கள்
பறந்தன!

''உன்னால் அல்ல!
உண்மையைப் பேசுவதால்
உலக மீட்பர் இவரே!''

சாட்சிகளின் மழையில்
சமாரியப் பூ
முழுகியது!

●

அலைவரிசையில் அற்புதச் சிகிச்சை!

கப்பர் நகூமின்
கன்னக் கதுப்பு!

அரசு
அலுவலன் ஒருவன்,
வேர்வையில் குளித்து
விரைந்து வந்தான்;

''ஐயா!
என்மகன்
மரிக்கக் கிடக்கிறான்;
உம் கரம் பட்டால்
கண் விழிப்பான்!

இப்பொழுதே என்,
இல்லம் வரவேண்டும்!

வசந்தத்தின் குரலில்
வருத்த வாடை!

''அறிவுரைகளை அல்ல
அற்புதங்களையே
அதிகம் நம்புகிறீர்!''

நம்பிக்கையுடன்
வந்த அலுவலன்,
நகர மறுத்தான்!

இரக்கத்தின் பனிமழை
இதழ்களில் பொழிந்தது;

''மகிழ்ச்சியுடன் செல்!
உன்
பிரியமகன்
பிழைத்தான்!

இயேசு கூறியபோது
ஏழாம் மணி!
ஆர்வமுடன் அலுவன்,
வீடுதிரும்பும் வழியில்
வேலையாள்
வழிமறித்தான்;

''மரணத்தை தொட்ட
உம்மகன்
மறுபடியும் உயிர்த்தான்!''

தந்தையின் மனதில்
ஜலதரங்கம்!

மகன்
பிழைத்து எழுந்து
பேசிய தருணம்,
இயேசு கூறிய
ஏழாம் மணி!

வார்த்தைகளின்
வைத்தியத்தை
வரலாறு குறித்தது!

●

அசுத்த ஆவிகளுக்கு அறுவாள்வெட்டு!

ஆன்மிகப் படை
ஆலயம் நுழைந்தது!

கொழுந்துவிடும் 'தீ'க்கு
குப்பைகள் நடுங்கின!

இளைஞன் ஒருவனை
ஈரத்துணியாய்
பிழிந்த பிசாசு,
பிதற்றியது;

''ஐயா!
உம்மை நான்
உணர்வேன்!
என்னை வதைக்கவா
இங்கு வந்தீர்!''

துப்பாக்கி உதடு
துடித்து வெடித்தது;

''இவனிலிருந்து
எழுந்து ஓடு!''

பெட்டியைக் கட்டி
பிசாசு ஓடியது!

துண்டித்த கோழியாய்
தொங்கினான்
இளைஞன்!
பின்,
இருதயத்தை தூசிதட்டி
எழுந்து தடந்தான்!

''பிசாசை விரட்டும் இவர்
பிதாவின் பிம்பம்!

கிசுகிசுத்த
குரல்களில்
கிலி!

●

வெளிநடப்புச் செய்யும் வியாதிகள்!

சீடர் சீமோனுக்குச்
செய்தி வந்தது;

‘‘வயதான மாமியாரை
வாட்டுகிறது காய்ச்சல்!’’

அடுப்புக் கரியாய்
படுக்கையில் கிடந்தாள்
அத்தை!

வான மூலிகை
வலக்கரத்தால்
தீண்டியது;
காய்ச்சலுக்கு
காய்ச்சல் வந்தது!

எழுந்து நடந்தமாமியார்
இயேசுவை உச்சிமுகர்ந்தாள்!

●

அந்தியை அச்சடிக்கும்
ஆகாயம்!
வாழ்க்கையின் எச்சங்கள்
வடிகாலுக்கு வந்தன!

நடமாடும் மருத்துவமனை,
சிந்தனையில்
சிகிச்சை செய்தது!

உருகிய மெழுகாய்
உடம்பு!
மனித மலமாய்
தொழுநோயாளி ஒருவன்
தொழுது அழுதான்;

''ஆண்டவரே!
சித்தமானால்
சுத்தமாக்கும்!''

கருணைச் சுனை
கைவிடுமா?

''எனக்குச் சுத்தமுண்டு
உனக்குச் சுத்தமாகும்!

கூவம்
தாமிரபரணியானது!

சுத்தமானவன்
பக்தனானான்!

அஜந்தா ஓவியம்
ஆணையிட்டது;

''இதை
தந்தை மோசேவின்
கட்டளைப்படி,
தலைமை ஆசாரியனுக்கு
தகவல் கூறி அவன்
கண்களுக்குமுன்
காணிக்கை பலி செலுத்து!''

கந்தலாக வந்தவன்
கதரின் வெண்மையோடு
கிளம்பினான்!

பூவின் புகழ்
மகரந்த சேர்க்கையாய்
மக்களிடம் பரவியது!

வீட்டுக்குள் மழைச்சாரல்
வீசியது!

தீவிர உபதேசம்
தீப்பிடித்தது!

சொற்பொழிவில்
சொக்கிய மக்களுக்கு,
வண்டு துளைத்தாலும்
வலி தெரியாது!

மனிதகுமாரனை பரிசோதிக்க,
மக்களுக்குள் -
மறை அறிஞரும்
பரிசேயரும்,
காதுகளுக்குச் சாணை தீட்டி
கலந்து நின்றனர்!

திடீரென
மனிதவெள்ளத்தில்,
படுக்கையில் ஒரு
திமிர்வாதக்காரனைச் சுமந்து,
நீர்மூழ்கிக் கப்பலாய்
சிலர்
நீந்தி வந்தனர்!

மனித குமாரனைச் சுற்றி
மனிதச் சுவர்கள்!
நெரிசலில் கடுகும்
பிதுங்கிவிடும்!

கலங்கரை விளக்கத்தை
காணாமல் இந்த
திமிர்வாதக்காரனை
திரும்பும் தூக்க இயலாது!

உத்தி பிறந்தது!

கூரையைப் பிரித்து
இயேசுவுக்கு முன்
படுக்கையை,
இறகுபோல இறக்கினர்!

மெழுகுவர்த்தியின் விழிகளில்
வியப்பு வெளிச்சம்!
உயர்ந்த விசுவாசம்
ஊதுபத்தியின் வாசம்!

திமிர்வாதக்காரனை
திருத்தென்றல்
தீண்டியது;

''மனிதனே! - உன்
பாவ அழுக்குகள்
மன்னிக்கப்பட்டன!

காத்திருந்த மரங்கொத்திகள்
கழுத்தை நீட்டின;
''தெய்வ குற்றமிது!
பாவ மன்னிப்பு
ஆகாயப் பிதாவின்
அதிகாரமல்லவா?''

எலும்புத் துண்டுகளின்
எரிச்சல்,
புல்லாங்குழலுக்குப்
புரிந்தது;

''மண்ணின் பாவங்களை
மன்னிக்க,
மனித குமாரனுக்கும்
அதிக அதிகாரமுண்டு!
திருவீணைத்
திரும்பியது;

‘‘உன்
படுக்கையைச் சுருட்டி
பயணம் செல்!’’

எரு - தருவாகி
எழுந்தது!
நாவு நறுக்கப்பட்ட
நல்ல பாம்புகள்,
வாலைச் சுருட்டி
‘வாய்தா’ வாங்கின!

●

முட்களுடன் கைகுலுக்கிய ரோஜா!

ஆயக்காரன் லேவியை
ஆன்மீகப் படித்துறை
அழைத்தது;

பின்னால் வா!

காந்தமும் இரும்பும்
கைகுலுக்கி நடந்தன!

இயேசுவின் கட்டளைப்படி
ஆயக்காரன் லேவி,
வீட்டினுள் அனைவருக்கும்
விருந்து படைத்தான்!

ஆயக்காரர்கள்
பந்தியின் எல்லைவரை
பரவியிருந்தனர்!

முதலைகள்
மூக்கு வேர்த்தன;

''விஷமிகளோடும்
ஆயக்காரர்களோடும்
விருந்துண்ணுகிறாரே?''

சமாதிகளை நோக்கியது
சன்னதி;

‘‘ஆரோக்கிய மனிதருக்கு
அல்ல;
மலிந்த பிணியாளருக்கே
மருத்துவர் தேவை!

பரிசுத்தவான்களை
அல்ல;
பாவிகளை இரட்சிக்கவே
படி இறங்கிவந்தேன்!’’

பரிசேயரில் ஒருவன்
விஷப் ‘பூமரங்’
வீசினான்;

‘‘யோவானின் சீடரும்
பரிசேயரின் சீடரும்,
இரவும் பகலும்
விரதமிருந்து
இறைவனை துதிக்கின்றனர்!

உமது சீடர்களோ,
புசித்தும் குடித்தும்
பூரிப்படைகின்றனரே?’’

மனித குமாரன்
மறுத்தார்;

‘‘மணமகன் மத்தியில்
மகிழ்ந்து பேசும்பொழுது,
உயிர்நண்பர்கள்
உண்ணாவிரதம் இருந்து
வாடுவார்களா?

திருமகன் பிரியும்
தேதிவரும்;

தோழர்கள் அன்று
வேதனையில் புதைந்து
விரதம் இருப்பார்!''

நில நிமிடங்கள்
மௌனத்தில்
முகம் துடைத்த பின்,
உதிர்ந்தது ஒரு
உவமை மல்லிகை;

''ஒருவன்
புதிய ஆடையை
கந்தலுடன் இணைத்து
தைக்க மாட்டான்!
தைத்தால்
புதியது,
பழையதை கிழிக்கும்!

ஒருவன் - புதுத்
திராட்சை ரசத்தை
பழந்துருத்தியில்
பாதுகாக்க மாட்டான்!
வைத்தால்
துருத்திகள் வெடிக்கும்;
ரசம் சிந்தும்!

புதுரசத்தைப்
புதுத் துருத்தியிலேயே
பாதுகாக்க வேண்டும்!

பாதுகாத்தால் அவை
பாழாகமல்
பத்திரப்படும்!

மேலும்,
பழைய ரசத்தைப்
பருகிக் களித்தவன்,
புதுரசத்தின்
புளிப்பை விரும்பான்!

பழைய ரசத்தையே
பாராட்டுவான்!
களிமண் மூளைகள்
கந்தகத்தைப் பிசைந்தன!

●

உழைப்பை மறுதலிக்கும்
ஒரு ஓய்வு தினத்தில்...

வயல்வெளியின்
வரப்பில் நடந்த சீடர்,
கடும்பசியில்
கோதுமைக் கதிர்களை
கொய்து மென்றனர்!

பரிசேயரின்
ஆந்தைக் கண்கள்,
அகல விரிந்தன;

''இதோ உமது
உத்தம சீடர்
ஓய்வு தினத்தில்
அக்கிரமம் புரிவதை
அறிவீரோ?''

வானம்
தலைகுனியாமல்
வாதித்தது;

''பசித்தபொழுது
தாவீது தன் நண்பருடன்
ஆலயத்தினுள் நுழைந்து
அப்பங்களை புசித்தனரே?
அன்றியும்...
ஆலய ஆசாரியர்கள்
ஓய்வு தினத்தில்
உபதேசித்தனரே?
ஆலயத்திலும்

பெரிய கோபுரம்
அருகே நிற்கிறது!

பலியை அல்ல;
இரக்கத்தையே
என்றும் விரும்புகிறேன்!

அறிந்தால்,
நிரபராதிகள் மீது
குற்றம் சாட்ட
நினைக்க மாட்டீர்!

மனிதகுமாரன்,
ஓய்வு தினத்திற்கும்
இறைவனாக
இயங்குகிறார்!''

தலையில் கைவைத்து
தண்ணீருக்குள் தாவின
தத்துவத் தவளைகள்!

மன்றாட்டுக் கூடத்தில்
மக்கள் கூட்டம்
நுரைத்து வழிந்தது!

வேத வானம்பாடியின் முன்
கை சூம்பிய ஒருவன்
கண்ணீருடன் நின்றான்!

ஆயுர்வேதம்,
கை சூம்பியவனை
ஆய்வு செய்யும் முன்னரே,
ஓநாய்கள் கோஷமாக
ஊளையிட்டன;

''ஓய்வு தினத்தில்
குணமாக்குவது
வேதவிதிகளுக்கு
விரோதமானது!''

கற்கண்டு,
கூழாங்கற்களைக்
கண்டித்தது;

''ஓய்வு தினத்தில்
உமது ஆடு,
பள்ளத்தில் விழுந்தால்
பதறி மீட்க மாட்டீரா?
மந்தையை விடவும்
மனிதன் மேலானவன்!

ஓய்வுதினத்தில்
நன்மை புரிவது
மேன்மை!''

கற்பக விருட்சம்
சூம்பிய கையை
சுட்டுவிரலால் தொட்டது;

''கையை நீட்டு!

குண்டூசிக் கை
குத்தீட்டியாய் வளர்ந்து
குணமானது!

மன்றாட்டுக் கூடம்
'சுமத்திரா தீவாக நிலம் நடுங்கியது!

ஆர்பரித்த 'சுனாமி' அலைகளுக்கு
மூடிபோட்டது கரை!

வேத அற்புதங்களுக்கு,
''விளம்பரம் வேண்டாம்!''

நதிக்கு
சோப்பு எதற்கு?
பரிசேயரின் புருவங்கள்
பாம்புகளாக நெளிந்தன!

எரிமலைக் குழம்பை
எச்சில் துப்பியா,
அணைக்க இயலும்?

‘‘நான்
அறிந்துகொண்ட
அற்புத ஊழியன்;
ஆத்தும நேசர்!
நீதியின் ஆழத்தைப்
புறஜாதியினருக்கும்
போதிப்பவர்!
அவரது
வீரக்குரல்
வீதிகளில் கூச்சலாக
வெடிக்காது!
நீதியின் தூண்
நிமிரும் வரை
அவர் -
நாணலை முறிக்காமலும்,
மங்கிய திரியை
அணைக்காமலும்
அமைதி காப்பார்!
புறஜாதியினர் அவரைப்
புகழுவார்!

ஏசாயாவின்
இறைவாக்கு,
பிரபஞ்சத்தின்
கதவு திறந்து
பிரகடமானது!

●

விழிகளைத் திறந்த விடியல்!

விழி இழந்த இரு
விட்டில் பூச்சிகள்,
வெளிச்சத்தின் கால்களில்
விழுந்தன;

''இறைவனே!
எங்களுக்கு இரங்கும்!''
தழுதழுக்கும் குரல்களில்
தார் குழம்பும்
தாய்பாலாகும்!

இரண்டு குருடரின்
இதயங்களுக்குள்ளும்
பாதாளக் கரண்டி வீசியது
பலகணி நிலவு;

''விழிகளுக்கான வழியை
விசுவாசிக்கிறீர்களா?''

''ஆம்,
ஆண்டவரே!''
நசுங்காத நம்பிக்கை
நட்சத்திரங்களைப்
பூத்தூவியது!
இறையரசரின்
இறகு விரல்கள்,

பள்ளங்கள் நான்கையும்
பரிவுடன் வருடின;

‘‘உங்கள்,
விசுவாசத்தின் படியே
விடியக் கடவது!’’
முக வயலில்
முளைத்தன நெல் விழிகள்!
கண்களைச்
செதுக்கிய சிற்பியை,
இதயத்தினுள் செதுக்கி
எழுந்து புகழ்ந்தனர்,
இருவரும்!

●

சூரியனைச் சுற்றும் சுவிசேஷ கிரகங்கள்!

புயலின் யுத்த களத்தில்,
போர் ரதங்கள்
பனிரெண்டு!

சீமோன் பேதுரு,
அவனது இளைய ரத்தம்
அந்திரேயா!

செபதேயுவின் மகன்
யாக்கோபு,
அவனது இளைய ரத்தம்
யோவான்!
பிலிப்பு,
ஆயக்காரன்
மத்தேயு,
பத்தொலொமேயு,
அல்பேயுவின் மகன்
யாக்கோபு,
ததேயு எனும்
லெபேயு,
கானனாகிய சீமோன்,
யூதாஸ்காரியோத்து,
தோமா!

வான உழவுக்கு
வாய்க்கால்களான இவர்கள்,

‘அப்போஸ்தலர்கள்’ எனும்
இறையரசு முத்திரையை
இதயத்தில் குத்தியவர்கள்!

●

சிகரத்தின் தலையில் சிந்தனைப் பிரளயம்!

மேகமுண்டாசு கட்டிய
ஒலிவ மலை!
பிரம்மாண்டமான
பியோனோவில்,
கருப்பு வெள்ளைக்
கட்டைகளாய் மக்கள்!

பூமி,
தத்துவமழையில்
தாய்மையானது!
ஆகாயத்தின்
அறைகூவலை,
ஒலிவ மலையின் திசைகள்
ஒலிப்பதிவு செய்தன!
சிரபுஞ்சியின்
சிந்தனை மழையில்,
தார்பாலைவனங்கள்
தலைகுளித்தன;

''ஆவியில் அடக்கமுள்ளவர்
பாக்கியவான்கள்;
விண்ணரசு
அவர் வசம்!
துயரவான்கள்
பாக்கியவான்கள்;

அவர்களின் இதயங்கள்
ஆறுதலடையும்!
பொறுமையுள்ளவர்கள்
பாக்கியவான்கள்;
பூமி அவர் வசம்!
நீதியின் மேல்
பசிதாகமுள்ளவர்கள்
பாக்கியவான்கள்;
அவர்கள்
இரக்கம் பெறுவர்!
இதயசுத்தமுள்ளவர்
பாக்கியவான்கள்;

வேதவிதிகளை மீறி
விளக்குபவன்,
விண்ணரசில் சிறியவன்!
இவைகளுக்கு
'அத்தர்' பூசாமல்
அறிவுரை கூறுபவன்
ஆகாயத்தில் பெரியவன்!

கொலை செய்பவன்
கொடும் தண்டனைக்குள்ளாவான்
என -
முன்னோர்கள்
மொழிந்தனர்!

உங்களுக்கு நான்
உரைக்கிறேன்;
தன்
உடன் பிறப்பின் மீது
உக்கிரம் கொண்டு,
'மூடனே!'- என்
முனங்குகிறவன்
எரிநரகத்திற்கு
இரையாவான்!

உன்
சகோதரனுடன்
சமாதானம் செய்தபின்,

கடவுளின் பீடத்தில்
காணிக்கை செலுத்து!

எதிரி உனக்குத்
தண்டனை தருமுன்
தழுவிக் கொள்!

‘விபச்சாரம் செய்யாதே!’ – என
அறிஞர்கள்
ஆணையிட்டனர்!

உங்களுக்கு நான்
உரைக்கிறேன்;

ஒரு –
இளம் மங்கையை
விழிகளால் புணரும்
வெறியன் எவனும்
தன்,
விஷ இருதயத்தால்
விபச்சாரம் செய்கிறான்!

வலக்கண் உனக்கு
வாதைகள் தந்தால்
பேசாமல் அதைப்
பிடுங்கி எறி!

வலக்கை உனக்கு
வாதைகள் தந்தால்
தயங்காமல் அதை
தரித்து எறி!

ஏனெனில் நீ
எரிநரகத்தில்
அழிவதிலும்,
அவயங்களில்
ஒன்றையிழப்பது
ஆறுதலாகும்!

‘தன் தாரத்தை
தள்ளி வைக்கிறவன்
அவளுக்குத்
தள்ளுதற் சீட்டைத்
தரக் கடவான்!’- என
வேத மூதையார்
விதி விதைத்தனர்!

உங்களுக்கு நான்
உரைக்கிறேன்;
மனைவி விபச்சாரியாக
மாறினால் மட்டும்
விவகாரத்து செய்!

வேறுகாரணங்களுக்காக
விவகாரத்து செய்பவன்,
தன் தாரத்தை
தானாகவே விபச்சாரத்தில்
தள்ளி விடுகிறான்!

அவ்வாறு
தள்ளப்பட்டவளைத்
தாரமாக்கியவனும்
வேதத்தின் மன்றத்தில்
விபச்சாரம் புரிபவனே!

‘பொய் சாட்சியிடாமல்,
மெய் சாட்சிகளை
ஆண்டவனின் பாதங்களில்

அர்ப்பணிப்பாயாக!' - என
வேத ஞானிகள்
விதி செய்தனர்!

உங்களுக்கு நான்
உரைக்கிறேன்;

ஆகாயம்
பூமியின் மீது,
ஆணையிட வேண்டாம்!

ஆகாயம்,
ஆண்டவரின்
அரியணை!
பூமி,
பரமப்பிதாவின்
பாதப்படி!

அரசனின் நகரம்
எருசலேம் மீதும்
ஆணையிட வேண்டாம்!
தலையின் மீதும்
ஆணையிட வேண்டாம்!
உன்னால் தலையின்
ஒருமுடியையாவது,
கருப்பாகவும்
வெள்ளையாகவும் மாறக்
கட்டளையிட முடியாது!

'கண்ணுக்குக் கண்
பல்லுக்குப் பல்!' - எனும்
ஆத்திர அறிவிப்பை
அறிவீர்கள்!

உங்களுக்கு நான்
உரைக்கிறேன்;

தீமைகள் மீது
தீவிரவாதம் வேண்டாம்!
ஒருவன் உன்னை
வலக்கன்னத்தில்
வஞ்சகமாக அறைந்தால்,
அவனுக்கு உன்
இடக்கன்னத்தை
இன்முகமாய் காட்டு!

உன்னோடு வழக்காடி
உன் உள்ளாடையை
உருவிக் கொள்ள
ஓரவஞ்சகமாய் ஒருவன்
உத்தேசித்தால்...
அவனுக்கு உன்
பிற ஆடைகளையும்
பெருந்தன்மையோடு
கழற்றிக் கொடு!

ஒருவன் உன்னை
ஒருமைல் தூரம்
இழுத்துச் செல்ல
எத்தனித்தால்...

அவனோடு
இன்முகமாய்
இரண்டு மைல் தூரம்
இன்னும் செல்!

கேட்பதைக் கொடு;
கடன் கேட்டு
கை ஏந்துபவனுக்கு
முகம் சுளிக்காமல்
முடிந்ததைக் கொடு!

‘உன்
சகோதரனுடன்
சந்தோஷித்து
எதிரியை வெறுப்பாயாக!’- எனும்
வழக்கு ஒன்று
வாழ்வில் உண்டு!

உங்களுக்கு நான்
உரைக்கிறேன்;

பகைவனை
பாசத்துடன் நேசியுங்கள்!
சபிக்கிறவர்களை
ஆசீர்வதியுங்கள்!
மறுதலிப்பவர்களுக்காக
மனதுருகி மன்றாடுங்கள்!

நீங்கள்,
இவைகளைச் செய்தாலே
இறைவனின் பிள்ளைகள்!

பிதா -
நல்லவர் தீயவர் மீது
சூரியனை உதிக்க வைத்து,
நீதி அநீதிமான்கள் இருவர்மீதும்
நித்திய மழை பொழிகிறார்!
ஆயக்காரர்களைப் போல்
நண்பர்களையே நேசிப்பதால்
நன்மை உண்டோ?

வான தந்தையைப் போல
வற்றாத ஊற்றாக
வாழுங்கள்!

பிச்சையிடும் போது
பெருமிதம் கூடாது!

வலக்கை வழங்குவதை
இடக்கை அறியாதிருக்கட்டும்!
ஆலயங்களிலும்
வீதிகளிலும்,
ஆடம்பர தர்மம்
அவசியமில்லை!

ரகசியமாக
வழங்கினால்,
பரம பிதா
பகிரங்கமாகப்
பலன் தருவார்!

மன்றாடும் போது
வேஷதாரிகளைப் போல
விழுந்தெழ வேண்டாம்!
ஒப்பனை பக்திமான்கள்
வீதிகளிலும் கூடங்களிலும்
விண்ணப்பம் செய்வர்!

அவரது பலன்
அன்றே கழிந்தது!

கதவை மூடி
கைகளை உயர்த்தி
பிதாவை நோக்கி
பிரத்யோகமாகப்
பிரார்த்தியுங்கள்!

அதிக சொற்களால்
அலப்புதல் கூடாது!
வேண்டும் முன்னரே
வேண்டியதை,
விண்ணரசு அறிந்திருக்கிறது!
விண்ணரசிடம் நீங்கள்
வேண்ட வேண்டிய
விதம்;

''பரம தந்தையே!
உமது திருநாமம்
பரிசுத்தப் படுவதாக!
உம்முடைய
இறையரசு எழுவதாக!
உமது சிந்தனை
விண்ணில் செயல்படுவதுபோல்
மண்ணிலேயும்
மலருவதாக!
அன்றன்று வேண்டிய
ஆகாரங்களை
அடியார்களுக்குத் தாரும்!

எங்கள் கடனாளிகளை
நாங்கள் மன்னிப்பதுபோல,
எங்கள் கடன்களையும்
இன்று மன்னியும்!

எங்களைப்
பரிசோதனைகளுக்கு
உட்படுத்தாமல்,
பாவங்களிலிருந்து எம்மைப்
பாதுகாத்தருளும்!

ஆன்மீக அரசும்,
சர்வ சக்தியும்,
உன்னத மகிமையும்,
உம்முடையவைகளே!

மனிதர்களை
மன்னியுங்கள்;
மனுவும் உங்களை
மன்னிப்பார்!

இறைவனை எண்ணி
விரதம் இருக்கும் வேளை,
வேஷதாரிகளைப்போல
வாட்டமான முகத்துடன்
வலம் வராதே!

வேஷதாரிகள்
விரதம் அனுசரிப்பதை
விளம்பரப்படுத்துவர்!
அவர்களின் பலன்
அன்றே கழியும்!

தலைக்குத் தைலம் பூசி
முகத்தைக் கழுவி,
உனக்கும் பிதாவுக்கும்
உள்ரகசியமாய்
உற்சாகமாய் விரதம் இரு!

ரகசியத்தை
ரசிக்கும் பிதா,
வெளிப்படையாக உனக்கு
விருது தருவார்!

பூமியின் பொக்கிஷம்
பொய்;
பூச்சிகள் அரிக்கும்,
கள்வர்கள் அவைகளை
கன்னமிடுவார்கள்!

இறையரசில்
பொக்கிஷங்களைச்
சேமியுங்கள்!

அங்கு
கள்வர்களும்
கரையானும் இல்லை!

உங்கள் உள்ளங்களும்
உன்னத பொக்கிஷத்துடன்
உறவாடும்!

விழிகள் தேகத்தின்
விடிவிளக்குகள்!
மெய்விழி இருந்தால்
மேனி ஒளி சிந்தும்;
ஊனவிழி இருந்தால்
உடல் இருளுக்குச் சொந்தம்!

உன் வெளிச்சமே
இருளாகக் கிடந்தால்,
வெளிச்சத்தின் எல்லை
விரிவதெப்படி?

இரு அதிகாரிகளுக்கு
ஒரு ஊழியக்காரன்
உழைக்க முடியாது!

ஒரு அதிகாரிக்கு
ஊழியக்காரன் உழைத்து,
மற்ற அதிகாரியை
மறப்பான்!

எனவே -
விண்ணுக்கும்
மண்ணுக்கும்,
ஒன்று சேர்ந்து
ஊழியம் புரிய
உம்மால் முடியாது!

''எதைப் புசிப்போம்?
எதைக் குடிப்போம்?
எதை உடுப்போம்?
- எனும்
எண்ணம் வேண்டாம்!

உணவு, உடையைவிட
உயிர் உயர்ந்தது!
ஆகாயத்துப் பறவைகளை
ஆய்வு செய்யுங்கள்!
அவைகள் -
விதைப்பதுமில்லை,
அறுப்பதுமில்லை,
களஞ்சியங்களில்
நிரப்புவதுமில்லை!

ஆயினும் -
பிதா அவைகளுக்குப்
பிழைப்பூட்டுகிறார்!
பறவைகளை விடப்
பதவி உயர்ந்த நீங்கள்
கவலை கொள்வதால்,
உங்கள் -
உடலின் உயரம்
ஒருமுழம் கூடுமோ?

ஆடைகளுக்காக
கவலை கொள்வதென்ன?
காட்டு மலர்களைக்
கவனியுங்கள்;
அவை
உழைப்பதுமில்லை
நூற்பதுமில்லை!

சக்கரவர்த்தி சாலமன் கூட
மலர்களைப் போல்
உயர்ந்த உடைகளை
உடுத்த வில்லை!

அற்ப விசுவாசிகளே!
அடுத்த நாள்
அடுப்பில் எரிக்கப்படும்
காட்டுப் புற்களுக்கே...
வான பிதா
வாசனை கிரீடங்களை
வழங்கினால்...

உங்கள் வாழ்வுக்கு
உதவும் கரங்கள்
நீட்ட மாட்டாரா?

அஞ்ஞானிகள்
தேவைகளைத் தேடி
திரிவர்;
நீங்கள்,
தேவ அரசையும்
தேவ நீதியையும்
தேடுங்கள்!
அனைத்தும் அன்று
அருளப்படும்!
கழிந்திடும்
தேதிகளை எண்ணி
கவலை வேண்டாம்!

நாளை தன்
காரியங்களுக்காகக்
கவலைப்படும்!

அந்தந்த தேதிகளுக்கு
அதனதன் பாடுகளை
அனுபவித்தல் போதும்!

அயலான் மீது
கடும் குற்றங்களை
கயிறு திரிக்க வேண்டாம்!

ஏனெனில் நீங்கள்
தீட்டிய தீர்ப்பே
திரும்பவும் உங்களுக்குத்
தீட்டப்படும்!
உன் -
கண் தூசியை
கவனியாமல்,
உன் -
உடன்பிறந்தவனின்
கண் தூசியை
உற்றுப் பார்ப்பதென்ன?

வெளி வேஷக்காரனே!
உன் -
கண் தூசியை
களைந்து எடு;
பின் உன் -
உடன்பிறப்பின்
கண் தூசியை
ஊதி விடு!

புனிதப் பொருள்களை
நாய்களுக்கும்,
முத்துக்களை
பன்றிகளுக்கும்
தருவது தவறு!
தந்தீர்கள் எனில் -
தாமதிக்காமல்
அவைகள் தம்
அருவருப்பான கால்களால்
ஆக்ரோஷமாக மிதித்து
பின் உங்களைப்
பீறிப் போடும்!

கேளுங்கள்;
வழங்கப்படும்!
தேடுங்கள்;
கண்டடைவீர்!
தட்டுங்கள்;
திறக்கப்படும்!

உலகில் எவனும் -
அப்பம் கேட்கும்
அன்பு மகனுக்கு
கல்லை வழங்குவானா?
மீனைக் கேட்டால்
பாம்பைப் பரிமாறுவானா?
வக்கிரவாதிகளே தம்,
வாரிசுகளுக்கு ஈவுகளை
வழங்கும் பொழுது...

வானபிதா தம்,
வாசல் வந்த வாரிசுகளுக்கு
வசதியான ஈவுகளை
வழங்கி மகிழுவார்!

ஆண்டவர்
உங்களுக்குச் செய்த
உதவிகளை நீங்கள்,
அயலானுக்கும் உதவுங்கள்!

திருசட்டங்களும்
தீர்க்க தரிசனங்களும்,
இவைகளுக்குள்
என்றும் அடங்கும்!

இடுக்கமான
வாசல் வழியே
என்றும் நுழைவீர்!
அழிவின் வாசல்
அகலமானது;

அதனுள் நுழைபவர்
அநேகர்!

வாழ்வின் வாசல்
வழி இடுங்கி இருக்கிறது;
அதனுள் நுழைபவர்
அதி சிலர்!

கள்ள தீர்க்கதரிசிகள் மீது
கவனமாயிருங்கள்!
அவர்கள்,
ஆட்டுத் தோல் போர்த்தி
அன்புப்பால்
பீய்ச்சுவார்கள்!
அவர்களோ -
உள்ளத்தில் சீறும்
ஓநாய்கள்!

முட்செடிகளில்
திராட்சைகளையும்,
அடர் பூண்டுகளில்
அத்திப் பழங்களையும்
பறிக்க இயலாது!

நல்லமரம்,
நற்கனிகளையே
நன்றியுடன் ஈனும்;

கெட்ட மரமோ,
விஷக் கனிகளையே
வெறுப்புடன் ஈனும்;

நல்ல மரம்
விஷக் கனிகளையும்,
கெட்ட மரம்
நற்கனிகளையும்
ஒருநாளும்
உதிர்க்காது!

நற்கனிகளை
ஈனாத மரங்கள்,
வேரோடு வெட்டப்பட்டு
அக்கினியில் எரிக்கப்படும்!
கனிகளை கொண்டே
கயவரை அறியலாம்!

விண்ணகப் பிதாவின்
விருப்பம் புரிந்து,
விரைந்து பணிபுரிபவன்
விண்ணரசில் நுழைகிறான்!

அஃதல்லாமல் -
ஆகாயம் பிளக்கும்
அக்கினி தேதியில்
அநேகர் என்னில்
அபயம் நாடி...

''கர்த்தாவே,
கர்த்தாவே!
உமது
திருப்பெயரால்
தீர்க்க தரிசனம்
தெரிவித்தோம்!
அற்புதங்கள் புரிந்து
அசுத்த ஆவிகளை
அகற்றினோமே!''
- என அரற்றுவர்!

அப்பொழுது
அடியேன்...
''ஒருபோதும்
உம்மை அறியேன்!
அக்கிரமக்காரர்களே,
அகன்று போங்கள்!''
- என எச்சரிப்பேன்!

என் -
வார்த்தைகளைப் புசித்து
வாழ்பவன்,
கன்மலையின் உச்சியில்
வீட்டைக் கட்டும்
விவேகமுள்ள கணவான்!

புயலும் மழையும்
புரட்டி,
வெள்ளம் பெருகி
வீட்டின் விலாவில்
மோதியும் - அது
விழவில்லை!
ஏனெனில் அது,
கன்மலையில்
ஆணிவேரோடி
அமர்ந்திருக்கிறது!

என்,
வார்த்தைகளைப் புறக்கணித்து
வாழ்பவன் எவனோ,
அவன் -
மணல் மேட்டில்
மாளிகை கட்டிய
மதியீன மனிதன்!

புயலும் மழையும்
புரட்டி,
வெள்ளம் பெருகி
விலாவை உதைத்ததும்,
மணல் மேடு சரிந்து
மாளிகை அழிந்தது!''

மழை ஓய்ந்தது;
மனித குமாரனின் நெற்றியில்
வேர்வை விண்மீன்கள்!

விவசாயின் மண்வெட்டியாய்
விழுந்த மொழிகள்,
உள்ளங்களின் ஆழங்களில்
ஊரணிகள் தோண்டின!

●

விசுவாசத்தின் விலா எலும்பு!

களைகள் மண்டிய
கப்பர்நகூம்;
நடுவில் -
நசரேத் ரோஜா!

தூற்றுவோரின் விழிகள்
துழாவ,
நூற்றுவோர்
தலைவனொருவன்,
தயங்கி நின்றான்;

''திருப்போதகரே!
திமிர் வாதத்தால்
பலதினங்களாக என்
பணியாள் படுத்திருக்கிறான்!''
தங்க நட்சத்திரம்
தவணை கேட்டது;

''இப்பொழுது இயலாது!
விரைவில் வீடு வந்து,
வேலைக்காரனை
குணமாக்குகிறேன்!

மனுதந்தவன்
மறுத்தான்;

‘‘இறைவனே - நீர்
என் இல்லத்தில்
எழுந்தருள நான்
ஏற்றவனல்ல!
என்,
பதவியின் ஆணைக்கு
படைவீரர் பணிவர்!

வெட்டி முடிக்கும் முன்
கட்டி முடிக்கும்,
கடமை கொண்டவர்!

அடியவனுக்கே இத்தனை
அதிகாரம் எனில்,
ஆண்டவருக்கு?’’

அதிசயத்திற்கு
ஆச்சரியம்!

முள்ளின் முனையில்
முத்தத்தின் ஈரமா?

வைகறை வெளிச்சம்
வாழ்த்தியது;

‘‘இத்தகைய விசுவாசத்தை
இஸ்ரவேலருக்குள்
இதுவரை காணவில்லை!

விண்ணின் மக்கள்,
மேற்கிலும் கிழக்கிலும்
மேகமாகக் கிளம்பி,
ஆபிரகாம், ஈசாக்கு,
யாக்கோபுவுடன்
ஆகாயப் பந்தியில்
அமருவார்கள்!

மண்ணின் மக்கள்
அழுகையும், பற்கடிப்பும்,
அரித்துத் தின்னும்
அந்தகாரத்தில்
அமிழ்தப்படுவர்!''
திராட்சை விழிகள்
திரும்பித் தளும்பின;

''உன் விசுவாசத்தின்படியே
உனக்கு நடக்கும்!''
நன்னம்பிக்கை முனை
உத்தரவிட்ட நாழிகையில்,
ஊழியன் விரல் சொடுக்கி
உட்கார்ந்தான்!

வேத விசுவாசம்...
ஜீவதண்ணீரில்,
மீனாக அல்ல -
மின்சாரமாகவே
மேவியிருக்கிறது!

●

புதைக்காமலேயே முளைத்த விதை!

தேசம் முழுதும்
தீயின் ஊர்வலம்!
சூடுபறக்கும்
சொற்பொழிவுகள்
சூரியனையும் வேர்க்கவைத்தன!
'நாயீன்!'
குண்டூசிக் கொண்டை வடிவ
குக்கிராமம்!
வேத விமானம்
காலடி வைத்த பொழுது,
ஊரின் சங்கிலிருந்து
ஓலம்!
கைம்பெண் ஒருத்தியின்,
மகன்
மரித்து போனான்!
சந்திரனைக் கடந்தது
சவ ஊர்வலம்!
அழுதழுதே
அழுகிப் போனாள்,
அம்மா!
தாயின் கண்ணீர்
இரும்பையும்
பனிக்கட்டியாக்கிவிடும்!

இயேசுவின் இதயம்
தண்ணீரில் மூழ்கிய
குழந்தையாய்த் தவித்தது!

மரண ஊர்வலத்தை
மறித்தார்
மனித குமாரன்!

இலவம் பஞ்சுவிரல்கள்
இறந்தவனைத் தீண்டின்

''இளைஞனே;
எழுந்திரு!''
விறகு மீண்டும்
தளிர்த்தது!

இறந்தவன் கரங்களை
இறக்கை விரித்தான்!

அன்னையின் விழிகளில்
ஆனந்த அருவி!

''மரித்தவனை உயிர்ப்பித்த
மகா தீர்க்கதரிசி!''

மக்களின் எக்காளம்
யூதேயாவின்
நரம்பு மண்டலத்தின்
எல்லை வரை
எதிரொலித்தது!

●

தாசியின் தைல அபிஷேகம்!

பரிசேயன் சீமோன்
வித்தகப் புத்தகத்தை
விருந்துண்ண பணிந்தான்!

பாமரரின் செங்கோலும்
பந்தியில் அமர்ந்தது!
திடீரென,
விருந்தின் மத்தியில்
அழகி ஒருத்தி
அவசரமாக நுழைந்தாள்!

அவள்...
வாடகைக்கு சுகந்தரும்
வசந்தம்!
தன் பசியைத் தணிக்க
பிறர் பசிக்கு
பிய்க்கப்படும்
ரொட்டித் துண்டு!

மகதலேனா மரியாள்
இவள் என
மறைஅறிஞர் கூற்று!

இளமையை விற்ற
இருட்டு மின்மினி
இதயத்தை விற்கவில்லை!

அந்த
வாடகை நிலவு
அழுக்கு வாழ்வை
அடித்துத் துவைக்க,
பரிசுத்த படித்துறையில்
பணிந்து விழுந்தது!

நங்கையின் கண்ணீர்
நதியின் கால்களை
நனைத்தது!

பரிமளத் தைலத்தால்
பாதங்களை மொழுகி
கார்கூந்தலால் துடைத்தது,
அந்த கைமாறும் ரோஜா!

இதழ்கள் தீண்டிய பாதங்களில்
ஈரமுத்திரை இல்லை;
வேதனையின் ரத்தமே
வெப்பமாகச் சுட்டது!

இமயத்தின் இதயம்
இரக்கத் தேன்
சொட்டியது!
சீமோனின் முகம்
சுருக்குப் பையானது;

''இவர் தீர்க்கதரிசி!
தன்னைத் தீண்டியவள்
தாசி எனத்
தகவல் அறிந்திருப்பாரோ?''
மதகு திறந்தது;
மலர்கள் உதிர்ந்தன;

''ஒருவனிடத்தில் இருவர்
ஐநூறு வெள்ளிகளும்,
அடுத்தவன்
ஐம்பது வெள்ளிகளும்,
கடன்பட்டிருந்தனர்!

இயலாமையால் இருவரும்
கைவிரிக்க,
கடன் தந்தவன் அவர்களை
மனித நேயத்துடன்
மன்னித்து விட்டான்!

இருவரில் எவன்
மன்னித்த மனிதனிடம்
அதிக அன்பு செலுத்துவான்?

சிந்தித்த சீமோன்
பள்ளி மாணவனாய்
பதிலுரைத்தான்;

''அதிக கடன்பட்டவனே
ஆயுளுக்கும்
அன்பு கூறுவான்!''

நயாகரா,
கூவத்தின் கண்ணீரில்
குடிநீர் கண்டது;

''இந்த -
இருளின் மகளின்
செயல்களைச் சிந்தி!

விருந்துக்கு உன்
வீட்டினுள் நுழைந்தபோது,
என் பாதங்களைக் கழுவ
எவரும் தண்ணீர்
தரவில்லை!

வாழ்த்து முத்தமிட்டு
வரவேற்கவில்லை!
தாயுள்ளத்துடன்
தலையைக் கோதி
தைலம் பூசவில்லை!

இந்த இளம்பெண்ணோ,
கண்ணீரில் என்
கால்களை அபிஷேகித்து
கார்கூந்தலால் துடைத்து
பாதங்களை முத்தமிட்டு
பரிமளத்தைலம் பூசினாள்!

இதோ! - இந்த
மங்கையின் பாவங்கள்
மன்னிக்கப்பட்டன!
சிறிது மன்னிக்கப்பட்டவன்
சிறிய அன்பே
செலுத்துவான்!

அபாக்கியவதி இவள்
அதிக அன்பு கூர்ந்து
அதிசயம்!

கடுகு நிமிட இடைவெளியில்
காற்றும் மூச்சு விடவில்லை!
நாவு -
தராசு முள்ளாய்
உயர்ந்தது;

''உன் பாவங்கள்
உனக்கு மன்னிக்கப்பட்டன!''

விலைமகளின் விழிகளில்
விடுதலை ஜொலிப்பு!
திருடுபோன கற்பு
திரும்பக் கிடைத்தது!

வேலியில் நின்ற ஓணான்கள்
கேலியில் சிரித்தன;
''இவனுக்கு -
தாசியின் பாவங்களை
தள்ளுபடி செய்ய
தகுதி என்ன இருக்கிறது?''

அரிப்பெடுத்த கேள்வியை
அலட்சியம் செய்தது
அமுத சுரபி;
''விசுவாசம் உனக்கு
விடுதலை தந்தது;
அமைதியான சிந்தனையுடன்
ஆரோக்கியமாக வாழுவாய்!

கசங்கிய காகிதமாக
கால்களில் விழுந்தவள்,
வெள்ளை மல்லிகையாய்
வீடு திரும்பினாள்!

●

மாணவர்களுக்கான மதிப்பெண்கள்

வானத்தின்
வானொலி நிலையம்,
வாழ்க்கைக் கல்வியை
வழங்கிக் கொண்டிருந்தது!
அறிஞன் ஒருவன்
அலைவரிசையில்
குறுக்கிட்டான்;

''கர்த்தரே! - உம்
காலணிகளுக்கும்,
கரங்களால்
சேவை செய்வேன்!''
மகிழம்பூவின் தலை
மறுத்தது;

''நரிகளுக்கு குழிகளுண்டு,
பறவைகளுக்கு கூடுகளுண்டு,
மனித குமாரனுக்கோ
மடிசாய இடமில்லை!

தூரதேசத்திலிருந்து
துக்கச் செய்தி வந்தது!
மாணவரொருவரின் தந்தை
மரித்துப் போனார்!

ஆசிரியரிடம் மாணவர்,
அடக்கம் செய்ய
அனுமதி வேண்டினார்!
ஆவியின் ஜோதி
அனுமதி மறுத்தது;

‘‘மரித்தவர்
மரித்தவரை,
மண் அடக்கம்
செய்யட்டும்!
பேசாமல் என்
பின் வா!’’
பின் -
தேம்பிய மாணவரை
தேற்றியது திருமறை;

‘‘கலப்பையில்
கைவைத்தவன்,
உழுதநிலத்தைத் திரும்பி
உற்றுநோக்குவது ஏனோ?’’
முகவுரைக்குப்பின்
அகவுரைத் தொடர்ந்தது;

‘‘உறவையும், உயிரையும்
உதறி எறிந்து,
சிலுவை சுமக்கச்
சித்தமானவனே
சீடனாய் எனக்குச்
சேவை செய்வான்!

கேளுங்கள்...!

கோபுரம் கட்டினான்
குடிமகன் ஒருவன்!
அடித்தளம் பூசிய பின்
முழுவதும் எழுப்ப முடியாமல்
மூச்சு திணறினான்!

பார்த்தவர்கள்
பரிகாசித்தனர்!

வரவு செலவு கணக்கு
வயிற்றைச் சுட்டன!

செயலுக்கு முன்
சிந்தனை வேண்டும்!

பதினாறாயிரம்
படைவீரர் கொண்ட
அரசனொருவன்,
இருபதினாறாயிரம்
படைவீரர் கொண்ட
இன்னொரு அரசனை
எதிர்க்கும் முன்னர்,
மூளையைப் பிழிந்து
முன்யோசனை செய்வான்!

அவ்வாறு அவன்
எதிர்வினைகளை குறித்து
ஆலோசித்து,
எதிரி -
தூரத்தில் மையமிட்ட பொழுதே
தூதுவிட்டு தோழனாவான்!
ஆற்றில் இறங்கும்முன்
ஆழம் அறிதல்
அவசியம்!

தன்னை வெறுக்காதவன்
என்
தடம் தொடர மாட்டான்!''

போர்வாள்கள் தம்
புத்தியைத்
தீட்டிக் கொண்டன!

●

அறுவடை அதிகம்!

காலத்தின் கரம்
நாட்களை நகங்களாக
நறுக்கி எரிந்தது!

தேகத்தில் ரத்தம்
சுழலுவது போல,
திசைகளில் பரவியது
திருப்பணி!

பிணியாளர்கள்
குணமாகி,
பணியாளர்களாகினர்!

கரிசல் பூமி
வைரங்களைப்
பதியமிட்டது!

வாழ்க்கை வயலில்
மண்டிக் கிடந்த
மனிதக் கதிர்களைக் கண்டு
வான உழவன்
வருந்தினார்;

‘‘அறுவடை அதிகம்;
அறுப்பவர் குறைவு!

அறுவடைத் தலைவன்
அறுவடைக்குத் தம்
வேலையாட்கள் பலரை
விரைந்தனுப்ப
வேண்டுங்கள்!''

வெல்வெட்டுப் பறவை
விரித்தது சிறகை!

●

திசைகளைக் கிழிக்கப் புறப்படும் தீக்குச்சிகள்!

வானம் தன்
அம்பறாக் கூடுகளை
அணிபிரித்தது!

எழுபத்திரெண்டு நபர்களை
பனிரெண்டு குழுக்களாக
பத்திபிரித்தார்
மனித குமாரன்!

அது,
அந்தகாரங்களைச்
சிதறடிக்கும்
ஆன்மீகத் துருப்பு!

அன்புச் சீடர்களை
அணித்தலைவர்களாக
நியமித்த
வர்க்கப் போராட்டத்தின்
'வால்கா;

பிணிகளையும்
பிசாசுகளையும்
பிழியும் சக்தியை
பிட்டுத் தந்தது;

‘‘புறப்படுங்கள்!
பிறவின மக்கள்
சமாரியர் நகரங்களில்
நுழையாமல்,
இஸ்ரயேலின்
இதய நகரங்களில்
நுழையுங்கள்!

நீதியின் அரசு
நெருங்குகிறது!
வியாதியஸ்தர்களை
விடுவியுங்கள்!
மரித்தவரை
உயிர்ப்பியுங்கள்!

துஷ்ட ஆவிகளைத்
துரத்துங்கள்!

இலவசமாகப் பெற்றதை
இலவசமாக
வழங்குங்கள்!

இறையாத்திரைக்கு -
பொன், வெள்ளி, செம்பு,
மேலாடை, மிதியடி, தடிகளை
எடுத்து வைக்கவேண்டாம்!

உழைப்பவன் தன்
உணவுக்கு
உரிமையுள்ளவன்!

தங்கும் இல்லம்
தகுதியுடையதா? எனத்
தகவலறிந்துத்
தங்குங்கள்!

விருந்தினராக
வீட்டின் வாசலில்
நுழையும் பொழுதே
வாழ்த்துங்கள்!

சாந்த இல்லம்
சமாதானம் பெறட்டும்;

தகுதியில்லாத
இல்லம் - நீங்கள்
தந்த சமாதானத்தை
தவற விடட்டும்!

இல்லங்கள் உங்களை
ஏற்க மறுத்தால்,
உமது கால்தூசியை
உதறி விடுங்கள்!

தணல் நீதிமன்றத்தின்
தராசுத் தட்டிலே,
எனது சீடரை
ஏற்க மறுத்த நகரங்களுக்கு
ஏற்படுவதை நோக்கிலும்
'சொதோம், கொமாரா'வுக்கு
சூழ்ந்தது சொற்பமாகும்!

ஓநாய்களிடையே
ஆடுகளாய் உங்களை
அனுப்புகிறேன்!
சர்ப்பங்களைப் போல
சந்தேக வினாவுடனும்,
காட்டுப் புறாக்களைப் போல
கபடமற்றவர்களாகவும்
களத்தில் இயங்குங்கள்!

இருட்டு மனிதரிடத்தில்
எச்சரிக்கைத் தேவை!
அவர்கள் உங்களை,
ஆலோசனை சங்கங்களுக்கு
அதிகாரமாக ஒப்படைத்து
சன்னிதானங்களில்
சாட்டைகளால்,
தீர்ப்பெழுதுவார்கள்!

புரட்டு மனிதர்களும்,
பிறவினத்தவரும்,
சதிகார சாட்சிகளாக,
ஆளுநர்கள்
அரசர்கள் முன்பு - என்
கொள்கையின் நிமித்தம்
குற்றவாளிகளாக நிற்பீர்!

உதிரம் விதையாகும்
அக்கணம் நீங்கள்,
வாதாடுவது குறித்து
வருந்தி நிற்காதீர்!

நீங்கள்,
வாதாட வேண்டிய
வார்த்தைகள்,
வானத்திலிருந்து
உங்கள் நாவுகளுக்கு
வழங்கப்படும்!
பிதாவின் ஆவியானவரே
பிரதிநிதியாகப் பேசுவார்!

சகோதரன் தன்
சகோதரனையும்,
தந்தை தன்
மகனையும்,
மரணத்திற்கு
மடி பிச்சையிடுவர்!

பெற்றோரைப்
பிள்ளைகளே,
கொலை செய்வர்!

நீங்கள் என்
பரிசுத்த நாமத்தால்
பகைக்கப்படுவீர்கள்!

முடிவு பரியந்தம்
முழுகாமல் நிற்பவனே
மீட்கப்படுவான்!

ஒரு நகரத்தில்
உபத்திரவம் எனில்
மறுநகரத்தில்
மறைந்திருங்கள்!

நீங்கள்,
இறைமைந்தன்
எழும் வரை,
இஸ்ரயேல் முழுதும்
தரிசிக்க இயலாது!

சீடன் தன்
குருவிலும்,
ஊழியன் தன்
எஜமானிலும்
உயர்ந்தவனல்ல!

சீடன் தன்
குருவைப் போல -
ஊழியன் தன்
எஜமானைப் போல -
ஆணவமாக
அலட்டினாலும்,

வேலைக்காரன் தன்
வீட்டுத் தலைவனை
‘பெயல் செபூல்’ - என
அறிமுகம் செய்தாலும்
அஞ்ச வேண்டாம்!

மறைக்கப்பட்ட
மறைபொருள்
இல்லை!

நான்,
இருளில் கூறுவதை
நீங்கள்,
வெளிச்சத்தில்
விளக்குங்கள்!

செவியில் உணருவதை
வீட்டின் கூரையிலிருந்து
வெடித்துக் கூவுங்கள்!

உயிரைத் தவிர்த்து
உடலைக் கொல்பவர் கண்டு
அஞ்ச வேண்டாம்!

உயிரையும்
உடலையும்,
நரகத்தில் பொசுக்க
அதிகாரம் உள்ளவருக்கே
அஞ்சுங்கள்!

ஒரு காசுக்கு
விற்கப்படும்
இரு அடைக்கலான் குருவிகள்,
தந்தையின் சித்தமில்லாமல்
தரையில் விழாது!

உங்கள்,
தலைமுடிகள் கூடத்
தந்தையால்
எண்ணப்பட்டுள்ளன!

அஞ்சவேண்டாம்;
அடைக்கலான் குருவிகளிலும்
நீங்கள்,
அந்தஸ்து உள்ளவர்கள்!

என்னை,
மனிதனுக்கு முன்பாக
அறிக்கையிடுகிறவனை
நான்,

ஆகாயப் பிதாவின் முன்
அறிக்கையிடுவேன்!
மறுதலிப்பவனை நானும்
மறுதலிப்பேன்!

பூமிக்குச்
சமாதானத்தையல்ல;
வாளையே அனுப்ப
வலம் வந்தேன்!

ஒரு
இறை மனிதனுக்கு
தாய்வீடு தடையே!

பந்தங்களை நேசிப்பவன்
எனக்குப்
பாத்திரான் அல்ல!
என்பின்
சிலுவை சுமந்து
சிரமப்படாதவன்,
சிறிதும் எனக்குச்
சித்தமானவன் அல்ல!

தனக்காகத்
தன் உயிரைக் காக்கிறவன்
தவற விடுகிறான்;
எனக்காகத்
தன் உயிரைத்
தானமளிப்பவன் அதைத்
தக்கவைக்கிறான்!

உங்களை ஏற்பவன்
என்னை ஏற்கிறான்;
என்னை ஏற்கிறவன்
என் பிதாவை ஏற்கிறான்!

தீர்க்கதரிசி எனவுணர்ந்து
தீர்க்கதரிசியை ஏற்பவன்
தீர்க்கதரிசியின் பலனையும்,

நீதிமான் எனவுணர்ந்து
நீதிமானை ஏற்பவன்
நீதிமானின் பலனையும்,
நிறைவடைவார்கள்!

என் சீடன் என
இதயம் பணிந்து
இந்தச் சிறியவரில் எவருக்கும்,
ஒரு கிண்ணம்
நீர் தந்து உதவுபவன்,
தன்,
ஆன்ம பலனை
அடையாமல்
அகல மாட்டான்!

தேன்கூடு
கலைந்தது!
எட்டுத்திக்குகளிலும்,
இறையியல் கிரணங்கள்
விழுந்தன!

தீப்பந்தங்களாகத் திரும்பியத் தீக்குச்சிகள்!

வான்வெளி,
வாரங்களைப்
புல் செதுக்கியது!

திசைகளை
முறம் புடைத்த,
தென்றல்கள்
திரும்பின!

வெற்றி வானவில்
விழிகளில்
விரிந்திருந்தன!

பள்ளியிலிருந்து
வீடு திரும்பிய குழந்தைகளை,
தாயுள்ளத்தோடு
தழுவினார் மனிதகுமாரன்!
பணி அனுபவங்கள்
பந்தி வைக்கப்பட்டன;

''உமது
திருநாமத்தால்
தீய ஆவிகளை
விரட்டினோம்!''

‘‘உமது பெயரால்
உடல்களைத் தீண்டினோம்;
மக்களின் வியாதிகள்
மறைந்தன!’’

தேன் குடம்,
புகழ் போதையில்
புளிக்கவில்லை!

ஆயினும்,
உற்சாகம் உள்ளத்தில்
ஊஞ்சல் கட்டியது;

‘‘சாத்தான்
மின்னலைப் போல,
விண்ணிலிருந்து
விழக் கண்டேன்!

வக்கிரத்திற்கெதிரான
வல்லமையை உங்களுக்கு
வழங்குகிறேன்!

பிசாசுகளை விரட்டியதற்கு
பெருமிதமடையாமல்,
உன்னத வானத்தில்
உங்கள் பெயர்கள்,
மனித குமாரனால்
பொறிக்கப்பட்டதற்கு
மகிழுங்கள்!

ஆகாயப் பிதாவே!
அற்புதங்களை
அறிஞர்களுக்கு மறைத்து,
அன்றில்களுக்குப் புகட்டியதற்கு
அடியானின் நன்றி!

ஆகாயப் பிதாவினால்
அனைத்தும் செய்ய
அடியேனுக்கு
அனுமதியுண்டு!

பிதாவைத் தவிர எவனும்
குமாரனைக்
குறிப்பறியான்!

நீங்கள் -
தரிசிப்பதை
தரிசிக்கும் விழிகள்,
தகுதியுள்ளவை!

அரசர்களும்
அறிஞர்களும் நீங்கள் -
தரிசித்ததை தரிசிக்கவும்,
கேட்பதைக் கேட்கவும்,
தரிசிக்காமலும், கேட்காமலும்,
தரிசாகிப் போயினர்!

சூரியனும், நிலவும்,
காலத்தின் குளம்புத்தடங்களாக
வானத்தில் பதிந்தன!

●

மழைக்குத் தூதுவிட்ட நிலம்!

இரண்டாம் ஏரோது
கழிவுகளில் வாழும்
காரப்பான் பூச்சி!

செங்கோலை
லத்தியாக்கிய ஏரோது,
பூக்களின் முதுகில்
பூதமாகத் தொங்கினான்!

கலிலேயா -
காய்ந்த திராட்சையாகச்
சுருங்கிக் கிடந்தது!

தாசிகளின் கரங்களில்
தாயக்கட்டையான ஏரோது,
தம்பியின் தாரத்தையும்
எச்சில் கனியாக்கியவன்!

தீர்க்கதரிசி யோவான்,
தீக்கோழி ஏரோதுவின் கழுத்தைத்
திருகினான்!

காட்டு வெடிகுண்டின்
கதிரியக்கம்,

அரண்மனையின்
நுரையீரலுக்கு
அரித்தது!

புயலின் கால்களுக்குப்
பூட்டு போடப்பட்டது!
நண்டுகள் கூடி
அலையை கைதுசெய்து,
வலையில் வைத்தன!
சிறைச்சாலை,
சிங்கத்தின் குகையானது!

வாரங்கள் சில
வயதாகி உதிர்ந்தன!
கந்தகத் தொழிற்சாலை
கலிலேயாவில் நுழைந்தது!
சிறைச் சிங்கம்
சீடர்கள் இருவரிடம்
செய்தி அனுப்பியது;

''வருகிற வானம்
நீர்தானா?
அல்லது -
இன்னொரு விடியலை
எதிர்நோக்க வேண்டுமா?''

கடிதத்தில்
கண்ணீரின் கரிப்பு;
வாசித்த இதழ்களில்
வாய்காலாய் சிரிப்பு;

''நீங்கள் -
அறிந்ததை யோவானுக்கு
அறிவியுங்கள்!
குருடர் பார்க்கின்றனர்,

முடவர் நடக்கின்றனர்,
குஷ்ட ரோகிகள்
குணமடைகின்றனர்,
மரித்தவர் உயிர்க்கின்றனர்!

நலிந்தவர்களுக்கும்
நற்செய்தி வழங்கப்படுகிறது!
என்னில் இடராதவன்
என்றும் பாக்கியவான்!''

வாசல் திறந்திருப்பது
வானம் தான்!
சிந்தனையில்
முத்திரை குத்தி,
சிங்கத்தின் சீடர்கள்
சென்றனர்!

புயலுக்குப்
பொன்னாடைப் போர்த்தியது
பூகம்பம்;

''எதை தரிசிக்க
இருண்ட வனாந்திரம்
நுழைந்தீர்கள்?
காற்றில் நடனமாடும்
நாணலையா?
மெல்லி ஆடைகள் அணிந்த
மேன் மக்கள்,
வசந்த மண்டபங்களில்
வாழுகின்றனர்!

தீர்க்கதரிசிகளைச்
தேடித் திரிபவரே!
அவர்களிலும்
தகுதியுள்ளவனை
அறிவிக்கிறேன்!

‘தூய்மையானவருக்கு முன்
தூதுவனை அனுப்புவேன்!
அவன் உம்
பயணப்பாதையைப்
பதப்படுத்துவான்! - எனும்
இறைவாக்கின் தூதன்
இவனே!

இவனிலும் பெரியவன்
பெண்கள் யாவருக்கும்
பிறக்கவில்லை!

யோவானின் காலம் வரை
பரிசுத்த அரசு
பலவந்தப் படுத்தப்படுகிறது!

தீர்க்கதரிசிகள்
தீர்க்கதரிசனம்
தெரிவித்ததுண்டு!

நீங்கள் -
ஏற்க விரும்பினால்
‘எலியா’ இவனே!

காதுள்ளவன்
கவனிக்கக் கடவான்!

இந்த -
இளைய தலைமுறையை
எவருடன் ஒப்பிடுவேன்?

‘உங்களுக்காக
குழல் ஊதினோம்;
நீங்கள்
கூத்தாடவில்லை!
உங்களுக்காக
புலம்பினோம்;

நீங்கள்
மாரடிக்கவில்லை!'- எனும்,
குறை கூறும்
குருட்டுப் பிள்ளைகள்!

யோவான் -
குடிக்காமலும்,
புசிக்காமலும்
உபவாசித்தான்!

பித்தர்கள் அவனைப்
பிசாசுப் பிடித்தவன் எனப்
பிதற்றினர்!

மனுமைந்தன்
புசித்தார், குடித்தார்!
அவரைப் பற்றி -
'போஜனப்ரியன்,
குடிவெறியன்,
பாவிகளோடும்
ஆயக்காரர்களோடும்,
பழகுபவன்!'- என
ஓநாய்கள்,
ஊளையிட்டன!

ஆயினும் -
ஞானத்தின் நியாயம்
செயல்களின் தூய்மையால்
சிறந்து விளங்கும்!

கணிபொறிக் காலம்,
கள ஆய்வுகளைப்
பதிவு செய்தது!

●

பூவின் உதட்டில் ரத்தம்!

கபாலங்கள் முன்
கவிதை வாசித்த
கதை!

விரியன் பாம்புகளுக்குத்
தொட்டில் கட்டிய
துயரம்!

கல்லறையில் துயிலும்
களிமண் மானுடம் கண்டு,
கனவுகளின் பூமி
கசிந்தது;

''கோரசினே;
உனக்கு ஐயோ!
பெத்சாயிதாவே;
உனக்கு ஐயோ!

உங்களிடம் -
ஆற்றுப் பணிக்குப் புரியப்பட்ட
அற்புதங்கள்,
சீதோனிலும், தீருவிலும்
செய்யப்பட்டருந்தால்...

தவஉடை தரித்து
சாம்பல் பூசி,
எண்ணற்ற மக்கள்
இதயங்களை புதுப்பித்திருப்பர்!

அக்கினி தினத்தில்
உனக்கு -
அளிக்கப் படுவதிலும்,
தீருவுக்கும், சீதோனுக்கும்
சூழ்வது சொற்பமே!

வானபரியந்தம் வரை
வளர்ந்திருக்கும்
கப்பர் நகூமே!
நீ -
பாதாளம் வரை
தாழ்த்தப்படுவாய்!

உனக்கு உதவிய
அற்புதங்களை அன்று,
'சோதோமிலே புரிந்திருந்தால்
இத்தினம் வரை
எதிரொலித்திருக்கும்!

அக்கினித் தீர்ப்பிலே
உனக்கு அளிக்கப்படுவதிலும்,
'சோதோமுக்கு நிகழ்ந்தது
சொற்பமே!''

முகாரியைத் துப்பியது
பூபாளம்!

ஆயினும் -
தாய்க்கும், சேய்க்கும்
தொப்புள் கொடி உறவு
துண்டிக்கப்படுமா?

நிஜமா? – நிழலா?

அசுத்த ஆவிபிடித்து
ஊமையும், குருடுமான
ஒருவனை -
குறிஞ்சி நிலத்தின் முன்
குப்பையாகக் கொட்டினர்!

மின்சாரம் தீண்டியதும்
கருகியது,
கருப்பு ஆவி!

மக்களின் விழிகளில்
மான்கள் துள்ளின;

''தாவீதின் குமாரன்
தரிசனமாகி விட்டாரோ?''
எதிரும் புதிருமாக
எண்ண அலைகள்
இடித்துக் கொண்டன;

''இவன் -
பேய்களின் அரசன்
'பெயல்செபூல்!'
அரசன் ஆணையிட
அசுத்த ஆவிகள்
அடிபணிகின்றன!

மரப்பாச்சி பொம்மைகள்
மதிப்புரை வழங்கின!

இதய எரிமலை
உதடு துடித்தது;

''தனக்குள் -
பிளவுபட்ட அரசு
பிரிந்து செல்லும்!

தனக்குத்தானே -
விரோதியான நகரத்தில்
வீடுகள் இருப்பது
இயலாது!

சாத்தான் -
சாத்தானை விரட்டுமோ?
தூய ஆவியால் -
துஷ்ட ஆவிகளைத்
துரத்தும் பணியால்,
தெய்வீக அரசு உம்மைத்
தேடி வந்துள்ளது!

என்னுள் இல்லாதவன்
எதிரியாக இயங்குவான்!

மனிதர் மீது
சுமத்தப்படும் பழி
மன்னிக்கப்படுவதுண்டு!

மனிதகுமாரனின் மீது
சுமத்தப்படும் பழி
மன்னிக்கப்படுவதில்லை!

நல்லமரம் எனில்
நற்கனி என களியுங்கள்;
தீயமரம் எனில்
தீயகனி என பழியுங்கள்!

இதயக் கருவூலம்
இனிமையில் வழிந்தால்,
இதழ்கள்,
நறுமணம் வீசும்!

பொல்லாத கருவூலம்
பொய்களைப் பூசும்!
நீங்கள் -
வழங்கும் சொற்களிலேயே
நீதிமான், குற்றவாளி - என
நிறுக்கப்படுகிறீர்கள்!

பயனற்ற சொற்கள்,
பரமத் தீர்ப்பில்
பரிசீலிக்கப்படும்!''

புழுக்களுக்குப்
புரையேறின!

●

கொசுக்களுக்கு வந்தக் குளிர்காய்ச்சல்!

சுண்ணாம்புக் காளவாய்கள்
யுரேனியத்தை பொசுக்க
யோசித்தன;

''போதகரே! - நீர்
ஆகாயத்தின் பிரதிநிதி எனில்
அடையாளம் காட்டும்!''

காற்றுக்கு
வர்ணமா?

வானத்தின் தபால்தலை
வருந்தியது;

''விபச்சார வம்ச
விலாசம் வினவுகிறது!
தீர்க்கதரிசி யோனா
திமிங்கலத்தின் வயிற்றில்
மூன்று தினங்கள்
வாழ்ந்தது போல...
மண்ணின் வயிற்றில்
மனிதகுமாரன்,
மூன்று தினங்கள்
ஓய்வெடுப்பார்!

யோனாவின் சாட்சியறிந்து,
‘நினிவே’ நகரத்தார்
நீதியறியந்தனர்!

யோனாவிலும் பெரியவர்
இங்கே இருக்கிறார்!
நீதியறிந்த
‘நினிவே’ மக்கள்,

இந்த -
இருட்டுத் தலைமுறைக்கு
எதிராகப் பேசுவர்!

சக்ரவர்த்தி சாலமனின்
ஞானத்தீர்ப்பை நாடி,
தென்தேச அரசி
பூமியின் எல்லையிலிருந்து
புறப்பட்டு வந்தாள்!

சாலமனிலும் பெரியவர்
இங்கு இருக்கிறார்!
நீதியறிந்த அரசி
இந்த -
இருட்டுத் தலைமுறைக்கு
எதிராகப் பேசுவாள்!

இது -
நியாயத் தீர்ப்பில்
நிறைவேறும்!

மனிதனை விட்டு
அகன்ற ஒரு அசுத்த ஆவி...
மயானங்களில் அலைத்து
வாழ்ந்த வீட்டுக்கு திரும்பவும்
வரும்பொழுது -
சூன்யமான,
வெறிச்சோடிய வீட்டைக் கண்டு,

இன்னும் ஏழு ஆவிகளை
இழுத்துவந்து குடியேறும்!
ஆர்பரிக்கும் ஆவிகளால்
வீட்டு மனிதர்கள்
வேதனையில் புழுங்குவர்!

முன்நிலையிலும்
பின்நிலை அவலம்
பெரிது!

இந்தத் தலைமுறைக்கும்
இதுவே நிகழும்!''

திராவகத்தைக் குடித்த
கொசுக்களின் வாய்கள்,
கொப்பளித்தன!

●

சுற்றும் பூமிக்குச் சொந்தம் ஏது?

வானம் -
சூரியனைச் சாறுபிழியும்
சூடான நேரம்!

தத்துவத் தறியில்
இதயங்களை இழைத்த
இயேசுவைக் காணத்
தாயும், உடன்பிறப்பும்,
தூரத்தின் நின்று
தூதுவிட்டனர்!

ஆழிக்கு அலையென்றாலும்,
தூளிக்கு துளியல்லவா?
சீடர்கள் வழியே
செய்தி பாய்ந்தது!

துறவு நதி,
உறவுக் கரைகளை
உடைத்தது;

''என் -
தாயும், உடன்பிறப்பும்
எவர்?
சிவப்புப் பால்வீதி,
சீடர்களை அணைத்தது;

‘‘தாயும் - உடன்பிறப்பும்
எனைத் தாங்கும்
சீடரே!

பிதாவின் பிரியப்படி
செயல்படும் எவனும்,
என்னுடன் -
உறவின் பசைதடவி ஒட்டிக்கொள்கிறேன்;
உடன் வருகிறான்!’’

சிறப்புச் சான்றிதழ் பெற்ற
சீடர்களுக்குள்,
மலர் மழை!

வானத் தந்தையின்
வளர்ப்பு மகனை,
பூமிக்குத் தத்து கொடுத்து
புறப்பட்டாள் தாய்!

●

தத்துவ அருவியில் தலை குளிக்கும் இதயங்கள்!

பூமிக்குடத்தில்
தளும்பும் கடல்!
மணல் முற்றத்தில்
மனித மீன்கள்!

கட்டுமரம்
மேடையானது!
இடிதாங்கிகளைத் தகர்த்தது
இயேசுவின் குரல்!

ஆழியின் ஆழம்,
அறிவுரையின் ஆழம் தொட
மூழ்கியது!

உவமைக் கொழுவால்
உழவு நிகழ்ந்தது;
மனித நிலங்கள்
மகசூல் கண்டன!

விதைப்பவன் உவமை ;

''கேளுங்கள் மனிதர்களே!
விவசாயி ஒருவன்
விதை விதைக்கப்
புறப்பட்டான்!

அவன் -
விதை வீசுகையில்
சில விதைகள்
பாதையில் விழுந்தன,
பறவைகள் அவைகளை
பட்சித்து விட்டன!

சில விதைகள்,
பாறைகளில் விழுந்தன!
அவை -
ஆழமான மண்ணில்லாததால்
அதிவிரைவில் முளைத்தன!
பின் வெயிலின்
உஷ்ணம் ஏறியபோது
உலர்ந்து தீய்ந்து
உதிர்ந்து விட்டன!

சிலவிதைகள்
முட்களில் விழுந்தன;
முட்கள் வளர்ந்து
முளைத்ததை நெருக்கின!

சில விதைகள்
நல்ல நிலத்தில்
விழுந்தன!
அவை -
நூறாகவும்,
அறுபதாகவும்,
முப்பதாகவும்,
முளைத்து -
பலன் தந்தன!

கேட்கச் செவியுள்ளவன்
கேட்கக் கடவான்!''

சீடர்களின்
சிந்தனை இயந்திரங்கள்,
சந்தேக மாவை அரைத்தன!

‘‘ஏன் -
உவமைக் கதைகளை
உரைக்கிறார்?’’

கேள்வியின் கனம்
பூமியை அழுத்தவில்லை!
வேட்டு வெடித்ததுபோல்
விடை வந்தது;

‘‘ஆகாயத்தின்
அந்தரங்கம் உமக்கு
அறிவிக்கப்பட்டதைப் போல,
அவர்களுக்கு
அறிவிக்கப்படவில்லை!

உள்ளவனுக்கு
வழங்கப்படும்;
இல்லாதவனுக்கு
இருப்பதும் எடுக்கப்படும்!
அவர்கள் -
கண்டும் காணாமலும்
கேட்டும் கேளாமலும்,
உதாசீனமாக நிற்பதால்
உவமைகளால்
உரையாடுகிறேன்!

ஏசாயாவின் இறைவாக்கு
இதனால் நிறைவேறியது!

உங்கள் -
காதுகள் கேட்பதாலும்
கண்கள் பார்ப்பதாலும்,
பாக்கியமுள்ளவை!

விதைப்பவனின் உவமையை
விளக்குகிறேன் கேளுங்கள்;
பாதையில்
விதைக்கப்பட்டவன்,
விண்ணரசைப் பற்றிய

வேதவசனத்தை அறிந்தும்,
பொல்லாத பிசாசு
இதயத்தில் புகுந்து
பதியமிட்ட விதைகளை
பறித்துச் செல்கிறது!

பாறையில்
விதைக்கப்பட்டவன்,
வேத வசனத்தை
விரும்பி ஏற்று,
பின் தனக்குள்
வேர்பிடிப்பில்லாமல் வாழ்வான்;
வசனத்தின் நிமித்தம்
வருத்தமும், வாதையும்
வாசலைத் தட்டும் பொழுது
வழிமாறுவான்!

முட்களில்
விதைக்கப்பட்டவன்,
வேதவசனத்தை விளங்கியும்,
கணக்கற்ற கவலைகளாலும்
பூமியின் சுகங்களாலும்
நெருக்கப்பட்டு,
நெறி தவறுகிறான்!

நல்ல நிலத்தில்
விதைக்கப்பட்டவன்,
வசனத்தை உணர்ந்து
வாழ்வதால் -
நூறாகவும்,
அறுபதாகவும்,
முப்பதாகவும்,
பரிசுத்த வாழ்வில்
பலன் தருவான்!''

களைகளின் உவமை :

விண்ணரசுத் தன்
விளைநிலத்தில்
நல்ல விதைகளை
விதைத்த விவசாயிக்கு
ஈடாக இருக்கிறது!

ஒரு விவசாயி
உறங்கும் போது,

அவனது -
வம்ச எதிரி
வயலுக்குள் நுழைந்து,
கள்ளத்தனமாக கோதுமைக்குள்
களைகளை விதைத்தான்!

பருவம் கனிந்து
பயிர்கள்
கதிர் விட்ட பொழுது,
களைகளும் விஷப்பல்
காட்டின!

விவசாயின்
வேலையாட்களுக்கு
விளங்கவில்லை;

''ஆண்டவரே!
நல்ல விதைகளை
உமது -
விளைநிலத்தில்
விதைத்தீர்!
பின் -
களைகள் முளைத்த
காரணம் என்ன?

பரம விவசாயி
பதறாமல் கூறினார்;
''பகைவன் செய்தான்!''

ஊழியர்கள்
உத்தரவு கேட்டனர்;

‘‘நாங்கள் சென்று
களைகளைப் பிடுங்கக்
கட்டளையிடும்!’’

‘‘வேண்டாம்!
களைகளைப் பிடுங்கும்
கடமை அவசரத்தில்
கோதுமைகள் சிலவற்றையும்
கொய்து விடுவீர்கள்!
அறுவடை மட்டும்
இரண்டையும்
அனுமதியுங்கள்!

அறுவடை துவங்கியது!
விவசாயி தன்
வேலையாட்களைத்
துரிதப்படுத்தினான்;

‘‘முதலில் -
களைகளைப் பிடுங்கி
கட்டி வையுங்கள்;
எரிக்க இலகுவாகும்!
பின் -
கோதுமையை என்
களஞ்சியத்தில்
சேமியுங்கள்!’’

மறை உரையின்
திரைவிலகியது;

‘‘விதை விதைக்கும்
விவசாயி,
விண்ணின் மைந்தன்!

வேலையாட்கள்,
விண் தூதர்கள்!
நிலம்; உலகம்!
அறுவடை;
உலக முடிவு!
களை விதைக்கும்
கயவன்,
சாத்தான்!
நல்ல விதைகள்;
வானத்தின் வாரிசுகள்!
களைகள்;
சாத்தானின் சந்ததி!

உலக முடிவில்
உலைதீ கொதிக்கும்!
தூயபிதா,
தூதர்களை அனுப்புவார்;
அவர்கள் -
அக்கிரமச் சந்ததியை
அக்கினியில் பொசுக்குவார்!

அங்கு -
அழுகையும், பற்கடிப்பும்
அதிகரிக்கும்!
நீதிமான்கள்,
சூரியனைப் போல
பிதாவின் அரசில்
பிரகாசிப்பார்கள்!
கேட்கக் காதுள்ளவன்
கேட்கக் கடவான்!''

கடுகு விதை :

''இறை அரசு,
கடுகு விதைக்கு
ஈடாக இருக்கிறது!

கடுகை ஒரு -
விவசாயி,
கடமையுடன்
விதைத்தான்!

விதைகளில் குள்ளமான
கடுகு -
வெடித்து முளைக்கும்போது,
மற்ற செடிகளின்
மத்தியில் மரமாகி,
பறவைகளின் தாய்மடியாகப்
பலனடைகிறது!''

புளித்த மாவு :

''புனித அரசு
புளித்த மாவுக்கு
ஈடானது!
ஒரு -
குடும்பப் பெண்
அதைக் குழைத்து,
மூன்றுபடி மாவிலே
முழுதும் புளிக்க
பொதித்து வைத்தாள்!''

மாவு பொங்கி
பலனடைவது போல்,
மண்ணில் இறையரசு
பலனடையும்!

புதையலும், முத்துக்களும் :

''விண்ணரசு
விளைநிலத்தில்,
புதைந்துள்ள
புதையலுக்கு ஈடானது!

உழுதபோது
புதையலைக் கண்ட
புத்திசாலி உழவன்
தன் -
உடமைகளை விற்று
அந்நிலத்தை
உரிமையாக்கி மகிழுவான்!

●

விண்ணரசு,
நல்முத்துக்களை
நாடித் தேடுகிற,
வணிகனுக்கு ஈடானது!
விலையுயர்ந்த முத்துக்கள்
விற்பனைக்கு வந்தால்,
தன்னுடமைகளை விற்று
தாமதிக்காமல் வாங்குவான்!

வலை உவமை :

''விண்ணரசு,
சமுத்திரத்தில் வீசப்பட்டு
சகல மீன்களையும்
வாரி இழுக்கும்
வலைக்கு ஈடானது!

வலையின் வயிறு
நிறையும் போது -
கரையேறி,
மீன்களைக்
கூடைகளில் குவித்து
கழிவுகளை வீசுவர்!

●

இது -
உலகின் முடிவில்
உறுதியாக நிகழும்!
திருத்தூதர்கள்,
நீதியையயும்,
அநீதியையும் பிரித்து
நெருப்பிலிடுவர்!

அங்கு,
அழுகையும், பற்கடிப்பும்
அதிகரிக்கும்!
அனைத்து உவமைகளையும்
அறிந்து கொண்டீரா?''

இறை மழையில் நனைந்த
இதயங்களைத் துவட்டினர்
மறை மாணவர்கள்;

''உண்மையின்
ஆழமறிந்தோம்
ஆண்டவரே!''

இதயங்களை அழைத்தவர்
இறையியலை இழைத்தார்;

''அப்படி எனில்,
விண்ணரசில் கூறப்பட்ட
வேத அறிஞன் எவனும்,
தன் -
கஜானாவிலிருந்து
புதிய, பழைய பொருட்களை
புன்னகையுடன் எடுத்து வழங்கும்
எஜமானனுக்கு ஈடாவான்!''

‘‘உவமைகளைத் தவிர
அவர்களுடன்
உரையாடவில்லை!
என் -
உதடுகளின் வாசலை
உவமைகளால் திறப்பேன்!

உலகம்,
உற்பத்தியானது முதல்
மறை செய்திகளை
மானுடத்திற்கு வழங்குவேன்! - எனும்,
வேதக்கணிப்பு
வெற்றியைத் தரித்தது!

●

முள்ளம்பன்றிகளின் விரல்களில் மோதிரம்!

வழிபாட்டுக் கூடத்தில்
வானத்தின் -
நேர்முக அஞ்சல்!

மயிலிறகை -
கோழியிறகுகள்
குத்திக் காட்டின;

''தச்சன் மகனிடம்
தத்துவங்கள் எப்படி?
இவனது -
உடன் பிறந்தாரை
உணர்ந்தோமே?''

சூரியகாந்தி,
முகம் சுருங்கியது;
''தீர்க்கதரிசிக்கு,
தரணியெங்கும்
மதிப்புண்டு;
தாய்மண்ணில்
தக்க மதிப்பு இராது!

●

பரிசேய முதலையொன்று
பல்துலக்கப்
பற்பசை கேட்டது;

‘‘நியாயப் பிரமாணத்தில்
எந்தக் கட்டளை
பெரிது?’’

‘‘இறைவனிடம்,
இதயத்தையும்
ஆத்துமாவையும்,
வேரோடு வழங்கி
விசுவாசிப்பாயாக!’’
- என்றும் இதுவே
முதல் கட்டளை!

‘‘தன்னை நேசிப்பதுபோல
தன் அயலானையயும் நேசி!’’
- என்றும் இதுவே
இரண்டாம் கட்டளை!

இவ்விரு கட்டளைகளில்
இறையியலை அடக்கிவிடலாம்!’’

புள்ளிவைத்த பதில்
கிள்ளி வைத்தது
கேள்வியை;

‘‘கிறிஸ்துவைக் குறித்து
நீங்கள் நினைப்பது யாது;
அவர் எவருடைய புதல்வன்?

‘‘தாவீதின் மகன்!’’

‘‘தாவீது தன் புதல்வனை
‘ஆண்டவர்’ - என
அழைத்தது எப்படி?
‘எதிரிகளை அழிக்க
என் வலப்புறம் அமரும் என
ஆண்டவர் உரைத்தார்’, - என
தாவீது கூறினானோ?

தாவீது தன் புதல்வனை
'ஆண்டவர்', - என அழைக்க,
அவனுக்கு அவர்
புதல்வனாக இருப்பது
பொருந்துமா?''

மரமனிதர்கள்
மௌனித்தனர்!

●

சமாதியில் பதுங்கியச் சாத்தான்!

காலச் சுவடியில்,
கடிகாரம் எழுத்தாணியானது!

கலிலேயாவின்
எதிர்திசை நகரம்,
கதரேன்!’

நற்செய்திச் சுரங்கம்
நகரத்தில் நுழைந்தது!

பிசாசு பிடித்து -
கல்லறைகளில் தங்கி
கலகம் புரியும் ஒருவன்,
அம்மணக் கோலத்துடன்
அலறி வந்தான்!

நின்ற வீதி,
நெல்லிக்காய் மூட்டையாய்
அவிழ்ந்தது!

ஊளையிட்டு வந்தவன்
உறைந்து நின்றான்!
சாலையில் புரண்டுவந்தது
சமுத்திர நெருப்பு!
பிசாசின் முகத்தில்
பீதியின் பொம்மலாட்டம்!

இயேசுவின் குரலில்
‘எஃகு’ கனன்றது;

‘‘அசுத்த ஆவியே,
அகன்று போ!’’

கருப்பு ஆவி
கருணை மனு
வைத்தது;

‘‘வானத்தின் குமாரனே!
உமக்கும் எமக்கும்
வழக்கு என்ன?
வதை செய்யாமல்
வழிவிடு!’’

‘‘உன்,
பெயர் என்ன?’’

பல பிசாசு பிடித்தவன்
பல்லிளித்தான்;

‘‘லோகியோன்!

இளைஞனுள் குடித்தனம்
நடத்திய -
எண்ணற்ற பிசாசுகள்,
பாதாளம் நுழையாமல்
பக்கத்தில் மேய்ந்த
பன்றிகளுக்குள் கூடுபாய
பரிந்துரை வேண்டின!

உலகத்தின் இருதயம்
உத்தரவு வழங்கியது!
பிசாசுகள் -
பன்றிகளுக்குள் புகுந்து
மலை உச்சியிலிருந்து
கடலில் வீழ்ந்து
காணாமல் போயின!

பயந்து அலறிய
பன்றியின் மேய்ப்பர்கள்,
பட்டணம் நுழைந்து
பறை சாற்றினர்!

திசைகள் நான்கும்
திருமைந்தனைக் காண
திரண்டு வந்தன!

வக்கிர ஆவிகளிடமிருந்து
தூரெடுக்கப்பட்ட வாலிபன்,
ஆடைகள் அணிந்து,
ஆசிரியரிடம் மாணவனாக
அமர்ந்திருந்தான்!

அச்சத்தில் பிதுங்கிய
அப்பாவி மக்கள்,
மனித குமாரனை
விலகிச் செல்ல
வேண்டினர்!

விடியலைத் தொடர
விடுதலையான வாலிபன்
விண்ணப்பம் வைத்தான்!

தரை வானவில்
தடுத்தது;

‘‘நீ உன் -
வீட்டிற்குச் சென்று
விடுதலை பெற்றதை
விவரி!’’

நட்சத்திர மண்டலம்
நகர்ந்தது!

அன்னப்பட்சியை
காகமென கருதிய,
குருடர்கள் கூட்டம்
குழம்பிக் கலைந்தது!

●

சாம்பலை உயிர்ப்பித்த பீனிக்ஸ்!

சித்தாந்த நுரைபூக்கும்
சிறுவாணி!

வழிபாட்டுக் கூடத் தலைவன்
‘யவீரு’,
நெருப்பை விழுயங்கிய
நீராவியாக வந்தான்;

‘‘போதகரே!
என் மகள்
மரணத்தின் ஆழத்தில்
மயங்கிக் கிடக்கிறாள்;
உம்
வெளிச்ச விரல்கள் தீண்டினாள்
விழித்தெழுவாள்!’’
தூங்கும் பூவை எழுப்பத்
தூரிகை கிளம்பியது!

செல்லும் வழியில்
செய்தி வந்தது;

மொட்டுவின் மூச்சு
முடிந்துவிட்டது!’’

தந்தை யவீருவின்
இருதயச் சுவர்கள்
இடிந்து விழுந்தன!

தலை பிதுங்கிய
இருதயக் குழந்தையை
தாங்கிப் பிடித்தது
செவிலியின் குரல்;

''அஞ்சாதே!
விசுவாசத் துடுப்பை
விட்டு விடாதே!

கூச்சலான அழுகையில்
வீட்டின் கூரை
விரிசல் விட்டது!

ஒப்பாரிகளை நோக்கி
உத்தரவிட்டது
குயில் பாட்டு;

''ஏன் அழுகிறீர்கள்?
மகள் மரிக்கவில்லை;
உறங்குகிறாள்!''

'நாஜிகளின் கூட்டம்
நகைத்தது;

''மரித்தவளை
உறங்குவதாக
உளரும் இவன்,
மனநோயாளியா?''

அலட்சியம் செய்தது
ஆகாயத்தின்
ஆய்வுக் கூடம்!

பெற்றோரையும்
சீடரையும் தவிர
மற்றவரை வெளியேற்றியது,
மனிதர்களின்
மேய்ச்சல் நிலம்!

கண்மூடிக் கிடந்த
அல்லியை -
கவிதைக் கரம் தீண்டியது!

'தலீத் தகூமி!'

உத்தரவின் கம்பீரத்தில்
உயிர்பூ மலர்ந்தது!

பனிரெண்டு வயதுப்
பௌர்ணமி -
அம்மாவாசைக்குப் பின்
அரும்பியது!

தந்தை யவீரு,
தரையிலேயே
பறந்தான்!

உயிர்த்தெழுந்த மகளுக்கு
உணவு வழங்க
உத்தரவிட்டது,
உப்பரிகைச் சூரியன்!

''இறந்தவரை எழுப்பும்
இவர் யார்?''

பல் சுளுக்கியவர்கள்
பட்டிமன்றம் நிகழ்த்தினர்!

●

உடையில் பாய்ந்த உணர்ச்சி ஓடை!

பூமியின்
முகப்பருக்களாக,
மலைப் பிரதேசம்!
தாமரை இலைகள் மூடிய
தடாகம் போல்,
மனித குமாரனைச் சுற்றி
மக்கள்!
மூச்சுக்கும் மூச்சுக்கும்,
மல்யுத்தம்!

மனிதச் சமுத்திரத்தில்
நீந்தத் தெரியாத
நெத்திலி ஒன்று!

உதிரப் போக்கில்
உதிர்ந்த சருகான
ஒரு பெண்,
அலைகளுக்குள் சிக்கி
அருகம் புல்லானாள்!

மூச்சடக்காமல்
முத்தெடுக்க முடியாது!
கரங்கள் துடுப்பாகின;
மெல்லினம்
வல்லினமாகி,
வழியைப் பிளந்தது!

அதோ!
கைக்கெட்டும் தூரத்தில்
கலங்கரை விளக்கம்!
இரும்பையும் நெய்யாக்கும்
இடிபாடுகள்!
வியாதியுள்ள மல்லிகை
வேந்தனின் ஆடையை
விசுவாசத்துடன் தீண்டியது!

நூல்களின் வழியே
நூதன மின்னல்கள்!
'தையல்' தீண்டிய
தையல்கள் இல்லாத
ஆடை -
கண்ணுக்குப் புலனாகா
மின்சாரத்தைக் கடத்தியது!

உதிரத்தின் ஊறல்
உறைந்தது!
மனிதகுமாரனின்
மனதுக்குள் மின்னல்;

''அடியேனின்
ஆடையைத் தீண்டியவர்
யார்?
என்னுள்ளிலிருந்து,
மின்சாரம்
மிதந்து சென்றதே?''

''உண்டியலில் காசுகளாய்,
உம்மீது விழுந்தனர்
ஊர் மக்கள்!
உடையைத் தீண்டியவரை
உணருவதெப்படி?''
சீடர்களின் மூளைகள்
சிரிப்பில் தளும்பின!

மார்பில் சிறுநீர் கழிக்கும்
மழலைகளை மதிக்கவில்லை
மனிதகுமாரன்!

கூட்டத்தைத் துழாவியது
குண்டூசி கண்கள்!
அம்மி அரைத்த
கூட்டத்திலிருந்து,
விம்மி வெடித்தாள்
விடுதலையானவள்!

மர்மம் துலங்கிய
மகிழ்ச்சி;

''மகளே!
விசுவாசம் உனக்கு
விடுதலை தந்தது!
இறை அமைதியுடன்
இல்லம் செல்!

மூடுபனி விலகியவள்
முகம் பிரகாசித்தாள்!

சூரியனைத் தீண்டிய
சுட்டுவிரல்கள்
கொப்பளித்தன!

●

வானத்திலிருந்து விழுது விட்ட வசனங்கள்!

நற்செய்திகளை
சாந்து பூசிக் கொண்ட
நசரேத்!

ஒரு ஓய்வு தின
உபவாசத் தொழுகை!

இறைநூலை எடுந்து
வாசிக்கத் துவங்கியது
வாழ்வியல் நூலகம்!
ஏசாயாவின் இறைவாக்கு
தீயின் வேர்வையாகத்
தெறித்தது;

''ஆண்டவரின் ஆவி,
அடியேனை
ஆக்கிரமித்திருக்கிறது!
அடிமைகளுக்கு
ஆத்ம விடுதலையும்,
குருடருக்குப் பார்வையும்,
அருள் வருடத்தை
அறிவிக்கவும்,
ஆண்டவரின் சிந்தனை
அடியேனைச் சிந்தியுள்ளது!

வண்டு விழிகள்,
வாசித்த பூவை
வட்டமிட்டு மொய்த்தன!

வேத வானம்பாடி
வெடிகுண்டு வீசியது;
''உங்கள் -
செவிகளில் சிந்திய
இறை வாக்கியம்
இன்று நிறைவேறியது!''

எதிரிகளின் தலைகள்
இசைத் தட்டுகளாகச்
சுழன்றன;

''இவன்,
தச்சன் யோசேப்புவின்
புதல்வன் அல்லவா?''

''திருப்புளி இழைப்பவன்,
திருசட்டத்தைத்
திருத்துவதா?

மனித குமாரன்
மசியவில்லை;

''கப்பர்நகூமின்
காட்சிகளை,
நாசரேத்தில் தரிசிக்க
நாடுவீர்கள்!
தீர்க்கதரிசி எவரையும்
தாய்பூமி,
தழுவாது!

எலியாவின்
இறை நூற்றாண்டில் -
மூன்று வருடங்கள்
ஆறுமாதங்கள்,
வானவாசல் மூடி
தேசம் -
கடும் பஞ்சத்தில்

காய்ந்த பொழுது,
கைம்பெண்கள்
கண்ணீர் சிந்தினர்!
ஆயினும் -
‘சீதோன்’ தேசத்தின்
‘சரெப்தா’ நகரத்தின்
கைம்பெண் ஒருத்தியின்
இல்லத்திற்கு,
இறைவனின் ஆவி
எலியாவை அனுப்பியது!

இஸ்ரயேலருக்குள்
குஷ்டரோகிகள் பலர்
குழுமி நின்றனர்!
ஆயினும் -
‘சீரியா’ தேசத்து
‘நாகமோனைத் தவிர
அழுகிய எவரும்
ஆற்றுப் படுத்தப்படவில்லை!’’

மனித குமாரனின்
விளக்கத்திற்கு -
மன்றாட்டுக் கூடம்
மதயானையாகப்
பிளிறியது!

‘‘இறைவாக்கின்
இலக்கணம் உடைக்கும்
இவனை -
சிகரத்திலிருந்து தள்ளிச்
சிதைக்க வேண்டும்!’’

‘பாலீதீன் மனிதர்கள்
நெருப்பை எரிக்க
நினைத்தனர்!

விவாதங்களைத் தவிர்த்து,
வேத ஆலயம்
வெளிநடப்புச் செய்தது!

•

நெருப்புக்குத் துருபிடிக்குமா?

யூதரின் திருவிழாவில்
எருசலேமின் தோள்களுக்கு
இறக்கை முளைத்தது!

நகரம் -
நாட்டிய மங்கையாய்
அபிநயம் காட்டியது!

●

'பெதஸ்தா!'
மண்ணில் முளைத்த
தண்ணீர் ஆலமரம்!
ஐந்து மண்டபங்களை
ஆபரணங்களாகச் சூடிய
அதிசயத் தடாகம்!

ஆண்டுகளுக்குச் சிலமுறை
அத்தி பூப்பதுபோல,
ஆகாயத் தூதன்
தடாகத்தில் இறங்கித்
தண்ணீரைக் குழப்புவான்!

விந்தைக் குளத்தின்
விலாவைச் சுற்றி,
வியாதியஸ்தர்கள்
வியூகம் அமைத்திருப்பர்!

குளம் குழம்பியதும்
முதலில் -
குதித்துக் குளிப்பவன்
சொக்கத் தங்கமாகச்
சுத்தமாவான்!

இந்த -
அற்புத நிகழ்வுக்காக
அழுகிய கனிகள்
குவிந்து கிடக்கும்!

சாதகப் பறவை,
மண்டபத்தின் வாசலில்
மையமிட்டது!

முப்பத்தி எட்டு ஆண்டுகளாக
முடமாகிக் கிடந்தது
ஒரு -
முதிய சதைச் சருகு!
பால் நிலவு
பரிவுடன் பொங்கியது;

''விடுதலை பெற
விரும்புகிறாயா?''
மூச்சுக்குள் முனங்கினான்
முடவன்;

''ஆண்டவரே!
தண்ணீர் கலங்கும்போது
என்னை -
அழைத்துச் செல்ல
அருகில் எவருமில்லை!
நான் -
தவழும் முன்,
குளத்தில் மற்றவன்
குதித்து விடுகிறான்!''

முடவனின் கண்ணீர்
இருதயத்தின் எல்லைவரை
பெய்தது!
கருணைச் சமுத்திரம்
கட்டளையிட்டது;

தண்ணீரைக்
கண்ணீர் வென்றது!

''உன் படுக்கையை
எடுத்துக் கொண்டு
எழுந்து நட!''

முயல் குட்டியாய்
முடவன் துள்ளியெழுந்தான்!
அங்கங்களில் உற்சாகம்
அலையடித்தது!

●

சரவெடியாய்
சங்கதி வெடித்தது!
அது -
உழைப்பை
உறங்க வைக்கும்
ஓய்வு தினம்!
முடவனை வழிமறித்து
துருபிடித்த ஆணிகள்
துப்பறிந்தன;

''மண்டபத்திலிருந்து
ஓய்வுதினத்தில் வெளியேறுவது,
உகந்ததல்ல!''

விடுதலையானவன்
வெறுப்பை விசிறினான்;

''எனக்குச் -
சுகம் ஈந்தவரின்
சொற்படி நடக்கிறேன்!''

''சுகம் தந்தவன்
யார்?''

''சுத்தமாக
அறியேன்!''

நடமாடும் அரளிச்செடிகள்
நகன்றன!
முகில் மீண்டும்
முடவனுக்குத் தன்
முகம் காட்டியது;

''இதோ -
விடுதலையானாய்!
இனி,
பாடுகள் வராதபடி
பாவங்கள் புரியாதே!''

நெரிசலில் அமிழ்ந்தது
நீர்மூழ்கிக் கப்பல்!

விலாசம் அறிந்த முடவன்
வெந்த பிணங்களிடம்
விவரித்தான்;

''விடுதலை தந்தவர்
வேந்தன் இயேசு!''

கங்குகளின் வாய்களில்
கவிழ்ந்தது நெய்குடம்;

''ஆண்டவரின்
ஓய்வு தினத்தில்
அற்புதம் புரிபவனை,
கொலை செய்தாலும்
குற்றமில்லை!''

பல்லி முட்டைகள்
பழி சுமத்தின;

பௌர்ணமி
புன்னகைத்தது;
''ஆகாயப் பிதா
செயல்புரிகிறார்;
அடியேன்
செயல்புரிகிறேன்!''

வறட்டுத் தவளைகள்
வயிறு கொதித்தன;

''தந்தை பிதாவும்
தச்சன் மகனும்
ஒன்றா?''
தர்க்க அலைகள்
தணியவில்லை;

''உண்மையாக நான்
உரைக்கிறேன்!
பிதா - தன்
செல்லமகனைத் தவிர்த்து
செயல்புரியார்!
பிதா,
பிரம்மாண்ட நிகழ்வுகளை
பிரியகுமாரனுக்கு
பிரத்தியோகக் காட்சியாகத்
திரையிடுகிறார்!
நீங்கள்,
அதிசயத்தவைகளிலும்
அரிதானவைகளைத் தன்
அன்புமகனுக்குக் காண்பிப்பார்!

இறை தந்தை,
இறந்தவரை எழுப்புவதுபோல்
மனித குமாரனும்
தன் -
மனம் நிறைந்தவரை
மகிமையால் எழுப்புவார்!
ஆகாயப் பிதா - தன்
அரசவாரிசுக்கு
அக்கினித் தீர்ப்பின்
அதிகாரம் ஈட்டியுள்ளார்!

மகனை,
கௌரவிக்காதவன்,
தந்தையையும்
கௌரவிக்காதவன்!

என்,
அறிவுரையை ஏற்று
ஆகாயப் பிதாவை
ஆராதிக்கிறவன்,
இறப்பையும்
எரிநரகத்தையும் வென்று,
பரிசுத்த வாழ்வுக்குப்
பயணப்படுகிறான்!

இறந்தவரும்,
இறைவனின் முழக்கத்தை
அறியும் காலம்
அருகில் வந்துவிட்டது!

தன்னில் தானே -
உன்னதப் பிதா
உயிர்த்தெழுந்து போல...

உலகமைந்தனும் -
தன்னில் தானே,
உயிர்த்தெழும் உத்தியையும்
உலகத் தீர்ப்பையும்,
உள்ளங்கையில்
மூடி வைத்துள்ளார்!

இந்த -
அறிவிப்பைக் குறித்து
ஆச்சரியம் வேண்டாம்!
கடவுளின் முழக்கத்தில்
கல்லறைகள் பிளக்கும்!

அன்று -
நீதிமான்கள்
நித்திய வாழ்வுக்கும்,
அநீதிமான்கள்
அக்கினிக்கும்
அழைத்துச் செல்லப்படுவர்!

என் கரங்களில்
ஏதுமில்லை!

என் இறைதீர்ப்பு,
பிதாவுக்குப் பிரியமானதால்
நீதியின் துலாக்கோலாக
நிமிர்ந்து நிற்கிறது!

என்னைக் குறித்த
எனது சாட்சி,
என்றும் செல்லாது!

சக்திப் பிதாவின்
சாட்சியே,
சத்திய சாட்சி!

தீபமாய் சுடர்விடும்
தீர்க்கதரிசி யோவான்!

அறிவுக்குச் சிக்காத
அடிப்படை வடிவம்
ஆகாயப் பிதா!

எல்லையில்லா வாழ்வின்
எல்லைக் கற்களாக
இறை வசனங்கள்!

இந்த -
மூன்று சாட்சிகளிலும்
முதல் சாட்சியே
முன் நிற்கின்றது!

காற்றின் சிறகை
கத்திரிக்க இயலாமல்
கத்திரிக்கோல்கள்
வாய்கள் பிளந்தன!

●

திசை காட்டியைப் பிளந்த விறகுவெட்டிகள்!

சிங்கத்தைச்
சிரச்சேதம் செய்ய,
சுண்டெலிகள்
சூழ்ச்சி செய்தன!

●

இரண்டாம் ஏரோதின்
இடுப்பைச் சுற்றிய
ஏரோதியாள் -
ஆபரணங்கள் அணிந்த
அரவு!

சுகவாழ்வுக்குச்
சூட்டுக் கோலான
யோவானின் அறிவுரைகள்,
ஏரோதியாளின் இதயத்தில்
எரிச்சலை அப்பின!

தீயை அணைக்க முடியாமல்
திண்டாடியது அரண்மனை!

முரட்டு வேங்கையை
முட்டைக்குள் அடைக்கவியலுமா?

யோவானின் அறைகூவல்
அரண்மனையின் விலாவை
ஆத்திரத்துடன் உதைத்தது!

உப்பரிகை உடும்புகள்
கரங்கள் அரிப்பெடுத்துக்
காத்திருந்தன!

●

அரசனின் பிறந்தநாளில்
அரண்மனை,
மிருதங்கமானது!

ஏழைகளின் கண்ணீர்
மாளிகை அமினாக்களுக்கு
மதுவானது!

உறிஞ்சப்பட்ட ரத்தத்தில்
உயர்குடி உண்ணிகள்
உள்நீச்சல் அடித்தன!

உச்சபோதை
மூளையை,
உரிப்பானை அடித்தது!

அரசி ஏரோதியாளின்
அழகு மகள் ‘சலோமி’
வசந்தங்களின் வாய்ப்பாடு;
தங்க உளி செதுக்கிய
சதைச் சிற்பம்!

சலோமியின்
விழியசைவில்,
அரண்மனை
உமியானது!

அரசன் ஏரோது
சலோமி நடனமாட
அழைத்தான்!

தரைத் தாரகை
தயங்கியது!
குடிவெறியில்
எச்சில் வழிந்தான்
ஏரோது;

''விரும்பியதைக் கேள்!
அரசில் பாதியானாலும்
அன்பளிப்பாகத் தருவேன்!''

தாய் அரவு
தலையசைத்தது;
அரபுக் குதிரை
அங்கங்களை குலுக்கியது!

மண்டபம்,
மரவட்டைப் பூச்சியாகச்
சுருண்டது!

நடனம் முடிந்தது;
நாடகம் துவங்கியது!
அன்னை அரவு
சலோமியின் செவிகளில்
'சயனட்'டை துப்பியது;

''வேத வீரன்
யோவானின் சிரசு
விலையாக வேண்டும்!''

கண்களில்
கொப்பளித்த போதை
கணுக்காலுக்கு வடிந்தது!

பூவுக்கு மோதிரம்
புலியின் தலையா?
கட்டெறும்புகள்
வாய் கொப்புளிக்க
காட்டாறா?

அரசன் ஏரோது
‘சுளகில்’ புடைக்கப்படும்
சுண்டைக் காயானான்!

மாற்றுப் பரிசுகள்
மலையென குவிந்தன;

மகளும், தாயும்
மறுத்தனர்!
கோபுரக் கோழிகள்
காட்டுப் புறாவின் தலைக்கே
கண்ணி விரித்தனர்!

அரசன் ஏரோது
அழுது கொண்டே
உத்தரவிட்டான்!

மன்னனின் செங்கோல்
மயான விறகாக
மாறியது!

யானையின் தலையை
பூனைகள் கொய்து,
தாம்பாளத்தில் ஏந்தி வந்தன!

தேசத்தின் இதயம்
திடுக்கிட்டது!
நற்செய்தியின் ரத்தத்தில்
நரிகள்,
நகச்சாயம் பூசின!

●

ஆன்மீக நிலவு
அறுந்து விழுந்ததை
மனிதகுமாரனுக்கு அறிவித்தனர்
மாணவர்கள்!
தென்றலின் விழிகள்
தீயைச் சொட்டின!

சூரியன் கருகிப்போனச்
சோகம் இது!
எதேச்சதிகாரத்தைத் துளைத்த
இயந்திரத் துப்பாக்கி,
இரவுகளின் வயிறுகளுக்கு
இரையாகிப் போனதே?
போர் வீரர்கள்
புதைக்கப்படவில்லை,
விதைக்கப்படுகின்றனர் என்பதே
வீரத்தின் விருதிலக்கணம்!
தருவின் தலையே
விடுதலை இறையியலுக்கான
வீர்ய விதை!

'யோர்தானின்'
படகுத் துறையான
யோவானே!
நீ -
சிந்திய செந்நீரில்
திசைகள்,
திருமுழுக்கு பெறட்டும்!
நீ -
இறையியலை
இரசவாதம் புரிந்த
இருண்ட மலைச்சரிவுகளில்,
இருதயத்தை பிடுங்கியெறிந்து
இரைச்சலாக அழுகிறேன்!

திருட்டு வேதாந்திகளுக்கு
தீக்கடைக்கோலான
என் எழுதுகோல்,
முஷ்டியுயர்த்திய உன்
சுடு சொற்பொழிவுகளுக்குமுன்
மௌன விரதம்
அனுஷ்டிக்கட்டும்!

●

ஐயாயிரம் அடைக்கலான் குருவிகளுக்கு அன்னதானம்!

ஆறுகளும்
பறவைகளும்,
ஆவர்த்தனம் பாடும்
அடர் கானகம்!

புல்வெளி
இரத்தினக் கம்பளமாக,
ஆகாயத்தின் பூமி
அகதி மேகங்களை
ஆசீர்வதித்தது!

மலைச்சரிவு,
மக்களைப் போர்வையாகப்
போர்த்திக் கொண்டது!

அந்திப் பொழுது,
நட்சத்திரங்களை
அச்சு கோர்க்க
ஆரம்பித்தது!

மாணவர்கள்,
ஆசிரியரை
அணுகினர்;

''ஆண்டவரே!
கானகத்தை இருள்
கவ்வுகிறது!
ஆகாரம் இல்லாதவரை
அனுப்பிவிடுவோம்!

சிந்தைக்கு உணவளித்த
செஞ்சிலுவைச் சங்கம்
சிந்தித்தது;

''வந்த மக்கள்
வழிதிரும்ப அவசியமில்லை!
இருக்கும் உணவை
எல்லோருக்கும் பங்கிடுங்கள்!''

கையிருப்பு உணவு
கணக்கெடுக்கப்பட்டது!

''இப்பொழுதுக்கு,
சிறுவன் ஒருவனிடம்
ஐந்து அப்பங்களும்
இரண்டு மீன்களுமே
இருக்கின்றன!''

குற்றாலத்திற்கு முன்
குவளை நீர் எங்கனம்?
ஆயினும் -
மாணவர்கள்
மறுதலிக்கவில்லை!

பாறைகளின் தலைகள்
பந்தி மேசைகளாயின!

அப்பங்களையும்
மீன்களையும்
இருகரங்களிலும் ஏந்தி,
வலம்புரிச் சங்கு
வானத்தை துதித்து
வழங்கியது!

கானகம்,
கல்யாண வீடானது;

அள்ளினாலும் தீராமல்
ஆகாரம் உற்பத்தியானது!

பந்திக்குப் பின்னரும்,
பனிரெண்டு கூடைகளில்
மீன்களும், அப்பங்களும்
மிச்சமிருந்தன!

வாழ்வுக்கான ஆதாரத்தை
வழங்கிய வானவங்கி,
வயிற்றுக்கான ஆகாரத்தை
வழங்க மறக்குமா?

●

கடல் கம்பளமானது!

வெயிறு நிரம்பிய மந்தைகள்
வழி திரும்பின!

மாணவர்களை படகிலேற்றி
மறுகரைக்குச் செல்ல,
மனிதகுமாரன் ஆணையிட்டார்!
ஏழைகளின் கூரை
இரவு முதிரும் வரை,
சிகரத்தின் உச்சியில்
சிந்தனைத் தவம் புரிந்தது!
அது -
நிலவும் கண்சொக்கும்
நாலாம் சாமம்!
எட்டாவது ஸ்வரம்
எழுந்தது!

கடல் கம்பளமானது;
சமுத்திரத்தின் மீது
சரித்திரம் நடந்தது!
காற்று உற்சாகமாகி
கரவொலி எழுப்பியது!
கனத்த அலைகள்
கரகாட்டம் ஆடின!

சீடர்கள்
பயணித்த படகுக்கு
பைத்தியம் பிடித்தது!

கடலின் மார்பில்
கைவீசிவரும்
தென்றலைக் கண்டு,
திகைத்தனர் சீடர்!

அச்சத்தில்,
அடிவயிற்றில்
''ஆகாயம்'' சுழன்றது!
துடுப்பிழந்த சீடர்கள்,
அடுப்புச் சுள்ளிகளாக
அலறி வெடித்தனர்!

''இது -
அக்கினி ஆவியா;
அசுத்த ஆவியா?''
அச்சத்தில் இருதயத்தின்,
ஆணிவேர் கழன்றது!

அடியார்களின்
அபயக் கூக்குரல்,
காற்றின் முதுகுதாண்டி
கர்த்தரை தீண்டியது!
தண்ணீரில் முளைத்த
விண்மீன்,
தகவல் தந்தது;
''அஞ்சாதீர்கள்;
அடியேன் தான்!''
பீதியுற்ற பேதுரு
பிரமிப்பில் படபடத்தான்,

''இயேசு நீரென்றால்
என்னையும் இப்பொழுது
கடலில் நடக்கக்
கட்டளையிடும்!''

காற்றை அழுத்தியது
கர்த்தரின் குரல்;
'வா!'

பேதுரு -
கண்கள் பிரகாசிக்க
கடலில் காலடி பதித்தான்!
பாதங்களில் தண்ணீர்
பஞ்சமெத்தையாக வழுக்கியது!
கடல் மீன்கள்,
கணுக்கால்களை
முத்தமிட்டன!
இயேசுவைத் தொட
இன்னும் இரண்டடிகளே!
சூறாவளி ஒன்று
சுழன்று தூக்கியது;
விசுவாசமிழந்த பேதுரு
வீறிட்டான்;

''கர்த்தரே!
கடலில் முழுகாமல் எனைக்
காப்பாற்றுங்கள்!''

கர்த்தரின் கரம்
தூண்டிலானது;
தொற்றிக் கொண்டான்
பேதுரு!

''அற்ப விசுவாசியே!
ஐயம் கொண்டது
ஏன்?
தவறைக் கண்டித்தது
தாய்மை!

கர்த்தரும், சீடரும்
கட்டு மரத்தில் அமர்ந்தனர்!

தாயின் முந்தானைக்குள்
தலை புதைத்தன,
தளிர் மழலைகள்!

ஆர்ப்பரிக்கும்
கடல் மேல் நடந்து,
அற்புதம் செய்த கிறிஸ்து
எதிரான சூழ்நிலைகளை ஜெயிக்கும்,
இறையில் தத்துவம் விளக்கினார்!

●

கடலுக்குள் நீந்திய
கதிரவன் -
வானத்தின் முற்றத்தில்
கூந்தல் கிரணங்களைக்
கோதியது!

படகுப் படை,
'கெனேசரத்து' - எனும்,
ஊருக்குள்
ஊடுருவியது!

●

புயலின் வாய்க்குப் பூட்டு!

சகதி பூமியைச்
சந்தனத்தால் கழுவிய
சமாதானப் படை,
படகிலேறிப்
பயணத்தைத் துவங்கியது!

கடலின் நடுவில்
காற்றுக்கு மதம் பிடித்தது!
தண்ணீர் சாலையில்
அலைகளின் தர்ணா!'
வீரர்களின் படகு
விழி பிதுங்கியது!

அச்சாணி கழன்ற
மாட்டு வண்டியாகக்
குடைசாய்ந்தது படகு!

புழுதி மனிதர்களைப்
புதுப்பித்த களைப்பில்
உறங்கிய இயேசுவை
உசுப்பினர் சீடர்கள்;

''ஆண்டவரே;
காப்பாற்றும்!
அனைவரும்
அழிகிறோம்!''

கண்விழித்த வைகறை
கங்குகளைத் துப்பியது;

''அற்ப விசுவாசிகளே!
அலறுவது ஏன்?''
வேத ராஜாளி
விரல் சொடுக்கியது;
தண்ணீரின்
பிரசவ வேதனைத்
தணிந்தது!
ஊழிக் காற்று
ஊமையானது!

ஜல்லிக்கட்டுக் காளைகளாகத்
துள்ளிய அலைகளுக்கு,
மூக்கணாங்கயிறு போட்டது
முழக்கங்களின் முரசு!

''காற்றும், கடலும்
இவரது -
சுட்டுவிரல் அசைவுக்குச்
சொக்கி நிற்கின்றனவே?''

சீடர்களின் இதயங்கள்
சில்வண்டுகளாகப் பறந்தன!

●

தேனை விஷமாக்கியத் தேள் கொடுக்குகள்!

“ஐயாயிரம் மனிதர்களுக்கு
அன்னதானமாம்!”

“உபதேசத்துடன்
உணவும் வழங்குகிறார்களாம்!”

சீர்திருத்தம் -
சித்து வித்தையாகத்
சித்தரிக்கப்பட்டது!
இலவச உணவுக்குக்
‘கப்பர்நகூமே’
கையேந்தியது!
நீதியின் இருதயத்தில்
நெறிஞ்சிமுள் தைத்தது;

“அற்புதங்களுக்கல்ல...
அப்பங்களுக்கே
அலைகின்றனர்!
அழுகும் உணவுக்கல்ல...
அழுகா வாழ்வின்
ஆத்தும் உணவுக்கு
அருட்பணியாற்றுங்கள்!
பிதா முத்தமிட்டதையே
பிரியமகன் வழங்குவார்!”

குருவிகளில் ஒன்று
கூவுவதற்கு
வழிகேட்டது;
‘‘தேவ நிகழ்வுகளுக்கு எம்
திருப்பணிகள் யாது?’’

‘‘விண்ணரசு அனுப்பியவரை
விசுவாசிப்பதே விடை!’’
வாக்குவாதம்
வளர்ந்தது;

‘‘உம்மை விசுவாசிக்க
உடன்படிக்கை எது?
வானத்து ‘மன்னா’வை
வம்சப்பிதாக்கள் புசித்தனரே?’’

‘‘ஆகாயப் பிதாவின்
அனுமதியின்றி,
வானத்து ‘மன்னா’வை
வம்சப்பிதா மோசே
வழங்கவில்லை!
விண்ணில் பிசையப்பட்டு,
மண்ணை உயிர்ப்பிப்பதே
‘மன்னா’வை விட
மகிமையான அப்பம்!’’

‘புத்திசாலி’ மக்கள்
புதிய அப்பத்திற்கு!
போட்டியிட்டனர்!

‘‘ஆண்டவரே!
ஆகாய அப்பத்தை
ஆயுளுக்கும் அருளவேண்டும்!’’

மொட்டு பூமி
முகம் பூத்தது;

‘‘அடியேனே
ஆயுள் தரும்
ஆகாய அப்பம்!

என்னை விசுவாசிக்கிறவன்
என்றும் –
தாகமடைவதில்லை;
பசியடைவதில்லை!
நீங்கள்,
வேதமைந்தனைக் கண்டும்
விசுவாசிக்க வில்லை!
பிதாவின் பிரியத்தின்படி
விசுவாசிகளை எழுப்பவே
விண்ணிலிருந்து இறங்கிறேன்!’’

பாம்புகள்
மகுடி ஊதின ;

‘‘ஆகாய அப்பமா?
இவரது
வம்சத்தை அறிகிறோம்;
வானத்திலிருந்து எவ்வாறு
வந்திறங்கினார்?’’

‘ஆக்டோபஸ்களின்
அரசியல் குழல்களுக்குள்
அகப்பட வில்லை,
ஆகாய விண்மீன்;

‘‘தந்தையை அறிகிறவன்
மகனையும் அறிவான்!
வம்ச பிதாக்கள்
வானத்து ‘மன்னா’வை
உண்டனர்;
வாழ்ந்து மரித்தனர்!
ஆனால் –

உயிர் அப்பத்தை
உண்பவன்,
இறந்தாலும் பிழைப்பான்!

நான் -
உலக உயிருக்காக
உங்களுக்கு வழங்கும்
உன்னத அப்பம்,
என் உடலே!

மூட மூளைகளுக்குள்
பட்டாசுகள் வெடித்தன;

‘‘உடலை உண்ணுவது
எப்படி?’’

விண்ணரசின் தேசியக்கொடி
விவரித்தது;

‘‘என் உடல்
உண்மையான உணவு;
என் ரத்தம்
உண்மையான பானம்!
அதை -
அருந்தாமல், புசியாமல்
அலட்சியம் செய்பவருக்கு,
உண்மை வாழ்வுக்கான
உயர்பதவி இல்லை!
இதைப் புசிப்பவனை
இறுதி தினத்தில்
எழுப்புவேன்!
என்னில் அவனும்
அவனில் நானும்,
இரண்டறக் கலந்திருப்போம்!
பிதாவால் நான்
பிழைத்திருப்பது போல,

என்னைப் புசிப்பவனும்
என்னால் பிழைக்கிறான்!

சித்தாந்தம் புரியாமல்
சீழ் பிடித்த குரங்குகள்
சிந்தனையைச்
சொறிந்து கொண்டன!

●

ஆகாரமும் – அஸ்திவாரமும்!

எண்ணெய் கிண்ணமாக
எருசலேம்;
திரியில் வியாபிக்கும்
தீபம்!
குருட்டு ஆந்தைகள்
குண்டூசியால் குத்தின;

''மரபை மீறி -
உம் மாணவர்கள்,
உண்ணும் போது
கைகழுவதில்லையே?''

பன்னீர்மரம்
குலுங்கியது;

''மரபை நீங்களும்
மாசுபடுத்தவில்லையா?
'பெற்றோரைப் பேணு' - என
மறைநூல் உரைத்தாலும்
'பெற்றோரைப் பேணாமல்
பிதாவுக்கு காணிக்கையிடுங்கள்!
- எனப் பிரசங்கித்தீரே!

‘‘இந்த மக்களின்,
உதடுகள் என்னை
உயர்த்தி உச்சரித்தன;
உள்ளங்களோ விலக்கின!

மனித கற்பனைகளே
மகத்துவங்களாகிவிட்டன!’’ - என
ஏசாயா இறைவாக்கு
எழுத்தில் விதைக்கப்பட்டிருக்கிறது!’’

ஏழைகளை நோக்கியது
பிரபஞ்சத்தின்
பிராண வாயு;

‘‘உணருங்கள்!
வாய்க்குள் நுழைவதல்ல,
வாயிலிருந்து வெளிவருவதே
மனிதனை மாசுபடுத்தும்!’’

நத்தைகளின் தலைகள்
நசுங்கின!
பூனைகள் மீசை கருகியதை
புலிக்கு அறிவித்தனர்
மாணவர்கள்!

‘‘பரிசேயர் - நீர்
குத்திக் காட்டியதில்
கொதிப்படைந்துள்ளனர்!

ஆகாயத்தின்
கிரியா ஊக்கி
அலட்சியம் செய்தது;

‘‘பிதா -
நடாத நாற்றுக்கள்
பிடுங்கி எறியப்படும்!

அவர்கள்,
குருடருக்கு வழிகாட்டும்
குருடர்கள்!
இருவருமே குழியில்
இடறி விழுவார்கள்!

பேதுருவுக்கு அர்த்தம்
பிடிபட வில்லை;
''உவமையை சற்று
உணர்த்தும்!''

சீடரின் தலையில்
செல்லமாக
'கொட்டு' விழுந்தது;

''உணரவில்லையா
உவமைகளை?
வாய்வழி நுழைவது
ஆசனவாய்வழியாக அகலும்!
இதயத்திலிருந்து
வாய்வழி வெளிவரும்
வக்கிரமான -
கள்ளச் சிந்தனைகளும்
களவுகளும்,
விபச்சாரங்களும்
வேசித்தனங்களும்,
கொலைபாதகங்களும்
பொய்சாட்சிகளும்
புரட்டுப் பழிகளும்,
மனிதனை
மாசுபடுத்தும்!''

சீடர்களுக்குள்
சிந்தனை மின்விசிறிகள்,
சுழன்றன!

●

விசுவாசத்தின் விலாசம்!

எட்டுத் திசைகளின்
இருதயங்களிலும்,
இறைவசனங்களை
இறைத்தது ஏற்றங்கால்!
தீ மழையில் –
தீரு,
சீதேன் நகரங்களின்
சீதோஷ்ணம் மாறியது!
கத்தியில்
நடனம் ஆடும்
கடும் யாத்திரையில்,
கானானிய பெண்ணொருத்தி
கதறியபடி வந்தாள்;

''தாவீதின் குமாரனே!
தயவு செய்யும்!
என்,
பிரிய மகள்
பிசாசு பிடித்து
பிதற்றுகிறாள்!''

மங்கையின் அழுகை
மழையாக வலுத்தது;

மனித குமாரன்
மௌனித்தார்!

அலறல் தாங்கா சீடர்
ஆசிரியரை அணுகினர்;
''ஏதாவது கூறி
இவளை அனுப்பிவிடும்!''

பீடபூமியின் உதடுகள்
பிரிந்தன;

''காணாமல் போன ஆடுகளாகிய
இஸ்ரயேலரின் இல்லத்திற்கு
அனுப்பப்பட்டேனேயன்றி
அயலாருக்கு அல்ல!''

உதவி கேட்டவள்
உதிரத்தைக்
கண்ணீராக்கினாள்;
மக்களின் கூரை
மறுத்தது;

''பிள்ளைகளுக்கான
அப்பங்களை எடுத்து,
நாய்குட்டிகளுக்கு
போடுவது நல்லதல்ல!

தாயின் குரல்
தழுதழுத்தது;

''உண்மைதான்
ஆண்டவரே!
ஆயினும்
நன்றியுள்ள நாய்குட்டிகள்
தம் -
எஜமான் உண்ணும்

மேசையிலிருந்து விழும்
எச்சிலை உண்ணுமே?''

அன்னையின் பதிலில்
அணை உடைந்தது;

இரக்கத்தில் கசிந்தது
ஈர நெருப்பு;

''தாயே! - உன்
விசுவாசம் விரிவானது;
விரும்பியபடி
விடுதலை கிட்டும்!''

தளிர் விடுதலையானது;
அன்னையின் கரங்கள்
அடிச்சுவடுகளை வணங்கின!

யூத இனக்கட்டுப்பாட்டை
உடைத்த இயேசு
எல்லா இனங்களுக்கு
மட்டுமல்ல...
தமிழனத்திற்கும்
தமிழ் தேசியத் தலைவரானார்!

●

கட்டவிழ்ந்த நாவு!

நுரையும், தண்ணீரும்
தழுவிக் கொள்ளும்,
கலிலேயாவின்
கடற்கரை!

ஊமையும்
செவிடனுமாகிய
ஒருவனை,
ஆன்ம வைத்தியரிடம்
அழைத்து வந்தனர்!

விந்தையைக் காண
வீசும் அலைகள்,
விரைந்து வந்தன!

நாவையும், செவிகளையும்,
நாணல் விரல்கள் தீண்டின!

எச்சிலை உமிழ்ந்து,
இதயத்தின் ஆழத்திலிருந்து
பெருமூச்சு விட்டது,
பிரபஞ்சத் தென்றல்;

●

★எப்பத்தா!
செவிப்பறையில்
இடியின் குரல்
எதிரொலித்தது!
நாவும், செவிகளும்
ஜன்னல்கள் திறந்தன!

●

வயலின் கம்பிகள் மீது
வண்ணத்துப்பூச்சி நடந்தது!

●

★ *திறக்கப்படுவாயாக என்று அர்த்தம்.*

பொங்காதப் புளித்த மாவு!

பௌர்ணணிப்பால்
பொங்கியது;

''பரிசேயர்
சதுசேயரின்,
புளித்தமாவைக் குறித்து
எச்சரிக்கையாக இருங்கள்!

அடைக்கலான் குருவிகள்
அரிசியை விட்டு
கற்களைக் கொத்தின;

''அப்பங்கள் எடுத்து வாராததை
அறிவுணர்த்துகிறாரோ?''

அகல் விளக்கு
ஆத்திரத்தில் சிவந்தது;

''அற்ப விசுவாசிகளே!
அப்பங்களைக் குறித்து
அக்கறைப் படுவதென்ன?
ஐந்து அப்பங்களை
ஐயாயிரம் மனிதர்களுக்கும்,
ஏழு அப்பங்களை
நாலாயிரம் மனிதர்களுக்கும்,

பந்தி வைத்ததை
மறந்தீரா?''

சீடர்களின் -
உச்சந்தலைகளில்
ஊசிகள் குத்தின;

''பரிசேயர்
சதுசேயரின்
உபதேசங்களையே,
'புளித்த மாவு' என
உவமையால்
உணர்த்துகிறார்!''

●

காலத்தின் வலையில்
பூமி -
'டால்பின்' மீனாகத்
துள்ளியது!

●

பாகம் 4

கோடைக் காலம்

(இரத்தமும் – வேர்வையும்)

ஆகாயத்தின் கருப்பை!

பூக்கள் பல் துலக்கும்
காலை நேரம்!
பிலிப்பு செசரியாவின்
பிரதேசத்தில்
வேதக் கிரணம்
விழுந்து பிரகாசித்தது!

மாணவர்களின்
மௌனத்தை
மயிலிறகாய் தீண்டியது
மனுவின் குரல்;

''என்னைக் குறித்து
குடிமக்கள்
கூறுவது யாது?''

பள்ளி மாணவர்கள்
துள்ளினர்;

'யோவான்' என்று சிலரும்,
'எலியா' என்று சிலரும்,
'எரேமியா என்று சிலரும்,
'தீர்க்கதரிசி' என்று சிலரும்,
செப்புகின்றனர்!

வலையின் வீச்சு
திசைமாறியது;

''நீங்கள்,
என்னைக் குறித்து
எண்ணுவதென்ன?''

சீமோன் பேதுரு
அம்பாக முந்தினான்;
''நீர்
என்றும் ஜீவனுள்ள
இறைமைந்தர் இயேசு!

சித்தாந்த விழிகள்
சீமோன் பேதுருவை
ஸ்பரிசித்து மொழுகியது;

''யோனாவின் மகன்
சீமோனே சிறந்தவன்!
மாம்சமும்
ரத்தமுமல்ல,
பிதாவே இதைப்
பேசவைத்தார்!

நீ - பேதுருவாக
இருக்கிறாய்!
என் சபை
இந்த -
கற்பாறையின் மேல்
கட்டப்படும்!
உனக்கு -
வானத்தின் திறவுகோல்களை
வழங்குவேன்!
நீ -
மண்ணில் கட்டுவது
விண்ணிலும்,

மண்ணில் கட்டவிழ்வது
விண்ணிலும் கட்டவிழ்கப்படும்!

அருமையானவர்களே!
என் -
ஆதி ரூபத்தை
அறிவித்தல் வேண்டாம்!''

நவீன ஓவியங்கள்
நடந்தன!

●

சத்தியச் சமிக்கை!

பூகம்பத்தைக்
கருவறையில் சுமக்கும்
எருசலேம்!

அநீதிக்குப்
பல் முளைப்பதை
அறிந்தது நீதி;

''மூப்பர்களால்
புதைக்கப்பட்டு
மூன்றாம் நாள்
முளைத்தெழுவேன்!

பேதுருவின் நாவு
பீரங்கிக் குழலானது;

''ஆண்டவரே!
சாத்தியமாக உமக்கு இது
சம்பவிக்கக் கூடாது!''
'வெடிகளுக்குப் பயந்து
'இடி'கள் ஒளிந்து கொள்வதா?
கொந்தளித்தது
கொள்கைக் கடல்;

‘‘பின்னால் போ
பிசாசே!
எனக்கு நீ
இடறலாயிருக்கிறாய்!
மகிமையானவருக்கான
நிகழ்வுகளையல்லாமல்,
மனிதர்களுக்கான
நிகழ்வுகளை நினைக்கிறாய்!’’
மூளையின் முடிச்சுக்களை
சிக்கெடுத்தது
சிலுவைத் தாவரம்;

‘‘என்னைப்
பின்பற்றப் பிரியப்படுகிறவன்,
தன்னை வெறுத்து
தன் சிலுவையைச் சுமந்து
என் தடம்
என்றும் தொடரவேண்டும்!

தன் -
ஆன்மாவைக் காப்பவன்
அதை இழப்பான்.
எனக்காக -
ஆன்மாவை இழப்பவன்
அதைப் பெறுவான்.
மனிதன் -
உலகை வசப்படுத்த
உயிருக்குத் தீங்கிழைப்பதால்
என்ன பலன்?

தன் உயிருக்கு ஈடாகத்
தரப்படுவது எது?

மனிதகுமாரன்
பரமத் தந்தையின் அரசோடு
படி இறங்கி வருவார்.
அவரவர்
பயன்பாடுகளுக்கேற்ப
பலனளிப்பார்!

இங்குள்ள சிலர்
மனித குமாரனின்
மகிமை அரசைத் தரிசிக்கும் வரை
மரணத்தை
ருசிக்கப் போவதில்லை - என,
உண்மையாக உங்களுக்கு
உரைக்கிறேன்!''

சீடர்களின் உதடுகளில்
சிந்தனைப் பிசின்
ஒட்டிக் கொண்டது!

●

பிதாவின் பிம்பம்!

அருவிகளின்,
நாட்டியச் சாலையான
அடர்ந்த மலைப் பகுதி!

உச்சிமலை
மூடுபனியால்
முக்காடு போட்டிருந்தது!
பறவைகளின்
வேர்வைத்துளிகளாய்
பனித்துளிகள்!

பேதுரு
யாக்கோபு
யோவான் -
மூவரும் முன் செல்ல,
கம்பீரமாக நடந்தது
கண்ணீரின் புன்னகை!

மலை உச்சியில்
மௌன மாநாடு!

திடீரெனச்
சூரியன் உடைந்தது போல்
சுற்றிலும் வெளிச்சம்!

பூமியின் தேகம்
புல்லரித்தது!

அச்சாணி கழன்ற
வண்டிகளாக அடியார்கள்
அச்சத்தில் குடைசய்ந்தனர்!

வானம் திறந்தது!

எலியாவும்,
மோசேவும்
இறங்கி வந்து
மனித குமரனுடன்
மகிழ்ந்து பேசினர்!

தயங்கித் தயங்கி
தலைவனை நெருங்கிய
பேதுருவின் குரல்
தட்டச்சு செய்தது;

''ஆண்டவரே!
அனுமதி ஈந்தால்
உங்கள் மூவருக்கும்
தங்கிக் கலந்துரையாட
தற்காலிகக் கூடாரம்
தயார் செய்கிறோம்...!

விண்ணிலிருந்து
வெடித்தது ஓர் அசரீரி;

''இதோ...!
இவர்கள் மீது
வெளிச்ச மேகமொன்று
விழுந்தது.
இவர் எனது
இனிய மைந்தன்,
இவரை நேசிக்கிறேன்,
இவருக்கு செவிசாயுங்கள்!''

வெளிச்சம் விலகியது!
மயங்கிக் கிடந்த
மாணவர்களை
மனித குமாரன்
உசுப்பினார்;

''அஞ்ச வேண்டாம்;
அனைவரும் எழுங்கள்!''

கசங்கிக் கிடந்த சீடர்கள்
கண்விழித்த போது
இயேசு மட்டும்
எதிரில் நின்றார்!

அடிவாரம் தொட்டதும்
அறிவித்தது சிகரம்;

''மனிதகுமாரன்
இறந்தோரிலிருந்து
எழுந்து வரும் வரை,
இந்தத் தரிசனம் குறித்து
ஏதும் கூறல் வேண்டாம்!''

வேத வேடர்களுக்கு
வினா துளிர்த்தது;

''ஆன்மீக அறிஞர்கள் -
இறந்தவர் உயிர்த்தெழும்
இறைநாளில்,
'எலியாவே முந்தி எழுவார்
என -
முன்மொழிகின்றனரே?

கேள்வியின் தலையை
கிள்ளி எறிந்தது பதில்;

''அந்தியும்
அதிகாலையும்,
செவ்வானமாகவும்
மந்தாரமாகவும்
காட்சியளிக்கிறது.
வானத்தை ஆய்ந்து
காற்றும் மழையும்
வருமென -
கண்டுபிடிக்கும் உமக்கு
காலத்தின் சமிக்கையை
காண இயலாதா?

இவர்களுக்கு -
★'யோனா' தீர்க்கதரிசியின்
விலாசம் தவிர
வேறு தேவையில்லை!''

காற்று சுழன்றது;
காலம் நகன்றது!

★ *திமிங்கலத்தின் வயிற்றில் மூன்று தினங்கள் வாழ்ந்து இறை அருளால் உயிரோடு வெளிவந்த தீர்க்கதரிசி!*

இரவை ஜெயித்தப் பகல்!

வெறண்ட வயல்வெளிகளுக்கு
ஏற்றங்காலானார்
இறை மைந்தர்!
தத்துவத்
தண்ணீர் பாய்ச்சலில்
தலைநிமிர்ந்தன
நாற்றுக்கள்!

ஒரு -
பகுத்தறிவுப் பதியமிட்டுக் கொண்டிருந்த
பகல் பொழுதில்,
மூச்சிரைக்க
முன்னால் விழுந்தான்
ஒருவன்;

''ஆண்டவரே!
என் மகனுக்கு
இரங்கும்!
தீயிலும், நீரிலும்
இழுப்பு நோயினால்
இடறி விழுகிறான்!
உம் -

அடியார்கள்
அவனைத் தீண்டியும்
அற்புதம் நிகழவில்லை!

வேதனையைச் சொட்டியது
வேந்தனின் இதழ்கள்;

''விசுவாசமில்லாத
வம்சமே!
என்று வரை பொறுமையாக
இங்கு இருப்பேன்?
அழைத்து வாருங்கள்
அவனை!''

சிறுவனுடன் வந்தனர்
சீடர்கள்!

பிசாசு பிடித்து
பிதற்றிய சிறுவனை
அதட்டியது
அக்கினி சுவாலை!

பிசாசு -
இடுப்பில் உதைவாங்கி
எழுந்து ஓடியது.
சிறுவன் -
சிட்டுக்குருவியாய்
சிறகு விரித்தான்!

வேத வேடர்கள்
வியந்தனர்;

''எங்களால் இது
இயலாமல் போயிற்றே?''

கண்களை மூடியிருந்த
கல்லறைப் பாறையை
கர்த்தர் புரட்டினார்;

''அவிசுவாசத்தாலே இது
ஆகவில்லை.
கடுகளவு விசுவாசத்துடன்
மலையைப் பெயரச் சொன்னால்
மறுகணம் பெயரும்.

பிரார்த்தனைகளாலும்
நோம்பினாலும் தவிர
அசுத்த ஆவிகளை
அடக்க வியலாது!''

சூரியகாந்திகள்
முகம் சுருங்கின;
வைரத்தை
நிலக்கரிகள்,
வழி தொடர்ந்தன!

●

வரிவழங்கும் வசந்தம்!

விடியலின் திவாலைகள்
வியாபிக் கிடக்கும்
கப்பர் நகூமின் ஒரு
காலைப் பொழுது!

வழிமறித்த ஒருவன்
சீமோன் பேதுருவைச்
சீண்டினான்;

''உமது போதகர்
வரிப்பணம்
வழங்குவதில்லையா?''

''வழங்குகிறார்!''
நறுக்கான பதிலுடன்
நகர்ந்த பேதுரு,
இல்லத்தினுள் நுழைந்தபோது
இயேசுவின் கேள்வி
எதிரழைத்தது;

''சீமோன் பேதுருவே!
பூமியின் அரசர்கள்,
வரிப்பணத்தைத் தங்கள்

அந்நியரிடத்தில்
அல்லது -
வாரிசுகளிடத்தில்
வசூலிக்கிறார்களா?''

பதில் வந்தது;
''அந்நியரிடத்தில்!''

அப்பியாச நிலவு
ஆணையிட்டது;

''அப்படி எனில்
வாரிசுகள்
வரி வழங்குவதில்லையே!

கடலுக்குள் சென்று
தூண்டிலிடு!
சிக்கும் முதல் மீனின்
வாயைப் பிளந்தால்
ஒரு வெள்ளிப் பணம்
உள்ளே மின்னும்!

அதை -
எனக்காகவும்
உனக்காகவும்
அவர்களுக்காகவும்,
வரிப்பணமாக
வழங்கு!

நெருப்புத் தென்றலின்
கட்டளை,
நிறைவேறியது!

●

இறையரசின் இலக்கணம்!

சீடர்கள் -
'வால்கா' நதியில்
வலை வீசினர்;

''இறையரசில்
எவன் பெரியவன்?''

ஒரு
மழலையைச் சுட்டிக்காட்டி
மாணவர்களை ஏறிட்டது
மனித வேதம்;

''இந்த
மழலையைப் போல
மனந்திரும்பாவிடில்
இறையரசில் நுழைவது
எளிதல்ல!

இந்த -
மழலையைப் போல்
மனந் தாழ்கிறவனும்,
இந்த மழலையை
என் பெயரால்
ஏற்றுக் கொள்கிறவனும்,

விண்ணரசில் பெரியவனும்
என்னைச் சுவிகரிப்பவனாகவும்
என்றும் இருப்பான்!

என் விசுவாசிகளுக்கு
இடறல் செய்பவனின் கழுத்தில்
எந்திரக் கல்லை கட்டி,
ஆழ்கடலில் அமிழ்த்துவது
அவனுக்கு நலம்!

இடறல்கள் நிமித்தம்
இப்பூமிக்கு ஐயோ!

இடறல்கள் அவசியம்;
ஆயினும் அவைகளை
ஏற்படுத்தும் மனிதருக்கு
ஐயோ!

சீடர்களின்
சிந்தனைக் குடுவைகளில்
‘பாஸ்பரஸ்’ பற்றி எரிந்தது!

●

விருட்சத்தின் எச்சங்கள்!

பாதையெங்கும்
பாடல்கள் வழிந்தன!
சாலைகளில் நடக்கும்
சந்தன மேகத்திற்கு
வழியெங்கும்
வாழ்த்துப் பூக்கள்!

களப்பணியில் மூழ்கியிருந்த
கர்த்தரை -
யோவானின்
கடுகடுத்த குரல்
கலைத்தது;

‘‘போதகரே!
உமது பெயரை
உச்சரித்து,
அயலான் ஒருவன்
அசுத்த ஆவிகளை
அகற்றுகிறான்.
அவன்,
நம்மைத் தொடராதபடி
நாங்கள் தடுத்தோம்!’’

பூவெடித்ததுபோல்
புன்னகைத்தார் இயேசு;
தடுக்க வேண்டாம்!

என்பெயரை உச்சரிக்கிறவன்
எளிதில் தீங்கு செய்யான்.
நம் விரோதியல்லாதவன்
நம்மருகிலிருக்கிறான்!''

ஆணிகளையே
மன்னித்த உதடுகள்
அருகம்புல்லைச் சபிக்குமா?

●

விதையும் – விளைச்சலும்!

தூத்துவத் தாய்மடி
சொற்களைச் சுரந்தது;
கன்றுகள் மடி முட்டின ;

''உன் சகோதரன்
உனக்குச் சத்ருவானால்,
அவன்
தனித்திருக்கும்போது
தவறைச் சுட்டிக்காட்டு!
அவன் உன்
அறிவுரையை உணர்ந்தால்
அடிபணிவான்.
இயலாதெனில்
நீதிபதி இருவரை
அழைத்துச் சென்று
நியாயத்தை விவரி!

அதற்கும் அவன்
அடிபணியவில்லை எனில்
அவன் உனக்கு -
அயலானாகவும்
ஆயக்காரனாகவும்
ஆகக் கடவான்!

நீங்கள் -
மண்ணில் கட்டுவது
விண்ணில் கட்டப்பட்டும்,
மண்ணில் கட்டவிழ்கப்பட்டது
விண்ணில் கட்டவிழ்கப்பட்டதுமாகக்
காணப்படும்!

எனது பெயரால்
எங்கு கூடுவீர்களே,
அங்கு உதிப்பேன்!

உன்னத உழவில்
உப்பளங்களும் கூட
பூப்பூத்தன!

●

மன்னிப்பின் மாண்பு!

சீமோன் பேதுரு
சிந்தனைக் குளத்தில்
சிறிய கல்லெறிந்தான்;

''ஆண்டவரே!
என் சகோதரன்
எனக்கு எதிரியானால்
அவனை -
எத்தனை முறை
மன்னிக்க வேண்டும்...
ஏழு முறையா?''
வார்த்தைகள்
வளையங்களாக
விரிந்தன;

''ஏழு முறையல்ல;
எழுபது முறைகள்
மன்னிக்கலாம்!
உவமை ஒன்றை
உரைக்கிறேன்!
அரசனொருவன்
பதினாயிரம் தாலந்துகள்
கடன்பட்ட வேலைக்காரனொருவனை
விசாரணைக்கு அழைத்தான்!

கடனடைக்க
கையாலாகாத அவனை,
மனைவி மக்கள்
மற்ற பொருள்களை விற்று
கடனடைக்கக்
கட்டளையிட்டான்!

வேலைக்காரன்
விம்மியழுதான்;

''ஆண்டவனே!
என்மேல் இரங்கும்
சந்தர்ப்பம் வழங்கினால்
சகலத்தையும் தீர்ப்பேன்!''

அரசனின்
கங்கு வார்த்தைகள்
கண்ணீரில் அணைந்தன!

கடனை ரத்து செய்து
வேலைக்காரனை
விடுதலை செய்தான்!

விடுதலை செய்யப்பட்ட
வேலைக்காரனோ
விரைந்து சென்று -
தன்னிடத்தில்
நூறு வெள்ளிக் கடன்பட்டவனின்
தொண்டையை நெறித்துத்
தொல்லை செய்தான்!

அவனோ -

‘‘ஆண்டவனே!
என் மேல் இரங்கும்
சந்தர்ப்பம் வழங்கினால்
சகலத்தையும் தீர்ப்பேன்!’’
என்றழுதான்!

வேலைக்காரன்
விடவில்லை.
அவனுக்குச்
சிறிதும் இரங்காமல்
சிறையில் அடைத்தான்!

சக வேலைக்காரர்கள்
நிகழ்ந்ததை நெஞ்சுருக
அரசனிடம் அறிவித்தனர்!
மீண்டும் -
ஆத்திரமுற்ற அரசன்
அறிவற்ற வேலைக்காரனை
இழுத்துவரச் செய்து
வினவினான்;

‘‘கயவனே! - நீ
கண்ணீர்மல்கக்
கதறியதால்
கடனை ரத்து செய்தேன்.
உனக்கு நான்
உள்ளம் இரங்கியது போல்,
நீ உன்
ஏழை வேலைக்காரனுக்கும்
இரங்க வேண்டாமா?

வேலைக்காரன்
உண்மைச் சுட
ஊமையானான்.

ஆத்திரமுற்ற அரசன்
அவனைச்
சிறையில் அடைத்துச்
சித்திரவாதை செய்தான்!

இறையரசு இந்த
அரசனுக்கு ஒப்பாகும்!
நீங்கள் உங்கள்
சகோதரனின் தவறுகளை
சகித்து மன்னியாவிடில்

ஆகாயத் தந்தையும்
அதன் வழி புரிவார்!''

ஆழ்ந்த உவமை
ஆறாம் அறிவுக்கு
பட்டைத் தீட்டியது!

●

நிஜத்தை மறுத்த நிழல்கள்!

வானத்து நிலவை
வாத்து முட்டைகள்
கேலி செய்தன!

சமாரியர்கள் சிலர்
விஷக் கிருமிகளை
விருத்தி செய்தனர்;

''தீண்டத் தகாதவர்!
எருசலேமே
இவரது ஆலயம்!

யாக்கோபும்
யோவானும்
நச்சுப் பூச்சிகளை
நசுக்கக் கொதித்தனர்;

''இழிந்த இவர்களை
எலியா செய்தது போல்,
அக்கினியில் பொசுக்கி
அழிக்க உத்தரவிடும்!''

தேவ புறா
தீப்பந்தங்களை
அணைத்தது;

‘‘மனித உயிர்களை
அழிக்க அல்ல,
மீட்கவே -
மனித குமாரன்
மண்ணுக்கு வந்தார்!

திருப்பணியாளர்களின்
திராவகச் சொற்கள்
தேனில் மூழ்கின!

●

இரக்கம் சொட்டும் இதயம்!

சட்டவல்லுனன் ஒருவன்
சமுத்திரத்தை அளவெடுத்தான்;

''முடிவில்லா வாழ்வுக்கு
முதல் முயற்சி யாது?''

திருமறை ஞான தீபம்
திரும்பியது;

''நியாயப் பிரமாணத்தில்
நீ வாசித்ததைக் கூறு!''

''உன் ஆண்டவரிடம்
முழு இதயத்தோடும்
முழு ஆத்துமாவோடும்
முழு பலத்தோடும்
முழு சிந்தனையோடும்
அன்பு கூர்ந்து,
அதன்படி உன்
அயலானையும் நேசி!''

சித்திரை மின்னல்
முத்திரைக் குத்தியது;

‘‘அப்படியே செய்!’’

விசாரித்தவன்
விடவில்லை;

‘‘என் பிறன்
எவன்?’’

கடல் எழுந்தது?;
கதைக்கான
விதை விழுந்தது;

‘‘எளிய மனிதனொருவன்
எருசலேமிலிருந்து
எரிகோ செல்கையில்
கள்வர்களின்
கைவசமானான்!

ஆடைகளையும்
உடமைகளையும் அபகரித்து,
கள்வர்கள் அவனைக்
காயப்படுத்தினார்கள்!

உதவிக்கு
ஒருவருமில்லை!

அவ்வழியே ஒரு
ஆசாரியன் வந்தான்;
அவனைக் கண்டு
அகன்று போனான்!

பின் ஒரு
லேவி வந்தான்;
வெறுப்புடன் அவனும்
விலகிச் சென்றான்!

பின் -
சாலையில் ஒரு
சமாரியன் குறுகிட்டான்!

கவிழ்ந்து கிடந்தவனைக்
கரங்களால் தாங்கி,
காயங்களுக்கு
எண்ணையும்
திராட்சை ரசமும் வார்த்து
இறுகக் கட்டினான்.

அவனைக்
கழுதையில் ஏற்றி
சாத்திரம் கொணர்ந்து
சகலவசதிகளும் செய்தான்!

மறுநாள் அவன்தன்
வேலையின் நிமித்தம்
வெளியே கிளம்பும் போது,
சாத்திரத்து உரிமையாளனை
அழைத்து -

''காயம் பட்டவனைக்
கவனித்துக் கொள்!
அலுவல் முடித்து திரும்பியபின்
தக்க பணம்
தருவேன்! என்றான்!

கதையின்படி
கள்வரிடம் சிக்கியவனுக்கு
எவன் பிறன்?''

''இரக்கம் செய்தவனே!''
சட்ட வல்லுனன் பதிலுக்குச்
சாட்டையடி கிடைத்தது;

‘‘அவ்வாறே நீயும்
அயலானுக்குச் செய்!’’

நெருப்பு பதிலில்
நித்திரை கலைந்தான்,
வழக்காடிய வல்லுனன்!

●

உன்னத உணவு!

குண்டூசியின் தலையைப் போல
ஒரு -
குக்கிராமம்!

வேத ரதம்
வீதியுலா வந்தது!
''மார்த்தாள்
மரியாள்,'' எனும்
இரு மங்கைகள்!

இயேசு கிறிஸ்துவுக்கு
இதயத்தின் உச்சியில்
இருக்கை போட்டவர்கள்!

ஏழைச் சகோதரிகள்
எளிய விருந்துக்கு,
வசந்த குமாரனை
வற்புறுத்தினர்!

இறையியல் தென்றல்
இல்லம் நுழைந்தது!
மார்த்தாள் -
சமையல் பணிகளில்
சங்கமிக்க,

மரியாள் -
தலைவனின் கீழ் அமர்ந்து
தத்துவங்களை உள்வாங்கினாள்!

மார்த்தாளின்
இருவிழிகளில்
எரிச்சல் புகைந்தது;

''ஆண்டவரே!
தனித்து நான்
தவிக்க -
இவளோ எனக்கு
உதவி செய்யாமல்
உபதேசம் கேட்கிறாளே?''

பூந்தோட்ட முகம்
பூக்களைச் சொரிந்தது;

''மார்த்தாளே!
பற்பல
காரியங்கள் குறித்து
கலங்குகிறாய் நீ!

தேவை ஒன்றே!

மரியாள் தன்
நல்ல பங்கை
நாடி எடுத்தாள்!

தையலின் சிந்தனையில் தாமரை மலர்ந்தது!

வாயின் உணவல்ல
வானத்தின் உணவே -
உடனடித் தேவையென
உணர்ந்தாள் மார்த்தாள்!

●

பகிர்தலின் பயன்பாடு!

ஆத்துமக் கடல்
ஆகர்ஷித்தது;

''ஏழை ஒருவன் -
நடுஇரவில் தன்
நண்பனின்
கதவைத் தட்டினான்!
கண்விழித்த நண்பனின்
கரங்களைப் பற்றினான்;

''வழிப்பயணமாய்
பழைய நண்பனொருவன்
பார்க்க வந்திருக்கிறான்!
அவனுக்கு அளிக்க
ஆகாரமில்லை!

அப்பங்கள் மூன்று
அவசரக் கடனாகத் தேவை!''

உறக்கத்திலிருந்து
மீளாத நண்பன்
உளறினான்;

''தொந்தரவு செய்யாதே!
கதவு பூட்டியாகிவிட்டது,

என் பிள்ளைகள்
என்னுடன் உறங்குகின்றனர் -
ஏதும் இயலாது!''

நண்பன் -
ஜன்னலை மட்டுமல்ல
இதயத்தையும்
இறுகச் சாத்திக் கொண்டான்!
நட்புக்காக
அப்பங்களை அவன்
அளிக்காவிடினும்,
வற்புறுத்தி வினவியதற்காக
வழங்கியிருக்கலாம்!

உண்மையாக
உங்களுக்கு
உரைக்கிறேன்!

கேளுங்கள்;
கொடுக்கப்படும்!
தேடுங்கள் ;
கண்டடைவீர்கள்!
தட்டுங்கள்;
திறக்கப்படும்!

ஏனெனில் -
கேட்கிறவன்
பெறுகிறான்.
தேடுகிறவன்
கண்டடைகிறான்.
தட்டுகிறவனுக்குத்
திறக்கப்படும்!

தகப்பனிடத்தில்
ஆர்வமாக மகன்
அப்பம் கேட்டால்,
கல்லைக் கொடுப்பானா?
மீனைக் கேட்டால்
பாம்பைக் கொடுப்பானா?

முட்டையைக் கேட்டால்
தேளைத் தருவானா?

வஞ்சகர்களே தங்கள்
வாரிசுகளுக்கு,
நல்ல ஈவுகளை
நல்கும் போது -
தன்,
பாதம் அண்டுபவர்க்கு
பரமத் தந்தை
பரிசுத்த ஆவியை
ஊற்றுவது
உறுதியல்லவா?

புயலின் போதனையில்
புலன்களை கட்டியிருந்த
பூட்டுக்கள் தெறித்தன!

●

ஆத்துமக் களஞ்சியம்!

சிந்தனையில்
காளான் முளைத்த ஒருவன்
மனித குமாரனை
மன்றாடினான்;

''ஆண்டவரே!
எனக்குரிய செல்வத்தை
இரண்டாகப் பிரிக்கும்படி
என் –
உடன்பிறந்தவனுக்கு
உத்திரவிட வேண்டும்!''
சிவப்பு மின்னலின் கண்கள்,
'செர்ரிப் பழங்களாயின;

''என்னை உனக்குப்
பங்கு வைப்பவனாகப்
பரிந்துரைத்தவன் யார்?
இவ்வுலகச் செல்வம் குறித்து
எச்சரிக்கைத் தேவை!
உலகச் சொத்து
உயிர் அல்ல!

ஒரு -
செல்வந்தனின் நிலம்
சிறப்பாக விளைந்தது.
தானியங்களைச் சேமிக்கத்
தக்க இடம் இல்லையே என
தற்பெருமையாக
எண்ணிய அவன் -

களஞ்சியங்களை விரிவாக்கி
கட்டிடங்களாக எழுப்பினான்!
தன் -
பிரம்மாண்ட சொத்தால்
பிரமித்த அவன்
ஆன்மாவின் உயர்வு குறித்து
அலட்டிக் கொண்டான்!

தேவவாசல்
திறந்தது!
கடவுளின் குரல்
கந்தகமாக வீசியது;

''அறிவிலியே!
இன்றிரவு உன் உயிர்
எடுக்கப்படும்!

அக்கணம் உன்
ஆஸ்தியின்
அதிபதி எவர்?''

விண்ணில் அல்லாமல்
மண்ணில் செல்வம் சேர்ப்பவன்
மட மனிதன்!''

தன் -
எண்ணங்களைச் சபித்து
இதயத்திற்கு ஒட்டடையடித்தான்
இளைஞன்!

●

பந்தியின் பண்பாடு!

ஒரு ஓய்வு தினம்!
விருந்து அருந்த
விரும்பியழைத்த ஒருவனது
வீட்டினுள் நுழைந்தது
விடியல்களின் கருவறை!

உணவு அறையில்
உள்நாட்டுக் கலவரம்!

பந்தியில் நிகழும்
பயங்கர மல்யுத்தம் கண்டால்
எச்சில் நாய்களும்
இரங்கி வழிவிடும்!

வேதனையில் வெம்பி
வெடித்தது அக்கினி;

''மணப்பந்தியில்
முகத்தை நிமிர்த்தி
முதன்மையாக அமராதே!
உன்னிலும் உயர்வானவன்
உள்ளே நுழையும் போது
இருவரையும் அழைத்த
இல்லத்து மனிதன் -

‘இடம் கொடு’, என
உன்னை எழுப்பி
உயர்ந்தவனை
உட்கார வைப்பான்!
நீ –
தலைகுனிந்தபடி
தாழ்மையான இடம்
செல்லவரும்!

தாழ்ந்த இடத்தை
தேர்ந்தெடு!

உன் நண்பன்
உன்னை –
உயர்ந்த இடத்தில்
உட்கார வைப்பான்!

தன்னை உயர்த்துகிறவன்
தாழ்த்தப்படுவான்;
தன்னைத் தாழ்த்துகிறவன்
உயர்த்தப்படுவான்!

விருந்துக்கழைத்த
வீட்டுக்காரனை அழைத்தார்
வேந்தன்;

‘‘நீ –
பகல் அல்லது
இரவு விருந்துக்கு
ஏற்பாடு செய்தால்,
உன்,
உற்றார் உறவினரையும்
உயர்ந்த செல்வந்தரையும்
ஒரு போதும் அழைக்காதே!

அவ்வாறு அழைத்தால்
உன்னை -
மறுவிருந்துக்கு
மற்றொரு தினம்
அழைப்பார்கள்!

பதிலுக்குப் பதில்
பந்தி வைப்பதாகும்!

ஏழை, ஊனர், சப்பாணி
விழியிழந்த குருடருக்கு
விருந்து வை!
அவர்களுக்குப்
பந்தி வைக்கும் நீ
பாக்கியவானாக இருப்பாய்!

அவர்கள் -
பதிலுக்குச் செய்யார்!
நீதிமான்களின்
உயிர்த்தெழுதலில்,
பாக்கியவான் உனக்கு
பதில் செய்யப்படும்!''

கூட்டத்தில் ஒரு குரல்
தீக்குச்சி கிழித்தது;

''பரமபிதாவின் அரசில்
பந்தியில் விருந்துண்பவன்
பாக்கியவான்!''

மழைச்சாரல்
மறுபடியும் தொடர்ந்தது;

''மனிதனொருவன்
மாபெரும் விருந்து செய்து,
அநேக மனிதரை
அழைத்திருந்தான்!

விருந்து வேளையில்
வேலைக்காரனை அழைத்தான்
வீட்டுக்காரன்;

''விருந்துக்கு அழைக்கப்பட்டவரின்
வீடுகளுக்குச் சென்று,

அனைத்தும் ஆயத்தம் என
அழைத்து வா!''

வேலைக்காரன்
வீடுகளுக்கு
விரைந்தான்!

அனைவரும் -
தக்க தருணத்தில்
தட்டிக் கழித்தனர்;

''வயலுக்குச் செல்லவேண்டும்
வர இயலாது!''

''ஐந்தாறு மாடுகளை
வாங்கினேன்.
சோதிக்க வேண்டும்!''

''மணமுடித்துள்ளேன்;
மன்னிக்கவும்!''

தகவலறிந்த தலைவன்
தணலானான்;

''ஊரின் இடுக்குகளில்
உட்கார்ந்திருக்கும்
ஏழை, ஊனரை
சப்பாணி, குருடரை
படை திரட்டி
பந்தியில் அமர வை!''

வேலைக்காரன் -
உத்தரவை நிறைவேற்ற
ஊருக்குள் ஊடுருவினான்!

பாமர சனம்
பந்தியில் வழிந்தது!

வேலைக்காரன்
வீட்டுத் தலைவனை
வினவினான்;

''இன்னும் உட்கார
இடம் உள்ளதே?''
கம்பீரமாகத் தலைவன்
கட்டளையிட்டான்;

''வழிகளிலும்
வயல்களிலும்,
பணிபுரியும் மக்களை அழைத்து
பந்தியில் அமர வை!

அழைக்கப்பட்ட எவனும்
என் -
அற்புத உணவை
அருந்தப் போவதில்லை!''

தத்துவத்ததின் உட்கரு
தற்பெருமைக்கு,
'டைனமைட்' வெடியானது!

●

இழந்ததைத் தேடும் இதயம்!

ஆயக்காரர்களும்
அக்கிரமக்காரர்களும்
சுவிசேச நீருற்றை
சூழ்ந்து நின்றனர்!
சர்ப்பங்கள் நாவுகள்
'சயனட்'டைத் துப்பின;

''பாவிகளோடு
பந்தியில் உணவருந்தி
பழகுகிறாரே?''
வெளிச்சத் திரி -
விகற்ப இதயங்களில்
விளக்கேற்றியது;

''ஆடுகள் நூறுக்கு
அதிபதியான மேய்ப்பனொருவன்
அதில் -
ஒன்று தொலைந்தாலும்
உட்காருவதில்லை!
தொண்றுற்றொன்பது
ஆடுகளையும் விட்டு,
காணாமல் போன ஆட்டை
கண்டுபிடிக்க அலைவான்!

பின் -
அடர்ந்த புதருக்குள்
அவ்வாட்டை கண்டுபிடித்து,
அனைவரோடும்
அகமகிழ்வான்!
தொண்ணுற்றொன்பது
நீதிமான்களைக் குறித்து
மகிழ்ச்சி யடைவதிலும்,
பாவியொருவன்
மனந்திரும்புவது
பரமபிதாவுக்கு
மகிழ்ச்சியாயிருக்கும்!

பத்து வெள்ளிக்காசுகளைப்
பத்திரப்படுத்திய
ஒரு பெண் -
அதில் ஒன்று தொலைந்தாலும்
விளக்கைப் பொருத்தி
வீட்டைப் பெருக்கி
விடாமல் தேடுவாள்!

காணாமல் போன
வெள்ளிக் காசைக்
கண்டுபிடித்த பிறகு,
சிநேகிதிகளையும்
அயல் வீட்டுக்காரிகளையும்
அழைத்து மகிழ்வாள்!

திருந்துகிற ஒரு
பாவியின் நிமித்தம்
தேவதூதர் மகிழ்வர்!

பரிசேயரின் பழிகள்
வாலறுந்த பல்லிகளாயின!

•

விலகியமகன் – தழுவியதந்தை!

சிப்பி உதடுகள்
சிறுகதை முத்தைத்
துப்பியது;

‘‘மாபெரும் பணக்காரனுக்கு
மைந்தர்கள் இருவர்!
இளைய மகன்
சிற்றின்பங்களின்
சிநேகிதன்.

கேளிக்கை விடுதிகளில்
கேலிச்சித்திரமாகக்
கிடப்பவன்.

பருவ நடனங்களுக்குப்
பணம் போதாமல்,
பாரம்பரியச் செல்வத்தைப்
பங்கு பிரிக்க வேண்டி
தந்தையிடம்
தகராறு செய்தான்!
தந்தையும்
தட்டவில்லை!

செல்வத்தை -
சகோதரர் இருவருக்கும்
சமமாகப் பிரித்தான்!

பிரித்த செல்வங்களுடன்
பிரிந்த இளையவன்
அயல்நாடுகள் பல சென்று
பாவ வழியில்
பணத்தை இறைத்தான்!
பருவம் -
பகட்டுச் சுகங்களில்
பறக்கும் குதிரையானது!

கள்ள நண்பர்கள்
கழுகு கூட்டமாய்
காசைக் கொத்தினர்!

காலம் கழிந்தது;
கையிருப்பும் கரைந்தது!
சிற்றின்பப் பறவை
சிறகொடிந்து
சீரழிந்தது!

கழுகுக் கூட்டம்
கண் மறைந்தது!

தேசமெங்கும்
தீவிரப் பஞ்சம்!

வாழ்க்கையின்
செல்லாக் காசான
வாலிபன் -
பண்ணையில் கூலியாக
பன்றிகள் மேய்த்துப்
பாடுபட்டான்!
பசி -

அடிவயிற்றை
அரித்தது!
பன்றிகள் உண்ணும்
தவிட்டுமாவைக் கண்டு
தவித்தான்!

கடந்த காலம்
கண்களைப் பிதுக்கியது;

''ஐயோ!
என் தந்தையின் கீழ்
இயங்கும் ஊழியருக்கு
உயர்ந்த உணவு
உள்ளது;
இங்கு நானோ
ஏதுமில்லாமல் மடிகிறேனே!''

கள்ளிகள் அரும்பிய
இதயம் -
கண்ணீரில்
கட்டுமரமானது!

மறுபடியும்
தந்தையிடம் திரும்ப
முடிவெடுத்து,
தழும்பு நினைவுகளைத்
தடவிக் கொண்டவன்,
தாய்மண்ணுக்குத்
தயக்கத்துடன் நுழைந்தான்!

மகனைக் கண்ட
தந்தைக்கு,
மகிழ்ச்சி தாளவில்லை!

தந்தையின் பாதங்களில்
தலை குப்புற விழுந்தான்
மைந்தன்;

‘‘தந்தையே!
பரமபிதாவுக்கும்
உமக்கும் விரோதமாக
பாவம் புரிந்தேன்!

உம்மைத்
தந்தையென அழைக்கவும்
தகுதியற்றேன்.

உமது பண்ணையில்
எனை ஒரு
ஊழியக்காரனாக
உயிர்பிழைக்க உதவும்!’’

மெழுகின் கண்ணீராய்
வார்த்தைகள் வடிந்தன!

கூட்டுப் புழுவாய்
குப்புறக் கிடந்த மகனை
கட்டித் தழுவி
கன்னத்தில் முத்தமிட்டத்
தந்தை -
ஊழியக்காரர்களை
உற்சாகமாய் அழைத்தார்!

அன்பு மகனுக்கு -
உயர்ந்த ஆடைகளையும்,
மோதிரங்களையும்,
மிதியடிகளையும்,
அணிவித்து மகிழ்ந்தான்!

கொழுத்த கன்றை
விருந்து சமைத்தான்!

‘‘என் மகன் மரித்தான்;
மறுபடியும் உயிர்தான்!

காணாமல் போனவன்
காணப்பட்டான்!''
தந்தையின் உடல்
தலைகீழ் அருவியாகத்
தரையில் மிதந்தது!

வேலையிலிருந்து
வீடு திரும்பிய மூத்தவன் -
வாத்திய இசையும்
நடனக் களிப்பும்
வாசலில் வழிவது கண்டு
வேலைக்காரனை
விசாரித்தான்!

விபரம் அறிந்ததும்
வெகுண்டான்!
தலையைக் கொத்திய
பாம்புக்குத்
தாய்ப்பால் குளியலா?
இல்லத்தினுள் நுழையாமல்
எரிச்சலுடன் நின்றவன்,

தந்தையைக் கண்டதும்
துப்பாக்கியாகத்
துளைத்தான்;

''உமக்கு நான்,
ஆண்டுகள் முழுதும்
அடிமையாய் உழைத்தேன்.
என்
நண்பர்கள் புசிக்க
நல்ல கன்றைத் தரவில்லை!

வேசிகளுடன் புரண்டவனுக்கு
விருந்து வைக்கிறீரே?''

பொங்கிய பாலுக்குத்
தகப்பனின் அறிவுரை
தண்ணீரானது;

''என்றும் நீ
என்னுடையவன்!
அனைத்தும் உன்
அதிகாரமே!
உன் உடன்பிறந்தவன்
மரித்தபின்
மறுபடியும் உயிர்த்தான்;
காணாமல் போய்
காணப்பட்டான்!
களிகூருவோம்
வா!

மூத்தவனின் முகம்
கற்பூரமாய் கரைந்தது!
தம்பியைத்
தழுவிக் கொண்டு
தலை நிமிர்ந்தான்!

சிறுகதையின் செய்தி
புலன்களின் இலைகளுக்குப்
பூச்சிமருந்து அடித்தது!

●

புரட்டுப் புத்திசாலி!

சிந்தனையில்
சிறுகதையொன்று
வெண் பருத்தியாய்
வெடித்தது;

‘‘செல்வந்தன் ஒருவன்
கள்ளக்கணக்கு எழுதிய
கண்காணிப்பாளனை
வேலையிலிருந்து
விலக்கினான்!
கத்தியின் மீது உலவினான்
கண்காணிப்பாளன்;

‘‘உழைக்கவும் தெம்பில்லை,
இறக்கவும் வெட்கம்!
நாதியற்றவனாகாமல்
நண்பர்களைத் தேடுவேன்!

திருட்டு மூளை
திட்டங்களை
அச்சு கோர்த்தது!

செல்வந்தனிடம் -
கடன்பட்டவரை
கள்ளத்தனமாக வரவழைத்து

கடன் பட்டியலைத்
திருத்தினான்!

நூறு குடம் எண்ணெய்க்கு
ஐம்பது குடம் -
என எழுதினான்!

நூறு கலன் கோதுமைக்கு
ஐம்பது கலன் -
என எழுதினான்!

கடன்பட்டோர் மகிழ்ந்து
கண்காணிப்பாளரின்
நண்பர்களாயினர்!

செல்வந்தனுக்குச்
செய்தி பாய்ந்தது!

பொங்க வேண்டியவன்
புன்னகைத்தான்;
புரட்டுத்தனம் எனினும்
அதனுள் புதைந்திருக்கும்
புத்திசாலித்தனத்தைப்
புகழ்ந்தான்!

உற்ற நண்பரை
உமது பணத்தில்
தேடுவது போல
தேவனைத் தேடுங்கள்!''

'சிக்கிமுக்கி கற்களில்
சிதறின தீப்பொறிகள்!

●

பள்ளமும் – மேடும்!

வாழ்க்கையின்
அடிவாரங்களில்
வானத்தின்
வர்க்கப் பார்வை
வந்து விழுந்தது;

''பணக்காரன் ஒருவன்
பகட்டாய் வாழ்ந்தான்!
அவன் -
மாளிகையின் வாசலில்
மனித எச்சமாய்
'லாசரு' என்பவன்
வாழ்ந்து வந்தான்!

வாசலில் வந்துவிழும்
உணவு எச்சில்களை
உண்டு வாழ்ந்தான்
உலர்ந்த சருகான லாசரு!
முச்சந்தி நாய்கள்
அவன் -
முகப்பருக்களை நக்கின!

காலம் -
கலவை எந்திரமாகச்
சுழன்றது!
பணக்கார மனிதனும்
பாதையோர லாசருவும்
மரித்தனர்!

தர்மத்தின் அரசு
தராசுமுள்ளை
நிமிர்த்தியது!

வறுமை லாசரு -
வானகத் தூதரால்
ஆபிரகாமின் மடியில்
அமர்த்தப்பட்டான்!

இரக்கமில்லா பணக்காரன்
எரிநரகத்தில் வாடினான்!
வேதனைத் தீயிலிருந்து
விழிகளை ஏறெடுத்த அவன்,
ஏழைலாசரு -
ஆபிரகாமும் மடியில்
அமர்ந்திருப்பதைக் கண்டு
அழ ஆரம்பித்தான்;

''ஆபிரகாமே!
அடியேனுக்கு இரங்கும்!
அடி நாக்கு வறண்டது,
லாசருவின் விரல் நுனியில்
தண்ணீரைத் தோய்த்து
என் -
வறண்ட நாவில்
வடியச் செய்யும்!

அகண்ட பிரபஞ்சத்தில்
ஆபிரகாமின் குரல்
அதிர்ந்தது;

''பூமியில் நீ
கனிகளையும்,
லாசரு தன்
காயங்களையும்
கண்டான்!

இன்று லாசரு
ஆற்றப்படுகிறான்;
நீ -
அறுக்கப்படுகிறாய்!
ஏதும் செய்ய
இனி இயலாது!
இருவருக்கும் இடையில்
இருண்ட பாதாளம் உண்டு!

வெந்துபோன பணக்காரன்
வேண்டுகோள் ஒன்றை
விண்ணப்பித்தான்;

''நான் இந்த
நரகத்தில்
நசுங்கியது போதும்!
என் -
ஐந்து சகோதரர்களும்
அக்கினி நகரம் வராதபடி
லாசருவைச் சாட்சியாக
என் -
தகப்பனது இல்லத்திற்கு
தயவுசெய்து அனுப்பும்!''

ஆபிரகாம் -
விண்ணப்பத்தை
விழியாலும் சீந்தவில்லை;

‘‘மோசேவும்,
தீர்க்கதரிசிகளும்
முன் நிற்கின்றனர்!
ஐவரும், தகப்பனும்
அவர்களுக்குச்
செவி கொடுக்கட்டும்!’’

அப்பாவியாக செல்வந்தன்
ஆலோசனைக் கூறினான்;

‘‘அப்படியல்ல
ஆபிரகாமே!
மரித்தவன் ஒருவன்
என்,
மக்களிடம் தோன்றினால்
மனம் திரும்புவார்களே?’’

மூட ஆலோசனைக்கு
முற்றுப்புள்ளி வைத்தார்
ஆபிரகாம்;

‘‘அவர்கள் -
மோசேவுக்கும்
தீர்க்கதரிசிகளுக்கும்
மதிப்பு தராவிடில்
மரித்தோர் தோன்றினாலும்
மனம் திரும்பார்!’’

இறைவுடைமை
பொதுவுடைமையாது!
சமத்துவம்; அதன்
சாம்ராஜ்ஜியத் திறவுகோல்!

●

பூக்களுக்கு எதற்குப் புனுகு?

ஒலிம்பிக் தீபத்தைச் சுற்றி
அகல் விளக்குகள்
அணிவகுத்து நின்றன!

உன்னத வெளிச்சம்
உயிரின் வீதிகளில்
உலா வந்தது;

''ஒரு ஊழியக்காரன்
வயல் வேலைகளை நிறைவேற்றி
வாசல் வந்தபொழுது,
தலைவன் அவனைத்
தட்டிக் கொடுத்து,
''எனக்கு முன்
உள்ளே சென்று
உணவருந்தி வா! என்பானா?
அல்லது...
''நான் உண்டு முடித்ததும்
நீ உணவருந்தலாம்!'' என்பானா?
அல்லது...
தன் -
கட்டளைகளைக்
காரியங்களாக்கியமைக்கு

கரங்களைப் பிடித்து
நன்றிகள் கூறுவானா?

அப்படி அல்ல...
கட்டளைகளைக்
காரியங்களாக்கியப் பின்,
''கடமையைச் செய்தோம்!
இனி நாங்கள்
பயனற்ற பணியாட்கள்!''
என இருங்கள்!
நன்றிகளை
நாட வேண்டாம்!''

எட்டுத் திசைகளும்
நட்சத்திரங்கள் தூவ,
நன்னம்பிக்கை முனை
நடக்க ஆரம்பித்தது!

●

சருகின் கரங்களில் சந்தனக் கிண்ணம்!

எரிமலை வாயை
இருகரங்களாலும் பொத்திருக்கும்
எருசலேம்!
புரட்சிப் பயணத்தில்
பூபாள ராகம்!
வீதியின் விலாவில்
குஷ்டரோகிகள் பத்துபேர்
குறுகிட்டு அழுதனர்;

‘‘இயேசு ஐயா;
எங்களுக்கு இரங்கும்!’’
வேரறுந்த குரல்களில்
வேதனையின் விரிசல்கள்!

இருவிழிப் பாதரசம்
இரக்கத்தில் உருகியது;
‘‘நீங்கள் உங்கள்
ஆசாரியரிடம் சென்று
அங்கங்களை காட்டுங்கள்!

‘கின்னஸ்’ புத்தகம்
கிளம்பியது!
அழுகிய கனிகள்
ஆசாரியரிடத்தில் செல்லும்போதே,

அருவருப்பான நோய்
அகன்றது!

பத்து இதயங்களும்
பலூன்களாகப் பறந்தன!

விடுதலைப் பெற்ற பறவைகள்
வீடுகளுக்குச் சிறகடித்தன!
ஒன்பதுபேர்
வீடுதிரும்ப -
ஒரு மெழுகுவர்த்திக்கு
நன்றியின் ஊற்று
நரம்புகளில் பொங்கியது!

சமாரியன் ஒருவன் மட்டும்,
மகிழ்ச்சியில் கூத்தாடி
மறுபடியும் திரும்பி
மனிதகுமாரனைப் பணிந்தான்!

கனவுகளின் முற்றம்
கருணையைத் தெளித்தது;

''சுத்தமானவர்
பத்து பேர்;
வந்தவனோ ஒருவன்!
இறைவனைத் துதிக்க
இந்த,
எளிய அயலானைத் தவிர
எவரையும் காணோம்!

எழுந்து செல்!
உன் -
உயர்ந்த விசுவாசம்
உன் -
வேதனையை விரட்டியது!

வான வயலில்,
புழுதியாக விழுந்தவன்
புதையலாக எழுந்தான்!

●

அக்கினி வானத்தின் அந்தரங்கப் படையெடுப்பு!

‘‘இறையரசு
இந்த பூமிக்கு
எப்போது இறங்கும்?’’

சதிகாரப் பரிசேயர்
சதுரங்கக் காயை
சாமர்த்தியமாய் நகர்த்தினர்!

எதிர்முனையில்
இதயத்தை நகர்த்தினார்
இயேசு;

‘‘இறையரசு -
இந்த பூமிக்கு
எண்ணும்படி வராது!

இதோ இங்கே;
அதோ அங்கே; என
அலைவீர்!

வான மின்னல்
ஒரு திசையிலிருந்து
மறுதிசை பாய்வதாக,
மனிதகுமாரன் தோன்றுவார்!

அதற்கு முன்
அநேகர் பாடுபடுவர்!

நோவாவின் காலமாக
லோத்தின் காலமாக
மனிதகுமாரனின்
காலம் கழியும்!

பேழைக்குள் நோவா
பிரவேசிக்கும் வரை,
மக்கள் குடிவெறியில்
மங்கையரைச் சுகித்தனர்!
பின் -
பெருவெள்ளம்
பீறிட்டு அழித்தது!

லோத்தின் காலத்தில்
கொடிய மக்கள் -
குடித்தனர், கொண்டனர்,
நட்டனர், கட்டினர்,
விற்றனர்!

லோத் -
சோதோமை விட்டு
காலடி வைத்தபோது,
கந்தகமும், தீயும் பொழிந்து
இருளின் மக்களை
எரித்தது!

ஆகாயமகன் வருகையிலும்
அவ்வாறே நிகழும்!
அக்கினி நடனமாடும்
அந்நாளில் -
தன்,
உடமைகளுடன்

உச்சிக் கூரையில்
உட்கார்ந்திருப்பவன்,
இறங்காமல்
இருக்கக் கடவான்!

வயலில் இருப்பவன்
எங்கும் திரும்பாமல்
இருக்கக் கடவான்!

லோத்தின் மனைவி
உப்புத் தூணாக
உறைந்ததை உணருவீர்!

உயிரைக் காப்பவன்
உடனே இழப்பான்!
மரித்தவன் தன்னை
மறுபடியும் எழுப்புவான்!

இரவில் -
ஒரு படுக்கையில்
உறங்கும் இருவரில்,
ஒருவன் ஏற்கப்பட்டு
மற்றவன் கைவிடப்படுவான்!

எந்திரத்தில் மாவரைக்கும்
இரு பெண்களில்,
ஒருவள் ஏற்கப்பட்டு
மற்றவள் கைவிடப்படுவாள்!

வயலில் வேலைசெய்யும்
இருவரில் ஒருவன் ஏற்கப்பட்டு,
மற்றவன் கைவிடப்படுவான்!''

ஆர்வமாகச் சீடர்கள்
அலைமோதினர்;
''எங்கே ஆண்டவரே?''

பிணம் எங்கோ
கழுகுகள் அங்கே!

சம்மட்டியாக
விழுந்த பதில்,
சரித்திரத்தை
ஊமையாக்கியது!

●

விதவையின் விண்ணப்பம்!

சிவப்புச் சூரியன்
சொற்களை
சூறை உடைத்தது;

''நீதிபதி ஒருவனிடம்
விதவையொருவள் தன்
நியாயத்தைக் கூறி
நீதி வேண்டினாள்!

அவள் அழுது புலம்பியும்
அடிக்கடி பல தினங்கள்
அலைவது கண்டு,
அயோக்கிய நீதிபதியின் நெஞ்சம்
அலட்சியமாக நினைத்தது;

''நான் -
ஆண்டவனுக்கும்
மனிதனுக்கும்,
அஞ்சுவதில்லை!
இவள் -
என்னை நச்சரிக்காத படி
ஏதாவது ஒரு நீதியை
எழுத வேண்டும்!''
கூறிய ஆழி
குமுறியது;

‘‘அநீதியுள்ள
அவனைச் சிந்திப்பீர்!
இறைவனிடம் எவரும்
எல்லையில்லாப் பொறுமையுடன்
ஏறிட்டால் -
நிச்சயம் மனதுருகி
நியாயம் புரிவார்!’’

ஆறாம் அறிவுக்கு
‘அக்குப்பஞ்சர்’ செய்தனர்
அடியார்கள்!

●

நீதியின் நேர்முகத் தேர்வு!

சாரோனின் ரோஜா
ஏழைகளின் தலைகளில்
இதழ் உதிர்த்தது;

''பரிசேயன் ஒருவனும்
ஆயக்காரன் ஒருவனும்
ஆலயம் சென்றனர்!
பரிசேயன் தன்
நெஞ்சை நிமிர்த்தி
நெடுநேரம் பிரார்த்தித்தான்;

''ஆண்டவரே!
அக்கிரமக்காரனாகவும்
ஆயக்காரனாகவும்,
இராதபடி உம்மை
ஏறெடுக்கிறேன்!

வாரத்தில் இருமுறை
விரதமிருந்து,
வருமானத்தில் தசமபாகம்
வழங்குகிறேன்!
....................!
பரிசேயனின்
பசப்புப் பட்டியல்
நீண்டது!

ஆயக்காரனோ –
கண்களைத் தாழ்த்தி
கைகளால் நெஞ்சிலடித்துக்
கதறினான்;

''பாவியாகிய –
எனக்கு இரங்கும்
இறைவனே!''

கண்ணீரில் குளித்து
கரையேறின வார்த்தைகள்!

ஒப்பனையில்லாதப் பிரார்த்தனை
உள்ளத்தின் ஆழத்திலிருந்து
உதட்டுக்கு வந்தது!

இருவரில் –
ஆயக்காரனே
ஆலயத்தின்
நீதிமான்!

தன்னை உயர்த்துகிறவன்
தாழ்மையடைவான்;
தன்னைத் தாழ்த்துகிறவன்
உயர்த்தப்படுவான்!''

கருத்தரித்த போதனைகளில்
கடப்பாரைகளும்
வேர் விட்டன!

●

கூடாரத் திருவிழாவில் குண்டுமழை!

யூதர்களுடைய -
கூடாரத் திருவிழாவுக்கு
முந்தைய சில
மும்முர நாட்கள்!

மரம் தாவும்
மந்திகள் சில
மனிதகுமாரனை
உந்தின;

''யூதேயா நுழைந்து
விரைவில் பிரபலமாகும்படி
விந்தைகள் செய்யும்!
சூரிய வெளிச்சத்திற்கு
சுவரொட்டி விளம்பரம்
எதற்கு?

''வேளை வரவில்லை!
உங்களை இந்த
உலகம் பகைக்காது.
அக்கிரமங்களைக் குறித்து
அறிவிப்பதால்,
அடியேனைப் பகைக்கிறது!

நீங்கள் புறப்படுங்கள்;
நான் வரவில்லை!

●

கூடாரத் திருவிழா!

விண்மீன்கள்
வீதிக்கு வந்ததுபோல்
வெளிச்சம்!
விளம்பரத்தை விரும்பாத
விடிவான வெண்பனி,
மக்கள் கூட்டத்தில்
மறைவாகக் கலந்தது!

யூதர்கள் சிலர்,
சனங்களுக்குள்
சங்கமித்தத் தென்றலை
சல்லடையிட்டுச் சலித்தனர்!

இயேசுவைக் குறித்து,
எதிர்மறையான
எண்ணங்கள்
புனைக் கதைகளாகப்
புறப்பட்டன!

திருவிழாவின் நடுவில்
திரைவிலக்கியது
தீ!
'பீரங்கி' உதட்டில்
பிரசங்கம் வெடித்தது;

''எனது போதனை
என்னுடையவை அல்ல;
என்னை அனுப்பியவரது!
ஆண்டவரின் சித்தமுள்ளவன்
அறிவான் இதை!

சொந்தமாகப் பேசுகிறவன்
சுயவிளம்பரம் தேடுகிறான்!

தன்னை அனுப்பியவரின்
தத்துவத்தைத் தேடுகிறவன்
தர்மம் மிக்கவன்.

நியாயப் பிரமாணத்தை
மோசே -
முன்மொழியவில்லையா?

அதன்படி இயங்காமல்
அடியேனை கொலை செய்ய
அலைவது ஏன்?''

கல்வியறிவு இல்லாதவரின்
ஆன்மீக அறிவு,
அறிஞர்களின் புருவங்களை
ஆச்சரியத்தைப் பளு தூக்க வைத்தன!

அடிமாடுகள் சில
அலறின;

''பிசாசு பிடித்த இவனை
கொலை செய்கிறவர்
எவர்?''

கரையும்
காகங்களை நோக்கி,
கரங்களை உயர்த்தியது
கானமயில்;

''ஓய்வு தினத்தில் நான் -
ஏழை ஒருவனை
குணமாக்கியதில்,
எரிச்சலாக இருக்கிறீர்கள்!
வேத பிதாக்களால் உண்டான

விருத்த சேதனத்தை,
தீர்க்கதரிசி மோசே
திரும்பவும் நியமித்தான்!

ஓய்வு தினத்தில் நீங்கள்
ஒருபோதும் விருத்தச் சேதனம்
செய்ததில்லையா?
நீதியின்படி
நீதி கூறுங்கள்!''

எருசலேம் வாசிகள்
இதயங்களை அலசினர்;

''இவனைக் கொலை செய்ய
எதற்கு அலைச்சல்?
வெளிப்படையாக
வேதம் பேசும் இவனை
கிறிஸ்து', என
அதிகாரிகள்
அறிவாரா?
இறைவன் வருவதை
எவரும் அறியார்!
இவன் -
ஆதியை நாம்
அறிந்திருக்கிறோமே?''

நெத்திலி மனிதர்களின்
நினைவு நீரோட்டத்தில்
நாதரின் பதில்
நங்கூரமாய் விழுந்தது;

''அடியேனை நீங்கள்
அறிவீர்கள்!
மெசியாவை அனுப்பிய
மெய்யானவரை நீங்கள்
அறியவில்லை;

அவரை நான்
அறிவேன்!

வீசும் புயலைப் பிடிக்க
வேட்டை நாய்கள்
வெறியுடன் அலைந்தன!
எரியும் தீயை
கைது செய்ய,
ஈசல்களால்
இயலவில்லை!

புதிய போர்குரல்
ஆன்மீக அரசின்
அடிவருடிகளைத் தகர்த்தது!

வேத ஆசாரியரும்
விஷ பரிசேயரும்,
வேங்கையை கைது செய்ய
சுண்டெலிகளைச்
சுண்டிவிடட்டனர்!

மறுபுறத்தில் -
இறை ராணுவத் தளம்
இயங்கியது;

''இன்னும் சில காலம்
இங்கிருப்பேன்!
பின் என்னை
அனுப்பியவரிடம் செல்வேன்;
அதன்பின் என்னைக்
காண இயலாது,
கண்டடைய முடியாது!

சொற்களில் புதைந்த
சூட்சமம் புரியாமல்
சுற்றம் குழம்பியது;

‘‘காண வியலாதா?
திருவிழாவின்
கடைசி தினத்தில்,
கிரேக்கருக்கு போதகம் புரிய
கிளம்பிப் போவாரோ?’’

சரித்திரப் பிம்பம்
சப்தமிட்டது;

‘‘தாகமுள்ளவன் என்னில்
தண்ணீர் அருந்தட்டும்!
என்னை விசுவாசிக்கிறவனின்
இதயத்திலிருந்து,
ஆத்துமத் தண்ணீர்
ஆறாக ஓடும்!

விதைகள்
விழ விழ...
வெற்றி முளைத்தது;

‘‘மெய்யாகவே இவர்
தீர்க்க தரிசி!
தாவீதின் மரபிலும்
பெத்லேகம் ஊரிலும்,
கிறிஸ்து பிறப்பார் என
வேத நூல்
விவரிக்க வில்லையா?

மக்கள் -
கருத்து மோதலில்
கரைகளாகப் பிரிந்தனர்!
அரண்மனைக் காவலர்கள்,
உப்பரிகை அரவுகளிடம்
உதடுநடுங்க விவரித்தனர்;

‘‘அந்த -
உன்னத மனிதனைப்போல்
ஊர்மக்கள் எவரும்
உரையாடியதில்லை!

பரிசேயரின் தேகம்
பஞ்சுமூட்டையில் நெருப்பாகப்
பற்றிக் கொண்டது;

‘‘அதிகாரிகளும்
பரிசேயரும் அந்த
விஷக் கருமியை
விசுவாசித்ததுண்டா?
சத்திய வேதத்தின்
சட்டங்களை அறியாதவர்
சபிக்கப்பட்டனர்!’’

மிளகாய் மண்டியில்
ஒரு ஊதுபத்தி!
காவலரில் ஒருவன்
கர்த்தரை பேட்டியெடுத்த
நிக்கொதேமு;

‘‘ஒரு மனிதன்
உரைப்பது கேட்டு,
அவனது காரியங்களை
அறியுமுன்னரே
ஆக்கினைக்கு உட்படுத்த
ஆதிவேதம் கூறுகிறதா?

குத்தலான கேள்விக்கு
கொள்ளிகட்டையாய்
குறுக்கு பதில் வந்தது;

‘‘நீர் கலிலேயன்!
கலிலேயாவில் இருந்து

ஒரு தீர்க்க தரிசியும்
எழவில்லை என்பதை
எண்ணும்!''

உள்ளே -
சிலந்திகள்
வாக்குவாத
வலைபின்ன...
வெளியே -
வெளிச்ச அலை
வீசியது;

''நான் -
உலகின் ஒளி!
என்னைத் தொடருகிறவன்
இருளில் நடக்காமல்
உயிரின் ஒளியை
உணருகிறான்!''

பரிசேயக் கொரில்லாக்கள்
பாய்ந்தன;

''உன்னைக் குறித்த
உனது சாட்சி
உண்மையல்ல!''

புரவியின் குளம்புகள்
புழுதி தட்டின;

''என்னைக் குறித்த
எனது சாட்சி உண்மை!
வந்ததும், செல்வதும்
என் -
நினைவு அறியும்;
நீங்கள் அறிவதில்லை!
உங்கள் தீர்ப்பு

உலகத் தீர்ப்பு!
பிதாவும் நானும்
பிணைந்திருப்பதால்
நான் -
வழங்கும் தீர்ப்பே
வழக்காகும்!

ஓநாய்கள்
உறுமின;

''உன் பிதா
எங்கே?''
''என்னையும்
என் பிதாவையும்,
எவரும் அறிவதில்லை!
பூமியிலிருந்து நான்
புறப்படுவேன்!
பாவங்களில் மூழ்கி
படுகுழியில் வீழ்வீர்கள்!
என்னுடன் வர
எவராலும் இயலாது!

''தன்னுடன் வரஇயலாதா?
தற்கொலை செய்வாரோ?''
யூதர்களின்
பாமரச் சிந்தனைக்குப்
பதிலடி விழுந்தது;

''நானே அவரென
நம்பாவிடில்,
உங்கள் பாவங்களால்
உயிர் துறப்பீர்கள்!

அடிப்படையான கேள்வி
வித்தகச் சித்தரின் முன்
வீசப்பட்டது;

‘‘நிஜத்தைக் கூறும்
நீர் யார்?’’
சாந்த சஞ்சீவி
சாசனம் வரைந்தது;’’
‘‘ஆதிமுதல் உங்களுக்கு
அறிவிக்கப்பட்டதே!

நியாயம் தீர்க்க
நிறைய காரியங்கள் உள்ளன!
என்னைத்
தரைக்கனுப்பிய
தந்தையிடம் விவாதித்தே
உலகத்திற்கு தீர்ப்பு
உரைக்கிறேன்!

சுயமாய் ஒன்றும்
சொல்வதற்கில்லை!
என் தந்தை
எனக்குப் போதித்தவைகளை
எடுத்துரைக்கிறேன்!
தந்தைக்குத் தகுந்த
தத்துவங்களையே பேசுகிறேன்!

யூதர்கள் பலர்
ஒளியின் குடையின்கீழ்
ஒதுங்கினர்!
அவர்களைத்
தத்துவத் தளிர்கரம்
தலைகோதி விட்டது;

‘‘எனது -
நீதிபோதனையில்
நிலைத்திருங்கள்!
உண்மையான சீடர்கள்
உலகில் நீங்களே!

உண்மை உங்களுக்கு
விடுதலை வழங்கும்!

விசுவாசித்த
வெண்முயல்கள்
வினா எழுப்பின;

''ஆபிரகாமின் சந்ததியாக
அடியார்கள் நாங்கள்,
அடிமைகள் இல்லை!
விடுதலை என்று நீர்
விளம்பியது எவ்வாறு?''

ஆகாயப் பெருங்கடல்
அலைகளை,
அள்ளி முடிந்தது;

''அநீதி செய்பவன்
அடிமையே!
அடிமைகள் அல்ல,
அன்பு மகனே
நிலைத்து நிற்கிறார்!
உங்களை அவர்
விடுதலையாக்குவார்!

நீங்கள் உங்களை -
ஆபிரகாமின் சந்ததி என
அறிவித்தாலும்,
என் -
அறிவுரைகளை மறுத்து
அடியேனை கொலைசெய்ய
ஆலோசிக்கிறீர்கள்!
என் -
தந்தையிடம் நான்
தரிசித்ததைக் கூறுகிறேன்;

உங்கள் பிதாவிடம்
உணர்ந்ததைக் கூறுகிறீர்கள்!''

ஆட்டு மந்தைகள்
ஆர்ப்பரித்தன;

''ஆபிரகாமே
எங்கள் பிதா!

''ஆபிரகாம்
அவ்வாறு அல்ல!
உங்கள் பிதாவின்படி
என்னைக் கொல்ல
எண்ணுகிறீர்கள்!''
மறுப்புக்கு எதிராக
மாரடித்தது மந்தை;

''நாங்கள் -
வேசியின் பிள்ளைகளல்ல!
தேவனே எங்கள்
திருத்தந்தை!''

மின்மினிகளின்
மேதாவித்தனம் கண்டு,
சோடியம் விளக்குச்
சூடானது;

''ஆகாய வாரிசான என்
அறிவுரைகளை,
ஆண்டவரின் பிள்ளைகளே...!
அறியவில்லையா?

உங்கள் பிதா,
பிசாசு!
பிசாசு சுயமாய்
பிரம்மாண்ட பொய் பேசுகிறான்;

தேவனால் உண்டானவன்
தேவ வசனங்களுக்கு
செவி சாய்க்கிறான்!
சிறிதும் நீங்கள்
செவி சாய்க்கவில்லை!''

கம்பி மத்தாப்புகள்
கங்குகளை உதிர்த்தன;

''நீ -
சமாரியன் என்றும்
சாத்தான் என்றும்,
நாங்கள் நினைப்பது
நியாயம் தானே?''

வானவில்
நீர்க்குமிழிகளை
நிராகரித்தது;

''அசுத்த ஆவிபிடித்தவன்
அடியேனல்ல.
பிதாவை நான்
கௌரவிக்கிறேன்;
என்னை ஏன்
கௌரவிக்கிறீர்கள்?

மகிமையை என்
மனம் தேடுவதில்லை!
அதை என் -
நித்திய நீதிபதியே
நெஞ்சில் விதைக்கிறார்!

என் -
இறை எண்ணங்களை
ஏற்று நடக்கிறவனுக்கு
என்றும் இறப்பில்லை!''

இருட்டு மனிதம்
ஈயத்தைக் காய்ச்சியது;

''நீர் பிசாசு!
ஆபிரகாமும்
இறை வாக்குரைப்போரும்
இறந்தனர்!
உன் -
இறை எண்ணங்களை
ஏற்று நடப்பவனுக்கு
என்றும் இறப்பில்லை
என்கிறாய் நீ!

ஆபிரகாமிலும் நீ
ஆற்றல் மிகுந்தவனா?''

மீன்சந்தையிலும்
மல்லிகைப் பூவின்
மணம் குறையவில்லை;

''என்னை நானே
உயர்த்துவதில்லை;
உன்னதப் பிதா என்னை
உயர்த்துவார்!
அவரை அறிவோம் என
ஆர்ப்பரித்த நீங்கள்,
அவரை அறியவில்லை!
அடியேன் அவரை
அறியாதவனல்ல!
அவரை அறிந்து,
அவரது அறிவுரைகளை
அமுலாக்கியதால் -
உங்கள் பிதாவாகிய
ஆபிரகாம் எனை
உணர்ந்து துதித்தான்!

ஆந்தைகளின் விழிகளுக்கு
ஆகாயம் -
தேங்கிய நீர்குட்டையாகத்
தெரிந்தது;

''ஐம்பது வயதாகாத நீ
ஆபிரகாமை அறிவாயா?''

நெருப்பின் வயிற்றில்
நெய்குடம் கவிழ்ந்தது;

''ஆபிரகாமுக்கு முன்பே
அவதரித்தவன் நான்!''

ஆத்திரம் தலைக்கேறிய
அறிவிலி யூதர்கள்
கற்களை எடுக்க -
கவியரங்க மன்றம்
கலைந்து மறைந்தது!

கூழாங்கற்கள் கூடி
சிகரத்தைப் பெயர்க்கச்
சிந்தித்தன!

●

விட்டில் பூச்சிக்கு விடுதலை!

அவள் -
விளக்குகள் புசிக்கும்
விட்டில் பூச்சி!
பருவ வயலின்
பார்த்தீனியம்!

அவள் -
கன்னங்களை முத்தமிட்ட
கயமை உதடுகளுக்கு,
கண்ணீரின் உப்புக்கரிப்பும்
கள்ளாக வெறியூட்டியது!

அந்தப் -
பொதுக்கிணற்றில்
தாகங்கள் ரகசியமாய்
தண்ணீர் இறைத்தன!

அவள் -
சமுதாயத்தின் கேள்விக்குறி;
அந்தப்புரத்தின் ஆச்சரியக்குறி!

அவளது படுக்கைக்கும்
அசதி வந்தது!

பருவங்கள் இடம் மாற,
பாசி பிடித்தது
பால் தடாகம்!

முதுமை மூடுபனியில்
முழுநிலவு,
தேய்பிறையானது!

தினவுகளுக்குத்
தீபமேற்றிய அந்தத்
தீக்குச்சி -
காலத்தின் கரங்களில்
கருகி விழுந்தது!

சரீர ஊதுபத்தி
சாம்பலானது!
இருளில் புசிக்கப்பட்ட
இச்சைக் கனி,
வீதிக்கு வந்தபோது
விலக்கப்பட்டது!

இளமையைத் தொலைத்த
அவள் -
இருளின் கண்களுக்கு
எச்சமானாள்!

காக்கைகள்
கூடி குயிலைக் கொத்தின!

கள்ளக் கையெழுத்துக்களால்
கசங்கிப் போன காகிதம் -
கோயில் வாசலில்
குப்பையாக விழுந்தது!

வழுக்கிக் கிடந்த
வாடகைத் தோணியைச்
சுற்றி நின்றன
சுறா மீன்கள்!

சுடுகாட்டு நரிகள்
சூழ்ச்சியாக ஊளையிட்டன;

''போதகரே!
தன்னையே விற்பனை செய்யும்
தாசி இவள்!
விபச்சாரம்
வேத குற்றம்!
தந்தை மோசேவின் வழியில்
தண்டனை தாரும்!
இவளை -
கல்லால் அடித்து கொல்ல
கட்டளையிடும்!''

தர்மஸ்தூபி
தரையில் வரைந்தது;

''உங்களில் -
பாவம் புரியாதப்
பரிசுத்தவான்,
முன்னால் நின்று
முதற்கல்லை வீசுங்கள்!

தலைவிரித்த பனைமரங்களுக்குத்
தத்துவ இடி!
இலக்கு மாறிய கற்கள்
இருதயங்களைப் பெயர்த்தன!

கற்களை உதறிவிட்டு
காகிதப் பூக்கள்
கலைந்தன!
நீதியின் துலாக்கோல்
நிமிர்ந்தது;

''உன்னைக்,
கொலை செய்ய
கூச்சலிட்டக்
கூட்டம் எங்கே?

தண்டனை எவனும்
தரவில்லையா?''

வேடர்களிடமிருந்து
விடுபட்ட மான்
விசும்பியது;

''இல்லை ஆண்டவரே!''

பூக்களின் படகுத்துறை
புன்னகைத்தது;

''தண்டனை நானும்
தரப் போவதில்லை!
இனிப் பாவம் புரியாதே;
எழுந்து செல்!

வீட்டிலாக விழுந்தவள்
விடியலாய் எழுந்தாள்!
நாக்குப் பூச்சிகள்
நரகலை அப்பிக் கொண்டன!

●

பாம்புகள் ஊதிய மகுடி!

தேசத்தின் புஜங்கள்
தீப்பந்தம் ஏந்தின!

ஏழை வர்க்கத்தின்
இருதயத் தமனிகளில்,
சுதந்திர ரத்தம் சுரந்தது!

அற்புதங்களின் கடைசலில்
ஆன்மீகம் வெண்ணெய் திரண்டது!

●

பார்வை இழந்தவொருவன்
பல்கலைக் கழகத்தின்
பாதையில் குறுகிட்டான்!

இரக்கச் சிந்தனையை
சகத் தோழர்கள்
சாந்து பூசினர்;

''ரபீ!
இவன் -
குருடனான குற்றம்
இவனது பாவமோ;
ஈன்றவர் பாவமோ?

மனித மாமூலிகை
மறுத்தது;
விண்ணின் அற்புதங்கள்
வெளிப்படவே
மண்ணில் இவன்
மனிதனாகப் பிறந்தான்!
பகல் வீசும்வரை
பரமபிதாவின் -
கட்டளைகளைக்
காரியமாக்குவேன்!
எதுவும் இயலா
இரவு நெருங்குகிறது!
உலகில் நான்
உலவும் வரை,
ஒளி வீசும்!''

மனிதகுமாரன்
மண்ணில் எச்சில் உமிழ்ந்து
சகதி குழப்பினார்!

குழப்பிய சகதியை
குருடனின் விழிகளில்
பூசினார்;

''புறப்பட்டுப் போய்
'சிலோவாம் குளத்தில்
கண்களைக் கழுவு!'

கட்டளைப்படி குருடன்
கண்களைக் கழுவ,
வெளிச்சம்
விழிகளுக்குள்
வியாபித்தது!

விந்தை நிகழ்வு
வேட்டாக வெடித்தது!

குணமானவனைக்
கூட்டம் நெரித்தது;

''விந்தை நிகழ்ந்த
விபரம் எப்படி?''

கண்கள் முளைத்தவன்
கண்ணீர் மல்க
காட்சிகளை விவரித்தான்!

குறுக்கே ஒரு
கொக்கி விழுந்தது;
''இப்போது
இயேசு எங்கே?''

''தெரியாது!''

உதட்டைப் பிதுக்கியவனை
ஊர்வலமாக அழைத்துவந்தன
ஒட்டுண்ணிகள்!
பரிசேயப் பாம்புகள்
பற்களை துலக்கின!

அது -
உழைப்பை
உறங்க வைக்கும்
ஓய்வு தினம்!
அரணைகள் -
ஆளுக்கொரு கூச்சலை
அவிழ்த்து விட்டன;

''ஓய்வுதினத்தை
உதாசீனப்படுத்துவிடட்டான்!''

''பாவி செய்யும்
அற்புதங்கள்
பலிக்குமா?''

சுகம் பெற்றவன்
சோதிக்கப்படட்டான்!

''இதைக் குறித்து
என்ன கூறுகிறாய்?''

ஆணி அறைந்தான்
அவன்;

''அவர் தீர்க்கதரிசி!''

குருடனின் பெற்றோர் -
சத்திய நிகழ்வுக்கு
சாட்சி கூறினர்;

''பிறவிக் குருடன்
எங்கள் பிள்ளை!
அற்புதம் நிகழ்ந்ததை
அவனிடமே கேளுங்கள்!

மண்வெட்டிகள்
மறுபடியும் கொத்தின ;

''அவர் பாவி;
ஆகவே நீ
ஆண்டவனைத் துதி!''

''அவர் பாவி என
அறியேன்!
இதற்கு முன் நான் குருடன்;
இப்பொழுது, எனக்கு
எல்லாம் தெரிகிறது!

''எப்படிச் செய்தான்
இந்தச்
செப்படி வித்தையை?''

விழி மலர்ந்தவனுக்கு
விளங்கவில்லை;
''முன்பு கூறியதை
மறந்தீரே?
நீங்கள் அவரது
மாணவர்களாக
மாற விரும்புகிறீர்களா?

ஆற்றுத் தவளைகள்
அவசரமாகத் தாவின;

''சே! சே!
முன்பு இருந்தே நாங்கள்
மோசேயின்,
முதன்மையானச் சீடர்கள்!
அந்தப் பாவியை
அறியோம்!''

''அவரை நீங்கள்
அறியாதது அதிசயம்!
பிறவிக் குருடன்
பார்வையடைந்தது
பெரும் அதிசயம்!
அதிலும் -
பாவிகளுக்குப் பரமன்
பதில் கூறுவதில்லையே?

கேள்வியில் படர்ந்த
கேலிப்புன்னகையில்,
பூனைகளுக்கு
மீசை துடித்தது;

''பாவத்தில் ஜனித்த நீ
வேதஞானிகளுக்கே
விபரம் கூறுகிறாயா?''

விழிபெற்றவனை
வெளியில் தள்ளிவிட்டு,
விஷப் பூரான்கள்
விவாதிக்க ஆரம்பித்தன!

மனிதச் சமுத்திரத்தில்
நட்சத்திர மீனாக
நடமாடிய இயேசு -
மீண்டும்,
குணமானக் குருடனை
குறுகிட்டு வினவினார்;

''வேத மைந்தனை
விசுவாசிக்கிறாயா?''

அவரிடத்தில்
நான் விசுவாசமாயிருக்க
அவர் யார்?''

மனிதகுமாரனை அறியாமல்
மனக்குருடாய் இருந்தவனுக்கு,
பூரணச் சந்திரன்
பொறுமையாக விளக்கியது;

''கண்களைத் தந்தவர்
அவரே;
கண்முன் பேசுகிறவரும்
அவரே!''

சாலையில் விழுந்த மரமாய்
கால்களில் விழுந்தான்
கண்தானம் பெற்றவன்!

ஞானக் கண்
ஊனக் கண்களுடன்
உரையாடியது;

‘‘காணாதவர்களைக்
காண்கிறவர்களாக்கவும்,
காண்கிறவர்களை
குருடராக்கவும்,
உலகில் உதித்தேன்!’’

குறியீட்டு வசனம்
குதர்கப் பரிசேயரைக்
குத்தியது;

‘‘நாங்கள் தான்
குருடரோ?’’

சாமரத் தென்றல்
சவுக்காகச் சுழன்றது;

‘‘குருடர் எனில்
குற்றம் இராது;
பார்க்கிறோம்
என்பதாலேயே
பாவத்தில் வாழுகிறீர்!

எதிரிகளின்
எலும்பு ‘மஜ்ஜை’களும்
எரிந்தன!

●

நல்ல மேய்ப்பனை நாடுவது நன்று!

ஆகாயத்தின்
அஞ்சல்வழிக் கல்வித்துறை -
உவமை ஒன்றை
உபதேசித்தது;

''உண்மையாக உங்களுக்கு
உரைக்கிறேன்!
ஆட்டுத் தொழுவத்தின்
வாசலில் நுழையாமல்,
திருட்டுவழியில் ஏறுகிறவன்
திருடனும், கொள்ளைக்காரனுமாவான்!

வாசல்வழி நுழைபவனே
ஆடுகளின் ஆயன்!
காவல்காரனும் அவனுக்குக்
கதவைத் திறப்பான்!

அவனது குரலுக்கு
ஆடுகள் செவிகொடுத்து
அவனைப் பின்தொடருகின்றன!
அன்னியரின் குரலறிந்தால்
ஆடுகள் சிதறும்!''

திரைமூடிய சொற்களுக்குத்
தெளிவுரை வழங்கியது
அணிந்துரை ;

‘‘அடியேனே -
ஆடுகளின் வாசல்!
எனக்கு முன்வந்தவர்
திருடனும், கொள்ளையராவர்!
ஆடுகள் அவர்களை
ஆமோதிக்கவில்லை!
என் வழியில்
எவன் நுழைந்தாலும்,
இருளிலிருந்து மீட்கப்பட்டு
உள்ளும், புறமும்
உன்னத மேய்ச்சலைக் காண்பான்!
அழிக்க வருகிறவன் திருடன்!
அடியேன் ஆத்துமாக்களைப்
பெருக்கும்படி பிறந்தேன்!

நானே -
நல்மேய்ப்பன்!
ஆயன் ஆடுகளுக்காக
ஆத்துமாவைக் கொடுக்கிறான்!
ஆயனதல்லாதவன்
அன்றாடக் கூலியாகவும்,
ஓநாய்களைக் கண்டு
ஓடுகிறவனாக இருக்கிறான்!
ஆடுகளை ஓநாய்கள்
அடித்துப் பீறும்!
நான் பிதாவையும்,
பிதா என்னையும்
இனம் காணுவதுபோல,
என்னுடையவைகளை
என்றும் அறிவேன்!

மேய்ப்பனின் தத்துவங்கள்
மேய்ச்சல் நிலமானது;
ஆடுகள் கூடி
ஆத்துமப் பசியாறின!

●

இல்லறமும் – நல்லறமும்!

தேள் கொடுக்குகள் -
திருட்டுப் புன்னகையுடன்
தேன்குடம் சுமந்து வந்தன;

''கணவன் -
தன் தாரத்தை
தள்ளுவது நியாயமா?

இறை தொல்காப்பியம்,
இல்லற இலக்கணம்
எழுதியது;

''ஆதி இறைவன் -
பெண்ணையும்
ஆணையும்
பிரசவித்தார்!
ஈன்றவரைப் பிரிந்து
இல்லறத் தம்பதிகள்
உடல் பிணைந்து வாழ்வார் என -
உன்னத தேவன் உரைத்ததை
உணரவில்லையா?
கடவுள் இணைத்ததை
மனிதன் பிரிக்காதிருக்கட்டும்!''

வக்கிர வல்லூறுகள்
வழக்குத் தொடுத்தன;
''அவ்வாறு எனில் -
'கணவன்,
தள்ளுதற் சீட்டு பெற்று
தன் தாரத்தைத்
தள்ளி வைக்கலாம் - என
மோசே ஏன்
முன்மொழிந்தார்?''

நிலத் தாரகை
நிறம் பிரித்தது;
''உங்கள் -
இரும்பு இதயம் கண்டே
இவ்விதி உரைத்தார்!
தன் தாரம்
வேசியானால் தவிர
விலக்கி வைக்கிறவன்
விபச்சாரம் செய்கிறவன்!
விலக்கப்பட்ட அவளை
விவாகம் செய்பவனும்
விபச்சாரம் செய்கிறவன்!

அடியார்களின் மனதில்
ஆறுதல் பனித்தூறல்;

''தாம்பத்ய தத்துவம்
இதுவெனில் -
துறவறமே
தூய்மையான மகிழ்வு!''

வானத்தின்
வலக்கர மோதிரம்
வழிமொழிந்தது;

‘‘அருள் பெற்றவரைத் தவிர
மற்றவர் இக்கருத்தை
மறுப்பர்!

தாயின் வயிற்றிலிருந்து
தானாக உதித்தும்...
மகிமையானவராலும்...
மனிதர்களாலும்...
துறவிகளாகத்
தோலுரிபவர்கள் உண்டு!
ஏற்றுக் கொள்கிறவல்லவன்
ஏற்றுக் கொள்வான்!

சீடர்களின் தேகமெங்கும்
சிந்தனை அமிலம் சுரந்தது!

●

வானக் கஜானாவின் வற்றாதப் பொக்கிஷம்!

செல்வந்தன் ஒருவன்
கண்களிரண்டிலும்
கவலைப் பொதி சுமந்து
கர்த்தரை அணுகினான்;

''நல்லப் போதகரே!
எல்லையில்லா வாழ்வுக்கு
என்னச் செய்வேண்டும்?''

தத்துவப்புனல்
தலைநிமிர்ந்தது;

''என்னை நல்லவன் என
எப்படிச் சொன்னாய்?
இறைவனைத் தவிர
எவரும் நல்லவரில்லை!
முடிவில்லா வாழ்வுக்கு
முன்னோர்களின் கற்பனைகளை
முதலில் கைகொள்!''

''கற்பனைகள்
எவை?''

அப்பாவி அணிலுக்கு
ஆசிரியர் போதித்தார்;
''கொலை செய்யாதே!
விபச்சாரம் செய்யாதே!
களவு செய்யாதே!
பொய் சாட்சி கூறாதே!
ஈன்றவரைத் துதி!
உன்னை நேசிப்பது போல
உன் அயலானையும் நேசி!''

இளைஞன் -
குற்ற உணர்வுடன்
குறுக்கிட்டான்;

''அனைத்தையும்
அடியேன் கைகொள்கிறேன்!
இன்னும் என்
குறைகள் யாது?''

''நித்திய நிறைவு விரும்பினால்
இருப்பதை விற்று
ஏழைகளுக்கு வழங்கு!
ஆகாயத்தில் உன் செல்வம்
அதிகரிக்கும்!
பின் என்னைப்
பின்பற்றி வா!

வாலிபன் -
முத்திரை முடிவால்
முகம் தொங்கினான்!
இருப்பதை இழக்க
இதயம் அஞ்சியது!
கடலில் விழுந்த
மழைத் துளியாய்
மறைந்தான் வாலிபன்!

ரகசியமாய் நகைத்தது
ராக தீபம்;

‘‘செல்வந்தன் -
இறையரசில் நுழைவது
எளிதல்ல!
உண்மையாக
உரைக்கிறேன்;
செல்வந்தன் இறையரசில்
நுழைவது காட்டிலும்...
ஊசியின் காதில்
ஒட்டகம் நுழையும்!’’

‘‘பின் -
இறையரசால்
எவர்தான்
மீட்கப்படக்கூடும்?’’

வியப்பு வினாவுக்கு
விண் மேகம் பொழிந்தது;

‘‘மனிதரால் இயலாது;
இறைவனால் இயலும்!’’

சீமோன் பேதுருவின்
உள்மனதில்
உளிச் சத்தம்;

உடமைகளைத் துறந்து
உம்மைத் தொடர்ந்தோம்;
எமக்கு
என்னக்கிட்டும்?

உறுதிமொழிதந்தது
உலகத்தின் கிரீடம்;

‘‘பூமி -
புத்துயிர் பெறும்
பூபாள தினத்தில்,
அரியணையில் மனிதகுமாரன்
அமர்ந்திருப்பார்!

அவருடன் அரியணைகளில் -
பனிரெண்டு பரிசுத்தப் படைகளுக்கு,
நீதிபதிகளாக
நீங்களும் அமர்ந்திருப்பீர்கள்!

என்பொருட்டு -
சகோதர, சகோதரிகளையும்
பெற்றோர்களையும்
மனைவி, மக்களையும்
வீட்டையும், விளை நிலங்களையும்,
துறந்து வருகிறவன்
தூயமெய் வாழ்வடைகிறான்!

ஆயினும் -
முந்தினோர் பிந்தினோராகவும்,
பிந்தினோர் முந்தினோராகவும்
இருப்பது இயற்கை!’’

சீமோன் பேதுருவுக்கு -
சித்தமெல்லாம்
சின்னச் சின்ன நட்சத்திரங்கள்
சிறகடித்தன!

●

பிந்திய முயல்களும் – முந்திய ஆமைகளும்!

மாற்றுக் கலாச்சாரத்தை
மண்பிசைந்தவர் –
குறியீட்டுக் கதையொன்றை
குயவு செய்தார்;

''இறையரசு,
இல்லத் தலைவனுக்கு
ஈடானது!

அவன்தன் –
திராட்சை தோட்டத்திற்கு
விடியற்காலைப் புறப்பட்டு
வேலையாட்களை அழைத்து –
ஒரு நாளைக்கு
ஒரு பணம் கூலிபேசி
வேலைக்கமர்த்தினான்!

மூன்றாம் மணிவேளையில்
முச்சந்தியில் நின்ற சிலரை
வேலைக்கமர்த்தினான்;

''நீங்களும் வாருங்கள்;
நியாயமானக் கூலிதருகிறேன்!''

வேலைக்கு அவர்களும்
விரைந்தனர்!

ஆறாம், ஒன்பதாம்,
மணிவேளையிலும்
வீட்டுத் தலைவன் சிலரை
வேலைக்கமர்த்தினான்!

பின் -
பதினோராம் மணிவேளையில்
பாதையில் சிலரைப்
பார்த்தான்;

''வேலையற்று நிற்பதென்ன?''
வீட்டுத்தலைவனின் வினாவுக்கு
வீதியில் நின்றவர்
விடையளித்தனர்;

''எங்களை எவரும்
வேலைக்கமர்த்தவில்லை!''

அவர்களையும் -
வீட்டுத்தலைவன்
வேலைக்கமர்த்தினான்!

அந்தியானதும் -
தலைவன் தன்
காரியதரிசிக்குக்
கட்டளையிட்டான்;

''முந்தி வந்தவர் முதல்
பிந்தி வந்தவர் வரை
சமமாக அனைவருக்கும்
சம்பளம் கொடு!

இறுதி மணியில் அமர்த்தப்பட்ட
எல்லோருக்கும்,
ஒரு பணம்
ஊதியமாக வழங்கப்பட்டது!

முந்தி வந்தவர்
முகமலர்ச்சியுடன்
அதிக கூலிகிடைக்குமெனும்
ஆவலில் முன் வந்தனர்!

அவர்களுக்கும்
ஆளுக்கொரு பணம்
அளிக்கப்பட,
முகம் சுருங்கி
முணு முணுத்தனர்;

''பிந்தி வந்தவர்கள்
ஒரு மணி நேரமே
உழைத்தனர்!

பகலில் வெயிலில்
பாடுபட்ட எங்களுக்குச்
சமமாக இவர்களுக்கும்
சம்பளம் வழங்குவதேன்?''

வேலையாட்களின்
முணு முணுப்பை
விளங்கிக் கொண்ட தலைவன் -
அடிப்படை நியாயத்தை
அறிவித்தான்;

''அருமைத் தோழர்களே!
உங்களை நான்
உழைப்புச் சுரண்டல் செய்யவில்லை!
ஒரு பணத்திற்கு
உழைக்க உடன்பட்டீர்கள்!
பிந்தியவர்களுக்கு என்
பிரியப்படி கூலி தருகிறேன்!
தயாள குணத்தைத்
தாங்க இயலவில்லையா?

முந்தியவர்களின் முகங்கள்
மூழ்கிய குடங்களாயின!

சில நிமிடச்
சிந்தனைக்குப் பின் -
சிவப்பு வானம்
செப்பியது;

''பிந்தியவர்
முந்தியவராகவும் -
முந்தியவர்
பிந்தியவராகவும்
இருப்பது இயற்கை!

அழைக்கப்பட்டவர் பலர்;
தேர்ந்தெடுக்கப்பட்டவர் சிலர்!''

முதலாளி தொழிலாளி
முற்போக்கு உறவுக்கு
முன் உதாரணம் இது!
இதைவிட பகிர்தலின்
பொதுவுடமைக்கு
எடுத்துக்காட்டு எது?

இறைபூமியின்
இருதயத் துடிப்பு
எழுந்து நடந்தது!

●

விடிவானத்தின் வெள்ளி மின்னல்!

நீக்ரோ மேகங்கள் -
மழைத் துளிகளை
இசைக் குறிப்புகளாக
எழுதிக் கொண்டிருந்தன!

ஈரத் தலையுடன்
எருசலேம்!

தேவாலயத்தின்
சாலமோன் மண்டபத்தில் -
உலகத்தின் பொற்குடை
உலவிக் கொண்டிருந்தது!

வெறி நாய்கள்
வேலி கட்டின;
''நீர் -
ஆண்டவர் என்பதற்கு
ஆதாரம் என்ன?''

நீர் மழை
நின்றது;
நெருப்பு மழை
பொழிந்தது;

‘‘ஆதாரம் முன்பே
அறிவித்தேன்!

ஆகாயப் பிதாவினால்
அடியேன் புரியும்
அற்புதங்களே சாட்சியம்!
நீங்கள் -
அடியேனின் மந்தையின்
ஆடுகள் அல்லாதபடியால்
வேத மைந்தனை
விசுவாசிக்கவில்லை!
ஆடுகள் என் சப்தமறிந்து
அடியேனைத் தொடருகின்றன!

என்னைத் தொடரும்
என் ஆடுகளுக்கு,
எல்லையில்லா வாழ்வை
ஈட்டித் தருகிறேன்!

எனக்கு -
ஆடுகளைத் தந்த பிதா
அடியேனிலும் பெரியவர்!

அடியேனின் கரத்திலிருந்தும்
ஆகாயப்பிதாவின் கரத்திலிருந்தும்,
இவைகளைப் பிரிக்க
எவனாலும் இயலாது!
பிதாவும், அடியேனும்
பிணைந்திருக்கிறோம்!

அந்தப்புர நாய்கள்
ஆத்திர எச்சில் வழிய
கற்களை எடுத்தன!
ஆகாய வேங்கை
அஞ்சவில்லை;

''ஆகாயப் பிதாவால்
அநேக நிகழ்வுகள்
ஆற்றினேன்!
இப்பொழுது கல்லெறியப்போவது
எந்த நிகழ்வுக்கு?

காட்டெருமைகள்
வெப்ப மூச்சு விட்டன;
''உன்னதப் பிதாவும், நீயும்
ஒன்று என
உரைத்ததற்காக!

காந்த மலை
கலங்கவில்லை!

''திருமறையின் படி
ஆன்மீக அறிஞர்கள் என
அறிவித்துக் கொண்டவர்களே!
திருத்தந்தை ஈன்ற
தேவமைந்தனின் வசனங்கள்
தேவ நிந்தனையா?
ஆகாயப் பிதாவால்
அற்புதங்கள் புரியாதிருந்தால் -
அடியேனை நீங்கள்
ஆதரிக்க வேண்டியதில்லை!

பிதாவும், நானும்
பிணைந்திருக்கும் பொருட்டு -
அதன் அடையாளங்களான
அற்புதங்களை விசுவாசியுங்கள்!

குருட்டு நாகங்கள்
கொலை வெறியுடன்
கூச்சலிட்டுப் பாய்ந்தன!

கனவுப் படிமம்
கலைந்து மறைந்தது!

ஆகாய நிலவை
அறுத்தெறிய முடியுமா?

கவிதை முகில் கண்ணீர் சிந்துகிறது!

சின்னஞ்சிறு மூக்குத்தியாக
'பெத்தானியா' கிராமம்!
இரட்டைத் தாமரைகள்
மார்த்தாள்
மரியாள்,
சோகத்தின் கரையில்
சூம்பிக் கிடந்தனர்!
கண்ணீர் தெப்பத்தில்
கண்களும் மூழ்கின!

சித்திரப் பூஞ்சோலைக்குச்
செய்திப் பறவை
சிறகடித்து வந்தது;

''சகோதரன் லாசரு
சாகக் கிடக்கிறான்!''

சாமர இமைகளில்
சலனமில்லை!

''லாசருவின் பிணி
மரணத்திற்கல்ல
மகிமைக்கே!''

இரண்டு தினங்கள் கழித்தே
யூதேயாவிற்குக் கிளம்பியது
யுத்தக் கப்பல்!
சீடர்களுக்குச் சித்தமில்லை!

''கல்லெறி விழுந்த ஊரில்
காலடி வைக்கலாமா?''

தத்துவப் புயல்
தட்டிக் கொடுத்தது;

''பகலுக்கு -
பனிரெண்டு மணிநேரம்!
பகலிலே நடப்பவன்
படுகுழியில் விழமாட்டான்!
இரவிலே நடப்பவன்
இடறி விழுவான்!

தோழன் லாசரு
துயிலுகிறான்;
துயிலும் அவனைத்
தொட்டெழுப்ப வேண்டும்!

அடர்ந்த கிளைகள்
ஆணிவேரின் ஆழத்தை
அறியவில்லை!
அவை -
விறகு வெட்டிகளைக் குறித்தே
விவாதித்தன!
சீடன் தோமா
சீறினான்;

''இறந்தாலும் சரி;
இயேசுவுடன் புறப்படுவோம்!''

•

பெத்தானியாவுக்கும்
எருசலேமுக்கும் -
இரண்டு மைல்கள்!

நான்கு தினங்கள்
நடை பயணம்!

மரணமடைந்த
லாசருவின் கல்லறைமுன் -
மனிதகுமாரன் நின்றார்!

யூதர்கள் -
மழைகால
மரவட்டைப் பூச்சிகளாக
மரண வீட்டில்
குழுமி நின்றனர்!

இல்லத்தினுள் மரியாள்
இற்றுக் கிடந்தாள்!
மார்த்தாள் -
வேந்தனைக் கண்டு
விழுந்தடித்து வந்தாள்;

''ஆண்டவரே!
இங்கு நீர்
இருந்திருந்தால்,
என் சகோதரன்
இறந்திருக்க மாட்டான்!
இப்பொழுதும் நீர் -
வானப்பிதாவிடம் கேட்பதை
வழங்குவார்!

கண்ணீர்ச் சொற்களை
சூரியச் சுட்டுவிரல்
சுண்டி எறிந்தது;

‘‘உன் சகோதரன்
உயிர்த்தெழுவான்!’’

உரையின் ஆழத்தை
உணராத மார்த்தாள் -
இறை நம்பிக்கையை
எடுத்துரைத்தாள்;

‘‘ஆம் ஆண்டவரே!
இறுதிநாளில் எழுவான்
என அறிவேன்!’’

நடமாடும் மருத்துவமனை
மார்த்தாளின் -
நம்பிக்கையுணர்வின்
நாடி பிடித்தது;

‘‘உயிரும் -
உயிர்த்தெழுதலும்
நானே!
என்னை விசுவாசிக்கிறவன்
இறந்தாலும் பிழைப்பான்!
உயிர்வாழுகிறவன் என்னை
உணர்ந்தால் -
உயிரை இழக்கமாட்டான்!
இந்த -
வேத வசனத்தை
விசுவாசிக்கிறாயா?’’

கண்ணீர் கனகாம்பரம்
கைத்தொழுதது;
‘‘ஆம் ஆண்டவரே!
நீர் -
உலகத்தின் குமாரன்
உன்னத கிறிஸ்து!

மார்த்தாள் -
மரியாளை
அழைத்து வந்தாள்!
மரியாளின் விழிகள்
மறுபடியும்
மடை திறந்தன!

இடி முழங்கியது;
''எங்கே வைத்தீர்கள்
என் சகோதரனை?''

ஆன்மீக அருவியை
அழைத்துச் சென்றனர்!

காவிய மொழி
கல்லறையின் முன்
கண்ணீர் சிந்தியது!
யூத ஜந்துக்கள்
யோசித்தன;
''குருடர்களின் -
விழிதிறந்து
விந்தை புரிந்த இவன்,
இறந்தவனை
எழுப்பக் கூடாதா?''

கற்பாறை மூடப்பட்ட
கல்லறை முன்
காலத்தில் உயிர்
கட்டளையிட்டது;

''கற்பாறைப் புரட்டுங்கள்!

மார்த்தாள் -
மூளையின் கண் திறவாமல்
முகம் சுளித்தாள்;

''நாதரே!
நான்கு தினங்கள் கழிந்ததால்
நாறுமே?''

அப்பாவி ஆவாரம் பூவை
ஆகாயம் அதட்டியது;

''வேத மகனை
விசுவாசித்தால் -
அற்புதம் காணுவாய் என
அப்பொழுதே கூறவில்லையா?''

கல்லறைப் பாறையை
அனைவரும் திரண்டு
அகற்றினர்!
வானத்தை ஏறிட்டது
வசந்த வானம் பாடி;

''இரக்கமான தந்தையே!
செவி சாய்ந்தமைக்குச்
சிரம் தாழ்த்துகிறேன்
என்றும் எனக்குநீர்
இணைக்கமானவர்!
அடியேனை நீர் -
அனுப்பி வைத்ததை
அனைவரும் விசுவாசிக்கவே
அறிவித்தேன் இதை!''

அடுத்தடுத்த நிமிடங்கள் -
கம்பியின் மீது
கழைக்கூத்தாடின!

அலையின் குரல்
அதிர்ந்தது;

''லாசருவே,
வெளியே வா!''

இறந்த லாசரு
எழுந்து வந்தான்!
அனைவரின் விழிகளிலும்
ஆச்சரியம் -
சடுகுடு விளையாடியது!
லாசருவின் உடலைச் சுற்றிய
கட்டுத் துணிகளை அவிழ்க்கும்படி,
கட்டளையிட்டது
கவிதைச் சந்தம்!

அல்லிச் செடிகளிரண்டும்
ஆகாயப் பந்தலிட்டன!

இறந்து பிழைத்த லாசரு -
வேத விஞ்ஞானியின் பாதங்களில்
வேரறுந்த மரமாக
விழுந்து பணிந்தான்!

வக்கிர வௌவால்கள்
வாயடைத்துத் தொங்கின!

இறந்த மனிதன் ஆவி
மூன்று நாட்கள் அவன்
உடலைச் சுற்றும் எனும்
யூதரின் மூடநம்பிக்கை
முதுமக்கள் தாழியுடைத்தது -
இயேசுவின் இச்செயல்!

மரணத்தை
மரணமடையச் செய்த
மனிதக் குமாரனைச் சுற்றிலும்
மக்கள் தேனீகள்!

●

கரையான்கள் கட்டும் காகிதப் புற்று!

மரித்தவன்
உயிர்த்த விந்தை -
எரிமலைக் குழம்பை,
எட்டுத் திசைகளெங்கும்
ஏற்றங்கால் இறைத்தது!

தேசம் -
'லார்வா' வாக
உறைந்தது!

பீதியடைந்த பிரமீடுகள்'
ஆலோசனைச் சங்கத்தை
அவசரமாகக் கூட்டின!
கூச்சலும், குழப்பமும்
கூரையை இடித்தன;

''அற்புதங்கள் நீடித்தால்
அவன் -
அடித்தள மக்களின்
அரசனாகிவிடுவான்!

●

ரோமானியர்கள் –
இதன் விளைவாக
எல்லாரையும் அழிப்பர்!

தலைமை ஆசாரியன் –
'காய்பா' எனும்
கயமை 'டிராகுலா'
கருத்துத் தெரிவித்தது;

''மக்கள் அழியுமுன் –
மக்களுக்காக ஒரு மனிதன்
மரிப்பது நலம்!''

'காய்பா'வின் கருத்து –
திருட்டு மாமிசப் பட்சிணிகளுக்கு
திருவிருந்தாய் தித்தித்தது!

இருட்டுக் காட்டுமிராண்டிகள் –
ஈரநிலவைப் பிளக்க
ஈட்டி தீட்டினர்!

கழுகுகளின் –
கண்ணி வெடிக்குத் தப்பி,
'எப்பிராயீம் ஊரில்
தடகளம் அமைத்தது
தார்மீகப் புயல் சின்னம்!

'பாஸ்கா' திருவிழாவில்
வேத விமானம் –
தரையிறங்குவதாகத்
தகவல் பரவியது!

சிங்கத்தின் –
குகையைக் கண்டுபிடிக்க
குருவிக்கூட்டங்கள்
குழம்பித் தவித்தன!

அத்தியின் புத்தி!

சூரியனுக்குக் காய்ச்சல் வந்ததுபோல -
சுண்ணாம்புச் சூளையாக
கொதித்தது பூமி!
வெந்நீர் வேர்வையில்
விழிகளும் கொப்பளித்தன!
கண்களை நையாண்டி செய்யும்
கானல் நீர்!

அறத்தின் நிழல் -
மரத்தின் நிழலில்
மாணவர்களுடன் ஒதுங்கியது!
வானம் படைத்த
அறுசுவை உணவுக்கு
வயிறு பசித்தது!
அடித்தள மக்களுக்கு
அப்பங்களைப் பெருக்கி
பொதுவுடமையுடன் புகட்டிய
பூந்தளிர்கரங்கள் -
தனியுடைமைத் தவிர்த்து
தளர்ந்து கிடந்தன!

அருகில் நிழல் பரவிக் கிடக்கும் -
அத்திமரத்தை
ஆய்வு செய்த அன்றில்
காய்ந்த மரக்கிளைகளில்
கனிகள் இல்லாது கண்டு
கசந்து கடிந்தது;

''இனி...
என்றும் உனக்குக்
கனி இருக்காது!

அத்திமரம் -
அக்கணமே பட்டது!
பிரம்மித்து நின்ற -
மாணவர்களின் செவிகளில்
மாதுளை முத்துக்கள் விழுந்தன!

''சற்றும் நீங்கள்
சந்தேகிக்காமலிருந்தால் -
'கடலில் விழு!' - என
உயர்ந்த மலையை நோக்கி
உத்தரவிட்டாலும்
உடனே நிகழும்!
விசுவாசமான மன்றாட்டில்
விரும்பியதைப் பெறுவீர்!''

சீடர்களின் -
நெஞ்சத்தடியினில் ஓடும்
நிலத்தடி நீருக்கும்
நெருப்பு பிடித்தது!

●

முள்மகுடம் பற்றிய முன் அறிவிப்பு!

இருளின் கரம்
முட்களால்
பாய்முடையத் துவங்கியது!
இரும்பு முட்களுடன் பூத்திருந்த
எருசலேமின் எல்லையில்,
வெள்ளத்தின் விழிகளில்
வேதனைச் சொட்டியது;

''இப்பொழுது நாம்
எருசலேமுக்குள் நுழைகிறோம்!
ஆலய ஆசாரிகளிடமும்,
ஆன்மீக அறிஞர்களிடமும்,
ஆகாய மைந்தன்
அன்பளிப்பாக
அளிக்கப்படுவார்!

அவர்களால் -
ஆக்கினைக்குள்ளாகி
அடித்துத் துவைக்கப்பட்டு,
ஆணிகளால் அறையப்பட
அந்நிய மக்களிடம்
அளிக்கப்படுவார்!

ஆயினும் -
மூன்றாம் தினத்தில்
முளைத்தெழுவார்!''
சீடர்களின் இதயங்கள் -
சிறகு கத்திரிக்கப்பட்ட
தட்டான் பூச்சிகளாகத்
தடுமாறின!

கொள்ளிக் கட்டை மீது நின்ற
கொடூர நிமிடங்களை
குரலொன்று கலைத்தது!

●

அடியார்கள் இருவரின்
அன்னை -
மூச்சிரைக்க
முன்வந்தாள்!
அன்னையின் குரலில்
ஆசை தளும்பியது;

''உமது
அரசாட்சியில் என்
அன்பு மகன்களுக்கு
அரியணைகள் தரவேண்டும்!
உம் -
வலப்புறத்திலும்
இடப் புறத்திலும்,
இருவரும் அமர
ஏற்பாடு செய்ய வேண்டும்!''

ஏழைத்தாயின்
இட ஒதுக்கீட்டுப் பிரச்சனை
வேத வேந்தனுக்கு
வியப்பளித்தது;

‘‘இவள் விரும்பியது
இன்ன தென்று
எவரும் அறியவில்லை;
எனது பாத்திரத்தில்
எவரும் அருந்தலாம்!

எனது இடத்தை
எவரும் பெறக்கூடுமோ?’’

அடியார்களுக்கும்
அரியணை ஆசை;

‘‘ஆகும் -
ஆண்டவரே!’’

அன்னப்பறவை -
அன்னையின் ஆசையை
அலட்சியம் செய்யவில்லை;

‘‘நினைத்தவை
நிறைவேறும்!
அடியேனின் பாத்திரத்தில்
அருந்துவீர்கள்!
அடியேனின் அரியணையில்
அமருவீர்கள்!
ஆயினும் அடியேனின் -
வலப்புறமும்
இடப்புறமும்,
தேவ பிதாவால்
தேர்ந்தெடுக்கப்பட்டவருக்குத் தவிர
பிறருக்கு வழங்குவது என்
பிரியமல்ல!’’

இருவருக்கு மட்டும்
இறை பதவியா?
பத்து வெண்புறாக்களும்
படபடத்தன!

ஆகாய விண்கலன்
அமைதிப்படுத்தியது;

‘‘அந்நிய மக்களின்
அதிகாரிகள் -
அதிகாரமாக
ஆளுவதை அறிவீர்கள்!

அடியேனின் புத்திரர்கள்
அவ்வாறு அல்ல!
தாழ்ந்து பணிபுரிகிறவனே
தலைமை அரியணைக்குத்
தகுதியானவன்!

உன்தை குமாரனும் -
உயிரை ஈந்து
உலக மக்களை மீட்கவே,
உதித்தார் என்பதை
உணருங்கள்!

இதயத்தில் அறைவாங்கிய
இறையடியார்கள் -
வெடித்த பலூன்களாய்
வெட்கித் தலைகுனிந்தனர்!

●

சிகரம் அழைத்தச் சித்திரக்குள்ளன்!

‘எரிகோ’ நகரத்தின்
இருதய வீதி!
மனித அரிசிகளுக்கு
மத்தியில் -
நட்சத்திர மண்டலம்
நடந்து வந்தது!

சாலையெங்கும்
சலசலக்கும் இலைகளின் நடுவே,
வெள்ளை ரோஜாவின்
வீதி ஊர்வலம்!

ஆயக்காரன் சகேயு!
கொசுவை விடக்
குள்ளமானவன்!
புரளும் வெள்ளத்தில்
பூச்சியாக மிதந்த -
குள்ளனின் மூளையில்
குட்டி மின்னல்!

காட்டத்தி மரத்திலேறி
கர்த்தரைக் காண
காத்திருந்தான்!

அவ்வழியே,
மிதந்த மேகம்
அண்ணாந்து பார்த்து
அன்புடன் அழைத்தது;

''இறங்கிவா சகேயு!
இன்று,
உனது இல்லத்திலேயே
உணவருந்துகிறேன்!''

'பிக்மி' மனிதனுக்குப்
பீறிட்டது குஷி!

விதையின் இல்லத்தில்
விருட்சத்திற்கு விருந்தா?

பந்தாகத் துள்ளி
பந்திவைத்தான் சகேயு!

சக்கை மனிதர்களுக்கு
வெட்கை தாளவில்லை;

''பாவியின் இல்லத்தில்
பந்தியில் அமருகிறாரே?''

துளசிச்செடி -
புகையிலைகளின்
புலம்பல்களைப்
பொருட்படுத்தவில்லை!

குள்ளன் சகேயு
குழைந்து கும்பிட்டான்;

''ஆண்டவரே!
எனது செல்வத்தின் பாதியை
ஏழைகளுக்கு வழங்குவேன்!
தகாத வழியில்

பொருள் ஈட்டியிருந்தால்
தானமாகத் தந்துவிடுகிறேன்!''

கள்ளிச் செடியில்
கண்ணீர்த் துளி
அரும்பியதைக் கண்டார்
ஆத்துமா விவசாயி;

''இந்த இல்லத்திற்கு
இரட்சிப்பு வந்தது!
அடிமை இவனும்
ஆபிரகாமின் மகனே!
இழந்ததை மீட்கவே
இறைமைந்தன்
இவ்வில்லத்தில்
எழுந்தருளினர்!

நெத்திலி மீனின்
நெஞ்சம் -
நீதியின் பனைமரமாய்
நிமிர்ந்து நின்றது!

●

உலகை உலுக்கிய 'ஓசன்னா' ஒலி!

இறையியல் சரித்திரத்தின்
இலக்கைப் புரட்டிய
எருசலேம்!
மண்மகளின் கொண்டையான
ஒலிவமலையின் -
அடிவார ஊர்,
'பெத்பசகே!'

ஆதி ஐ.நா. சபை -
அடியார்கள் இருவரை
அழைத்தது;

''அருகில் இருக்கும்
கிராமம் நுழைந்தால் -
கழுதை ஒன்றை
கட்டியிருக்கக் காண்பீர்!

அதை உடனே
அவிழ்த்து வாருங்கள்!
எவனும் விசாரித்தால்
எனக்குத் தேவை
எனக் கூறுங்கள்;
அவனே அக்கழுதையை
அவிழ்த்து விடுவான்!

உண்மையின் கைவிளக்குகள்
ஊருக்குள் நுழைந்தனர்;
உரைத்தது நிகழ்ந்தது!

''இதோ!
சீயோன் மக்களுக்குச்
செய்தி கூறுங்கள்!
உன் -
கம்பீர அரசர்
கழுதையின் மீதேறி,
சாந்தச்சொரூபியாக உங்களைச்
சந்திக்க வருகிறார்! - எனும்,
வேதவாக்கு
வெடித்து முளைத்தது!
சீடர்கள் -
கழுதையின் மீது
கம்பளிப் போர்வை விரித்து
அடிமைகளின் போர்களத்தை
அமரவைத்தனர்!

ஊரின் -
உயிர்மண்டலத்திற்கு
ஊர்வலம் நகர்ந்தது!
மக்கள் கூட்டம் -
கம்பளங்களையும்
இலை தழைகளையும்,
சாலையில் விரித்து
சந்தோஷக் கூச்சலிட்டது;

''தாவீதின் மகனுக்கு
ஓசன்னா!''

''பிதாவின் பெயரால்
பிரவேசிக்கிறவர்
பெருமைக்குரியவர்!''

‘‘உன்னதத்தில்
ஓசன்னா!’’

ஆகாயத்தின்
அறைகூவல்களுக்கு -
இடிகளும் காதுகளை
இறுக்கிப் பொத்தின!

‘யார் இவர்?’

வியப்பு வினா
வில் வளைத்தது!

‘‘இவர் -
கலிலேயாவின்
நசரேத்திலிருந்து வந்த,
கர்த்தர் இயேசு!’’

வெட்டுக்கிளிகளுக்கு
விலா வெடித்தது;

‘‘இவர்களின் கூச்சலுக்கு
என்ன கூறுகிறீர்?’’

பாதை மறைத்த
‘பாக்டீரியாக்கள்’ மீது
பன்னீர்செம்பு குலுங்கியது;

‘‘இனியும் இவர்கள்
ஊமைகளாயிருந்தால்,
கற்பாறைகளும்
கதை பேசும்!

‘‘சிறுவர்களின் உதடுகளால்
சிறப்பான துதி செய்தீர்! எனும் -
வேதவரிகள்
விழிகளுக்குத் தெரியவில்லையா?’’

வேகத்தடைகள் -
அலுமினியத் தட்டுகளாக
நசுங்கி நகர்ந்தன!

எருசலேமில் இறங்கியதும் -
பூகம்பத்தின் விழிகள்
புகைந்தன;

''உனக்கு வாய்த்த இந்த
உன்னத தினத்தில் -
உனது சமாதானத்திற்குரியவைகளை
உணர்ந்தால் நலம்!
உன் -
விழிகளில் திரைகள்
விழுந்திருக்கின்றன!
உன்னைச்
சந்திக்கும் சமாதானங்களை
உணராமல் போனதால்,
சூதக எதிரிகள் உன்னைச்
சூழ்ந்து அரண் எழுப்பி,
சந்ததியைச் சாம்பலாக்கி,
ஒரு கல்லின் மீது
ஒருகல் இராதபடி செய்யும்
அக்கினி நாட்கள்
அடுத்து வரும்!''

சாபத்தைச் சந்தித்த
சர்வாதிகார எருசலேம் -
வேசிகளின் உதட்டுச்சிவப்போடு
விஷமமாய் புன்னகைத்தது!

●

அதிகார கோபுரத்தின் அஸ்திவாரம் யாது?

தேவாலயத்தினுள்
தீயின் தில்லானா!
கணிபொறி உதடுகளில்
கங்குகள் தெறித்தன!
கொக்கிப் புழுக்கள்
குற்றம் சுமத்தின;

''எந்த அதிகாரத்தில்
இவ்விதம் செய்கிறீர்?''

இடக்குக் கேள்விக்கு
எதிர்கேள்வி வந்தது;

''உம்மிடம்
ஒரு கேள்வி!
அதற்கு பதில் கூறினால்
அடியேனும் கூறுகிறேன்!
யோவான் வழங்கியத்திருமுழுக்கு -
மனிதராலா? அல்லது
மகிமையாலா?''

தற்குறிகள்
தடுமாறின;

‘‘மகிமையால் எனில் -
‘பின் -
ஏன் அவனை
விசுவாசியாமல்
விலக்கிறீர்? என்பான்!

மனிதனால் எனில் -
‘மக்கள் அவனை
வேதஞானி என
விசுவாசிக்கிறாரே?’ என்பான்!

திரிந்த விஷநாவுகள்
திக்கின;

‘‘தெரியாது!’’

புறப்பட்ட பதில்
புட்டங்களை எத்தியது;

‘‘அப்படியெனில்
எந்த அதிகாரத்தில்
இவைகளைச் செய்கிறேன்
என -
எவருக்கும் கூற இயலாது!’’

பிற்போக்குவாதிகளின்
பிடரியில் அடி விழுந்தது!

●

திருப்பணியின் திறவுகோல்!

சித்தாந்தச் சிற்பி
சிறுகதை ஒன்றைச்
செதுக்கினார்;

''மனிதன் ஒருவனுக்கு
மகன்கள் இருவர்!
தந்தை -
மூத்த மகனை
முதலில் அழைத்தார்;

''திராட்சைத் தோட்டத்தில்
வேலை செய்ய
விரைந்து செல்!''
முதலில் மறுத்த
மூத்தவன் -
வெறுப்புடன் முனங்கி
வேலைக்கு விரைந்தான்!
தந்தை -
அடுத்த மகனையும் அழைத்து
அவ்வாறே கூறினார்!
உடனே ஒப்புக் கொண்டவன் -
வேலைக்குச் செல்லாமல்
வேறு இடம் விரைந்தான்!

இவர்களில் -
தந்தையின் உத்தரவைத்
தட்டாதவன் எவன்?''

'மூத்தவன்!'
பள்ளிக் குழந்தைகளாகத்
துள்ளிக் குதித்தனர்
துணை வேந்தர்கள்!
சிந்தனை வானத்தின்
சீதோஷணம் மாறியது;
''உமக்கு முன்னரே -
யோவானை -
வேசிகளும், ஆயக்காரரும்
விசுவாசித்தனர்;
விண்ணரசில் நுழைந்தனர்!
நசுக்கப்பட்ட அவர்கள்
நம்பினர்!
நீங்கள் -
நிகழ்ந்தவைகளைத் தரிசித்தும்
நெஞ்சுருகவில்லை!''

அமீனாக்களின்
அடிவயிறுகளில்
ஆத்திரம் -
அடுப்பு மூட்டியது!

●

திராட்சைத் தோட்டமும் – தீச்சுவாலையும்!

ஓலைச்சுவடி உதடுகளுக்குள்
ஈர எழுத்தாணி
இயங்கியது;

''தலைவன் ஒருவன்
தன் –
திராட்சை தோட்டத்தின்
திசைகளுக்கு வேலிகட்டி –
ஆலையையும், கோபுரத்தையும்
அமைத்து –
அந்நியருக்கு குத்தகைவிட்டு
அயல்நாடு பயணித்தான்!
பின் –
கனிகாலம் நெருங்கியபோது
கனிகளைப் பெற்று வரும்படி
மூன்று ஊழியர்களை
முதலில் அனுப்பினன்!
மூவரையும் –
குத்தகைக்காரர்
கொடூர புத்தியுடன்
கொலை செய்தனர்!

ஆத்திரமுற்ற தலைவன்
அதிகமான ஆட்களை
அனுப்பினான்!

அவர்களையும் -
குத்தகைக்காரர்
கொலை செய்தனர்!
பின் -
தலைவன் இறுதியாகத்
தன் மகனை அனுப்பினான்!

''வாரிசை அழிப்பதால்
வருமானம் மிகுதியல்லவா?
வக்கிர குத்தகைக்காரர்
மகனையும் கொலை செய்து
மகிழ்ச்சியடைந்தனர்!
இறுதியாக -
என்ன செய்வான்
எரிச்சலுற்ற தலைவன்?''
சீடர்கள் -
சிந்தனையைச் சாறுபிழிந்து
கதையின் முடிவைக்
கண்டுபிடித்தனர்;

''அக்கொடியவரை அழித்து -
காலம் தவறாமல்
கனிகொடுக்கும்
குணமுள்ள தோட்டக்காரருக்கு
குத்தகை விடுவான்!''

புதிய ஏற்பாடு
புன்னகைத்தது;

''மிக்கச் சரி!
வீட்டுக்கு ஆகாதென்று
விலக்கிய கல்லே

மூலைக்கு -
முதற் கல்லானது!
நம் -
விழிகளுக்கு அது
வியப்பானது என
வேத நூல்
விளக்கவில்லையா?

இந்தக் கல்லின் மீது
இடறுகிறவன் எவனும்
பிடரி நசுங்குவான்!

கூட்டுக்குள்
தலை இழுத்தன -
குருட்டு நத்தைகள்!

●

இமயத்தில் வளைபறிக்கும் எலிகள்!

‘அமீபா’க்களின் கைகளுக்கு
அரிப்பெடுத்தன;

‘‘போதகரே!
உம் -
தத்துவ நீதிக்குத்
தராசு முள்ளும்
தலைவணங்கும்!

●

இராயனுக்கு
வரி வழங்குவது -
நியாயமா;
அநியாயமா?’’
இடியாப்பத்தை விடச்சிக்கலான
இடக்குக் கேள்வி!
மறுத்தால் -
மன்னனுக்கு கோபம்;
ஆதரித்தால் -
மக்களுக்கு
மன வருத்தம்!
நூற்பாலை பதிலை
நுட்பமாக நெசவு செய்தது;

‘‘வெளிவேடக்காரரே!
என்னைச் சோதிப்பது
எதனால்?
கையிலிருக்கும் நாணயத்தில்
எழுதப்பட்ட கையெழுத்தும்
இருக்கும் உருவமும்
எவருடையவை?

‘இராயனுடையது!’

‘‘அப்படியெனில் -
இராயனுடையதை
இராயனுக்கும் -
கடவுளுடையதை
கடவுளுக்கும் -
காணிக்கையாக வழங்குவீர்!’’

பரிசேய பச்சோந்திகளுக்கு
பதிலடி மின்சாரம்
பாய்ந்தது!

●

விஷம் தோய்ந்த வினா!

புனிதப் புயல்
பூமியை இளநீர்
சீவிக் கொண்டிருந்தது!

யூதரில் ஒரு
பிரிவினர்
உயிர்த்தெழுதலில்
உடன்படிக்கையற்றவர்!

சதுசேயர் சிலர்
சீழ்வடியும் கேள்வியைச்
சிங்காரித்து அனுப்பினர்;

''ஆண்டவரே!
மனிதன் ஒருவன்
மழலையின்றி இருந்தால் -
அவன் -
மனைவியை
மரித்தவனின் சகோதரன்
மணந்து கொண்டு
மழலை வழங்க வேண்டுமென -
வேதத்தந்தை மோசே
விதி அமைத்தார்!

ஏழு சகோதரர்கள்
எங்களுக்குள் இருந்தனர்!
மணமுடித்த மூத்தவன்
மழலை இல்லாமல்
மரண மடைந்தான்!
இறந்தவனின் மனைவியுடன்
இரண்டாவது சகோதரன்
இல்லறம் துவக்கினான்!

அவனும் பின் -
மழலை இல்லாமல்
மரித்தான்!

இப்படியாக -
இரண்டாம் சகோதரன் முதல்
ஏழாம் சகோதரன் வரை -
மங்கையை மறுபடியும்
மணந்து, மணந்து
மழலை இல்லாமல்,
மரித்துப் போனார்கள்!
இறுதியில் அவளும்
இறந்து போனாள்!

உன்தை உயிர்த்தெழுதலில் -
இல்லறத் தத்துவத்தின்படி
இப்பெண் -
எழுவரில் எவனுக்கு மனைவி?''

போதிமரம் -
பூத கணங்களுக்குப்
போதித்தது;

''ஒப்பற்ற வேத நூலையும்
உன்னத உயிர்த்தெழுதலையும்,
உணராமல் உளருகிறீர்!
உன்னத உயிர்த்தெழுதலில்

கொள்வதும் -
கொடுப்பதும் இல்லை!

அவர்கள் -
வான தூதராய்
வலம் வருவர்!
அவர்களைப் பற்றி;
''நான் -
ஆபிரகாமின் தேவனும்
ஈசாக்கின் தேவனும்
யாக்கோபின் தேவனுமாக
இருக்கிறேன்!'' - என,
ஆகாயத் தந்தை கூறியதை
அறியவில்லையா?

மரித்தோருக்கு அல்ல
உயிர்த்தோருக்கே
உன்னத தேவன்!''

சகதி பூசிக் கொண்ட
சது சேயருக்கு -
நெருப்பில் விழுந்த கடுகுகளாக
நெற்றிப் பொட்டுகள் வெடித்தன!

●

ஒப்பனை ஓநாய்கள்!

மார்பகங்களில் ஒட்டிக் கொள்ளும்
மந்திர அட்டைப் பூச்சிகளை -
சூரிய உதயம்
சுட்டிக் காட்டியது;

''தந்தைமோசேவின் அரியணையில் -
தத்துவ அறிஞரும்
தரங்கெட்ட பரிசேயரும்
தலைகொழுத்து அமர்ந்திருக்கின்றனர்!
அவர்களது அறிவுரைகளை -
ஆய்வு செய்தபின்
அறியுங்கள்;
பிற்போக்கான காரியங்களை
பின்பற்றாதீர்கள்!

அவர்கள் அறிவுரைகளை -
அமுலாக்குவதில்லை!

மாபெரும் சுமைகளை
மக்களின் தோள்களிலேற்றி
அவற்றை -
சுண்டு விரலாலும் தீண்டாமல்
சுகித்து வாழுவர்!

மனிதர்கள் வியக்க
மாய்மாலங்கள் புரிவர்!

இடுப்பு நாடக்களை பெரிதாக்கி
ஆடைகளின் தொங்கலை
அகலமாக்கி -
விருந்து மண்டபங்களில்
முதன்மையான இடத்திற்கு
முந்தி அலைவர்!
வழிபாதைகளில்
வணக்கங்களையும் -
'போதகரே!'
'ரபீ' - என அழைக்கப்படுவதையும்
ரசிக்கின்றனர்!

'போதகரே!' - எனத்
துதிக்கப்படாதிருங்கள்!
கிறிஸ்து ஒருவரே,
தூய போதகர்!

சகலரும் சகோதராயின் -
'தந்தை ' - என எவரையும்
தவறாக அழைத்தல் வேண்டாம்!

பிதா ஒருவரே
பிரபஞ்சத்தின் தந்தை!
அடியேன் ஒருவனே
ஆன்மீக ஆசிரியர்!

தன்னை உயர்த்துகிறவன்
தாழ்த்தப்படுவான்;
தன்னைத் தாழ்த்துகிறவன்
உயர்த்தப்படுவான்!

கடையேழுவள்ளல்களின்
கைப்பிரதி -
வேதபோர்களத்தில்
வீரமுண்டாசு கட்டியது!

●

சாபங்களுக்குச் சாட்டையடி!

நெருப்பைத் திரித்த
நீதியின் நெசவு இயந்திரம் -
உலகத்தின் சுவாசப் பையில்
உஷ்ணத்தை ஊதியது;

''வேத அறிஞரே -
விஷப் பரிசேயரே!
உங்களுக்கு ஐயோ!
மனிதர்கள் நுழையாதபடி -
வான அரசின்
வாசலைப் பூட்டிகிறீர்!
அதனுள் நீங்களும் -
அடியெடுத்து வைப்பதில்லை;
அடியெடுத்து வைப்பவரையும்
அனுமதிப்பதில்லை!

அறிஞரே, பரிசேயரே;
உங்களுக்கு ஐயோ!
காட்சிக்கான ஜெபம் செய்து,
கைம்பெண்களின் வீடுகளைக்
களவாடுகிறீர்கள்!
அதற்கு -
அதிக தண்டணை
அடைவீர்கள்!

அறிஞரே, பரிசேயரே -
உங்களுக்கு ஐயோ!
மனிதனொருவன் உங்கள்
மதத்தைத் தழுவ -
பூமிக்குள்ளும், கடலுக்குள்ளும்
புகுந்து வருகிறீர்!

மனதில் நம்பிக்கையுடன் அவன்
மதத்தைத் தழுவும் போது -
நரகத்தின் மகனாக்குறீர்!

குருட்டு வழிகாட்டிகளே -
உங்களுக்கு ஐயோ!

காணிக்கைகளில்
கண்விழித்திருக்கிறீர்கள்!
காணிக்கைப் பெரிதா?
கடவுள் பெரிதா?

அறிஞரே, சதுசேயரே -
உங்களுக்கு ஐயோ!
தசம பாகத்தை ஏற்று -
தர்மத்தையும், விசுவாசத்தையும்
தவற விட்டீர்!
இரண்டும் கலந்த
இக்காணிக்கையையே
இறைவன் ஏற்பார்!

கொசுவை வடிகட்டி
ஒட்டகத்தை விழுங்கும்
அறிஞரே, பரிசேயரே -
உங்களுக்கு ஐயோ!
பாத்திரத்தின் வெளிப்புறத்தைப்
பரிசுத்தமாக்கினீர்;
அதன் உட்புறம் -
அநீதியும் கொள்ளையுமான
அக்கிரமம் வழிகிறது!

வெளிப்புறத்தைப் போல -
உட்புறத்தையும்
உடனே பரிசுத்தமாக்குங்கள்!

அறிஞரே, பரிசேயரே -
உங்களுக்கு ஐயோ!
வெள்ளையடிக்கப்பட்ட
ஒய்யாரமான கல்லறைகளுக்கு,
ஒப்பானவர்கள் நீங்கள்!
புறத்தில் அலங்காரமாகவும் -
அகத்தில் எலும்புகளாகவும்
கல்லறைகள்
காட்சி தருபவை!

மனிதருக்கு நீதிமான்களாகவும்
மனதுக்குள் கள்ளத்தனமாகவும் -
கயவர்களாகிய நீங்கள்
காட்சி தருகிறீர்கள்!

அறிஞரே, பரிசேயரே -
உங்களுக்கு ஐயோ!
தீர்க்கதரிசிகளின்
கல்லறைகளைக்
கட்டி எழுப்பி -

சத்தியவான்களின்
சமாதிகளை அலங்கரித்து -
சப்தமிட்டு கூறினீர்;

''நாங்கள் எங்கள் -
பிதாக்களின் காலத்தில்
பிறந்திருந்தால் -
இறைவாக்குரைப்போரின்
இரத்தப் பழிக்கு உட்பட மாட்டோம்!''
என நீங்கள் -
இறுமாப்புடன் கூறுவதால்

கொலைகாரர்களின் வாரிசுகள் எனக்
குறிப்பு காட்டுகிறீர்கள்!

உங்கள் -
வம்சபிதாவின்
வக்கிரங்களை
வழிதொடருங்கள்!

விரியன் பாம்புக் குட்டிகளே!
நரக அக்கினியிலிருந்து
தப்பியது எப்படி?

இதோ இப்பொழுது -
தீர்க்க தரிசிகளையும்
திருமறை ஞானிகளையும்,
அக்கிரமத்தில் கூத்தாடும்
உங்களிடம் -
அனுப்பி வைக்கிறேன்!
அவர்களைக் கொன்றும் -
சிலுவைகளில் அறைந்தும்,
வழிபாட்டுக் கூடங்களில்
வாரினால் அடித்தும்
துரத்தி துன்புறுத்துவீர்!

ஆகையால் நீங்கள்
ஆபேலின் ரத்தம் முதல் -
பலிபீடத்தில் பலியான
பரகியாவின் மகன்
சகரியாவின் ரத்தம் வரை -
பூமியில் சிந்தப்பட்ட சகல -
நீதிமான்கள் ரத்தத்திற்கும்
நெருப்பினால் பழிவாங்கப்படுவீர்கள்!
இத் -
தலைமுறையின் மீதே
தண்டனைகள் சுமத்தப்படுமென
உண்மையாகவே
உரைக்கிறேன்!''

சிறுநரிகளின் விழிகளில்
சிந்தனைக்கலகம்!

நெருப்புச்சாம்பலில்
நீதி -
'பீனிஃஃஸ்' பறவையாக
பிறந்து பறந்தது!

●

கண்களைச் சிந்தும் கண்ணீர்!

கந்தக வானத்தின்
காற்றமுத்த மண்டலம் -
எருசலேமின் முன்
எச்சரிக்கைக் கூண்டு
ஏற்றியது;

''எருசலேமே! எருசலேமே!
தீர்க்க தரிசிகளைக் கொன்று -
அனுப்பப்பட்ட
கனவான்கள் மீது
கல்லெறியும் நகரமே!

கோழிதன் குஞ்சுகளை
செட்டைகளுள்
சேகரிப்பதைப் போல -
மக்களை ஒருங்கிணைக்க
மனம் விரும்பினேன்!

உங்களுக்கோ
உடன்பாடு இல்லை!
இதோ!- உங்களுடைய
இல்லங்கள்,
இன்று முதல் கைகழுவப்படுகின்றன!

‘‘ஆண்டவரின் பெயரால்
நுழைகிறவர் -
ஆசி பெறுவாராக!’’ - எனக்
கண் திறந்து கூவும்வரை
என்னைக்
காணாதிருப்பீர்கள்!

கண்ணெதிரே -
மலைப்பாம்பின்
நெளிவு சுளிவுகளோடு
மல்லாந்து கிடந்தது.
இருட்டு எருசலேம்!

●

கைம்பெண்ணின் கண்ணீர்க் காணிக்கை!

பூமியின் -
'லாக்டோமீட்ட'ராகத்
தேவாலயம்!
ஆகாயத்தின் -
'அலுவலகக் கோப்பு',
பார்வைத் தராசில்
படிக்கற்களை நிரப்பியது!

ஆலயத்தின் -
கங்காருப் பையாகக்
காணிக்கைப் பெட்டி!
'பூர்ஷ்வாக்கள்' சிலர் -
காணிக்கைப் பெட்டியின்
கழுத்துவரை
காசுக்களை நிரப்பினர்!

இருண்டக் குடிசையில்
ஈரவிறகாகப் புகையும்
ஏழை விதவையொருத்தி -
கண்ணீரின் எச்சமாக
காணிக்கைப் பெட்டியிடம் வந்தாள்!

எலும்பு துருத்திய கரங்கள்
இரண்டு காசுகள் இட்டது!

முற்றத்து முழுநிலா
முகம் நிமிர்ந்தது;

''கனவான்களின்
காணிக்கைகள் அல்ல;
கைம்பெண்ணின்
காணிக்கையே
கடவுளின் கஜானாவுக்கு
கணிசமானது!

செல்வந்தர்களோ தங்கள் -
செல்வத்தில் சிறுபகுதியைச்
செலுத்தினர்!
இவளோ தன் -
வறுமையிலும்
வாழ்வுக்குண்டானவைகளை
வழங்கிவிட்டாள்!''

நான்கு திசைகளும் -
நற்செய்தி நதிக்குள்
தலைமுழுகின!

●

நெருப்பு வானமும் – நீராவிப் பூமியும்!

ஆகாயத்தைவொரு
ஆச்சரிக்குறிபோல
துளைத்துக் கொண்டிருக்கும்
ஆலய கோபுரத்தைக் கண்டு -
விசும்பு வெளியின் சீடர்கள்
வியந்து நின்றனர்!

'காம்ரேட்டின்' கண்கள்
கைத்துப்பாக்கிகளாக வெடித்தன;

''கட்டிடங்களைக்
கவனிப்பதென்ன?
ஒரு கல்லின் மீது
ஒரு கல் இராதபடி -
இவைகள் இடிக்கப்படும்!''

●

இமய மலை -
ஒலிவ மலையில்
உட்கார்ந்திருந்தது!
வேத மாணவர்கள் -
வினா விதை
வீசினர்;

‘‘உம்முடைய வருகைக்கும்
உலக முடிவுக்கும்
உண்டான அறிகுறி யாது?’’

ஆன்மீக அட்சரேகை
அறிவித்தது;

‘‘இருட்டு மனிதர்கள்
ஏராளமாக எழுந்து -
‘‘கிறிஸ்து’’ - என
ஏமாற்றுவர்!
ஏமாறாதீர்!

யுத்தங்கள் வெடிக்கும்,
ஆயினும்
அழிவு வராது!
தேசம் -
தேசத்தையும்,
அரசு -
அரசையும்
எதிர்க்கும்!
பஞ்சங்களும், நோய்களும்,
பூமி அதிர்ச்சியும்
புறப்படும்!
இவை -
இறுதிநாளின் துவக்கமே!
அன்று என் அடியார்கள் -
அடியேனின் பொருட்டு
அனைத்து மக்களாலும்
அழிக்கப்படுவீர்கள்!
மக்கள் மனங்குழம்பி -
ஒருவருக்கொருவர்
காட்டிக் கொடுப்பர்!
கள்ளத் தீர்க்கதரிகள்
கணக்கற்று எழுவர்!

அக்கிரமம் மிகுதியாகி
அன்பு அழியும்!
இந்த இருண்ட காலத்தில் -
இறுதிவரை நிலைத்திருப்பவனே
ஏற்கப்படுவான்!

இறையரசின் நற்செய்தி -
சகல ஜனங்களுக்கும்
சாட்சியாக அறிவிக்கப்படும்!

அப்பொழுது பூமிக்கு
அழிவு வரும்!

தீர்க்கதரிசி தானியேலின்
தீர்க்கதரிசனமாகிய,

''பாழாக்கும்
அருவருப்பான பொருள்-''
நீதியின் பீடத்தில்
நிறுவப்படும் பொழுது,
யூதேயாவின் மக்கள்
மலைகளுக்கு ஓடி மறைவர்!

கூரையில் நிற்பவன்
எதையும் எடுக்க
இறங்காதிருப்பான்!
விவசாயி ஆடைகளை எடுக்க
வீடுதிரும்ப வேண்டாம்!
கர்ப்பவதிகளுக்கும்
பால் கொடுக்கிறவர்களுக்கும் -
அந்நாளில் ஐயோ!

உலகத் தீர்ப்பு -
உறைபனி காலத்திலும்
ஓய்வு தினத்திலும்
உண்டாகாமலிருக்க -
பிதாவிடம் அழுது
பிரார்த்தியுங்கள்!

அக்கினி கைவீசும்
அந்நாளில் -
ஆதிபூமி பிரசவமானது முதல்
அனுபவிக்காத வாதைகள்
அலைகளாக எழும்!
தேவதந்தையால்
தேர்ந்தெடுக்கப்பட்டவருக்காக -
இருள் தினங்களின்
எண்ணிக்கைக் குறைக்கப்படும்!
மக்கள் சிலர் -
''மனிதகுமாரன் -
அங்கே! இங்கே! - என
அரற்றி ஓடினால்,
அதை நம்பாதீர்!
அக்கிரமத் தீர்க்கதரிசிகளின்
அற்புதங்கள் பெருகும்!
பிதாவின் மகன்
பிரவேசிக்கும் தருணத்தில் -
மின்னல் -
கிழக்கு முதல்
மேற்கு வரை
கிழித்து மின்னும்!
சூரியனும், சந்திரனும்,
அணைந்து போகும்!
நட்சத்திரங்கள்
நடுங்கி விழும்!
வானத்தின் பீடங்கள்
வலுவாக அசைக்கப்படும்!
ஆகாயப்பிதாவின் முத்திரை
ஆகாயத்தில் தோன்றும்!
அனைத்துத் தேசமக்களும்
அழுது புலம்புவர்!
வசந்த குமாரன் -
வலிமையோடு

வானத்து மேகங்களில்
வலம் வருவார்!

எக்காள முழக்கத்தோடு
இறங்கும் தூதர்கள் -
வானத்தின்,
ஒரு விளிம்பிலிருந்து
மறு விளிம்பு வரை,
தேர்ந்தெடுக்கப்பட்டவரைத்
திரட்டுவர்!

அத்திமரம் துளிர்ப்பது கண்டு
கோடையைக் குறிப்பறிவது போல -
விவரித்த குறியீடுகளைக் கண்டு
விண்ணரசு நெருங்குவதை
விளங்கிக் கொள்ளுங்கள்!

இவையெல்லாம் நிகழும்வரை
இத்தலைமுறை ஒழிவதில்லை!

ஆகாயமும், பூமியும்,
அழிந்தாலும் -
அடியேனின் வார்த்தைகள்
அழிவதில்லை!
பிரபஞ்ச அழிவின் காலத்தைப்
பிதாவைத் தவிர -
பிறர் அறியார்!

வேளை வரும்வரை
விழித்திருங்கள்!
வீட்டுத் தலைவன் -
கள்வன் வருவது தெரிந்தால்
கன்னமிட விட மாட்டான்;
கண்விழித்திருப்பான்!

அவ்வாறே நீங்களும்
ஆயத்தமாயிருங்கள்!

நினையாத நேரத்தில்
நீதியின் தலைவன்
நிலத்திலிறங்குவார்!

முதிர்ந்த உவமையொன்று -
அதிர்ந்த மக்களின்
ஆறாம் அறிவில் உதிர்ந்தது;

''தலைவனொருவன் -
தன்னுடன் பணிபுரிபவர்க்கு
தக்க தருணத்தில் உணவளிக்க,
வேலைக்காரனொருவனை
வேலைக்கு அமர்த்தினான்!

தலைவன் மேற்பார்வைக்குவரும்
தருணத்தில் -
தனது காரியங்களை
பொறுப்பாக நிறைவேற்றும்
புத்திசாலி வேலைக்காரனைக் கண்டு,
பாராட்டிப்புகழ்ந்து
பதவி உயர்வு செய்வான்!

அஃதல்லாமல்
அவ்வேலைக்காரன் -
''தலைவன் வரமாட்டான்'' - எனத்
தற்பெருமை கொண்டு,
உண்ண வும், குடிக்கவும்,
உதவியாளர்களை அடிக்கவும்
உடன்பட்டால் -
அவன் -
தன்னை மறந்த தருணத்தில்
தலைவன் தோன்றி
தண்டிப்பான்!

ஆன்மீக வேஷதாரிகளைப் போல -
அழுகையும், பற்கடிப்புமுள்ள
அக்கினி நரகத்திற்கு
அனுப்பப்படுவான்!''

இறைவானத்தின்
இடிவொலி -
இருட்டு பூமியின் கருவறையில்
எதிரொலித்தது!
வரலாற்றின் எழுதுகோல்
வாய்பொத்தி நின்றது!

●

ஐந்து கன்னியரின் அவஸ்தை!

ஆகாயம் திறப்பதற்குமுன்
அன்றில் பறவைகள்
ஆயத்தமாக வேண்டிய
அவசியத்தை -
வானத்தின் மறுஉருவம்
வலியுறுத்தியது;

''மணமகனை வரவேற்க
மங்கையர் பத்துபேர் -
திருமண இல்லத்திலிருந்து
தீவட்டிகள் ஏந்திப் புறப்பட்டனர்!

அவர்களுள் -
ஐந்து மங்கையர்
முன் புத்தி உள்ளவர்;
ஐந்து மங்கையர்
பின்புத்தி உள்ளவர்!

முன்புத்தி உள்ளவர்கள் -
தீவட்டிகளுடன்,
ஊற்ற வேண்டிய எண்ணெயையும்
உடன் எடுத்து வந்திருந்தனர்!
பின் புத்தி உள்ளவர்கள்
எண்ணெய் கிண்ணங்களை
எடுத்து வரவில்லை!

இரவு கவிழ்ந்தது!
மணிகள் கழிந்தும்
மணமகன் வரவில்லை!
காத்திருந்த கன்னிகளுக்கு
கண்கள் சொக்கின!

உற்சாகம் தணிந்த
திருமண வீடு -
உறங்கி விட்டது!
திடீரென் -
இரவைக் கிழித்தபடி
எங்கிருந்தோ ஒரு குரல்;

''இதோ!
மணமகன் வருகிறார் -
வரவேற்பு கொடுக்க
வாருங்கள்!''

திருமண இல்லம்
தீப்பிடித்தது!
கண்விழித்த கன்னியர்கள் -
தீவட்டிகளை
பரபரப்புடன்
பற்ற வைத்தனர்!
பின்புத்தியுள்ளவர்கள்
முன் புத்தியுள்ளவர்களை
அவசரமாக
அழைத்தனர்;

''தீவட்டிகளின் திரிகள்
திக்கி அணைகின்றன
எங்களுக்கு கொஞ்சம்
எண்ணெய் தாருங்கள்!

மங்கைகள் ஐவரும்
மறுத்தனர்;

‘‘எண்ணெய் வழங்க
இயலாது!
இருக்கும் எண்ணெயை
இரு அணியினரும் பகிர்ந்தால் -
அடுத்தடுத்து எங்கள் தீவட்டிகளும்
அணைந்து போகலாம்!
கடைக்காரரிடம் -
உங்களுக்கென
எண்ணெய் வாங்குவதே
உகந்தது!’’

கன்னியர் ஐவரும்
கடை நோக்கி
காற்றென விரைந்தனர்!

மறுநொடியில்
மங்கல ஒலிமுழங்க
மணவாளன் வருகைதர
ஆயத்தமாயிருந்த
ஐந்து கன்னியரும் -
அவருடன் இல்லத்தில்
அணிவகுத்து நுழைந்தனர்!

கல்யாண இல்லத்தின்
கதவுகள் மூடப்பட்டன!

பிறகு வந்து சேர்ந்த
பின்புத்தி மங்கையர் ஐவர் -

கல்யாண இல்லத்தின்
கதவைத் தட்டிக்
கத்தினர்;

‘‘ஆண்டவரே!
வெளியில் நிற்கிறோம்;
வீட்டுக் கதவைத் திறவும்!’’

மண இல்லத்திலிருந்து
மண மகனின் குரல் -
கன்னியரின் செவிகளில்
கனத்த இடியாகக்
கால் மிதித்தது;

''உங்களை அறியேன்
என -
உறுதியாகச் சொல்லுகிறேன்!''

திருதிருவென விழித்த
பின்புத்தி மங்கையரின் -
தேகங்களே,
தீவட்டிகளாக எரிந்தன!

என்றும் விழித்திருங்கள்;
எப்பொழுது வேளை வருமென
எவருக்கும் தெரியாது!

யாத்திரை மேகத்தின்
மழை பொழிவில்
மூட வனாந்திரங்கள்
முகம் பூத்தன!

●

தாலந்தின் தத்துவம்!

வெட்டவெளியெங்கும்
விடியல்கள் புஷ்பித்தன!
வேதமாருதம்
வெளிச்ச சாமரம்
வீசியது;

''வெளிநாடு பயணிக்கும்
வீட்டுத் தலைவனொருவன்
தன் -
முதன்மையான வேலையாட்கள்
மூவரை அழைத்து,
ஒருவனுக்கு -
ஐந்து தாலந்துகளையும்,
ஒருவனுக்கு -
இரண்டு தாலந்துகளையும்,
ஒருவனுக்கு -
ஒரு தாலந்தையும்,
வழங்கிச் சென்றான்!

முதலாளியின் பாராட்டு பெற -
மூவரும் தாலந்துகளை
முதலீடு செய்தனர்!

ஐந்து தாலந்துகள் பெற்றவன்
அயராமல் உழைத்து -
பத்து தாலந்துகளாகப்
பயனடைந்தான்!

இரண்டு தாலந்துகள் பெற்றவன் -
நன்கு உழைத்து
நான்கு தாலந்துகள் ஈட்டினான்!

ஒரு தாலந்து பெற்றவனோ
ஒன்றும் செய்யாமல் அதை -
நிலத்தில் புதைத்துவிட்டு
நிம்மதியாக அமர்ந்தான்!

பின் -
தாயகம் திரும்பியத்
தலைவன் -
வேலையாட்களை அழைத்து
விபரம் வினவினான்!

ஐந்து தாலந்துகள் பெற்றவன்
பத்து தாலந்துகளை வழங்கி
பணிவுடன் நிற்க -
தலைவன் அவனைத்
தட்டிக் கொடுத்தான்;

‘‘உண்மையான
ஊழியனே!
அநேக பதவிகளுக்கு
உன்னை -
அதிகாரியாக்குவேன்!
எனது மகிழ்ச்சியில்
இணைந்துகொள்!’’

இரண்டுதாலந்து பெற்றவன்
நான்கு தாலந்துகளுடன்
தலைவனின் தாழ்பணிந்தான்!
அவனையும் பாராட்டி

பணிகள் பல தந்த தலைவன்
ஒற்றை தாலந்து பெற்றவனை
உற்று நோக்கினான்!

ஒரு தாலந்து பெற்றவன்
தலைவன் முன்
தாழ் பணிந்தான்;

''ஆண்டவரே! - நீர்
ஆபத்தானவர்!
விதைக்காத வயலில்
அறுவடை செய்கிறவரும் -
தூற்றாத இடத்தில்
களஞ்சியத்தில் சேகரிப்பவருமாகக்
காணப்படுகிறீர்!
உமக்கு பயந்து இந்த
ஒற்றை தாலந்தை -
புழங்காமல் பூமியில்
புதைத்து வைத்தேன்!''

வீட்டுத் தலைவனின் -
ஆத்திரக் குரலில்
அம்மிக்கல் பறந்தது;

''பொல்லாத சோம்பேறியே!
என்னை அறிந்தால்
எனது பணத்தை -
வருமானம் குறித்து
வட்டிக் கடைக்காரனிடமாவது
வழங்கியிருக்க வேண்டும்!
இவனிடமிருக்கும்
ஒற்றை தாலந்தை
உடனே பறித்து -
பத்துதாலந்துகள் பெருக்கியவனுக்கு
பரிசாக வழங்குங்கள்!

உள்ளவனுக்கு இன்னும்
வழங்கப்படும்!
இல்லாதவனுக்கு
இருப்பதும் பிடுங்கப்படும்!

இவனை பிடித்து
இருளில் தள்ளுங்கள்!

அங்கே இவனை -
அழுகையும், பற்கடிப்பும்
அரித்துத் தின்னும்!''
புதைக்கப்பட்ட நீதியின்
புலன்கள் ஐந்தும்
புத்தகங்களாக விரிந்தன;
பகுத்தறிவு -
பக்கம் புரட்டியது!

உழைப்பின் தத்துவத்தை
ஊழியத்தின் மகத்துவத்தை
உன்னதக் குரல் விளக்கியது!

●

பிரபஞ்சத்தின் தலையில் பீறிடும் நீதி!

நித்திரை பூமி
நெருப்பில் தலைமுழுகும்
நீதிநாளின் நிகழ்வுகளை -
முன்னறிவிப்புத் தந்தது
முகில்களின் குடில்;

''அரச குமாரன் -
ஆகாயத்தூதரோடு
அரியணையில்
அமர்ந்திருப்பார்!

சகல ஜனங்களும் அவரிடம்
சமர்ப்பிக்கப்படுவர்!
மேய்ப்பன் தன் -
செம்மறி ஆடுகளையும்
வெள்ளாடுகளையும்
விலக்கிப் பிரிப்பது போல -

மனிதர்களைக் குவித்து -
வலப்புறத்தில்,
செம்மறியாடுகளையும் -
இடப்புறத்தில்,
வெள்ளாடுகளையும் -
பிரபஞ்ச மேய்ப்பன்
பிரித்து நிறுத்துவார்!

பின் -
வான அரசர்
வலப்புற மந்தைகளிடம்
வாஞ்சையாக முழுங்குவார்;

''ஆகாயத் தந்தையால்
ஆசீர்வதிக்கப்பட்டவர்களே!
வான அரசுக்கு
வாருங்கள்!
உலகம் உற்பத்தியானது முதல் -
உங்களுக்காக அமைக்கப்பட்ட
உன்னத அரசு,
உங்களுக்கே உரியதாகுக!

அடியேன் பசித்திருந்தேன்;
ஆகாரம் தந்தீர்கள்!
தாகத்தால் தவித்தேன்;
தண்ணீ ர் தந்தீர்கள்!
அந்நியனாய் நின்றேன்;
ஆதரவு தந்தீர்கள்!
அம்மணமாய் நின்றேன்;
ஆடைகள் தந்தீர்கள்!
வியாதியாய் இருந்தேன்;
விசாரிக்க வந்தீர்கள்!
பாதாளச் சிறையிலிருந்தேன்;
பார்க்க வந்தீர்கள்!''

வலப்புற நீதிமான்கள் -
மனித மேய்ப்பனுக்கு
மறுமொழி தந்தனர்;

''இவையெல்லாம்
எப்போதும் செய்தோம்
இறைமகனே?
எங்களுக்கு நினைவில்லையே?''

வேதநீதிமன்றம்
விளக்கியது;
‘‘என் -
ஏழைச்சகோதரனாகிய
இவர்களில் ஒருவனுக்கு -
எதைச் செய்தீர்களோ?
அதை எனக்கு
அப்போதே செய்ததாகும்!

பின் -
இறைமகன்
இடப்புற மந்தையிடம்
எரிச்சலுடன் முழுங்குவார்;

‘‘சபிக்கப்பட்டவர்களே!
அசுத்த ஆவிகளுக்கான
அக்கினியில் விழுங்கள்!
அடியேன் பசித்திருந்தேன்;
ஆகாரம் தரவில்லை!
தாகத்தில் தவித்தேன்;
தண்ணீர் தரவில்லை!
அந்நியனாக நின்றேன்;
ஆதரவு தரவில்லை!
அம்மணமாக நின்றேன்;
ஆடைகள் தரவில்லை!
வியாதியாய் இருந்தேன்;
விசாரிக்க வரவில்லை!

பாதாளச் சிறையில் இருந்தேன்;
பார்க்க வரவில்லை!;

இடப்புற அநீதிமான்கள்
ஏங்கிக் கதறுவர்;

‘‘இவையெல்லாம்
எப்பொழுது செய்யாமலிருந்தோம்
இறைமகனே?

எங்களுக்கு நினைவில்லையே?''
திருமைந்தன்
தீர்ப்பெழுதுவார்;

''என் -
ஏழைச் சகோதரனான
இவர்களில் ஒருவனுக்கு -
எதைச் செய்யவில்லையோ
அதை எனக்கு
அப்போது செய்யாததாகும்!
நியாயத் தீர்ப்பின்படி
நீங்கள் அக்கினிக்கும்;
நீதிமான்கள் -
அரியணைகளிலும்
அமர்த்த ப்படுவர்!

சத்திய நெருப்பில்,
சமுத்திரம் கொதித்தது!
சுதந்திரவானம்
சூரியனை எடுத்துச்
சும்மாடு சுற்றியது!

●

தைலம் பூசியத் தாமரை மலர்!

பூமியின் புஜப்பரப்பில் -
மண் மச்சமாக
‘பெத்தானியா’ கிராமம்!
தொழு நோயாளி சீமோன் -
வேதகாந்த சிகிச்சையால்
விடுதலை பெற்றவன்!

சிங்கத்தின் பாதங்களுக்குச்
சிறிது ஓய்வு தேவை!
சீமோனின் குடிசை
தற்காலிக அரசரவையாகத்
தயாரானது!

வேதவேங்கை ஓய்வெடுப்பது
வீதியெங்கும் -
ஊதுபத்தி புகையாக
ஊடுறுவியது!

திடீரென -
ஈர இளந்தளிராக
இல்லத்தினுள் நுழைந்தவொரு
இளம் பெண் -
தத்துவ பீடபூமியின் தலையில்
தைலத்தை ஊற்றி
தாழ்பணிந்து நின்றாள்!

சினந்த யூதாஸின் விழிகளில்
சில்வண்டுகள் பறந்தன;
‘‘வீண்செலவு எதற்கு?

தைலத்தை விற்று
தரித்திரருக்குத்
தானமாக வழங்கலாமே?''

பொருளாதாரக் கேள்வியை
அருளாதாரப் பதில்
அடக்கியது;

''சிறுபெண்ணை ஏன்
சினந்து கொள்கிறாய்?
நிச்சயம் இவள் புரிந்தது
நேர்த்தியானது!
ஏழைகள் இருப்பார்;
இறை மைந்தன்
என்றும் இரார்!
இவள் -
என் தலையில்
எண்ணெய் ஊற்றியது
அடக்கம் செய்ததின்
அறிகுறியாகும்!

இறை நற்செய்தி
எங்கெங்கு
அறிவிக்கப்படுமோ
அங்கங்கு,
இப்பெண்ணின் காரியமும்
எடுத்துரைக்கப்படும்!

வல்லினம் வாழ்த்தியது;
மெல்லினம் மிதந்தது!

இவளே,
வேசித் தொழிலிலிருந்து
விடுதலை பெற்ற
மகத்லேனா மரியாள் என்பார்கள்!
இயேசுவுக்கு இவள் செய்த
தைல அபிஷேகம்;
அடக்கம் மட்டுமல்ல;
அருட்பொழிவும் கூட!

●

சத்தியத்தீப்பிழம்பும் – சாம்பல் பள்ளத்தாக்கும்!

இரைச்சல்களை ஒலிபெருக்கும்
எருசலேம் திருவிழா!
பார்த்தீனியத்தை மூலிகையாகப்
பரிந்துரைக்கும் மாடங்கள் -
பண்டிகை மும்முரத்தில்
பாதரச ஒப்பனையுடன்
பளபளத்தன!
கிரேக்கர்கள் சிலர் -
விடுதலைச் செங்கதிரின்
விலாசமறிய விரும்பினர்!

பிலிப்பும், அந்திரேயாவும் -
பிரபஞ்சத் தலைவனிடம்
கிரேக்கரின் விருப்பத்தைக்
கிசுகிசுத்தனர்!

'பார்ட்டி' அரசியலை
விரும்பாத -

வானத்தின் தொலைபேசி
வாய்திறந்தது;

''மனித குமாரனின்
மகிமை நிலை
மடை திறந்து விட்டது!
கோதுமை மணி -
விழுந்து இறந்த பின்னரே
வியக்கத்தக்க
விளைச்சல் தரும்!

உயிரை விரும்புகிறவன்
உடனே இழப்பான்!
முதலில் அதை வெறுப்பவன்
முடிவில்லா வாழ்வடைவான்!

எனக்கு ஊழியம் புரிபவன்
என்னைப் பின் தொடரட்டும்!
என் தந்தை அவனை
ஏற்றப்படுத்துவார்!
என் –
ஆன்மதீபம்
அந்தரங்கமாக
அழுகிறது!

''என் பிதாவே!
என்னைக் காப்பாற்றும்! என
இறைஞ்சுவேனா?

இழப்பதற்காகவே
இவ்வுலகில்
இறங்கி வந்தேன்!
எனது பெயரை
என்றும் மகிமைப்படுத்தும்!''
தீயின் விசும்பலில்
திறந்தது வானம்;

''மகிமைப்படுத்தினேன் –
மறுபடியும்
மகிமைப்படுத்துவேன்!

கிடுகிடுத்த கீழ்வான ஒலியில்
மேகங்களும் மிரண்டு ஒதுங்கின!
வீதிகள் –
வியப்பை இனப்பெருக்கம் செய்து
விவாதித்தன;

''இது –
இடி முழக்கம்!''

‘‘தீர்க்கதரிசி இயேசுவுடன் -
தேவதூதன் பேசினான்!’’

அலைபாய்ந்த மந்தையை
அமர்த்தியது -
உலக மேய்ப்பனின்
உரத்தக் குரல்;

‘‘இச்சப்தம் -
என் நிமித்தம் எழாமல்,
உங்கள் நிமித்தமே
உண்டானது!’’

சற்று நிறுத்தி -
தூரிகை நாவு
தொடர்ந்து வரைந்தது;

‘‘இனி பூமிக்கு -
நியாயத் தீர்ப்பின்
நேரம் நெருங்கிவிட்டது!
பூமியின் தலைவன்
புறம்பே தள்ளப்படுவான்!

ஆகாயம் ஏறியபின்
அனைத்து ஆடுகளையும்
அரவணைத்துக் கொள்வேன்!’’

மரணத்தின் சமிக்கையை
சூசகமாக விதைத்தது
சூரிய நிலம்!

நெய்தல் நிலத்தின்
நினைவலைகளை -
கட்டு மரங்களால்
கைது செய்ய இயலவில்லை;

‘‘என்றும் கிறிஸ்துவுள்ளார் என -
இறைநூல் கூறுகிறது!
அவ்வாறு இருக்க
ஆகாயம் ஏறிச்செல்வேன் என
அறிவிக்கிறீரே?’’

நிஜத்தைக் கூறும்,
நீர் யார்?’’

அப்பத்தைப் பிட்ட
அன்னையின் கரங்கள் -
இதயத்தைப் பிட்டு
ஏந்தியது;

‘‘குறைந்த காலமே -
ஒளி,
உங்களோடு உலவும்!
இருளை விலக்கி
ஒளியைத் தொடருங்கள்!
வக்கிர இருளில் நடப்பவன்
வழியறியாமல் வாடுவான்!
நீங்கள் -
வெளிச்சத்தின் வித்துக்கள்;
உணர்ந்து அதன்படி
உலவுங்கள்!’’

வானத்தை கவசமாக அணிந்த
வசந்த பூமி -
புனிதப் போருக்குப்
புறப்பட்டது!
விடியலின் மதிற்சுவரில் -
விண்ணுக்கும்
மண்ணுக்குமிடையே,
விடுதலைப் போர்பறை
வெடித்து முரசரடித்தது!

●

பாகம் – 5

இலையுதிர் காலம்!

(இருளும் – ஒளியும்

கருவறையில் படர்ந்தக் கள்ளிச்செடி!

இருட்டு இரவு -
பகலைப் புசிக்க
பந்தி விரித்தது!
உலகத்தின் விழிகளில்
உயிர் சொட்டியது;

''பாஸ்கா திருவிழாவுக்கு
இன்னும் -
இருதினங்கள்
இருக்கின்றன!
அன்று மனிதகுமாரன்
சிலுவையில் அறையப்படச்
சிறையெடுக்கப்படுவார்!

தேனடையில் -
திராவகம் சொட்டியது!
இறையடியர்களின்
இதயங்கள் -
எரிநட்சத்திரங்களாக
மோதிக் கொண்டன!

தவித்த குஞ்சுகளை
தாய்பறவைத்
தழுவிக் கொண்டது!

மறுபுறம்...
மரணத்தின் மர்மநாவு,
எச்சில் வழிய
ஏங்கிக் கொண்டிருந்தது!

தலைமை ஆசாரியரும்
தத்துவ ஞானிகளும் -
'காய்பா'வின் புற்றில்
கருநாக விஷத்தைக்
கக்கிக் கொண்டிருந்தனர்!

பாஸ்காத் திருவிழாவின்
பரபரப்பில் -
சுடுசூரியனைக் கைது செய்ய
சூழ்ச்சி பிறந்தது
துப்பாக்கி தயார்;
தோட்டா யார்?

குறுக்கு முதலைகள்
கொழுத்த கொக்குகளுக்கு
குறிவைத்த போது -
வெள்ளி மீனுக்காக,
இருளில் முக்காடு போட்டு
ஏமாளிக் கொக்கும்
ஏரிக்கு வந்தது!

●

யூதாஸ் காரியோத்து!
விசும்பு நிலத்தில் விளைந்த
விஷக் களை!
தாய்பாலில் கலந்த
கள்ளிப்பால்!
மகத்துவ மண்ணின்
மார்பகப் புற்றுநோய்!

நந்தவனத்தில் முளைத்த
நச்சுக் காளான்!
நீதியின் -
அடிமடியில் கைவைத்த
அநீதி!

அந்தரங்க அரிதாரத்தை -
முதலைகளின் குளத்தில்
முகம் கழுவினான் யூதாஸ்;

''கர்த்தர் இயேசுவைக்
காட்டிக் கொடுக்கிறேன்!
என்ன தருவீர்
எனக்கு?''
இறுகியகுரல்
இரவையும் அச்சுறுத்தியது!

மின்னும் விழிகளில்
மிருகத்தின் பிம்பம்!

துவேஷத்தூண்டில்கள்
துருப்புச்சீட்டை விடுமா?

முப்பது வெள்ளிக்காசுகள் -
கருப்பு வியாபாரமாகக்
கைமாறின!

அதுவொரு -
அடிமையின் விலை!

பருகிய தாய்மடியை
பற்களால் கடித்த
பச்சோந்தி யூதாஸ் -
காலத்தின் அடிக்குறிப்பில்
கரும்புள்ளி எச்சமானான்!

கோதுமை வயலில்
துப்பாக்கி ரவைமுளைத்தத்
துயரமிது!

பிராண வாயுவைப்
பிடித்துக் கொடுக்க -
கரியமிலவாயு
கரைந்து மறைந்தது!

இரவின் மௌனம்
இரத்தம் வடித்தது!

●

பகிர்ந்தளிக்கப்படும் பரிசுத்த நிலம்!

நயவஞ்சக நரி
ஆடுகளின் முன் -
அப்பாவி முகமூடி
அணிந்து கொண்டது!

பாஸ்காத் திருவிழா
பாதையெங்கும் -
நெருஞ்சிமுட்களைப் பரப்பி
நெருங்கியது!

பேதுருவையும்
யோவானையும் -
ஆதி வேதம்
அடைத்தது;

''பாஸ்காவை உண்ணும்படி
பந்தி அமையுங்கள்!

''இடம் எங்கே
ஆண்டவரே?''

இறைமாடத்தின்
எழுச்சிப்பாடல் -
எடுத்தியம்பியது;

‘‘ஊருக்குள் ஊடுருவினால் -
தண்ணீர் குடத்துடன் ஒருவன்
தட்டுப்படுவான்!
அவனுடன் சென்று -
அவன்
வீட்டுத் தலைவனிடம்
வினவுங்கள்;

‘‘இயேசு தம் சீடரோடு
பாஸ்கா உண்ண
பந்திக்கான இடம் எது?’’

அவன் -
வீட்டின் மேல் தளத்தில்
கம்பளம் விரிக்கப்பட்ட அறையைக்
காட்டுவான்!

பாஸ்காவை அங்கு
பரிமாற ஏற்பாடு செய்யுங்கள்!’’

ஊரின் உள்ளுக்குள்
நெருப்பு நெய்மீன்கள்
நீந்திச் சென்றன!
நிழற்படம் -
நிஜதரிசனமானது!

●

கண்களுக்குச் சிக்காத
கருப்பு முட்டை -
நிலவை குஞ்சு பொரித்தது!

இரவின் கூதல்
இருதயத்தைத் தாலாட்டியது!

உணவு மேஜையைச் சுற்றி -
உலகின் தேகத்தில்
ஊற்றெடுத்த ஊருணிகள்;
நடுவில் ‘நாயகரா’!

உறைந்துகிடந்த நிமிடங்கள்
உயிர்த்தெழ -
தாழ்மையின் தாய்மொழி
தன் அங்கியைக் களைந்தது!
இடுப்பில் ஒரு துண்டு கட்டி -
தண்ணீர் பாத்திரத்தை ஏந்தியது
தத்துவ வானம்!

கனவுகளை உயிர்ப்பிக்க
கல்லிலும், முள்ளிலும் -
அடிச்சுவடு பதித்த
அடியார்களின் பாதங்களை
அலசத்துவங்கியது
ஆன்மீக அருணோதயம்!

அடியார்கள் -
அதிர்ச்சிப்புயலில்
ஆலமர இலைகளாயினர்!
சீமோன் பேதுருவின்
விழிகளில் -
சங்கட உணர்வு
சறுக்கு விளையாடியது;

‘‘அடியேனின் பாதங்களை
ஆண்டவர் கழுவுவதா?’’

ஆச்சரியங்களின் அடைப்புக்குறி -
பணிவிடை புரிந்தபடியே
பதிலுரைத்தது;

‘‘அடியேன் செய்வதை
அறியவில்லை நீ;
அடுத்து அறிவாய்!’’

சீமோன் பேதுருவின்
சிந்தனைச் சுனையில் –
குரு பக்தி கொப்பளித்தது;

‘‘ஆண்டவரே!
அடியேனின் பாதங்களை
நிச்சயமாக
நீர்கழுவக்கூடாது!’’

துள்ளிய வார்த்தைகளை
கிள்ளி எறிந்தது
கிரண விரல்கள்;

‘‘உன் –
பாதங்களை கழுவாவிடில்,
உனக்கும் எனக்கும்
ஒருபந்தமுமில்லை!’’

உயிருக்கும், உடலுக்கும்,
உறவு அறுந்து போவதா?
அச்சமுற்றக் குழந்தை
அன்னையிடம் தாவியது;

‘‘அப்படி எனில்
ஆண்டவரே!
பாதங்களை மட்டுமல்ல –
கரங்களையும், சிரசையும்,
கழுவிவிடும்!’’

முக்தி உதடுகள்
முறுவலித்தன;

‘‘திருமுழுக்குப் பெற்றவனுக்குத்
தேவையில்லை!
தன் பாதங்களை மட்டும்
தண்ணீரால் கழுவினால் போதும்!
மற்றபடி அவன்
மாசற்றவன்!

மாணவர்கள் நீங்கள்
மாசற்றவர்கள்!
ஆயினும் -
அன்பு மாணவர்கள்
அனைவருமல்ல!’’

வார்த்தைகளில் ஊடுறுவும்
வைர ஊசியை -
அறியவில்லை
அடியார்கள்!

பாதங்களைக் கழுவிவிடும்
பணிமுடிந்து -
ஆடைகளை அணிந்து
அமர்ந்தது சுகந்தம்!

கண்களை மூடியிருந்த
கற்பாறைகள் -
இறைசெய்தியில்
வார்த்தைச் சிற்பங்களாக
வடிந்தன!

‘‘நான் -
உங்களுக்குச் செய்ததை
உணர்ந்தீர்களா?
என்னை நீங்கள் -
‘போதகர்’ என்றும்
ஆண்டவர் என்றும்
அழைப்பது சரியே!

ஆண்டவரும், போதகருமாகிய
அடியேன் உங்களது -
பாதங்களைக் கழுவி
பணிவிடை புரிந்தது போல் -
நீங்களும் ஒருவருக்கொருவர்
பாதங்களைக் கழுவி
பணிவிடை புரிவீராக!
நான் -
உங்களுக்குச் செய்ததுபோல்

நீங்கள் -
மற்றவர்களுக்குச் செய்ய
'மாதிரி' காட்டினேன்!

உண்மையாக உங்களுக்கு
உரைக்கிறேன்;
வேலைக்காரன் -
தன் தலைவனிலும்
தகுதி மிகுந்தவனல்ல!
அனுப்பப்பட்டவன் -
அனுப்பியவரை விட
அந்தஸ்து உள்ளவனல்ல!
இந்த -
உண்மையை
உணருபவன் பாக்கியவான்!

அனைவரையும் குறித்து
அறிவிக்கவில்லை!
அனைவரின் ஆழத்தையும்
அடியேன் அறிவேன்!

இறைவாக்கு அரங்கேற -
அடியேனுடன்
அப்பம் உண்பவனே,

என் மீது தன்
குதிகாலை தூக்குவான்!
என் மீது -
நம்பிக்கை வைக்கும்படியே
நடப்பதற்குமுன்
நான் இதைக் கூறினேன்!
நான் -
அனுப்புகிறவனை ஏற்கிறவன்
என்னை ஏற்கிறான்;
என்னை ஏற்கிறவன்
என்னை அனுப்பியவரை
ஏற்கிறான்!''

அடுத்த சில நிமிடங்கள்
அக்கினியில் -
ஜதி அமைத்தன!

அமைதியின் தலையில்
'ஹைட்ரஜன்' குண்டு விழுந்தது;

''இங்கு -
இருப்பவரில் ஒருவன்,
கயவருக்கு என்னைக்
காட்டிக் கொடுப்பான் என
உண்மையாகவே
உரைக்கிறேன்!''

தீப்பந்தம் விழுந்த
தேன்கூட்டில் -
தேனீக்கள் பரபரத்தன;

''ஆண்டவரே;
அவன் யார்?''

''அப்பத்தை -
திராட்சை ரசத்தில் தோய்த்து
அன்புடன் எவருக்கு
அளிக்கிறேனோ,
அவன்தான்!''

அன்னையின் கரங்கள்
அப்பத்தை அடையாள அட்டையாக்கி -
காசாளன் யூதாஸின்
கருப்புக் கரங்களில் திணித்தது!

''செய்வதை
சீக்கிரம் செய்!''

தத்துவத் தணலை
தாங்கவியலாமல் -
தாழம்பூ நாகம்
தலைகுனிந்து வெளியேறியது!

அடியார்களின் விழிகளில்
அமிலமழை!

இரவை விட
முகம் கருத்த யூதாஸின் -
நச்சு இருதயத்திற்கு
நகம் முளைத்தது!

●

தீமழையின் நடுவில் தேன்மழை!

அது -
'புறம்போக்கு' பூமிக்கு
'பட்டா' வழங்கிய
பரிசுத்த நிகழ்வு!
மானுடத்தின் -
பிச்சைப் பாத்திரத்தில் விழுந்த
தங்கக் காசு!
கனவு மோட்சம் -
கைப்பட எழுதிய
கவிதைக் கடிதம்!

'ஹைக்கூ' விரல்கள்
அப்பத்தைப் பிட்டு
அவைகளை ஆசீர்வதித்து
அடியார்களுக்கு வழங்கின;

''இதை -
ஒற்றுமையுடன் வாங்கி
உண்ணுங்கள்;
இது என்னுடைய
உன்னத உடல்!''
பின் -
பாதிரிப்பூ மரம்,
பழரசப் பாத்திரத்தை ஏந்தி

பரமபிதாவைப் புகழ்ந்து
பரிமாறியது;

''இதை -
அன்புடன் அருந்துங்கள்!
பழரசமல்ல இது;
பாவமன்னிப்புகளுக்காக
பலருக்கும் சிந்தப்படும்
உன்னத ஒப்பந்தம்;
என்
உடல் ரத்தம்!
இனி இந்தப் -
பழரசத்தை உங்களோடு
பரமத் தந்தையின் அருகில்
பந்தியில் அமரும் வரைப்
பருக மாட்டேன்!''

சத்தியவானத்தின்
சமபந்தி இது!

உலகிற்கும் வானுக்கும்
உண்டான
உடன்படிக்கை அது!

வசந்த வானம்
வக்கிர பூமியின் -
ரணங்களுக்குத் தந்த
ரத்ததானம் இது!

●

இறைதோழர்களின்
இதயக் கிண்ணங்கள் திருவிருந்தின் தித்திப்பில்
திளைத்து வழிந்தன!

●

விடைபெறும் வேதாந்த வெண்ணிலவு!

அந்த காரத்தின் -
அகழிவாய் பிளந்தது!

வேதவானம்
விடியல்களை -
உலகின் தலையில்
அடித்துத் துவைத்து
அலசியது;

''வானத் தந்தை -
மனித குமாரனை
மகிமைப்படுத்துகிறார்!

எனது புத்திரர்களே!
இன்னும் சிறிது காலமே
இங்கு இருப்பேன்!
பின் -
என்னைத் தேடுவீர்கள்!
எனது இடத்திற்கு
எவரும் வர இயலாது!

இதயங்கள் சிதறாமல் -
என்னிடத்திலும்,
இறைதந்தையிடமும்
என்றும் பற்றுமையாக இருங்கள்!

உன்தைப் பிதாவின்
உயர்ந்த இல்லத்தில் -
உறைவிடங்கள் பல
உள்ளன!

உங்களுக்கான ஓரிடத்தை -
ஆயத்தம் செய்தபின்
அனைவரையும் அழைப்பேன்!
நான் -
வசிக்கும் இடத்தையும்
வழியையும் அறிவீர்கள்!

தோமாவின் உதடு
தூளி கட்டியது;

''ஆண்ட வரே! - நீர்
செல்லும் இடத்தைச்
சிறிதும் அறியோம்!
பிறகு எவ்வாறு
பின் தொடர்வது?

ஒளிவருடத்தின்
திருநாட்காட்டி,
தேதிகளைக் கிழித்தது;

''வழியும், சத்தியமும்,
வாழ்வும் அடியேனே!
என் வழியல்லாமல்
எவனும் அவரிடத்தில்
ஏறிவர இயலாது!
அவரை நீங்கள்
அறிந்திருக்கிறீர்கள்!

பிலிப்புவின் -
பேதை இதயம்
பெருமூச்சு விட்டது;

''ஆண்டவரே!
ஆகாயத் தந்தையை
அறிமுகப்படுத்தும்!
அது போதும்!''

நிசப்தவானம்
நிமிர்ந்தது;

''பிலிப்புவே!
உன்னருகிலிருந்தும் என்னை
உணரவில்லையா?
என்னைத் தரிசித்தவன்
என் பிதாவை தரிசிக்கிறான்!
ஏன் இவ்வாறு
வினவுகிறாய்?
நான் பிதாவிலும்
பிதா என்னிலும் -
பிணைந்திருப்பதை
நம்பவில்லையா?

எனது அறிவுரைகள்
என்னுடையவை அல்ல;
இறை தந்தையே
என்னுள் இயங்குகிறார்!
என் -
நற்செயல் குறித்தாயினும்
நம்புங்கள்!

உண்மையாக உங்களுக்கு
உரைக்கிறேன்;
என் -
பிதாவிடத்தில் நான்
பிணைந்திருப்பதால் -
என்னை விசுவாசிக்கிறவன்
என்னிலும் பெரியவைகளை
எளிதில் புரிவான்!

எனது பெயரில் -
எதை விரும்பினாலும்
அதை வழங்குவேன்!
என்மீது அன்பு கூர்ந்தால்
எனது கட்டளைகளை
என்றும் கை கொள்ளுங்கள்!

பிதாவிடம் நான்
பிரார்த்தனை செய்வேன்!
அவர் -
மண்ணில் நிலைக்கும்
மற்றொரு மகிமையானவரை
மனமகிழ்ந்து தருவார்!
அந்த -
மகிமையானவர்
மறைந்திருப்பதால்
உலகம் அவரை
உணராது!

அவரை நீங்கள்
அறிவீர்கள்!

உங்களோடும் -
உங்களுக்குள்ளும் அவர்
உலவுகிறார்!
என் -
திருமைந்தர்களை
திக்கற்றவர்களாக
திரியவிட மாட்டேன்;
திரும்ப வருவேன்!

இன்னும் சிறிது காலத்தில்
இவ்வுலகம் எனக் காணாது!

என்னுள் -
உண்மையாக வாழும்
நீங்கள் எனை
உணருவீர்கள்!

நான் பிதாவிலும்
பிதா என்னிலும்
உங்களில் நானுமிருப்பதை -
உன்னத நாளில்
உணருவீர்கள்!

என் கட்டளைகளைக்
கை கொள்கிறவன் -
என்னிலும், என் பிதாவிலும்
என்றும் அன்பு கூர்வான்!

அவனில் நானும்
அன்பு செலுத்தி -
அவனுக்கு என்னை
அறிமுகப்படுத்துவேன்!''

வேறொரு யூதாஸ்
வினா தொடுத்தான்;

''ஆண்டவரே!
உம்மை நீர்
உலகுக்கு அறிமுகப்படுத்தாமல் -
எமக்கு அறிமுகப்படுத்துவதின்
இறைபொருள் என்ன?

பாமர நீதிமன்றம்
பதில் வழங்கியது;

''என்னில் அன்பு கூர்ந்து
என் வசனங்களைப் பற்றினால் -
அவனில் என் தந்தை
அன்பு செலுத்துவார்!

இருவரும் அவன்
இருதயத்தில் குடிபெயறுவோம்!

என்னில் அன்பில்லாதன்
என் வசனங்களை
எடுத்தாளமாட்டான்!

என் -
பிதாவின் வசனத்தையே
பேசுகிறேன்!
உங்களுடன் தங்கி
உபதேசித்தேன்!

ஆகாயத் தந்தையனுப்பும்
மற்றொரு மகிமையானவர் -
நான்,
உபதேசித்தவைகளை மீண்டும்
உணர்த்துவார்!

சமாதானத்தை உங்களுக்குச்
சமர்ப்பிக்கிறேன்!

இன்றுநான் வழங்கும் -
உன்னத சமாதானம்
உலக சமாதானம் போலல்ல!

இனி உங்கள்
இருதயங்கள் -
இருளாமலும்
கலங்காமலும்
இருப்பதாக!

நான் -
வருவதும், போவதும் குறித்து
வாக்குரைக்கக் கேட்டீர்கள்!

பிதாவின் அரசில் நான்
பிரவேசிப்பதைக் கண்டு
அன்பு கொண்டவர்
அகமகிழ்வர்!
ஏனெனில் -
என் பிதா
என்னிலும் பெரியவர்!

இவை -
நிறைவேறும் போது
நீங்கள் விசுவாசிக்க -
இவற்றை முன்னரே
எடுத்துரைத்தேன்!
அடியேன் இனி
அதிகமாகப் பேசப்போவதில்லை!
சாத்தான் -
சந்திக்க வருகிறான்!
என்னிடத்தில் அவனுக்கு
எவ்வுரிமையும் இல்லை!
இறை தந்தையின் மீது
என் அன்பு குறித்தும் -
உன்னதமானவரின்
உத்தரவு குறித்தும் -
உலகம் அதிசயிக்க
உரைப்பது நிகழும்!

உங்கள் போதகராகி நானே -
உண்மையானத்
திராட்சைக் கொடி;
திருத்தந்தை
திராட்சைத் தோட்டக்காரர்!
கனியில்லாக் கொடிகளை
அவரது -
கரங்கள் தறிக்கும்!

கனியுள்ளக் கொடிகள் –
இன்னும் ஏராளமான
கனிகள் தரும்படி,
கடவுளின் கரங்கள்
கழிவுகளை துப்புரவு செய்யும்!

எனது போதனையில்
இப்பொழுது நீங்கள்
இதயத் துப்புரவாகி விட்டீர்கள்!

நான் உங்களில்
நிலைத்திருப்பது போல –
நீங்களும் என்னில்
நிலைத்திருங்கள்!

திராட்சைக் கொடி,
செடியுடன் சேர்ந்து நிற்காமல்
தானாகக் கனிகள்
தராது!
என்னில் நிலைக்காமல்
என்றும் கனிதர
இயலாது!
நான் –
திராட்சை செடி;
நீங்கள் கொடிகள்!
என் –
தத்துவத்தில் நிலைத்திராதவன்
தறிக்கப்பட்ட கொடிகளாய்
தரையில் எறியப்படுவான்!
அறுக்கப்பட்ட கொடிகள்
அக்கினியில் எரிக்கப்படும்!

அதிகமாகக் கனிதருவதின் மூலம் –
ஆகாயத் தந்தையின்
ஆற்றலை அறிவிப்பீர்கள்!
என்னையும் –

தந்தையின் தத்துவங்களையும்
தரித்து வாழ்ந்தால் -
என்,
நித்திய அன்பில்
நிலைப்பீர்!
என் -
மகிழ்ச்சி உங்களுக்குள்
மடை திறக்கவே -
இவைகளை உங்களுக்கு
எடுத்துரைத்தேன்!
ஒருவருக்கொருவர்
அன்பு செலுத்துங்கள்!
இதுவே நான் -
உங்களுக்கு உரைக்கும்
உன்னத நெறி!

உற்றநண்பனுக்காக
உயிரை வழங்கும்
ஒப்பற்ற அன்பை விட,
உலகில் உயர்ந்த அன்பு
ஒன்றுமில்லை!
நான் -
விரும்பியதைச் செய்வதால்
நீங்கள் -
வேலையாட்கள் அல்ல
அடியேனின்
அன்புத் தோழர்கள்!
வீட்டுத் தலைவனது காரியங்களை
வேலையாள் அறியான்!

அடியேன் -
ஆகாயப் பிதா
அறிவித்தவைகளை
அறிவித்து விட்டேன்!

உங்களை -
நித்திய கனி கொடுக்கவே
நியமித்திருக்கிறேன்!

என்னை நீங்களல்ல -
உங்களை நானே
உணர்ந்தழைத்தேன்!

எனது பெயரால் -
விண்ணகத் தந்தையிடம்
வேண்டுவதை அருளுவேன்!

உலகம் -
உங்களைப் பகைக்கும் முன்
என்னைப் பகைத்தது
என்பதைவுணருங்கள்!

நீங்கள் -
உலகுக்கு
உரிமையானவரெனில் -
உலகம்,
தனக்குரியவைகளைத்
தழுவிக் கொள்ளும்!

உலகுக்கு
உரிமையில்லாமல்
உங்களைத் தேர்ந்தெடுத்ததால் -
உலகம்,
உங்களைப் பகைக்கிறது!

''வேலைக்காரன் -
வீட்டுத் தலைவனை விட
பெரியவனல்ல!'' - என
முன்பு மொழிந்ததை
நினைவில் நிறுத்துங்கள்!

என்னைத் துன்புறுத்தினால்
உங்களையும் துன்புறுத்துவர்!
எனது -
உபதேசங்களை உணர்ந்தால்
உங்களது உபதேசங்களையும்
உணருவர்!
என் பொருட்டே
உங்களையும் இவ்வுலகம்
உணரும்!
அவர்கள் -
என்னை அனுப்பியவரை
இனம் காணவில்லை!
நான் -
இறங்கி வந்து
இவைகளைப் போதிக்காவிடில் -
அதிக பாவங்கள்
அவர்களை தலைகளை
அழுத்தியிருக்காது!
இனி அவர்களது
இருண்ட பாவங்களுக்கு
எந்தவிதச் சமாதானங்களும்
எடுத்துக்கூற இயலாது!

என்னைப் பகைக்கிறவன்
என் தந்தையைப் பகைக்கிறான்!
அற்புதங்கள் புரிந்ததாலேயே
அவர்கள் -
என்னையும், தந்தையையும்
எதிர்க்கிறார்கள்!

''எந்தக் காரணமுமன்றி
என்னை எதிர்த்தனர்!'' - எனும்,
நீதி நூலின் தரிசனம்
நிறைவேறியது!

ஆகாயத் தந்தை -
மண்ணுக்கு அனுப்பும்
மற்றொரு மகிமையாளன்,
மனிதகுமாரனைக் குறித்து
மக்களுக்கு சாட்சிதருவார்!

ஆதிமுதல்
அடியேனைத் தொடர்வதால் -
நீங்களும் என்னைக் குறித்த
நித்திய சாட்சி தருவீர்கள்!

விசுவாசத்திலிருந்து நீங்கள்
விலகாதபடியே இதை
விளக்கினேன்!

வேத கூடங்களிலிருந்து
விலக்கி உங்களை -
குற்றச்சாட்டுகள் கூறி
கொலை செய்யும் எவனும்
இறைவனுக்கு -
நன்மை புரிந்ததாக
நம்பும் காலம் வரும்!

என்னையும், தந்தையையும்
இனங்காணாததால்
இவ்வாறு செய்கின்றனர்!

அக்காலம் வரும்போது
அறிவீர்!

எனது தந்தையிடம்
ஏறிச் செல்கிறேன்!
'எங்கே?' - என
எவனும் விசாரிக்கவில்லை!
எனது -
வாக்கை அறிந்து
வருத்தமடைந்திருக்கின்றன
உங்களது உள்ளங்கள்!

உண்மையாகவே உங்களுக்கு
உரைக்கிறேன்;
நான் செல்வது
நன்மையே!
நான் செல்லாவிடில்:
மற்றொரு மகிமையாளன்
மண்ணுக்கு வரமாட்டார்!

ஆகாயம் சென்றபின்
அவரை அனுப்புவேன்!
அவர் -
நித்திய நீதியையும்
நியாயத் தீர்ப்பையும் -
உலகுக்கு உணர்த்துவார்!
என்னை அவர்கள்
ஏற்றுக் கொள்ளாததால்
எழுந்த பாவத்தையும் -
அடியேன் -
ஆகாயம் செல்வதால்
ஆகாயத் தந்தையின்
அற்புத நீதி குறித்தும் -
சத்தியத்தைச் சூறையாடிய,
சாத்தானின்
சதிகாரத் தீர்ப்பு குறித்தும்
உலகுக்கு அவர்
உணர்த்த வருவார்!

இன்னும் உபதேசிக்க வேண்டியது
ஏராளம் உண்டு!

இப்பொழுது அவைகளை
எடுத்துரைத்தால் -
இதயம் தாங்காது!

உங்கள் மீது -
நித்திய ஆவியானவர் இறங்கி
நீதியின் வழி நடத்துவார்!
அவர் -
தனது தத்துவங்களை அல்ல;
தந்தையிடமிருந்து
எனக்குரியவைகளை
எடுத்துரைப்பார்!

என் தந்தையுடையது
என்னுடையது;
எனவே -
இப்படிக் கூறினேன்!

இன்னும் சிறிது காலம் சென்று -
எனைக் காண மாட்டீர்;
பிறகு என்னைப்
பிரகாசமாகக் காண்பீர்!''

எதிர்மறையான உரையில் -
ஈர்ப்பு விசையில் குழம்பினர்
இறை தோழர்கள்!
வேதியல் உபகரணம்
விளக்கியது;

''என் -
இறுதி உரைக்கு
ஏன் குழம்புகிறீர்!
உறுதியாக உரைக்கிறேன்;
அடியார்கள் நீங்கள்
அழுது புலம்புவீர்கள்!

உலகம் உற்சாகமாயிருக்கும்!

உங்கள் -
மனத்துயரம்
மகிழ்ச்சியாக மாறும்!

பிரசவத்தின் போது
தாய்,
தாங்கவியலாத வலியில்
தணலில் துடிக்கிறாள்!
பின் -
ஈன்ற குழந்தையைக் கண்டு
எல்லாம் மறக்கிறாள்!
அதுபோல் நீங்கள் -
மனத்துயரங்கொண்டு -
மறுபடியும்,
மனிதக் குமாரனைக் கண்டு
மகிழ்ச்சியடைவீர்கள்!

அந்த -
உன்னத மகிழ்ச்சியை
ஒருவனும் உங்களிடமிருந்து
பறிக்க இயலாது!

அந்நாளில் -
அடியேனிடம் எவரும்
கேள்வி கேட்க மாட்டீர்கள்!

விண்ணகத் தந்தையை
வேண்டினால் -
விரும்பியதைத் தருவார்!

என் பெயரில் -
எதுவும் நீங்கள்
இதுவரை கேட்கவில்லை!
கேளுங்கள்;
தரப்படும்!
மட்டில்லா,
மகிழச்சியடைவீர்கள்!''

இயற்கையின் அஸ்திவாரங்களில்
இடியின் வேர்கள் இறங்கின!
நெற்றியில் வழிந்த
நட்சத்திர வேர்வையை -
வானம் வழித்தெறிந்தது!

●

பூமியை ஜெயித்த புதுக்கவிதை!

மோதும் அலைகளுக்கு -
முற்றுப்புள்ளி வைக்க
முடியவில்லை!

நீதிமழையில்
நெருப்புக்கும் காய்ச்சல் வந்தது;

''உவமைகளால்
உங்களுடன் உரையாடினேன்!
பின்னொரு காலம்
பிரவேசிக்கும் -
அன்று,
விண்ணகத் தந்தை குறித்து
வெளிப்படையாகப் பேசுவேன்!
என் பெயரால்
எதை வேண்டினீர்களோ -
அதை -
உங்கள் பெயர்களால்
உன்னதப் பிதாவிடம்
உரிமையுடன் வேண்டுவேன்!
நான் -
ஆதிப்பிதாவின்
அன்னை மடியிலிருந்து வந்ததால்,

அடியேன் மீது
அன்பு செலுத்தும் -
அடியார்கள் மீதும் அவர்
அன்பு செலுத்துகிறார்!

பிதாவிடமிருந்து வந்தேன்;
பிதாவிடமே செல்கிறேன்!''

விழுது மின்னல்கள்
வியந்தன!

''இதோ இப்பொழுது -
உவமையில்லாமல்,
உரையாடுகிறார்!
அடியார்கள் எவருக்கும்
ஐயமில்லை!
நீர் -
வேதபிதாவின்
வித்து என
விசுவாசிக்கிறோம்!''

மஞ்சள் தூவானம்
மறுமொழி தந்தது;

''இப்பொழுது என்னை -
விசுவாசிக்கும் நீங்கள்
வேளைவரும் பொழுது
விலகிச் சிதறுவீர்கள்!

அவரவர் -
தன்னைத் தற்காத்து
என்னைத்
தனியேவிடும்
தகாதநேரம் வரும்!
தனித்திருந்தாலும் நான்
தனித்திரேன்!

பிதா என்னுடன்
பிணைந்திருக்கிறார்!

அடியார்கள் நீங்கள்
ஆறுதலடையும் படி இதை
அறிவித்தேன்!

உலகில் உங்களுக்கு
உபத்திரவங்கள் உண்டு!

அவைகளை வெல்ல
ஆற்றல் கொள்ளுங்கள்!

இதோ!

புனித வல்லமையால் நான்
பூமியை வென்றேன்!

எஃகுத் தாமரைகள் -
இதயங்கள் பூத்தன!

●

விழுதுகளின் விசுவாசம்!

புல்லாங்குழலின் கழுத்துக்கு
கோடரிகள் குறிவைத்தன!
சூரியன் -
தீக்குச்சியாகத்
தேகம் மெலிந்தது!
‘கோலார் தங்க வயலின்
தங்க அரிசிகள்
தரையில் சிந்தின;

‘‘மேய்ப்பனை வெட்டுவேன்;
ஆட்டு மந்தை
சிதறடிக்கப்படும் என
செய்திவுள்ளது!
இன்றிரவு
அடியேனின் பொருட்டு
அனைவரும் சிதறுவர்!

உயிர்த்தெழுதலுக்குப் பின்
உங்களுக்கு முன் -
கலிலேயாவில் நான்
காலடி வைப்பேன்!’’

பீறிட்டு வெடித்தான்
பேதுரு;
‘‘எல்லோரும் உம்பொருட்டு
இடறி விழுந்தாலும்;

தலை சிதறினாலும்
தங்களை நான்
தவறவிடமாட்டேன்!
எங்கே செல்கிறீர்?
எனக்குக் கூறும்!’’
அடிமைகளின் விடுதலை
அமர்த்தியது;

‘‘என்பின் இப்பொழுது
எவரும் வரவியலாது!
பிறகு என்னைப்
பின் தொடருவாய்!’’

மார்தட்டினான்
மாணவன் பேதுரு!
வெளியேறிய வார்த்தைகள்
வீரத்தை புழுதி கிளப்பின;

‘‘உமக்காக நான்
உயிரையும் தருவேன்;
உண்மையைக் கூறும்!

நீதி நிரூபம்
நெருப்பு வசனத்திற்கு
நெகிழவில்லை;
நடக்கப்போகும்
நாடகம் எண்ணி
நகைத்தது;

‘‘இன்றிரவு கழிந்து -
சேவல் கூவும் முன்

உன்
சிந்தனை தாவும்!
என்னை -
முதலில் நீயே
மூன்றுமுறை மறுதலிப்பாய் என் -
உண்மையாக உனக்கு
உரைக்கிறேன்!

மாணவ விழுதுகள்
மசியவில்லை!

''ஆண்டவரே!
உம்மோடு இறந்தாலும்
உம்மை மறுதலியேன்!''

பூமியின் உதட்டில்
புன்னகை வானவில்!

●

ஆகாயம் சிந்திய அக்கினி முத்துக்கள்!

அந்திவானத்தில்
அரளிகள் பூத்தன!

பூமிக்கும், வானுக்குமிடையே
புரண்டு சுழன்றது
புயல்!

பரிசுத்தப் பெருங்கடல்
பரமத் தந்தையின்
பாதங்களைத் தொழுதது;

''நித்திய தந்தையே
நேரம் நெருங்கிவிட்டது!
உம்முடைய மகிமையை
உணர்த்தும் வண்ணம் -
அடியேனின் மகிமையை
அனைவருக்கும் அறிவியும்!
ஏனெனில் -
மனிதகுமாரனின்
மக்களுக்கு,
உண்மை வாழ்வின்
உன்னதத்தை உணர்த்தினீர்!
உம்மையும், என்னையும்
உணர்ந்து கொள்வதே -
மேன்மையான
மெய்வாழ்வு!

நீர் –
அடியேனுக்கு ஈந்த
ஆற்றுப்பணியின் மூலம் –
உமது வல்லமையை
உலகுக்கு உணர்த்தினேன்!

தத்துவத் தந்தையே!
பிரபஞ்சம் –
பிரசவமாவதற்கு முன்
உம்மில் எனக்கிருந்த
உன்னத மகிமையை
இன்று எனக்கு –
ஈந்தருளும்!''

சிவப்புப் பால்வீதி –
சீடர்களுக்காக
கண்ணீரையல்ல;
கண்களையே சிந்துகிறது;

''ஆதிபிதாவே!
இந்த –
மண்ணிலிருந்து
மக்களைத் தேர்ந்தெடுத்து
மனிதகுமாரனிடம் ஒப்படைத்தீர்!
தேர்ந்தெடுக்கப்பட்டவரிடம்
உம் திருப்பெயரை உச்சரித்தேன்!

உம்முடையவர்களை
எம்மிடம் ஒப்படைத்தீர்!
அவர்கள் –
என் வார்த்தைகளை
என்றும் கடை பிடித்தனர்!
எனக்கு நீர்
ஈந்த சக்தி –
உம்முடையது என
உணர்ந்திருக்கின்றனர்!

உமது -
அற்புத வசனங்களை
அடியார்களுக்கு
அருளினேன்!
அவர்களும் அவற்றை
ஆமோதித்து
அணிந்து கொண்டனர்!
என்னை நீர்
இம்மண்ணுக்கு
இறக்கியதை உணர்ந்து -
இவர்கள் என்னை
இன்முகத்துடன்
ஏற்றுக் கொண்டனர்!

உலகத்திற்காக அல்ல;
உம்முடையவர்களை
உம்மிடம் ஒப்படைத்ததற்காக
உருகி மன்றாடுகிறேன்!

என்னுடையவை;
உம்முடையவை!
உம்முடையவை;
என்னுடையவை!
மாணவர்கள் இவர்களால்
மகிமையடைந்தேன்!

நான் -
உம்மிடம் வருவதால்
உலகத்தில் இரேன்!

அன்புத் தந்தையே!
அடியேனும், நீரும்
ஐக்கியப் பட்டிருப்பது போல -
அடியார்கள் தமக்குள்
ஐக்கியப்பட,

உம் -
பரிசுத்த பெயரால்
பாதுகாத்தருளும்!

இந்த பூமியில்
இவருடன் இருக்கையில் -
அடியார்களில் ஒருவரும்;
அழியவில்லை!
அழிவின் சாத்தானே
அழிந்தான்!
இன்று உம் -
வசந்த அரசுக்கு
வருகிறேன்!

இவர்கள் எனது -
உன்தை மகிழ்ச்சியை
உணரவே இதை
உரைத்தேன்!

உமது வார்த்தைகளை
உமது மக்களிடம்
ஒப்படைத்தேன்!
என்னைப் போலவே
இவர்களும் -
இவ்வுலகத்தார் இல்லை!

என்னையும்,
இவர்களையும்,
இவ்வுலகம் பகைத்தது!

அடியார்களை இவ்வுலகத்திலிருந்து
அகற்ற அல்ல;
அக்கிரமத்திலிருந்து காப்பாற்றவே
அடியேன் மன்றாடுகிறேன்!
உமது -
அற்புத வார்த்தைகளால்

அடியார்களை
அரவணைத்துக் கொள்ளும்!
மண்ணுக்கு நீர்
மனிதகுமாரனை அனுப்பியதுபோல -
இந்த -
அகன்ற பூமியில்
அடியார்களை அனுப்புகிறேன்!

அடியார்கள் உம்மிடம்
ஐக்கியமாக -
அடியேனை உமக்கு
அன்பளிப்பாகத் தருகிறேன்!''

தன் விசுவாசிகளுக்காக -
கனவுத் தாய்மேகம்
கண்ணீர்பால் சுரந்தது;

''பிரபஞ்சப் பிதாவே!
அடியார்களுக்கு மட்டுமல்ல
அடியேனை நம்புகிறவர்களுக்காகவும்
அன்புடன் பிரார்த்திக்கிறேன்!

பிரியபிதாவே!
எனக்குள் நீரும்,
உமக்குள் நானும்
ஊடுறுவியது போல
நம்,
இருவருக்குள்ளும்
இவர்கள் பிரவேசிக்கட்டும்!
நம்மைப்போல...
என்னை -
நம்பியவர்கள் ஒன்றாக
உம்முடைய
தத்துவ மகிமையைத்
தானமாக வழங்கினேன்!

ஒற்றுமை உணர்வில்
இவர்களது -
உள்ளங்கள் நிறையட்டும்;!

என்னில் அன்பு கூர்ந்து
இம்மண்ணில் எனை
இறக்குமதி செய்ததுபோல -
என்னில் நீரும்
இவர்களில் நானும்,
அன்பு கூர்வதை பூமி
அறிய வேண்டுகிறேன்!

அன்புத் தந்தையே!
பிரபஞ்சம்
பிரசவமாவதற்கு முன் -
அடியேனை நேசித்து
ஆற்றலை அளித்தீர்!
அதே ஆற்றலுடன்
அடியேனை நம்புகிறவர்கள் -
அடியேனின் இடத்தை நிரப்ப
ஆசையுடன் மன்றாடுகிறேன்!
நீதியின் தந்தையே!
உலகம் உம்மை
உணரவில்லை!
என்னை நீ
இறக்குமதி செய்ததை
இவர்கள் அறிவர்!

அடியேனுக்கு நீர் புகட்டிய
அதீத அன்பு -
இவர்களிடத்தில் வழியவும்,
இவர்களின்
இருதயக் குடில்களில் நான்
என்றும் வாழவும்,

உம்மை இவர்களுக்கு
உணர்த்தினேன்;
உணர்த்துவேன்!’’

இரவுத்தார்ப்பாய்
பூமியைப் போர்த்தியது;
முகவரி தொலைத்தச் சூரியன்
முகம் புதைத்து அழுதது!

●

புயலைப் பொட்டலம் கட்டியப் புழுதிகள்!

ரத்தச் சோகையான
ராத்திரி!
தொலைவில் தொங்கும்
பௌர்ணமி நிலவு!

திசைகள் –
இருளை
வாய் கொப்பளித்தன!

வேர்வைத் துளிகளை
விதை நெற்களாக்கிய
'கெத்சமனே' தோட்டம்!

அறவழி பூமியின் –
முதலாம் உலகப் போருக்கான
முக்கிய நேரம் அது!

அடியார்கள் –
நீரில் விழுந்த கற்களாக
நித்திரையில் மூழ்கிக்கிடந்தனர்!

சீமோன் பேதுரு,
யாக்கோபு,
யோவான் –
நெருப்புக்குக் கவசமாய்
நின்றனர்!

பரிசுத்த ஆவியின்
பாற்குடம் -
அடியார்கள் மூவரையும்
அழைத்தது;

''என்னுள் -
வருத்தமும், கலக்கமும்;
வலம் வருகிறது!

மனிதகுமாரனின் ஆன்மா
மரணத்தின் கரங்களில்
மயங்கிக் கிடக்கிறது!''

புயலை அச்சுறுத்திய
பூகம்பக்குரல் -
மெழுகுவர்த்தியின் மேனியாக
மெலிந்து வழிந்தது!

அடியார்கள் மூவரையும் விட்டு
அகன்ற திருத்தீபம் -
தள்ளி நடந்து
தலைகுப்புற விழுந்து,
தந்தையிடம்
தழுதழுத்தது;

''என் பிதாவே!
இப்பாத்திரத்தை
என்னை விட்டு
எடுத்துக் கொள்ளும்!
எனது சித்தமல்ல
உமது சித்தமே!''

ஒலித்த வார்த்தைகளில்
உயிரின் கண்ணீர் -
ஒழுகியது!

திரும்பிவந்த தென்றல் -
தூங்கிவழியும் அடியார்களைக் கண்டு
துயரமுற்றது!

சிறகு விரல் -
சீமோன் பேதுருவை
சீண்டியது;

''ஒருமணிநேரமாவது
உடன் விழித்திருக்கக்கூடாதா?
சாத்தானின் சோதனையில்
விழுந்து போகாமல் -
விழித்திருந்து பிரார்த்தியுங்கள்!
உள்ளம் உற்சாகமானது;
உடலோ வலுவற்றது!

உறக்கத்தை
உதறிய சீடர்கள் -
தற்காலிகச் சுறுசுறுப்பைத்
தரித்துக் கொண்டனர்!

இருளின் அணைக்கட்டு
நீர்மட்டம் -
ஏறிக் கொண்டிருந்தது!

இரண்டாம் முறையாக -
தந்தையிடம்
தனித்துப் புலம்பிய -
வேதமின் விளக்கு
விசும்பியது!

ரணமேகம்
ரத்தமுத்துக்கள் சிந்தியது;

''இறை தந்தையே! - எனது
பாத்திரத்தில் நான்
பானம் பருகினாலொழிய

இப்பாத்திரம்
என்னை விட்டலகலும்
வேத விதியிருந்தால்,
உமது -
சிந்தனையின் படியே
செயலாகட்டும்!''

மாணவர்களைக் காண
மறுபடியும் வந்தது
மன்றத்து நிலா!

மாணவர்கள் -
நித்திரையின் ஆழியில்
நீர்மூழ்கி கப்பல்களாக
மூழ்கிக் கிடந்தனர்!

நகங்களுக்குச் சாணை தீட்டிய
நடுநிசி!
மூன்றாம் முறையாக -
முகம்குப்புற விழுந்து
பிதாவிடம் இருதயத்தைப்
பிழிந்தது பிரகடனம்!

'எண்ணெய் செக்கு' -
சூரியனை நசுக்கிச்
சுற்றியது!

சுனங்கிக்கிடந்த தென்றல்
சூறாவளியாகத் திரும்பியது!
அடியார்களின் முகங்களில்
ஆலங்கட்டி மழை!

''இதோ!
மனிதகுமாரன்
விஷ நாவுகளுக்கு
விருந்தாகும் வேளை வந்தது!

நீதியை காட்டிக் கொடுக்கிறவன்
நெருங்கிவிட்டான்!
நித்திரை கலையுங்கள்!''

வெண்கலக் குரலில்
விதிர்ந்து விழித்தன
வேத விழுதுகள்!

இருட்டின் கதவுகள்
திமிங்கல வாய்களாகத்
திறந்தன!

பிசாசின் பிரதிகள்
பிரவேசித்தன!
மண்புழுக்களின் மத்தியில்
மார்பில் குத்திய
மாணவன் யூதாஸ்!
கண்கொத்தி பாம்பு
கருப்பு விஷத்தைக்
கக்கியது;

''எவனைக் -
கட்டிப்பிடித்து
கன்னத்தில் முத்தமிடுகிறேனோ,
அவனே -
கர்த்தர் இயேசு;
கைது செய்யுங்கள்!''

தீவை சுற்றிவளைத்தன
தீப்பந்தங்கள்!
கூலிநரிகளின் கரங்களில்
கொலைக் கருவிகள்!

கர்த்தரின் கன்னத்தில்
கள்ளிச் செடி
முத்தமிட்டு முழங்கியது;

‘‘ரபீ
வாழ்க!’’
அது -
முகத்தில் பதிந்த
முத்தமல்ல -
முதுகை குத்திய
முஷ்டி!
கன்னப் பூவில் விழுந்த
கயமைக் கீறல்!
அப்பத்தை நக்கிய
ஆட்கொல்லி நோய்!
நெருப்பை முத்தமிட்ட
விட்டில் பூச்சி!

எச்சத்தைத் துடைத்து
எதார்த்தமாக வினவியது
இரக்கத்தின் முகடு;

‘‘என்னிடத்தில் -
எதற்காக வந்தாய்?’’

படமெடுத்த பாம்பு
பதுங்கி மறைந்தது!
கொழுவை -
கழுமரங்கள்
கைது செய்ய சூழ்ந்தன!

எரிமலையின் கரங்களுக்கு
இரும்பு விலங்கா?
சினத்தில் கிளர்ந்த
சீமோன் பேதுரு -
ஓநாய் ஒன்றின்
உறைவாளை உறுவி,
காகிதக் கழுதைப் புலிவொன்றின்
காதை வெட்டினான்!

‘மால்குஸ்’ - எனுமவன்,
ஆதிக்கவர்க்கத்தின்
அடிவருடி!

தரையில் விழுந்த காது -
தண்ணீர் தேரையாகத்
தாவித் துள்ளியது!

போர்களத்தில்
புன்னகையை ஆயுமாக்கி -
நெருப்பைத் தணித்தது
நித்திய நீரூற்று;

‘‘பேதுரு!
வாளை உறையில் வை!
வாளெடுத்தவன்;
வாளால் மடிவான்!
இக்கணம் என் -
இறைதந்தையை வேண்டினால்
ஏராளமானத் தூதரை
இறக்க மாட்டாரா?
அவ்வாறு நிகழ்ந்தால் -
நியாயப் பிரமாணம் எவ்வாறு
நிறைவேறும்?’’

தீண்ட வந்த பாம்புவை
பரிவுடன் நெருங்கியது
பால் கிண்ணம்!
துடித்துக் கிடந்த காதை
தூசி தட்டி,
மறுபடிம் பொருத்தின
மாந்தளிர் விரல்கள்!

விக்கித்து நின்றன,
விஷப் பூரான்கள்!

அலை உதடுகள்
ஆதங்கத்தில் புரண்டன;

''கள்வளைப் பிடிப்பதுபோல
கத்திகளை ஏந்தி -
என்னைப் பிடிக்க
இரவில் வந்தது ஏன்?

மாநகர ஆலயங்களில்
மக்களிடம் நின்று
மணிக்கணக்கில் உரையாடினேன்!
அப்பொழுது நீங்கள்
அடியேனை
அணுகவில்லை!

இது -
இறைவாக்கு
நிறைவேறவே
நிகழுகிறது!''

அனிச்ச மலரை
ஆதிக்க வண்டுகள் மெய்த்தன!
விடுதலை வேங்கைக்கு
விலங்கு மாட்டப்பட்டது!

சீடர்கள் -
சிதறினர்!
புழுக்கள் -
புயலை பொட்டலங்கட்டி
புறப்பட்டன!
கொந்தளிக்கும் கடல்
குடுவையில் அடைக்கப்பட்ட
கொடுமை இது!

எழுதுகோலை -
எலும்பாக எண்ணி
கொத்திக் கொண்டு புறப்பட்டன
கோபுரக் கழுகுகள்!

நிர்வாணமாக நின்ற நீதி!

வெட்டுக் காயங்களுடன்
விடிந்தது பகல்!
வீதிகளின் கால்களில்
வெந்நீர் கொட்டியது!

''கர்த்தர் இயேசுவைக்
கைது செய்து விட்டனர்!

தேசத்தின் குரல் -
திசைகளின் தலையில்
தெறித்து விழுந்தது!

அநீதியின் மேய்ச்சல் நிலத்தில்
அருகம் புல்லாய் நின்றது
ஆகாய வாரிசு!
காந்தழ் கன்னங்களில்
அறைகள் வாங்கிய
அழுத்த ரேகைகள்!
ஒருவரிக் கவிதையாய்
உதட்டில் வழியும் ரத்தம்!

கரங்கள் பின்னப்பட்டு
கசங்கி நின்றது -
கண்ணீர் சித்திரம்!

வெற்றிக் களிப்பில்
விஷப்பரிசேயரின் -
பூனைக் கண்கள்
போதையில் மிதந்தன!

தத்துவ ஞானிகளுக்குத்
தலையில் கொம்புகள் முளைத்தன!

வெளிப்புறவாசல்
வேடந்தாங்கலாக -
மனிதப் பறவைகள்
மண்டபத்தை நெருக்கின!
நசுங்கிய விழிகளுடன்
சிட்டுக்குருவியாய் வேவுபார்க்கும்
சீமோன் பேதுரு!

குருநாதரிடமிருந்து
கூட்டத்தை விலக்கியவன்;
கூட்டத்தில் நின்று
குருநாதரை தரிசிக்கும்
கொடுமைத் தருணம்!

தலைமை ஆசாரியன் -
'காய்பா'வின் கண்கள்
கட்டாரிகளாகச் சுழன்றன!

பழைய குற்றங்கள்
பரிசீலிக்கப்பட்டன!

தேவசாட்சி
விஷமூலம் பூசப்பட்டது;

''தேவாலயத்தை இடித்துத்
திரும்பவும் மூன்று தினத்தில் -
எழுப்புவேன் என
எக்காளமிட்டான் இவன்!''

தத்துவத்தின் கருவறியாத்
தவளைகள் -
கணையை வீசிவிட்டதாகக்
கைகுலுக்கிக் கொண்டன!
ஓரிரு வினாக்கள்
ஒப்பனையாக வீசப்பட்டன;

''உனக்கு -
விரோதமான
குற்றங்கள் குறித்து -
விளக்கம் கூற
விரும்புகிறாயா?''

குருடர்களின் கரங்களில்
மெழுகுவர்த்தியா?
மல்லிகைப் பந்தல்
மௌனமாக நின்றது!
வேஷதாரி காய்பா'
விடவில்லை;

''கடவுளின் பெயரால்
கட்டளையிட்டு வினவுகிறேன்!
நீ -
கடவுளின் மகனா?''

தீயின் உதடுகள்
திறந்து மலர்ந்தன;
''நீர் -
உரைத்தது உண்மை!

மனிதகுமாரன் இன்று முதல் -
வானத் தந்தையின்
வலப்புறத்தில் வசிப்பதையும்,
வான மேகங்களில்
வலம் வருவதையும் காண்பீர்!

‘காய்பா’ வின் கண்களில்
கடுகுகள் வெடித்தன!

ஆடையைக் கிழித்துக் கொண்டு
ஆத்திரமாக அலறினான்;

‘‘இவன் -
திமிர்பிடித்து
தெய்வ நிந்தனை கூறுகிறான்!
இவனது -
நிந்தனைக்கு நீங்கள்
நினைப்பது என்ன?’’

கூலி ‘கொரில்லா’க்கள்
கூச்சலிட்டன;

‘‘மரண தண்டனையே
பொய் கூறும் இவனுக்குப்
பொறுத்தமானது!’’

கத்தியாக குத்தியது
‘காய்பா வின் கட்டளை;

‘‘இவனது
அந்தரங்கத்தைத் தோலுரிக்க
ஆளுநர் ‘பிலாத்து’விடம்
அனுப்புகிறேன்!’’

சிகப்புச் சூரியன்
சிறைக்கு வந்தது!
வக்கிர வண்டுகள்
ரோஜாவைப் பிழிந்து -
ரத்த ‘அத்தரை’
ரசித்துச் சுவைத்தன!
எச்சிலில் குளித்தது
இறையியல் மலர்!

கருப்புத் துணியால்
கண்களை மறைத்து -
இரும்புக் கரங்களால்
இலவம்பஞ்சு கன்னங்களில்
அறைந்தனர்!

''உன்னைக்
கன்னத்தில் அடித்தவன் யார்?
கடவுளின் அருளால்
கண்டுபிடித்துக் கூறும்!''

கேலிகளின் கீறல்களுக்கு -
இசைத்தட்டாகச் சுழன்றது
இதயம்!
இலைகள் கிழிக்கப்படுவதாலேயே -
தலை வாழைகள்
தலை நிமிருகின்றன!

வெட்டுக் காயங்களை
விருதுகளாகச் சுமந்து
வீற்றிருந்தது விருட்சம்!

●

மொழியை மறுதலித்த நாவு!

குளிரை 'சிரஞ்சி'யேற்றும்
குத்தூசி இரவு!
இதயங்களை எரியவிட்டு
இரவு மட்டும் -
ஈரப்பதமாக இருந்தது!
அரண்மனையின் முற்றத்தில்
அடித்தள மக்கள்
அனல் மூட்டி,
ஆர்வ முடிச்சுக்களாக
அமர்ந்திருந்தனர்!

விறகு நெருப்பை விட
விவாதங்கள்
வெப்பமாகச் சுட்டன!
விசாரணையின் வியூகம்
அரசியல் ஆருடங்களாக
அலசப்பட்டன!

மனித மந்தையில் ஒரு
துரட்டிக் கோல் மட்டும் -
துயரமாக அமர்ந்திருந்தது!
அது -
சித்தாந்தப் பறவையின்
சிறகு -
சீமோன் பேதுரு!

தாயின் தொப்புள் கொடியை
சீக்கிரமாகத் துண்டிக்க -
சீமோன் பேதுருவுக்குச்
சித்தமில்லை!

தணல் மீது கரம் நீட்டி -
இதயம் வரை
சூடேற்றிக் கொண்டிருந்தவனை
இனம் கண்டு -
வினவினாள் ஒரு
வேலைக்காரி;

''இயேசுவுடன்
இருந்தவன் தானே
நீயும்?''

தன்னையறியாமல்
தடுமாறித் தளும்பினான் பேதுரு;

''நீ -
சொல்லுகிற மனிதரைச்
சுத்தமாகத் தெரியாது!''

தூண்டில் விழிகள்
துளைத்தன பேதுருவை!
சிக்கலை உணர்ந்தவன்
கூடத்தின் வாசலைக்
குறிவைத்து நகர்ந்தபோது -
கூட்டத்தை கிழித்தது ஒரு
குத்தீட்டிக் குரல்;

''இவன் -
இயேசுவுடன் இருந்தவன்!

தீக்குச்சி கிழித்ததுபோல்
திடுக்கிட்டவனை,
மண்டபமே எழுந்து
மையமிட்டது!

பேதுரு பீதியானான்!
அச்சத்தை அணிந்துகொண்ட
அவசர வார்த்தைகள் -
அறுந்து விழுந்தன;

‘‘ஆணையிடுகிறேன்!
அந்த மனிதனை
அறியேன்!’’

முகம் வெளிறி
முழங்கியவனை -
முரட்டு மனிதர்கள்
முற்றுகையிட்டனர்;

‘‘உண்மையைச் சொல்;
உண்மையாக நீ -
இயேசுவுடன் இருந்தவன் தானே?
உன் உளறல் பேச்சு
அதை -
உணர்த்துகிறது!’’
மாணவன் பேதுரு
மறுபடியும்
மறுதலித்தான்;

‘‘ஆணையிடுகிறேன்!
அந்த மனிதனை
அறியேன்!’’

முகம் சிவக்க
மும்முறை மறுதலித்தவனைக் கண்டு -
கண்ணி வைத்த கூட்டம்
கலைந்தது!

சந்தேகம் கலைய -
சக மனிதர்களிடம்
சத்திய வேந்தனை,

சபிக்கத் துவங்கினான்
சந்தர்ப்பவாதி பேதுரு!

நடித்துப் பேசியவனை
'நாசகாரி'கள்
நம்பின!
காலம் கழிந்தது;
சேவல் கூவியது!
சீமோன் பேதுருவின்
சிந்தனைத் திரையில் -
கடந்தகால தீர்க்கதரிசனம்
கருப்பு - வெள்ளையாக ஓடியது!

இரவு பகலானது;
இதயம் இரவானது!
தலைகோதிய விரல்களையே
தறித்தெறிந்தேனே?

விலகிச் சென்று
வெம்பியழுதவனின்
இருதயம்,
விழிகளுக்கு வெளியேவந்து
விசும்பியது!

அழுதழுது
அழித்தாலும் -
மச்சத்தின் கருப்பு
மாறிவிடுமா?

●

பூமியைக் கைபந்து விளையாடிய புல்லுருவிகள்!

வேத விஷமிகளின்
விபச்சார விடுதி;
ஆளுநர் 'பிலாத்து' வின்
அரண்மனை!

'ஓசோன்' ஓட்டைகளால்
பொத்தல்களான வானம் -
சூனியத்தின் கூண்டில்
சுருங்கி நின்றது!

ஒப்பாரிகளின்
தீ முத்தங்களால் -
தேகத்தில் கொப்புளங்களுடன்
தேசிய கீதம்!

திக்குவாய்களின்
தேசத்தில் ஒரு -
தேவமொழி!
அத்தனை வார்த்தைகளும்
ஊனப்பட்டு
அழுது நிற்கிறது!

அடக்குமுறை விரல்கள்
ஆச்சரியக் குறியின்
இடுப்பை வளைத்து
கேள்விக் குறியாக்கி,
கேலி செய்தன!

‘எத்தியோப்பியப் பாலைவனமாக
இதயம் வறண்டு கிடக்கிறது!

அடிமைகளின் தேசியகீதத்தை
ஆவேசமாக பிரசவித்த
இறை எழுதுகோல் -
‘மை’ ரத்தம் வற்றி
மயங்கிக் கிடக்கிறது!

கவிதை முகத்தில்
ரத்த குறியீடுகள்!

சரித்திரத்தின் -
சமாதான ஒப்பந்தமெங்கும்
சாட்டைக் கையெழுத்துக்கள்!

சவப்பெட்டிகளின் முன்
ஒரு -
முதலுதவிப்பெட்டி
முகம் தொங்கி நிற்கிறது!

பிரமீடுகள் -
‘எவரெஸ்’டை புதைத்துவிட்டதாக
இறுமாப்புடன் நின்றன!

அச்சுப் பிழைகளின்
அரசரவையில் -
உயிர் எழுத்து
ஊமையாக நின்றது!
கட்டுவிரியன்கள் -
பூதக்கண்ணாடிகளுடன்
புறப்பட்டு வந்தன!

பிலாத்துவின் வினா -
வஜ்ஜிர மரத்தை
வண்டாகக் குடைந்தது;

‘‘நீ -
யூதர்களின் அரசனா?

பழுத்துப் போன
உதட்டு இலையில் -
ஒற்றை மழைத்துளி
உருண்டோடியது;

‘‘ஆம்!
நீர் -
நினைப்பதுபடியே!

சருகு நாவில்
சமுத்திர அலை!
குருட்டுத் தீக்கோழிகள்
கூச்சலிட்டன;

‘‘கலகம் செய்தான்!
மன்னருக்கு வரிசெலுத்தாமல்
மக்களைத் தூண்டினான்!
யூதர்கள் அரசன் என
ஆணவமாக அறைகூவுகிறான்!’’

குளிக்காத கொசுக்கள் -
அக்கினியின் சிவப்பை
அழுக்கு என
அலறின!

ஆளுநன் பிலாத்து -
வீணையின் தந்தியை
வினாவால் சுண்டினான்;

‘‘உன்மீது உரைக்கப்படும் -
குற்றங்களைக் குறித்து
நீ -
கூறுவது என்ன?’’

மௌனத்தை அணிந்தது -
முகம் கசங்கிய நிலவு!
பூனைகளின் நகங்கள் -
கிளியின் நாவைத்
தோலுரிக்க முயன்றுத்
தோற்றன!
பிலாத்துவின் கண்கள்
பிரம்மித்தன!

பரிசேயரின்
பாசிபிடித்தக் கரங்கள் -
நனைந்த வெடிகளின்
திரிகளை முறுக்கித்
தீவைத்தன!
கோப்பை மண்டபம்
கூச்சல்களால் வழிந்தது;

''இவன் -
கலிலேயா முதல்
யூதேயா வரை
கலகம் செய்தான்!''

ஆளுநன் பிலாத்தின்
அடிமனது -
குழப்பத்தை கூடுகட்டியது!

காயங்களைச் சுமந்து
கண்ணியமாக நிற்கும்
கண்ணீர் தென்றல் -
திசைகளின் முகத்திலா
திராவகம் வீசியிருக்கும்?

பிலாத்துவின் இதயம்
பெண்டுலமாக ஆடியது!

தப்பிக்க எண்ணிய
தர்பார் யானை -
தண்ணீரில் கயிறு திரித்தது;

‘‘இவன் -
கலிலேயன் எனில்,
அரசன் ஏரோதுவின்
அதிகாரத்தின் கீழ்
அடங்குவான்!

அவரிடம் இவனை
அழைத்துச் செல்லுங்கள்!

உப்பரிகை ஆமை
ஓட்டுக்குள் தலையிழுத்தது!

வரிக்கழுதைகள் -
வைரத்தை
உப்புக்கல்லாக,
வழிதேடின!

●

ஏரியாக விரிந்திருக்கும் -
ஏரோதுவின் அரண்மனை!
சப்பாத்தி கள்ளிகளின் நடுவில்
சாரோனின் சலவை மலர்!

தர்மஸ்தூபி -
ஊதுபத்தியாக மெலிந்து
உருமாறியிருந்தது!
ஹிட்லர் மீசைகளால் -
சீனப் பெருஞ்சுவர்
சிதைக்கப்பட்டிருந்தது!

கடல் நண்டுகள் -
கலாப மயிலின் தோகையை,
கத்திரிக்கக்
காத்திருந்தன!

அரசன் ஏரோதுவின்
அடுத்தடுத்த வினாக்கள்
அம்மி கொத்தின;
சிற்பம் சிறிதும் அசையவில்லை!

லட்சிய ஆணிவேரை -
‘லார்வாப் பூச்சிகள்
அரித்துத் தின்ன
அலை மோதின!

அரசன் ஏரோது -
கடலின் ஆழத்தை
கணக் கெடுக்கவியலாமல்
களைப்படைந்தான்!

ஏரோதுவின் -
கருப்பு மூளையில்
கண் சிமிட்டியது ஒரு
மின்மினி!

அரசன் ஏரோதுவுக்கும்
ஆளுநன் பிலாத்துவுக்கும் -
அவ்வப்போது
அரசியல் உரசல்கள்
அந்தரங்கத்தில் தீப்பிடிக்கும்!

ஆளுநன் பிலாத்துவின்
அபிமானம் பெற -
இதோ! - இந்த
துவண்ட மேகமே
துருப்புச் சீட்டு!

சிலந்தி வலையை விடச்
சிக்கலான இந்த -
வரலாற்று வழக்கில்,
பிலாத்தை -
நீதிபதியாக நிறுத்துவதே,
ராஜதந்திர ரகசியம்!
வஞ்சக உதடுகள்
வாசனைத் தைலம்
பூசிக் கொண்டன;

‘‘எந்த குற்றத்தையும்
இவனிடம் காணவில்லை!
இவனை -
ஆளுநர் பிலாத்துவிடம்
அழைத்துச் செல்லுங்கள்;
அவரே இவ்வழக்கின்
ஆஸ்தான நீதிபதி!’’

புதை குழிகள் -
பூரித்தன!

கைபொம்மை -
பிலாத்துவைக் குறித்துக்
கவலையில்லை!
இனிக் -
கைதி நிலவை,
கண்ணாடியாக
நொறுக்கி விடலாம்!

தரையில் நடமாடும்
தண்ணீர் பாம்புகள் -
நிலவை அலங்கரித்து
நெருப்பை ஊதின!

பீளைகளின் கேலிகளில்
பிரபஞ்சப் பௌர்ணமி
பிறையாகி விடவில்லை!

மடியைக் குதறும்
மதியீனக் கன்றுகளை -
பசுவின் இதயநாவு
பரிவுடன் நக்கியது!

●

வானத்தைக் கிழித்த வக்கிர வல்லூறுகள்!

சூரியன் -
உள்ளுக்குள் அழுதபடி -
உதித்தது!
பிலாத்துவின் அரண்மனை -
மனிதப் பிரளயத்தில்
உள் நீச்சலடித்தது!

வாடிய ரோஜாவை
வதைத்துப் புசிக்க -
குப்பைக் கூடைகள்
குழுமியிருந்தன!

நீதிக்கும், அநீதிக்கும்,
நிகழகவிருக்கும் -
நிச்சயதாம்பூலம்!

அடிமைகளின் சூரியன் -
அறுவடைக்குக் காத்திருந்தது!
நீதியின் -
நிராயுதபாணி
நிர்வாணக் கோலம்,
பிலாத்துவின் நெஞ்சுக்குள்
'பெட்ரோல் குண்டுகளை
பிரயோகித்தது!

வர்கப் பிரச்சினையைத் தவிர
இந்த -
வழக்குக்கு வேறு
வலுவான அஸ்திவாரமில்லை!
ஆயினும் -
மாளிகை ஓநாய்களுக்கு
மனிதக் கறியல்லவா
ருசிக்கிறது?

எதிரே -
தேகம் கிழிந்த
திருமறை!

ரத்தச்சுவடியை
ரணமாக்க -
ஆர்வமுடன் கூச்சலிடும்
ஆணிகள்!

கையைப் பிசைந்த
பிலாத்துவுக்கு ஒரு
கடிதம் வந்தது!

அது -
அந்தப்புரத்திலிருந்த பாய்ந்த
ஆட்சேபணை அம்பு!

பிரித்துப் படித்த
பிலாத்துவின் கண்கள் -
பீதியின் குழந்தைகளாயின!

‘‘அந்தத்
தத்துவ நீதிமானைத்
தண்டிக்க வேண்டாம்!
அவருக்காக -
கனவில் மிகவும்
கண்ணீர் சிந்தினேன்!

கனவு நினைவாகாமல்,
கடிதம் -
கடுஞ்சுவரெழுப்பியது!
மனைவியின் -
கண்ணீரில் கருத்தரித்த
கடித வார்த்தைகள் -
இதய மிருதங்கத்தின்
இருபுறத்தையும் தட்டின!

தண்ணீரில் உப்பாகத்
தனக்குள் கரைந்தவனுக்கு -
முகத்தில் ஒரு
மோட்சமின்னல்!

அது -
திருவிழா தினம்!
கொலை கைதியொருவனைக்
கூண்டிலிருந்து பறக்கவிடுவது -
காலனியாதிக்கத்தின்
கருணைச் சம்பிரதாயம்!
பரிசீலிக்கப்பட்ட
பட்டியலில் -
'பரபாஸ்' எனும்,
மூர்க்க ராஜநாகம்
முன்னின்றது!

ஆளுநன் பிலாத்துவின்
அடிமனதுக்குள் -
அரேபியத் திராட்சை மழை!

கழுகை முன் நிறுத்தினால்
காட்டுப் புறாவின்
கைவிலங்கை -
அவிழ்த்துவிடலாம் அல்லவா?

நம்பிக்கையைப் போர்த்தி
நாவசைந்தது;

''இயேசுவா?
பரபாசா?
இருவரில் -
எவரை விடுவிப்பது?''

நரகத்தின் நாவுகள்
நஞ்சை உறிஞ்சின;

''தீர்ப்பை -
இயேசுவுக்கு எழுது;
பரபாசை -
விடுதலை செய்!

பிலாத்துவின் -
ஆர்வச்சுடர்,
ஏற்றுமுன்னரே
இறந்து போனது!

கைதி நிலவின்
கருணை மனுவிற்கு -
கடைசித் தருணத்தின்
கதவு திறந்துவிடப்பட்டது!
பிலாத்துவின் குரல் -
வற்றிநின்ற நதிக்கரையை
வாஞ்சையாக வருடின;

''சிலுவையில் உன்னை
அறையவும், விடுக்கவும்
எனக்கு -
அதிகாரமுண்டு!
என்னிடம் நீ,
எதுவும் கூறுகிறாயா?''

அடிவயிற்றிலிருந்த
ஆற்றாமையுடன் -
எழுந்து வந்தது
ஈஸ்வரனக் குரல்;

‘‘ஆகாயத்திலிருந்து இந்த
அதிகாரம் வழங்கப்படாவிடில் -
உனக்கு -
எந்தவித அதிகாரமும்
என்மீது இல்லை!
உம்மிடம் என்னை
ஒப்படைத்தவன் -
அந்தகாரப் பாவத்தில்
அலறி விழுவான்!’’

கண்கள் தெறிக்க
‘கபதா’ நாற்காலியில்
பிழியப்பட்டக் கைகுட்டையாக
பிலாத்து அமர்ந்தான்!

‘‘இவனை விடுவித்தால்
நீர் -
இராயனுக்கு எதிரி!’’

உப்பரிகையின் திசைகள்
உலைகலனாய் கொதித்தன!
நெருக்கடி நெருப்பில் -
இதயம்,
இறைச்சித் துண்டாய்
வறுபட்டது!
பிரசவ வேதனையில்
பிதற்றினான் பிலாத்து;

‘‘இவனை -
என்ன செய்வது?

ஆந்தைகளும், கோட்டான்களும்,
அலறின;

‘‘இவனைச்
சிலுவையில் அறையுங்கள்!’’

மயானச் சாம்பலில் -
பூவின் மகரந்தம்
புதைந்து போனது!

விசாரணைக்கு முன்னரே
எழுதப்பட்ட
விஷத் தீர்ப்பு -
ஒப்புக்காக மறுமுறை
உதிரத்தில் வரையப்பட்டது!

பசுவைக் கொன்ற
பாவம் எதற்கு?

தண்ணீரில் -
கரங்களைக் கழுவி
கட்டளையிட்டான் பிலாத்து;

‘‘இந்த நீதிமானின்
இரத்தப் பழிக்கு
இனிநான் பொறுப்பல்ல!

நீங்களே இவனுக்கு
நியாயத் தீர்ப்பு வழங்குங்கள்!’’

உதிரத்தில் தலைமுழுக -
உற்சாக ஊளையிட்டன
ஓநாய்கள்;

‘‘இவனுடைய
இரத்தப் பழி -
எங்கள் மீதும்
எங்கள் சந்ததி மீதும்
இன்று முதல் விழட்டும்!’’

கைத்தடிக்குக்
கதவு திறக்கப்பட்டது;
கலப்பை
பிளக்கப்பட்டது!

நீண்டவொரு
நெருப்புக் கவிதைக்கு
முரட்டுக்கரங்கள்
முற்றுப்புள்ளி வைத்தன!

சூழ்ச்சிகளுக்குச்
சுகப்பிரசவம்!
சாத்தான்களின் குவளைகளில்
சந்தோஷ மது!
ரத்தச் சகதியில் ஒரு -
விண்மீன்
விழுந்து நொறுங்கியதே!
நீதி ஒருபுறம்
ஆத்திரக் கண்ணீரையும் -
அநீதி மறுபுறம்
ஆனந்தக் கண்ணீரையும் -
வரலாற்றுக் கண்களால்
வடித்தன!
சீர்திருத்த வானம்பாடியின்
சிறகுகள் முறிக்கப்பட்டன!
சித்திரவாதைகளின் உச்சகட்டத்தில்
சிவப்பு அங்கி அணிவிக்கப்பட்டது!
நீரோடை மலருக்கு
நெருஞ்சி முள்முடியால் -
பட்டாபிஷேகம்!

''யூதரின் அரசன்
வாழ்க!''

இருளின் சந்ததி,
எச்சில் துப்பி
ஏளனம் செய்தது!
விண்ணரசின் மணவாளன் -
'விதவை'யாக நின்ற
விபரீதம் இது!

●

கரைந்துபோன களிமண் பொம்மை!

கத்தியின் முனையில் -
கண்ணீர் முத்து!
விழிகளைக் கவ்வியிருந்த
விஷக் கொடுக்கு
விலகியது!

சரித்திரத்தின் மார்பில்
சகதியாக தெறித்த
யூதாஸ் -
கந்தகக் கண்ணீரில்
காகிதக் கப்பலானான்!

எச்சில்கூட அவனுக்கு
எதிரியானது!

அவனை -
அணிந்துகொள்ள
ஆடைகளும் அருவருத்தன!

அழுக்கைத் தீண்டக்கூட
அருகதையற்ற யூதாஸ் -
சித்தப் பிரமையில்
சிலந்தியின் பிசினாக -
தலைமை ஆசாரிகளிடம்
தனித்துப் புலம்பினான்;

''குற்றமில்லா ரத்தத்தை
கொலை செய்ய -
வகை செய்தேன்!
பரமபாவிநான்!''

புலியின் குகையை
புரட்டியாகிவிட்டது;

எலிப்பொறிக்கு
இனி என்ன வேலை!

தலைமைத் தற்குறிகள் -
தந்திரமாக யூதாஸை
தலை முழுகின;

''எங்களுக்கென்ன -
இனி உன்பாடு!''

பகடைக் காய்
பழுத்துவிழுந்தது!
முத்தத்தின் பிரதிகளாக
முப்பது வெள்ளிக் காசுகளில்
வீசிய ரத்த வாடை -
அழுகிய இருதயத்தின்
ஆணி வேரைப் பிடுங்கியது!

ஆலயத்தின் முற்றத்தில்
வெள்ளிகளை விட்டெறிந்த
விஷப்பாம்பு -
தன்னைத்தானே
கொத்திக் கொண்டு
தற்கொலை புரிந்தது!

காற்றும் கூட,
கயவனின் உயிரை
ஏற்றுக் கொள்ள மறுத்திருக்கும்!

ஆயினும்
புத்திபேதலித்த யூதசுக்குப்
புரியவில்லை -
மூன்றுமுறை மன்னித்த
பேதுருவைப் போல் -
முத்தமிட்ட தன்னையும்
முதலில் மன்னித்திருக்கும்
கல்வாரி அன்பு என்பதை!

யூதாஸின் சடலத்தைப் போல
அநாதைகளாகக் கிடந்த
வெள்ளிக் காசுகளை -
அள்ளி எடுத்தன
ஆசாரியக் கழுகுகள்;

''இது -
இரத்தத்தின் விலை!
இறைவனுக்குக் காணிக்கையாக
இவைகளைச் செலுத்த
இயலாது!''

கருப்பு மனிதர்களே!
கடவுளின் மகனையே
காணிக்கையாக்கியத் தீட்டு -

காசுகளை மறுதலிப்பதால்
கழுவப்பட்டுவிடுமா?

சிரங்கு நகங்கள்
சிந்தனை செய்து
அந்நியர்களின் பிணங்களை
அடக்கம் செய்ய,
குயவனின் நிலத்தைக்
கொள்முதல் செய்தன!

நூற்றாண்டுகள் பல -
வயதாகி உதிர்ந்தாலும்
'ரத்த நில' மென்றே அது
வர்ணிக்கப்படுகிறது!

'ஏரேமியா' தீர்க்கதரிசியின்
இறைவாக்கு -
புத்தக தோட்டத்தில்
பூத்து உதிர்ந்தது!

●

பூமியைச் சிலுவையாகச் சுமக்கும் வானம்!

கண்ணீரில் துடுப்பு வலிக்கும்
கல்வாரிப் பயணம்!
மயான இலக்குநோக்கிய
மௌன ஊர்வலம்!
முத்தின் முதுகில்
நத்தை!
மரணப்படுக்கையில் விழுந்தது
மனித நேயம்!

முகவரியின் முகத்தில்
முட்களின் நகவரிகள்!

சாட்டைகள் முதுகில் வரைந்த
சலவைக் குறிகள்!
மரச்சிலுவை சுமந்தது
மனித மலர்!

இன்று -
இந்தியாவின் சாலையெங்கும்
மரங்கள்;
அன்று -
எருசலேமின் சாலையெங்கும்
ரணங்கள்!
வெட்டுக் கிளிகளின் நடுவே
பாரம் சுமந்து ஊர்ந்தது -
பட்டுப் பூச்சி!

மூன்று முறை -
மரச்சிலுவையின் பாரம்தாங்காமல்,
மயங்கிவிழுந்தது
மல்லிகைச் சரம்!
மனசுக்குள் அழுதாள்
மண்மாதா!
பூமியின் -
புன்முறுவலாக
பூத்து விரிந்த வானவில்,
கண்ணீர் மழையில்
கலைந்து கரைகிறது!

அது -
ஊர்வலமல்ல!
உலகவிளைச்சலுக்கான
உன்னத உழவு!
ஒரு -
ஒற்றைவரிக் கவிதை,
அனேக ஆச்சரியங்களை,
அர்த்தங்களாகச் சுமந்து செல்லும் -
அபூர்வ நிகழ்வு!

பூவை -
மரம் சுமக்கும்!
ஆனால்,
மரத்தை
பூ சுமக்கும்,
மர்மம் இங்கே!

ஆங்காங்கே
அடித்துத் திருத்தப்பட்ட
காகித மேனியின்
காயக் கவிதைகளில் -
உயிரின் சந்தம்
உலர்ந்து கிடந்தது!

நிலவின் தோளில்விழுந்த
இந்த -
நெம்புகோல்,
மானுடப் பூட்டை திறக்க வந்த
மரச்சாவியா?
கள்ளிச் செடிமேல் நடக்கும்
கல்வாரி ஊர்வலம்
கண்டால் -
கண்ணீரும்
தேம்பியழும்!

அணையத் துடிக்கும்
அக்கினிக் குஞ்சைகாணத்
தாய்பறவை
தடுமாறி வந்தது!

புகட்டியப் பால்
ரத்தமாகப் -
பொங்கி வழிவதைக் கண்டு
புழுங்கியது தாயுள்ளம்!
வயிற்றில் சுமக்கும் பாரத்திற்கும்
தோளில் சுமக்கும் பாரத்திற்கும் -
தொடர்புண்டல்லவா?

களைப்படைந்த
காம்பு தேகம் -
கால்தடுக்கி விழுந்தது!
வண்ணத்துப்பூச்சிக்கு
‘லாடம்’ அடித்த -
வக்கிர மனிதர்கள்,
‘சீமோன்’ என்பவனை
சிறிது தூரம்
சிலுவை சுமக்க வைத்தனர்!
மேடு, பள்ள வாழ்க்கையை
மிதமாக்கிய தேவமொழி -
ஊமையின் தத்துப்பிள்ளையாக
உடன் வந்தது!

தேவதிருமைந்தனோடு
திருடர்கள் இருவருக்குத்
தீர்ப்பு வரையப்பட்டது!
சிவப்பு நிலவோடு
அவர்களும் -
சிலுவை சுமந்து வந்தனர்!
பல்லிகளின் எச்சங்களும்
பசும்பாலோடு கலந்ததால் -
''இசையாஸ்'' தீர்க்கதரிசியின்
இறைவாக்கு உயிர்த்தது!

●

முள்முடியின் ரத்தம்
முகத்தை மொழுகியிருந்தது!
வீதியின் விலாவில் நின்ற
'வெரோனிகா', எனும் மங்கைக்கு,
தாமரையின் ரத்தாபிஷேகத்தைத்
தாங்கவியலவில்லை!
காற்றாகப் புகுந்து
கனவு முகத்தைக்
கைக் குட்டையால் ஒற்றினாள்;
ரத்த ரங்கோலியாக -
முழுநிலவின் முகம்
முத்திரையாகப் பதிந்தது!

பொத்தல்களை உதடுகளாக்கியப்
புல்லாங்குழலைக் கண்டு -
பூக்கள் புலம்பியழுதன!
தனக்காக கண்ணீர் சிந்திய
தாய் மலர்களைக் கண்டு,
மந்த மாருதம்
மனங்கசிந்தது!

பறவைகளின்
எச்சங்கள் மீண்டும்

விதைகளாக முளைப்பதுபோல -
கீறல்களின் உதட்டிலிருந்து
தூறல்கள் விழுந்தன;

''எருசலேமின் குமாரத்திகளே!
எனக்காக அழாமல் -
உங்களுக்காகவும்
உங்கள் வாரிசுகளுக்காகவும் -
கண்ணீர் சிந்தி
கதறியழுங்கள்!
பிள்ளையில்லாத மலடி
பேறுபெற்றவள்!
தாய்பால் தராத
கொங்கைகளும் -
குழந்தைகள் பெறாத
கருவறைகளும் -
பேறு பெற்றவர்கள் என
பிதற்றும் காலம் வரும்!
தங்களை -
மலைகளையும், குன்றுகளையும்
மறைக்கச் சொல்லி
மனிதர்கள்
மன்றாடுவர்!
பச்சை மரத்திற்கே
இக்கதி எனில் -
பட்ட மரத்தை என்ன
பாடுபடுத்துவாரோ?''

சிறகில் மீண்டும்
சிலுவையின் சுமை!

திசைகளின்
மரண முகட்டுக்குத்
தீர்க்கரேகை பாதங்கள்
தொய்ந்து நடந்தன!

●

இதயச் சுவடியைக் கிழித்த
இரும்பு ஆணிகள்!

கண்ணீரையும், காயங்களையும்,
கலந்து குழைத்தக்
கல்வாரிப் பயணம் -
கடைசி எல்லையில்
காலூன்றியது!

கொலைக்களம்
கொல்கதா மலை -
மரணங்களின்
மண் கஜானா!

சிலுவைப் பறவைகளுக்குச்
சிறிது ஓய்வு!
சுற்றிலும் -
சூன்ய மௌனம்!

பிளிரியபடி வட்டமிடும்
பிணந்தின்னிக் கழுகள்!

இறந்தகால குப்பைகளாக
எலும்புத் துண்டுகள்!

மரணத்தின் -
வரவேற்பறைக்கு
வந்தது போல் பிரம்மை!

தண்ணீரைத் திராட்சை ரசமாக்கியத்
தத்துவ உதடுகள் -
உப்புக் கரிப்புடன்
உலர்ந்து ஒட்டிக் கொண்டன!

கசப்புக் காடியை
கடமைக்கு -
உதடுகளில் ஊற்றினர்!
மறுத்துப் புறக்கணித்தது
மனித வீணை!

கண்ணீரைப் புளிக்கவைத்து
கள்ளாக அருந்தும் கழுகுகளுக்கு -
தண்ணீர் தருவதில் கூட
தர்ம சிந்தனை இல்லை!

விடியலை கருக்கிப் பொசுக்கும் -
விகார வேளை வந்தது!
சுமைகளின் தூற்றுக் கூடையை
சுத்தியல்களும், ஆணிகளும்
சூழ்ந்து கொண்டன!

காற்றும் மூச்சுவிடமறந்த
கண்ணீர் நிமிடம்!
கொல்கதாவின்
இடுக்குகள் எங்கும் -
இதயத்துடிப்புகளின்
எதிரொலிகள்!

சிந்தனை ஞான தீபம் -
சிலுவையுடன்
பிணைக்கப்படுகிறது!

இதோ!
பூமியின் தலைமீது
பூங்குடையாக விரிந்த கரங்கள் -
ஆணிகளின் ஊடுறுவலையும்
அகிம்சையுடன் தாங்கின!
ஒருச் சமுத்திரத்தையே
கொளுத்திப் பார்த்த
கொடூரமிது!
விண்மீன் -
விசிறியடிக்கப்பட்ட
விசித்திரமிது!

புழுதியின் புத்திரர்களே!
உங்களது
சுத்தியலின் ஒலிகள் -
நான் -
எழுதும் அறைவரையில்
இன்றும் எதிரொலிக்கன்றனவே!

மூடர்கள் நீங்கள்!
உங்கள் -
ஆணிகள் தைப்பது
சரீரத்தையல்ல -
சரித்திரத்தை!

உங்கள் -
வக்கிரகரங்கள் வகுந்தது,
மரங்களின் தச்சனையல்ல -
மனிதர்களின் தச்சனை!

●

ஆச்சரியக்குறியாக
சிலுவை;
கேள்விக்குறியாக
கிறிஸ்து!

சிலுவைக் கொடிமரத்தில்
தலை தொங்கிக் கிடந்தது
தந்தையின் கைக் குட்டை!

ஏகாதிபத்தியத்தின்
இலவச இணைப்பாக -
இருபுறச் சிலுவைகளில்
இரண்டு திருடர்கள்!

ஆகாய மகனின்
ஆடைகளைப் பங்கிட
அரவுகளுக்குள் போட்டி!

சிலுவையின் கீழ்
சீட்டுக் குலுக்கி -
சிவப்பு ஆடைகளை
சிரித்தபடி பிரித்தனர்!

மனிதகுமாரனே!
உன் சிலுவையின்
நீண்ட நிழலைக் கூட
சுருட்டிக் கொள்ளும்
இந்த -
சூதக மானுடம்!

●

''யூதர்களின் அரசன்!''
தலைக்கு மேலே
தற்குறிகள் எழுதிவைத்த
பரிகாசப் பலகை!

''ஆலயத்தை இடித்து
அதை -
மூன்று நாளில் எழுப்புகிறவனே!

நீ -
இறைமைந்தன் எனில்
ஏதாவது அற்புதம் செய்து
இறங்கிவா!

துருப்பிடித்த மனிதர்களின்
தூற்றுதல்களைக் கண்டு
ஆணிகளும் கூட
அருவருத்தன!

அறிந்து கொள்வாயா -
அழுக்குப் பூமியே?
இது -
அம்மணக் கோலமல்ல;
அர்ப்பணக் கோலம்!

இரவின் முடிவுரையல்ல;
பகலின் முன்னுரை!
நொடிகளின் அந்திமமல்ல;
யுகங்களின் அத்தியாயம்!

வாழ்வியல் ‘‘கொரானா’’
நுண்கிருமிகளை அழிக்கவந்த
வானத்தின் தடுப்பூசியாக,
வரலாற்றுச் சிலுவை!

●

பூமியின் சுட்டுவிரல்!

அது -
எழுதுகோல் சிலுவை
மெல்லமெல்ல உச்சரித்த
மெய்யெழுத்து!

தாவரச் சிலுவை
ஒளிச்சேர்க்கை செய்த
தார்மீகப் பச்சையம்!

ரத்தப் பதியமிடப்பட்டத்
தொங்கும் தோட்டம்!

சிலுவைக் காம்பில் பழுத்த
சிகப்பு ஆப்பிள்!

அச்சாணி சிலுவை பூட்டிய
அசோகச் சக்கரம்!

சிலுவைச் 'சீஸ்மோ மீட்டரில்'
சிக்காத -
புதிய ஏற்பாட்டுப் பூகம்பம்!

வெப்பமானிச் சிலுவை
கிரகித்த -
விடுதலைச் சூரியன்!

வானத்தின் தண்டுவடம்;

திருச்சபைகள் கிழிக்கும்
தேதி அட்டவணை;
பிரபஞ்சத்தின்
பிடில்!

வானத்தின்
வளைகுடா!
விண்ணரசின்
கருத்துக் கணிப்புக்கு -
கொல்கதாவில்
குலுக்கப்பட்ட -
குடவேலை!

பூவை -
நெஞ்சில் குத்திக்கொள்ளும்
புல்லாங்குழல்!
தந்தையின் அந்தரங்கத்
தந்தி கம்பி!

வானுக்கும், பூமிக்குமிடையே
வடிக்கப்பட்ட
வாழ்வியல் சோறு!

மடிச்சிலுவை பீய்ச்சும்
தத்துவ ரத்தப் பாலையருந்தி -
தணல் நெஞ்சமே
தணிந்து கொள்,
தத்துவம்
உணர்ந்து நில்!

●

இறைவீணை மீட்டிய ஏழு ஸ்வரங்கள்!

காலத்தின் கண்கள்
குருடாகி விட்டனவா?
கொல்கதா மலையின்
கழுத்துவரை கண்ணீர்!

சிலுவை நங்கூரத்தின்
மேலே - ஆகாயக்கப்பல் அசைந்து மிதந்தது!
காற்று - ஊனமான கால்களுடன் உட்கார்ந்து விட்டது!

சிலுவையின் கீழ்நின்று
செல்லரித்த விறகுகள் -
நசுங்கிக் கிடந்த நிலவை
நையாண்டி செய்தன;

''தன்னைத் தானே
தற்பாதுகாக்க இயலவில்லை!
இவன் -
இஸ்ரேவேலின் அரசன் எனில்
ஏதாவது அற்புதம் புரிந்து
இறங்கிவரட்டும்!
அப்போது இவனை
அனைவரும் விசுவாசிப்போம்!

இவனை காக்கும் கடவுள்
இவனை மீட்கட்டும்!''

விஷத்தைத் துப்பிய
அபஸ்வரங்களின் மீது
வெளிச்சத்தைத் துப்பியது
சுத்த சுருதி!
சருகு உதடுகளில்
'சட்சம்' வழிந்தது;
''என் தந்தையே!
இவர்களை மன்னியும்!
இவர்கள் செய்வது
இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்!''

வேர்களை வெட்டிய
விஷ விரல்களுக்கும்
விருது வழங்கியது
வேத போதிமரம்!

●

இருபுறமும்
இருட்டு வெளவால்களாகத்
தொங்கும் -
திருடர்களில் ஒருவன்
தீயைத் திரித்தான்;

''நீ கிறிஸ்துவானால் -
உன்னையும் எங்களையும்
உடனே காப்பாற்று!''

ரத்தத் தடாகம் -
கல் விழுந்தாலும்
கலங்கவில்லை!
இரண்டாவது திருடன் -
கல்லெறிந்தவனைக்
கண்டித்தான்;

‘‘நீ -
தண்டிக்கப்பட்டும்
பரமதந்தைக்கு
பயப்படவில்லையா?
தவறுக்கு நாம்
தண்டிக்கப்படுகிறோம்!
இவரோ -
எந்தப் பிழையும்
இதுவரை புரியவில்லை!’’
- கண்டித்தவன்,
கண்ணீர் விண்ணப்பமொன்றை
கருணைச் சிலுவைப் பூவின்
காலடியில் சமர்ப்பித்தான்;

‘‘ஆண்டவரே!
உமது -
அற்புத அரசில்
அடியேனை நினைத்தளும்!’’

முகாரிகளின் மத்தியில்
பூபாளமா?
சிலுவையைச் சுற்றிப்பிணைந்த
சிவப்பு மல்லிச் செடியில் -
‘ரிஷபம்’ மொட்டு மலர்ந்தது;

‘‘மெய்யாகவே
என்னோடு நீ -
விண்ணக வீட்டில்
வீற்றிருப்பாய்!’’

இருட்டு வௌவால் -
அடைக்கலான் குருவியாக
ஆசி பெற்றது!

●

மேகங்கள் -
முகங்கருத்து
முற்றுகையிட்டன!

ரத்தக் குளத்தில் முளைத்த
தாமரை இலையின் மீது -
தண்ணீர்த் துளிகளாக உருண்டு
தவித்துப் புலம்பினார்,
தாய் மரியாளும்
சீடன் யோவானும்!

அப்பத்தைப் பகிர்ந்த
ஆன்மீக உணவு விடுதி,
பாசத்தையும் பகிர்ந்தது!

கவிதையின் மார்புக்காம்பில் -
'காந்தாரம்' கசிந்தது;
''அன்னையே!
அதோ உன்
அன்பு மகன்!
அருமைச் சீடனே!
அதோ உன்
அன்புத்தாய்!

தாய் மரியாளுக்குத்
தன் கருப்பையே -
சிலுவையில் தொங்குவதுபோல்
சிந்தனைக்குள் ரத்தம் சொட்டியது!

●

பகல் -
இருளைப் போர்த்தியது!
நெருப்பில் விழுந்த திராவகமாக
பூமி புகைந்தது!

தள்ளாத தாய்பறவைக்குத்
தருணத்தில் உறவைப் பிணைத்த
தழும்புகளின் தாயகம் -
தந்தையுடன் தன்னுறவு,
துண்டிக்கப்பட்டது எண்ணி
துயரத்தில் விம்மியது!

மங்கிய வெளிச்சத்தில்
'மத்திமம்' பீறிட்டது;

''ஏலி ஏலி லாமா
சபக்தானி!''

(என் தேவனே
என் தேவனே!
ஏன் என்னைக்
கைவிட்டீர்?)

வீதிநாய்கள்
விவாதித்தன;

''இவன் -
'எலியா'வை
ஏறிட்டு அழைக்கிறான்!''
அது -
அன்னைக்கும், குழந்தைக்குமுள்ள -
அந்தரங்க இழையல்லவா?

●

பூமியின் -
தாகத்தைத் தணித்த
புனித ஜீவநதி,
தரிசான உதடுகளுக்குத்
தண்ணீரை யாசித்தது!
பற்றியெரியும் காயங்களில்,
பஞ்சமம் வெடித்தது;

‘‘தாகமாக இருக்கிறேன்!’’

காவல் பொம்மையொன்று
கடற்காளானை
கழியில் பிணைத்து
காடியில் நனைத்து -
நெருப்பு நதியின் உதட்டருகில்
நீட்டியது!

கருப்பு வித்துக்கள்- சில,
கழியை தட்டிவிட்டு
களித்தன;

‘‘பொறு!
‘எலியா’ இவனை
எவ்வாறு காக்கிறான்
என்பதைப் பார்ப்போம்!

சிலுவையில் அறையப்பட்ட
சிகப்பு ரோஜாவின் -
உயிர் இதழ்
உதிரத் துவங்கியது!

●

ஆதிப்பிதாவின்
நாபிக் கமலத்தில்
அவதரித்து
பழைய ஏற்பாட்டின்
பாலைவனப் பகுதிகளில்
பயணித்து -

புதிய ஏற்பாட்டில்
புயலாக ஊடுறுவி -
கல்வாரியில் அரங்கேறியக்
கவிதை தன் -

புரட்சிக் குரலுக்குப்
புள்ளி வைத்தது!
தறியில் நெசவாகும்
தாமிர மலரில் –
'தைவதம்' தவழ்ந்தது;

'முடிந்தது!'

பூமி –
அந்தர நூல் நுனியிலிருந்து
அறுந்துவிழ –
அசைந்து ஆடியது!

●

எச்சில் –
வயிற்றுப்படுகையிலேயே
வற்றிப்போனது!
ஒரு கோடி
ஒளிவார்த்தைகளை
உற்பத்தி செய்த
தீபத்தின் நாவு
திக்குகிறது!
முக்காலமும்
மூர்ச்சித்து விழுந்தது!
புலன்களின் ஆழத்திலிருந்து
புறப்பட்டது குரல்;

''தந்தையே!
எனது ஆவியை
உமது கரங்களில்
ஒப்புவிக்கிறேன்!''

தர்மத்தின் வானம்
தலைதொங்கியது!
'நிஷாதம்' மூச்சை
நிறுத்தியது!

●

மனிதக் கூட்டிலிருந்து
வெண்புறா சிறகடித்து
வெளியேறியது!
தரைக்கும், வானுக்குமுள்ள
தாம்பத்தியம் முறிந்தது!
நட்சத்திரக் குடும்பம்
சிதறியது!
அறுந்து விழுந்த பூமி
அதிர்ந்தது!

கற்பாறைகள்
கடுகுகளாக வெடித்தன!
சூரியன் இருண்டு
சூனியத்தில் வீழ்ந்தது!

தேவாலயத்தின்
திரைச்சீலைகள்
திரிந்து கிழிந்தன!
கல்லறைகள் பிளந்து -
கடவுளின் வாரிசுகள்
கண்விழித்தனர்!
அலைகளும், காற்றும்
ஆத்திரமாக மோதின!
இடிகளும், மின்னல்களும்
பூமியை -
மத்தளம் தட்டின!

கலக்கமுற்ற -
காவல் பூனையொன்று
கதறியது;

''கண்டிப்பாக இவர்
கடவுளின் மைந்தனே!''

கொல்கதா -
கொப்புளமாக உடைந்தது!

கார்மேகங்கள்,
கருப்பு மலர் வளையங்களாகக்
கண்ணீர் சிந்தின!

நிலைகுலைந்து
நின்ற பிரபஞ்சம் -
நிதானமாக
மூச்சு விட்டது!

காவல் பருந்துவொன்று -
இறைமைந்தன்
இறந்ததை நிரூபிக்க,
இடப்புறவிலாவில்
ஈட்டியால் குத்தியது!

வெண்மேக விலாவில் -
இரத்தமும், தண்ணீரும்
வாய்காலாக வடிந்தன;
வேத நூல்வரிகள்
விசும்பலுடன் விடிந்தன!

விடிவெள்ளி வீழ்ந்ததால்
வெடித்த இயற்கையைக் கண்டு -
ஆகாயத்தின் விழுதுகள்
அதிசயத்து தொழுதன!

முப்பத்தி மூன்றறை வயது
இளம் கடா இயேசு -
பலியின் கோட்பாட்டை நிறைவேற்றி
பரம சித்தம் நிறைவேற்றினார்,
அலகையின் கையெழுத்தை
அடித்துத் திருத்தினார்!

●

வானவில்லைக் கிழித்த வானரங்கள்!

சரித்திரம் - ஒரு
சகாப்தத்தின் -
சதை நார்களை உரித்து
சரிகை இழைத்தது!

ஒரு -
தேவநெருப்பு -
தன்னைத் தானே
தோலுரித்துக் கொண்ட
துர்பாக்கிய நிகழ்வு!

அடித்தள மக்களின்
அழுக்குகளைப் பொதிசுமந்த
அக்கினிச் சூரியன் -
தன்னைத் தானே
அடித்து சலவை செய்த
அந்தரங்க உடன்பாடு!

எல்லையில்லா
இறை விண்வெளி -
தான் -
சுற்றிவிட்ட பூமிக்கு
சுருக்கமாக சொல்லிமுடித்தச்
சுய சரிதை!

●

திசைகள் பிழிந்த
தேவ திராட்சை ரசத்தை
ஓநாய் உதடுகள்
உறிஞ்சிக் கொண்டன!

விண்ணுக்கும், மண்ணுக்கும்
வீதியாக நீண்ட
வெளிச்ச வானவில்லை கிழித்து -
மனிதக் குரங்குகள்
மாலையாக்கிக் கொண்டன!

சுமைகளை உதைத்து
சுதந்திரத்தை விதைத்துச்
சுற்றிவந்த ஒரு
சுவிசேஷச் சூரியனை
விட்டில் பூச்சிகள்
விழுங்கி விட்டன!

ஒரு -
தாய் கிரகம் தன்,
துணைக் கோள்களை விட்டுத்
தொலைந்து போனது!
காலமோ -
மழைத்துளியை கண்ணீர் துளியாகத் திரித்து,
கடலை சுண்ட வைத்ததாகக்
களிப்படைந்தது!

தாழ்த்தப்பட்ட கிளைகளை
தச்சன் செதுக்கினான்;
தலைகொழுத்த மரங்கள்
தச்சனை செதுக்கின!

●

ஆகாயம் ஒரு
அழகிய புல்லாங்குழலை
அன்பளிப்பாக வழங்கியது;
அறிவிலி பூமியோ அதை
அடுப்பெரித்து குளிர்காய்ந்தது!

மகிமையின் கரம் ஒரு
மலர்செண்டு தந்தது;
மறுகணம் அதை
மந்திகள் தின்றது!

வானம் ஒரு
வாக்குச் சாவடியை திறந்தது;
கருப்பு மனிதமோ அதில்
கள்ள ஓட்டு போட்டது!

●

பூமியின் தாழ்வாரங்களில்
புகுந்து வந்த ஒரு
பூந்தென்றல் -
சிலுவையை ஏணியாக்கிச்
சென்று விட்டது!
இது -
'பிப்பெட்' சிலுவை
பிரசவித்த -
மெய்ஞான விஞ்ஞானம்!

எரிமலையின் மௌனதவத்தை
'ஊமை' என
உற்சாக கூச்சலிடும் மனிதம்,
அது -
வெடிக்கும் தினத்தின்
விலாசமறியாமல்
வெற்றியில் பூரித்திருந்தது!

●

மண்ணுக்குள் புதைக்கப்பட்ட மழைவானம்!

புயலின் நடனத்திற்குப் பின் -
ஆகாயமும், பூமியும்
அலங்கோலமாகக்கிடந்தன!
கொல்கதா மலை
குற்ற உணர்வில் -
பாலைவனமாகப்
படுத்துக் கிடந்தது!
‘அரிமத்தியா’வைச் சார்ந்த
யோசேப்பு -
மனித குமாரனின்
மானசீக மாணவன்!

யோசேப்பு -
ஆன்மீக நந்தவனத்தை
அடக்கம் செய்ய -
ஆளுநன் பிலாத்துவிடம்
அனுமதி வேண்டினான்!

கடவுளின் மனுவைப் போல -
கருணை மனுவைக்
கை கழுவ இயலவில்லை!

அதிகாரச் செங்கோல்
அனுதாபமாக

அசைந்தது!
மரச்சிலுவையும்
மனிதச் சிலுவையும்
பிரித்தெடுக்கப்பட்டன!

ஆகாயத் தீவு -
ஐந்திணைக் காயங்களுடன்
அள்ளி எடுக்கப்பட்டது!

அணைந்து போன
நிலவைச் சுற்றி -
அழுது நிற்கும்
நட்சத்திரங்கள்!

தூளிகட்டிய மரியாள்
துவண்டு கிடந்த ரோஜாவுக்கு
வேலிகட்டி விம்மினாள்!

இரவில் பாடம் பயின்ற
நிக்கொதேமு -
பகலை அடக்கம் செய்ய
பரிதவித்து வந்தான்!

கரியப் போளமும்
வெள்ளை போளமும்
கலந்த -
நூறு இராத்தல்
வாசனைத் தைலம்,
வான தேகத்தில் பூசப்பட்டது!

மேகதீபம் -
மெல்லிய துணியால்
சுற்றப்பட்டது!

அன்று -
அஃறிணைகளின் நடுவே
அவதரித்த அந்த -
ஆகாயக் கவிதை,
இன்று -
உயர்திணைகளின் நடுவே
ஊமையாக உறைந்து கிடக்கிறது!

உலகத்தின் தலையில் விழுந்த
அந்த -
ஒற்றை மழைத்துளியை
கண்ணீர் துளிகள் சுமந்து கொண்டு
கல்வாரிவிட்டு இறங்கின!

தோள்களில் சிலுவை சுமந்து
துயரத்துடன் ஏறிச் சென்ற
தூரிகை -
தோள்களால் சுமக்கப்பட்டு
துவண்டு இறங்கி வருவதைக் கண்டு -
கல்வாரி மலர்களும்
கண்ணீர் சிந்தின!

பாதையின் இருபுறங்களிலும்
இப்பொழுது -
ஈக்கள் கூட இல்லை!
ஆயினும் சில -
இதயங்கள் கூடி
ஒரு உதயத்தைச் சுமந்துவந்த
உருக்கமான ஊர்வலமது!

●

கன்மலையின் மார்பில்
புனிதமலை புதைக்கப்பட்டது!
அது -
புதைக்கப்பட்ட
உடலல்ல;
விதைக்கப்பட்ட
உயிர்!
அறுகப்பட்ட
கதிரல்ல;
புதைக்கப்பட்ட
புதிர்!

●

வானம் புதைக்கப்பட்டாலும்
வல்லூறுகளுக்கு
உறக்கமில்லை!
பிற்போக்கு பிணங்கள்
பிலாத்துவை நெருக்கின;

''ஆண்டவனே!
அவன் -
''மூன்று தினங்களுக்குப்பின்
முளைத் தெழுவேன்'' - என
முழங்கியது நினைவிருக்கிறது!
அவனது மாணவர்கள்
அவனது உடலைக் களவாடி,
''மரித்தோரிலிருந்து
உயிர்த்தான் - என
மக்களிடையே அறிவிக்கலாம்!
முன்னெச்சரிக்கையாக
மூன்று தினங்கள் கல்லறைக்கு
முத்திரை வைத்து -
கடுமையான
காவல் காக்க வேண்டும்!

தந்திர நரிகளின்
'தலைவலி ' ஊளைகளைத்
தவிர்த்தான் பிலாத்து;

''உங்களுக்கும் காவல் படை
உண்டே?
உங்களால் இயன்றவரை
உடலை பாதுகாத்துக் கொள்ளுங்கள்!''

வைக்கோல் பொம்மைகள் -
வசந்தம் புதைக்கப்பட்ட
கல்லறையின் வாசலில்
காவலுக்கு வைக்கப்பட்டன!

அது -
எரிமலைக்குப்போட்ட
இலவம்பஞ்சு வேலி!

●

பாகம் – 6

வசந்த காலம்!

(தூய்மையும் – துதியும்)

பூமியின் தலையில் முளைத்த ஆச்சரியக்குறி

இருள் மௌனத்தை
அடைகாத்து,
இரு தினங்கள் கழிந்தன!

மூட பூமியின்
மூர்ச்சையை தெளிவிக்க
மூன்றாம் நாள் வந்தது!
சூரியன் -
முகத்தைக் கழுவிக்கொண்டு
முற்றத்திற்கு வந்தது!

கண்ணீரில்
கசங்கிக் கிடந்த வானம் -
மடிப்புகளை நீவிக் கொண்டு
மலர்ந்தது!

இயற்கை -
நிகழப் போகும் ஆச்சரியத்திற்காக
நெட்டி முறித்துக் காத்திருந்தது!

மகதலேனா மரியாளும்,
மற்றொரு மரியாளும் -
கல்லறையின் மீது

வாசனைத் தைலம் தெளிக்க
வருத்தமாக வந்தனர்!
பூக்கள் நுழையும்போது
பூமி அதிர்ந்தது!

குட்டி பூகம்பத்தில்
குழம்பியது தோட்டம்!
காவல் கூலிகள் -
தூண்டில் மீன்களாகத்
துள்ளி விழுந்தனர்!

கல்லறையைச் சுற்றி
கண்கூசும் வெளிச்சம்!
இறையரசிலிருந்து
இறங்கிய தூதன்
மூடிக்கிடந்த கல்லறையின்
முகத்திரையை விலக்கினான்!
காகிதப் பந்தாக
கற்பாறை உருண்டது!
மின்னலைப் போல -
தேகம் கொண்ட திருத்தூதனைக் கண்டு,
தென்றல்கள் இரண்டும்;
திகைத்து நடுங்கின!

விண்வெளிப்பறவை
வெளிச்சத்தைச்
சாந்து பூசியது;

''அஞ்சவேண்டாம்!
இறந்த இயேசு
இங்கில்லை!
உரைத்தபடியே
உயிர்த்து விட்டார்!
அவர் -

‘‘மரித்தோரிலிருந்து
உயிர்த்தார்’’ என,
மாணவர்களுக்குச் செய்தியை
மகிழ்ந்து அறிவியுங்கள்!
கர்த்தர் எழுந்து
கலிலேயாவில்
காலடி வைக்கிறார்!
அங்கு காண்பீர் -
ஆண்டவர் இயேசுவை!’’

வெளிச்ச மூடுபனி
விலகி மறைந்தது!

உறைந்து நின்ற
சிற்றோடைகளுக்கு
உயிர் சலசலத்தது!
இது -
விழிகளின் வீதிகளில் நிகழ்ந்த
வெளிச்சக் கூத்தா?
நங்கைகள் இருவரும்
நம்பவில்லை!
சிட்டுக்குருவிகள் பறந்து
சீடர்களுக்கு முரசடித்தன;

‘‘கர்த்தரின் உடலைக்
கடத்திவிட்டனர்!
தேகம் வைக்கப்பட்டிருக்கும் இடம்
தெரியவில்லை!’’
வேத மாணவர்கள்
வேங்கையின் பிரதிகளாக
விரைந்து வந்தனர்!
எருசலேமின் இதயம் போல
காலியான கல்லறை -
கண்களுக்குள்
கத்தி சுழற்றியது!

பேதுரு கல்லறைக்குள்
பிரவேசித்து -
சுற்றிவைக்கப்பட்ட ஆடைகளை
சுமந்து வந்தான்!

கூட்டுப் புழு -
பட்டுப் பூச்சியாக
பரிணாமித்ததை அறியாமல்
பயந்த சீடர்கள் -
பதட்டத்தின் கைப்பிரதிகளாக
பரவிச் சிதறினர்!

மகதலேனா மரியாள்
மட்டும்....
ஒற்றைத் தாமரையாக
உள்ளங்கசிந்து நின்றாள்!
மீண்டும் -
காற்றின் மோட்சம்
கதவு திறந்தது!
கண்ணீரில் பூத்து
கண்கள் கசங்க நின்றவளை -
வெளிச்சப் பறவைகளிரண்டு
விசாரித்தன;

''பெண்ணே!
இங்கு -
ஏன் அழுகிறாய்?''

திடுக்கிட்ட பெண்மான்
திக்கியது;

''என் -
இறைவனின் உடலை
எதிரிகள் கடத்திவிட்டனர்!
தேகம் இருக்குமிடம்
தெரியவில்லை!''

மேகங்கள் -
மின்னி மறைந்தன;
வானமே -
வாசலுக்கு வந்தது!

உன்தை யாத்திரையில்
உடன்வந்த பறவைகள் -
உயிர்தெழுந்த ஒளியை
ஊருக்குள் தேடின!

தன்னைப் புதைத்தவிடத்தில்
தைத்ததுபோல் நிற்கும்
தையலுக்குத் -
தரிசனம் தந்தது
தணலில் புடமிடப்பட்ட
தங்க வைகறை!

தரையில் நிற்கும் சூரியன்
தாமரையை வினவியது;

''பெண்ணே!
ஏன் அழுகிறாய்;
எவரைத் தேடுகிறாய்?''

பூவின் கண்களுக்கு -
பூட்டு திறக்கவில்லை!
புலம்பியது புள்ளிமயில்;

''ஐயா,
தோட்டக்காரரே!
என் -
கர்த்தரை நீர்
கடத்தியிருந்தால்
கருணையுடன் கூறும்!
உடனே விரைந்து
உடலை மீட்டுக் கொள்கிறேன்!''

ஆதியின் ஜோதி
அதட்டியது;

'மரியாளே!'

விழிகளைப் பின்னியிருந்த
விலங்குகள் தெறித்தன!
மலர்களின் மத்தியில்
மரியாள் பூத்தாள்;

'போதகரே!'

'ரபூனி!'
வார்த்தைகளுக்குள் சிக்காத
வசந்த தரிசனம்!

துள்ளி எழுந்து
தொட முயன்றவளை
தள்ளி நின்று
தடுத்தது பிரகாசம்;

''என்னைத் தொடாதே!
இன்னும் என் தந்தையிடம்
ஏறிச் செல்லவில்லை!

மனிதகுமாரனின் உயிர்தெழுதலை
மாணவர்களுக்குக் கூறு!
இறைதந்தையிடம்
ஏறிச் செல்லப்போகிறேன்
என்பதை அறிவி!''

தளும்பி மறைந்தது
தங்கநிற ஊற்று!
மரியாளின்
உள்மனசுக்குள்
ஒருலட்சம் வண்ணத்துப் பூச்சிகள்!

பூந்தென்றல் -
புயலாக உருமாறிப்
புறப்பட்டது!
மாணவர்கள் -
கலக்கத்தை விழிகளில்
கயிறு திரித்துக் கொண்டிருந்தனர்!
தரிசன நிகழ்வை
தழுதழுக்க விவரித்தது
தாரகை!

''கர்த்தரின் தேகம்
காணாமல் போனதால் -
மரியாளுக்கு
மனச் சிதைவோ?''

நம்பிக்கையில்லா ஆடுகள் -
அவிசுவாசத்தை
அசைபோட்டன!
தாவரத்தில் பூமலர்ந்ததை
தரைக்கும் கீழ் -
உறங்கிக் கொண்டிருந்த வேர்கள்
உணரவில்லை!

●

கள்ளப் பருந்துக்கள் பரிசேயரின்
கபாலக் கூடுகள் போல
காலியாகிக் கிடந்த -
கல்லறையைக் கண்டு
கலக்கமுற்ற காவலர்கள்,
தலைமை செயலகத்திற்கு
தகவல் தர -
தந்திகளாக முந்தினர்!

பூபாளம் முளைத்ததை
புரிந்து கொண்ட புழுக்கள் -
இயந்திர நாய்களுக்கு
எலும்புகளை வீசி
ஏவின!

நாடெங்கும்
நச்சுப்புகை பரவியது;

''கண்கள் சொக்கியபோது -
கர்த்தரின் சீடர்கள்
கள்ளத்தனமாக அவருடலைக்
கடத்தி விட்டனர்!

நாய்கள் பூசிக்கொண்ட
நகப் பூச்சை
நம்பவில்லை நாடு!

நிஜமும், நிழலும் -
மக்களை
'மத்து' கடைந்தன!

●

சாலையில் மிதக்கும் சமுத்திரம்!

அது -
சூரியன் தன்
சாம்பலை வடிகட்டியச்
சரித்திரம்!

பூமிக்குள் சூலான ஒரு
இறைவானத்தின்
இரண்டாம் பிரசவம்!
எரிமலையின் -
உதட்டில் பூத்த
உஷ்ணப் புன்னகை!

கருப்புச் சிப்பி துப்பிய
நெருப்பு முத்து!
கல்லறை பிரசவித்தக்
கருவறை!
மண்ணின் -
வயிற்றைக் கிழித்து வெளியேறிய
வாயு விமானம்!

விழிகளை விட்டு
வெளியேறி உலவிய
விசித்திரக் கனவு!

இந்த -
வீரிய வெளிநடப்பின்
வெப்பம் தாங்காமல்
வேர்த்தது பூமி!

●

எருசலேமின்
இடுப்பில் உள்ள -
'எள்'ளின் குழந்தையான
'எம்மாவு' கிராமத்தின்
எல்லைச் சாலை!

விசித்திர உயிர்த்தெழுதலை
விவாதித்தபடி
வேத மாணவரிருவர்
விரைந்தனர்!
சமுத்திர வெளிச்சம்
சகபயணியாக அவர்களுடன்
சங்கமித்து அலைவீசியது;

''வழிமுழுதும் நீங்கள் -
வருத்தமுடன்
வாக்குவாதம் செய்வதென்ன?''

உடன்வரும் ஒளியை
உணரவில்லை
ஆன்மீக அகல்கள்!

கவலைச் சேணம்
கண்களை மறைத்தது!
அடியார்களின் கேள்வி
ஆத்திரமாக அவதரித்தது;

''எருசலேமில்
இதுவரை நிகழ்ந்ததை
அறியாத நீ என்ன
அந்நியனா?''

ஆகாயத்தின் உதட்டில்
அப்பாவிச் சொற்கள்
கைவீசின;
‘எவை?’

சங்கீதத்தை அறியாத
காற்றா?
வேதமுகக் கண்ணாடிகளில்
வியப்பின் பிரதிபலிப்பு!

நிகழ்த்திய அரூவத்திற்கே,
நிகழ்ந்தது விவரிக்கப்பட்டது!

அன்னைக்கே பால் புகட்டிய
அறியாக் குழந்தைகள் -
கடந்தகால நினைவுகளை
கண்ணீரில் வடிகட்டின;

‘‘நசரேயனாகி இயேசு -
உன்னத் தந்தைக்கும்
உலக மக்கள் முன்பும்,
வாக்கிலும்
வழக்கத்திலும்
வல்லமையான தீர்க்கதரிசி!

தலைமை ஆசாரியர்களும்
தத்துவ ஞானிகளும்
மனதுவேஷம் கொண்டு
மனித குமாரனைக் கொன்றனர்!

இயேசுவே -
இஸ்ரவேலுக்கு,
விடுதலையளிப்பவர் என
விசுவாசித்தோம்!

இவை நிகழ்ந்து
மூன்று தினங்கள்
முடிந்தன!

எங்களைச் சேர்ந்த
இருபெண்கள் -
கல்லறையில் அவருடலைக்
காணாமல்,
''அவர் -
மரித்தோரிலிருந்து
உயிர்த்தார்!'' - எனத்
தேவதூதன் அறிவித்ததாக
தெரிவித்தனர்!
கல்லறைக்கு திரண்டுசென்று
கவனித்தோம்!
மங்கைகள் கூறியதுபோல
மனிதகுமாரனைக் காணவில்லை!

நிலத்தடி நீரோடை
பூமியின் தலையில்
பொங்கியது;

''வேதவாக்குரைப்போர்
விளக்கிய நிகழ்வுகளை
விசுவாசிக்க இயலாத -
மந்தபுத்தி
மனதுக்காரர்களே!
மனிதகுமாரன் -
மரணமடைவதும்
மகிமையடைவதும்,
வேதவிதியல்லவா?''

கண்களின் சவ்வுப்படலத்திற்கு
காந்த சிகிச்சை
துவங்கியது!

தன்னைக் குறித்த
தத்துவ தரிசனங்களை -
சிலுவைச் 'சிரஞ்சி'

சீடர்களின் சிந்தனையில்
சிவப்பு அணுக்களைச்
செலுத்தியது!

ஆயினும் -
மாணவப் பறவைகளின்
மனக்கண்கள்
மனிதகுமாரனை தரிசிக்கவில்லை!

‘எம்மாவு’ கிராமம்
எதிரில் நின்றது!
சிஷ்ய வெண்புறாக்கள்
சிறகுகளால் மறித்தன;

‘‘அந்தி சாய்கிறது;
எம்முடன் இரவு தங்கி
உணவருந்தலாம்!

ஒளிரதம் -
உடன்பட்டு
ஊர்ந்தது!

●

இரவுக் கூந்தலை
உலர வைத்தது
ஊர்!

மேஜையின் முன்
மேகம்!
அருகில் இரு
அம்பு மின்னல்கள்!

அருணோதயக் கரங்கள்
அப்பத்தை பிட்டு
ஆசீர்வதித்து
அடியார்களுக்குத் தந்தன!

தண்ணீரில் மூழ்கியிருந்த
தாமரைகள்
தலை தூக்கின!

அப்பத்தைப் பிட்டுத்தரும் பாணி
ஆண்டவர் ‘இயேசுவுடையதல்லவா’?

வழியெங்கும்
வகுப்பெடுத்தது
வானமா?
பிரம்மித்த சீடர்கள்
பேசும்முன்
பிரகாசம் மறைந்தது!
ஆன்மீக ஆடுகள் -
அற்புத அனுபவத்தை
அசை போட்டன;

‘‘அவர் -
வேதவசனங்களை
விவரித்த பொழுதே
நம் -
இதயங்கள் கொழுந்துவிட்டு
எரியவில்லையா?’’

உயிரை சந்தித்த
உடல்கள் -
ஒளியின் தரிசனத்தை
உடன் பிறப்புகளிடம்
உதடு துடிக்க விவரித்தன!

மனங்குழம்பிய
மாணவர்களின்,
நூல்கண்டுச் சிந்தனைகளுக்குள்
நூறு முடிச்சுக்கள்!

●

தழும்புகளைச் சுமந்த தத்துவத் தேகம்!

அக்கினிப் பிரசவம்
நாட்டின் -
நரம்பு முடிச்சுக்களுக்குத்
தீவைத்தது!

இதயங்கள் அழுகிய
இருட்டுப் பூனைகள் -
இரையெடுக்க அலைந்தன!

கூட்டின் கதவுகளை மூடி
குயில்கள் ரகசியமாகக்
குழுமியிருந்தன!

உயிர்களின் இடுப்பில்
கயிறுகள் கட்டி
கலங்கி உறைந்திருந்தன
கர்த்தரின் போர்க் கருவிகள்!

திடீரென -
வீட்டுக்குள்
வெள்ளி மழை!

பூக்கள் கூடிவொரு
சொர்க்கத்தை
சுமந்து வந்ததுபோல்
சுற்றிலும் பரவசம்!

பிரகாசவானத்திலிருந்து
பிறைநிலவுகள் உதிர்ந்தன;

''உங்களுக்குச்
சமாதானம்!''

ஆவியைக் காணுவதாக
அஞ்சி -
நீதியின் வாரிசுகள்
நெஞ்சுக்குள்
நீராவி விட்டன!

படபடத்த
பட்டுப் பூச்சிகளைக் கண்டு -
தென்றலின் சுவாசம்
திகைத்தது;

''கலங்குவது ஏன்?
உங்கள்
அடிமனதில்
ஐயம் எழும்புவதேன்?
என் -
உடலைத் தொட்டு
உணருங்கள்!
எலும்பும், தசையும்,
எந்த ஆவிக்கும்
இராதே?''

மாணவ அலைகளின்
மனதுக்குள் குழப்ப நுரை!
உதறும் நட்சத்திரங்களை
உற்சாகப்படுத்த -
இயல்பாகவினவியது
எருசலேமின் எழுப்புதல்;

''உண்பதற்கு என்ன
உணவிருக்கிறது?''

அச்சம் விலகியப் பூக்கள்
ஆனந்தத் தேன் சுரந்தன!
மீன்களும், தேனும் -
பரிசுத்த அரசகுமாரனுக்குப் பரிமாறப்பட்டது!

உணவருந்திய
உப்பளக் கண்ணீர்த் தீவின்
உதட்டுக் கரையில் -
வார்த்தைகள் கட்டுமரங்களாக
வழுக்கி மிதந்தன;

''உங்களோடுநான் -
வாழ்ந்த வருடங்களில்
வழங்கிய வசனங்களின் -
வாசல் திறந்தன!

மோசேவின் நீதியிலும்
வேதங்களிலும்
கீதங்களிலும் -
என்னைக் குறித்த
முத்திரை வசனங்கள்
முடிவுறவேண்டும்!

மனிதகுமாரன் பாடுபட்டு
மரித்தோரிலிருந்து உயிர்க்கவும் -
எருசலேம் மற்றும்
எல்லா தேசத்தினரும் -
''மனந்திரும்பி
மன்னிப்பு பெறுங்கள்- எனும்
ஆன்மீக அறிவிப்பு,
ஆகாய மைந்தனின் பெயரால்
அறைகூவலாக வேண்டுமென
ஆகமம் அறிவுறுத்துகிறது!

நீங்களே -
நிகழ்ந்த அற்புதங்களுக்கு
நித்திய சாட்சிகள்!

வானத் தந்தை எனக்கு
வாக்களித்ததை உங்களுக்கு
வழங்கப் போகிறேன்!
வானத்தின் வல்லமை
உங்களுக்கு -
வழங்கப்படும் வரை
எருசலேமிலேயே
இயங்கிக் கொண்டிருங்கள்!''

காற்றின் 'கோலாஜ்' ஓவியம்,
கலைந்து மறைந்தது!
சூரியன் மறைந்த பின்னும்
வெளிச்சம் வீசுவதுபோல -
கனவுப் பிரகாசம்
கண்களில் மிச்ச மிருந்தது!

ஊமையான நாவுகள்
உணர்ச்சி பெருக்கில்
ஊஞ்சலாடின!

தேவதரிசனம்
தென்றலாய் வீசியபொழுது -
'திமுமு' எனும்
தோமா இல்லை!
மின்னல்கள் -
கூட்டணி அமைத்து
கூட்டுக்குள் தோன்றியதை
மாணவன் தோமா
மறுதலித்தான்!

தோமாவின் –
சந்தேக விழிகளின்
ஜன்னல்கள் அலைமோதின ;

''ஆண்டவரின்
ஆணித் தழும்புகளையும் –
விலாத் தழும்பையும்
விரல்களால் ஸ்பரித்தாலொழிய
விசுவாசிக்க மாட்டேன்!''
ஆணியடித்து
அமர்ந்தான் தோமா!

●

எட்டு தினங்கள் –
குட்டி எரிமலைகளாக
கொதித்து அடங்கின!

மறுபடியும் –
பறவைகளின் கூட்டுக்குள்
பனிச்சரிவு;

''உங்களுக்குச்
சமாதானம்!

தோமாவின் விழிகள்
தோகை விரித்தன!
அது –
பிற்போக்கு மாடப் புறாவுக்கான
பிரத்தியேக் கண்காட்சி!
வீட்டுக்குள் முளைத்த
விருட்சம் –
விழுதுகளை விரித்தது;

''தோமா!
தைரியமாக நெருங்கி
தழும்புகளைத் தொடு!

அவிசுவாசியாக இராமல்
விசுவாசியாக இரு!''

கரங்களை விரித்தது
கற்பக வயல்வெளி!
இலவம்பஞ்சு மேனியில்
ஏர்முனை வடுக்கள்!

உள்ளங்கைப் பூக்களில்
தேன் சிட்டானான் -
திதிமு!

மின்சாரக்குளத்தில்
'தோமா' மீன்
துள்ளியது;

''ஆண்டவரே!
என் இறைவனே!''

மெட்டுக்குள்
மேகங்கள் மிதந்தன;

''தோமா! - நீ
பார்த்து விசுவாசித்தாய்!
பாராமல் விசுவாசிப்பவர்கள்
பாக்கியவான்கள்!

நறுமணத் தென்றல் -
நகல்களின் நாசிகளில்
மூச்சை ஊதியது!
அது -
நீதிநெருப்பு கொழுந்துவிட
துருத்திகளுக்குள் ஊதப்பட்ட
துருவப்புயல்!

தோமாவுக்கு மட்டுமல்ல;
அது
இந்தியாவிற்குமான
இறைக் காட்சி!

மலர்களின் கருவறை
மறைந்தது!

●

துறைமுகத்தில் தோன்றிய இறைமுகம்!

பூமிக் கிண்ணத்தில்
உப்பு மதுவாக -
நுரைக்கும் கடல்!

தேகமெங்கும் மணலாக
'திபேரியா' கடற்கரை!
நட்சத்திரங்களும்
புரண்டு படுக்கும்
நடுநிசி!
எலும்புகளில்
இறங்கும்
இளங்குளிர்!

மனிதர்களைப் பிடித்தவர்கள்
மீன்களைப் பிடிக்க
மீண்டும் முயன்றனர்!

வலையைச் சுமந்த
வானம் பாடிகள் -
கடலின் முற்றத்திலேயே
கட்டுமரத்தை நிறுத்தினர்!

இரவு முழுதும் -
தண்ணீருக்கும், வலைக்கும்
தர்மயுத்தம்!

சுருக்குப் பையாக
சூம்பிக் கிடந்தது
வலை!

அலைகளின் நடனம்
ஆத்திரமூட்டியது!

வேட்டைக்காரனுக்கு முன்னால்
விரையும் நாயைப் போல் -
கடலின் கிழக்கில்
கதிரவனின் பெருமூச்சு!
தோணி -
தொங்கிய முகத்துடன்
நின்றது!

குளிரைக் கிழித்துவந்தது
ஒரு -
கொழுந்து நெருப்பு!
அது -
தண்ணீர் கடலுக்கு
முன் நின்ற
தத்துவக் கடல்!

கரையில் நின்று -
உரத்துக் கூவியது
ஒளிப்பெட்டகம்;

''பிள்ளைகளே!
உண்பதற்கு எதுவும்
உண்டா?''

வெறுப்பு நெருப்பில் -
விழுந்தது நெய்!
வலையின் மீதுள்ள
வருத்தம் -
வார்த்தைகளில் தெறிந்தது;
'ஒன்றுமில்லை!'

சங்கீதக் குரல்வழியும்
சாதகப் பட்சியின்
விலாசம் அறியவில்லை
வேத மாங்குயில்கள்!
வாழ்க்கையின்
திசைகாட்டி முள் -
வயிற்றுக்கும்
வழிகாட்டியது;

''வலது புறமாக
வலையை வீசுங்கள்!''

கட்டளையின் மிடுக்கு
கரங்களை முடுக்கியது!

மறுபடியும் -
கடலின் மன்றத்தில்
வலையின் வழக்கு!

இம்முறை -
'வாய்தா' வாங்கவில்லை
வலை!

நூற்றி ஐம்பத்தி மூன்று
கொழுத்த மீன்களைக்
கொத்தியெடுத்த வலையின் -
பளுவைத் தாளாமல்
படகு நடனமாடியது!

மும்முர வேட்டையிலும்
மூளைக்குள் ஒரு வலை!

ஆச்சரியங்களை
ஆச்சரியப்படவைக்கும்
அதே -
அற்புத அடையாளம்!
மணலில் பூத்து நிற்பது
மனிதமல்ல;
மகத்துவம்!

புரிந்து கொண்ட சீடனொருவன்
பூகம்பமாக வெடித்தான்;
‘‘அவர் -
ஆண்டவர்!

கூவிமுடிக்கும் முன்
தாவினான் பேதுரு!
அலைகளும் மிரண்டு
வழிவிட்டன!

கனத்த மடியுடன்
கட்டுமரம்
கரை தட்டியது!

சமையலுக்காக
நெருப்பை மூட்டி
சயனித்திருந்தது சரிதம்!
தத்துவ மீனவர்கள்
தரையிலேயே முத்துக்குளித்தனர்!
வேதாந்தச் சந்திரோதயம்
வேண்டியது;

‘‘மீன்கள் சிலவற்றை
எடுத்து வாருங்கள்!’’

ஆற்றங்கால் வானம் -
அப்பத்தையும், மீனையும்
பிரார்த்தித்துப்
பிட்டுத் தந்தது!

மூன்றாம் தரிசனத்தில்
முகம் பிரகாசிக்க
மௌனித்தனர் சீடர்!

சீமோன் பேதுருவுக்கு
சிறப்பு அழைப்பு
பிறந்தது;

‘‘சீமோனே!
மற்றவரிலும் -
மனிதகுமாரன் மீது
மனம் நேசிக்கிறாயா?’’

இருதயத்தை பூவாக
ஏந்தினான் பேதுரு;

‘‘ஆம் ஆண்டவரே!
உள்ளத்தின் ஆழத்திலிருந்து
உம்மை நேசிப்பதை
உணருவீர்!

பற்றுறுதியின் ஆழத்திற்கு
பதவி வழங்கப்பட்டது;

‘‘என் -
ஆடுகளை நீ
அன்புடன் மேய்ப்பாயாக!’’

இறையியலின் ரிஷிமூலம்
இரண்டாம் முறையாக
ஏறிட்டு அழைத்தது;

‘‘சீமோனே!
மற்றவரிலும் -
மனித குமாரன் மீது
மனம் நேசிக்கிறாயா?’’

‘‘ஆம் ஆண்டவரே!
உள்ளத்தின் ஆழத்திலிருந்து
உம்மை நேசிப்பதை உணருவீர்!’’

‘‘என்
ஆடுகளை நீ
அன்புடன் மேய்ப்பாயாக!’’

முற்றத்து முக்கனி
மூன்றாம் முறையாக
மொழிந்தது;

''சீமோனே!
மற்றவரிலும் -
மனித குமாரன் மீது
மனம் நேசிக்கிறாயா?''

திரும்பத் திரும்ப விழுந்த
தீக்கணைகளால் -
உடைந்த பேதுரு
உள்ளத்தைப் பிழிந்தான்;

''ஆண்டவரே!
அனைத்தையும் நீர்
அறிவீர்!
உள்ளத்தின் ஆழத்திலிருந்து
உம்மை நேசிப்பதையும்
உணருவீர்!''

நேர்முகத் தேர்வுக்கு -
முகில் உதடுகள்
முற்றுப்புள்ளி வைத்தன;

''என்
ஆடுகளை நீ
அன்புடன் மேய்ப்பாயாக!''

அக்கினிப் பரீட்சையில்
மூன்று முறை மறுதலித்து
தோற்றவனுக்கு -
மனிதகுமாரன் வைத்த
மும்முறை
மறுஉறுதிமொழியது!

தேர்வில் வென்றவானம்பாடிக்குத்
திசையில் எல்லை -
தீர்க்கதரிசனமாகத்
தெரிவிக்கப்பட்டது;

''சீமோனே! - நீ
இளம்பருவத்தில்
எண்ணிய இடங்களுக்கு
இறக்கை விரிப்பாய்!
தள்ளாத பருவத்தில் நீ
தளர்ந்த கரங்களை நீட்டுவாய்!
இன்னொருவன் உன் -
இதயம் விரும்பா இடத்திற்கு
இழுத்துச் செல்வான்!''

திகைத்து நின்றவனின்
தோள்களை தட்டியது
துருவ விண்மீன்;

''என்றும் என்னைப்
பின் தொடருவாயாக!

அந்தச் -
சித்தாந்தக் கட்டளை
சீமோனுக்கு மட்டுமல்ல -
நசுங்கிக் கிடந்த பூமியின்
நான்கு திசைகளிலும்,
நற்செய்தியாக நங்கூரமிட்டது!

●

ஆகாயம் திறந்தது - அருணோதயம் நுழைந்தது!

வானம் கதவு திறந்து
வரவேற்பு வளையம்
வைத்தது!
பனிரெண்டு முறைகள் -
தளங்கள் பலவற்றில்
தரிசனம் தந்தது,
தத்துவப் பௌர்ணமி!

●

நிலவைப் பூச்சூடிக் கொண்ட
கலிலேயாவின்
ஒலிவமலை!

அடியார்களும், மக்களும்
மலையின் மார்பில் -
தேயிலைச் செடிகளாக
திரண்டு நின்றனர்!
பூமியின் தலையில் நின்ற
புதுக்கவிதை -
சரித்திரத்தை உள்ளடக்கி
சந்தங்களை இழைத்தது;

‘‘மண்ணிலும், விண்ணிலும் -
அனைத்து அதிகாரங்களும்
அடியேனுக்குண்டு!

ஆன்மீகத்தை விதைத்து
அனைத்து மக்களையும்
அடியேனின் மாணவர்களாக்குங்கள்!

தந்தை, மைந்தன்,
பரிசுத்த ஆவியானவர் பெயரால்
உலக மக்களுக்கு
உன்னதத் திருமுழுக்கு வழங்கி
நான் -
உங்களுக்கு உரைத்த
நற்செய்திகளை -
மக்கள் பின்தொடர
மண்ணுலகை உழவுசெய்யுங்கள்!

யுகத்தின் -
எல்லைவரை
என்றும் உங்களது
இதயங்களில் உலவுவேன்!

சிறகுகளை உயர்த்தி
பூமியை ஆசீர்வதித்து
புறப்பட்டது,
புனித வெண்புறா!

ஒலிவ மலை -
பரிசுத்த ஒளியில்
படகாக மிதந்தது!

வானத்தில் மிதந்த
வசந்த காலம் -
ஆதித்தந்தையின் வலப்புறத்தில்
அரியாசனமிட்டு அமர்ந்தது!

காரியமும், கருவியும்
கலந்தது!
மண்ணுக்கு அனுப்பட்ட
ஒரு -
மனித சங்கீதம்,
ஆதியின் நாபிக்கமலத்தினுள்
அமிழ்ந்து கரைந்தது!

சுற்றமறந்த பூமி -
சுவிசேஷ வானத்தை
ஏக்கமுடன்
ஏறிட்டு பார்த்தது!

●

அலைகளின் ஆசுவாசத்திற்குப் பின்....!

திசைகளைத் திறந்து வைத்த
தேவ மின்னலே!

ஒரு பெரும் சிறகு
முறிந்து விழுந்த
சில நிமிடங்களின்
அமிழ்தலுக்குப் பின் -

எழுதுகோல் தன்
உள்ளீட்டுப் பிரவாகத்தின்
மறுபதிவிற்கு
மன்றாடுகிறது!

சிலுவையாகச் செதுக்கப்பட்ட
ஒலிவமரத்தின் நிழலில் -
இளைப்பாறும் எழுத்துக்கள்!

கி. பி. யின் துவக்கத்திலிருந்து,
கானகங்களிளும்
கடற்கரைகளிலும்
முறிந்த சிறகுகளுடன்
முனங்கிப் பறந்த
குயிலின் நாபியிலிருந்து
கோடி கீதங்கள்!

பாவங்களின் குப்பைக் கூடையான
இருதயத்தில்
எச்சில் துப்பிச் சென்ற
இரவுகள்
இறந்து போயின!

முட்களை மேய்ந்து
கள்ளிச் செடிகளில்
பாலருந்தி -
உம்மை துவேஷித்த
உதடுகள்,
சீறிப்பாய்ந்த
சித்தாந்த வெள்ளப் பெருக்கில்
மூழ்கிப் போயின!

இது நிஜம்!

தலைகீழாய் தொங்கிய தற்குறிதனங்கள் -
ஜன்னல் திறந்து விழுந்த
வெளிச்சக் கீற்றுகளில்
கிறீச்சிட்டு வெளியேறின!

●

கூச்சல்களில்
மூழ்கிப்போன
சங்கீத மௌனமே!
இருண்டு கிடக்கும்
இந்த வாசலை
வெளிச்ச ராகங்களால்
மொழுகி விடு!

●

பாவங்களைச் சுமக்கும் பல்லாக்குத் தூக்கிகள்!

வானுக்கும் பூமிக்கும்
தொப்புள் கொடியாகத்
தொங்கிய வெளிச்சமே!

காற்றின் நடனத்திற்குப் பின்
கடற்கரையில் சிதறிய
கழிவுகளாக...
மனிதம்!

நான்கு திசைகளிலும்
நரகல் நிரம்பிய
கல்வாரிகள்!

விஷ நீலத்தை
வேஷமாகத் தரித்து
வெளிறிய முகங்கள்!

தொலைக்காட்சிப்
பெட்டிகளிடம்,
தோற்றுப் போன
வேதாகம வரிகள்!

அன்றாட ஆகாரத்தை
ரெஸ்டாரண்டுகளில் விற்கும்
கண்ணியவான்கள்!

அயலானின் மனைவிகளையும்
அயல்நாட்டு கார்களையும்,
இச்சிக்கும் இச்சாதாரிகள்!

'அன்பே பிரதான'மான
ஆத்துமாக்களின் இல்லங்களில்
''அப்படி போடு!''

கல்வாரி மலையை
சுற்றுலாத் தளமாக்கிய
வசூல் வழிகாட்டிகள்!

எருசலேமில் எங்கும்
'பிளாட்' வாங்காத,
உமது நாமத்தால்
திருத்தோட்டங்கள்!

இரத்த நிலத்திலும்
'காம்ளெக்ஸ்' கட்டும்
கரும்புள்ளிகள்!

கெட்ட குமாரர்களுடன்
தானும் புறப்பட்டுச் சென்ற
தகப்பன்கள்!

திராட்சை ரசத்தை
'விஸ்கி'யாகமாற்ற
வேகம் காட்டும்;
வேஷ விசுவாசிகள்!

சாகக் கிடக்கிறவனைக் கண்டு
சாதிகட்டுமானத்தில்,
விலகிச் செல்லும்
சமாரியர்கள்!

பிரசங்க கூண்டுக்கும்
நீதிமன்ற கூண்டுக்குமிடையே
ஆடுபுலி ஆட்டம் -

கருப்பு அங்கிகளிடம்
காணிக்கைகளை இறைக்கும்
வெள்ளை அங்கிகள்!

உடன்படிக்கைப் பெட்டிகளில்
கட்டு கட்டாய்
கரன்சி நோட்டுகள்!

அறுப்பின் பண்டிகையின்போது
அப்பங்களைக் குறித்தல்லாமல் -
'கட்லெட்டுகளை குறித்து
கவலை கொள்ளும்
மாதர் சங்கங்கள்!

'மைக்'கில் பேசும்
'மாண்ட்ரெக்'குகளின்
மாயாஜால பரவசத்தில்
மக்கள் வெள்ளம்!

முகத்தில் துப்பினாலும்
முறுவலித்து -
ஆன்மீகம் சுவைக்கும்
அழுக்கு நாவுகள்!

இந்த
'வெள்ளைக்காலர்'
விஷமிகளால்
'போலியோ' வில் சூம்பிப்போனது
சிலுவை!

●

வளிமண்டலத்தின்
கருவறையே!
வக்கிரங்கள் குழலூத
வாழ்க்கை கூத்தாடுகிறது!

ரத்தக் கட்டியாய் சுழலும்
பூமியை -
அறுவை சிகிச்சை செய்து
அகற்ற உம்
ஆயுர்வேதக் கரங்கள்
எங்கே?

●

மலட்டு வயல் வெளி!

வானத்தில் வலம் வரும்
வற்றாத ஊற்றே!

இந்திய கலிலேயா
கடற்கரையெங்கும் -
ஈரால் பண்ணைகள்;
எல்லை ரோந்துகள்!

மன்னாக்களுக்குப் பதில்
மர்ம விமானங்கள் தூவும்
'பாராசூட்' ஆயுதங்கள்!

வருத்தப்பட்டு பாரம் சுமப்பவர்கள்
இளைப்பாறும்
இடங்களிலெல்லாம்
லத்தி அடிகள்!

மாளிகைகளின் வாசல்களில்
ஏழை வாசருக்களின்
எலும்புக் கூடுகள்!

தீப்பெட்டிகளுக்குள் புதைக்கப்பட்ட
குழந்தைகளுக்கு -
சிவகாசியே
பரலோக ராஜ்ஜியம்!

ஈசாயின் அடிமரத்தில்
கோடரிகளுடன் கூலிகள்!

சிலுவைபோல்
கீழே கிடக்கும்
நாற்சந்தியின் இருட்டில்,
அப்போஸ்தலர்களையும்
விபச்சாரத்திற்கு அழைக்கும் மன்னிப்பு கிட்டாத
மகதலேனா மரியாள்கள்!

●

சுவிசேஷத்தைப் புறக்கணித்து
சொந்த விளம்பரங்களை மையப்படுத்தும்
சுயநலக் களைகள்!

ஆன்மீக இருக்கையில்
அரசியல் திருக்கைகள்!

தவறுகளைச் சுட்டிக் காட்டுகிறவனைத்
தவணை முறையில்
சிலுவையில் அறையும்
தலைமைத்துவங்கள்!

தொழில்மயமான
''கார்ப்பரேட்'' ஊழியங்களால்
தோற்றுப் போனது
தூய ஆன்மீகம்!

●

தச்சனின் மகனாய்
தர்மத்தைச் செதுக்கியவரே!

நிறைகுறைகளை மேவும்
நீதிநாளின் நிமிடங்கள் அறியோம்!

அதுவரை -
எல்லா இயல்களையும்
உள்வாங்கிய உமது
இறையியலால் நாங்கள்,
அறிந்து கொள்வது -

ஆணி அடிப்பவர்களையும்
அன்பு கூர்ந்தால் - அது
ஆணி அடிப்பவர்களின்
ஆத்துமாக்களையும் சேர்த்து
ஆன்மீக அறுவடைக்கு
ஆதாயமாக்கும் என்பதாகும்!

●

கர்த்தரிசமே கம்யூனிசம்!

கர்த்தர் இயேசு
அருள்முதல்வாதத்தையும்
பொருள்முதல்வாதத்தையும்
முன்வைத்தார்!

காரல் மார்க்ஸ்
ஆதிக்கத் திருச்சபையின்
ஆடம்பர அருள்முதல்வாதத்தை
பின்தள்ளி
ஏழைகளுக்கான
பொருள்முதல்வாதத்தை
முன்வைத்தார்!

கர்த்தரை அறியாதவரல்ல
காரல் மார்க்ஸ்!
காரல்மார்க்சின் ‘மூலதனம்’,
கர்த்தரின் மொழிகளே!

ஆகாரத்தை
பகிர்ந்தளித்ததாலும்,
முந்தினோர்க்கும்,
பிந்தினோருக்கும்
ஒரே கூலியை உவந்து
கொடுத்ததாலும்,
‘கம்யூனியன்’, என்ற

திருவிருந்தை
சாதி வித்தியாசம் இல்லாமல்
சபைக்கு அறிமுகப்படுத்தியதாலும்...
தன்னை விற்ற
முப்பது வெள்ளியினால்
நிலமில்லா குயவருக்கு
நிலம் தந்ததாலும்...
யூதர்களின்
சுத்திகரிப்பு கற்சாடிகளில்
'ரசவாதம்', செய்து...
யூதர்களுக்கே தந்ததாலும்...
தனியுடமை
நியாப்பிரமாணங்களை...
பொதுவுடமையாக்கியதாலும்...
உதிரத்தீட்டுகளை மட்டுமல்லாது...
சமூகத் தீட்டுக்களை அழித்து
சமத்துவம் மலர்த்தியதாலும்...
கம்யூனிசத்தின் முதல்
பிதாமகன் கர்த்தர் இயேசுவே!
கர்த்தரிசமே... கம்யூனிசம்;
கம்யூனிசமே கர்த்தரிசம்!

முற்போக்குமில்லாத...
பிற்போக்குமில்லாத...
புறம்போக்குகளை அவர்
தேர்ந்தொடுத்தார்;
அவர்கள் மூலம்
அரண்மனைகளை நோக்கி
போர்தொடுத்தார்!

ஆடுகளை
இடம் வலமாகப் பிரித்ததால்...
இறைவன்...
இடதுசாரியும் இல்லை...

வலதுசாரியும் இல்லை - அவர்
பாதசாரிகளின் பரமப்பிதா!

ரூத்தின் களம்...
கதிர்களின் களமல்ல;
கம்யூனிசத்தின் களம்!
ராகாப்பின் சுவர்வீடு...
வேசியின் வீடல்ல...
சிவப்புநூல் சித்தாந்த ஏடு!

சிலுவையில் அறையப்படும் முன்
இயேசுவை போர்த்திய
சிவப்புச் சால்வை...
பலியின் அடையாளம் மட்டுமல்ல;
பகிர்தலின் அடையாளம்!

வேதாகமம் கருப்புச் சட்டையை
அணிந்திருக்கலாம்;
உள்ளிருக்கும் வேதாகமம்
சிவப்பு உடல்!

கிறிஸ்தவக் கம்யூனிசத்தை
முதலில் அறிவித்தவர் இயேசு!
ஆலயத்தின் முதலாளிகளை
அப்புறப்படுத்தியவர் இயேசு!

கதிர் அறுவாளும்,
தச்சனின் சுத்தியலும்...
அவர் களப்பணியின் கருவிகள்!

அறுவடை மிகுதி;
ஆட்களோ கொஞ்சம்!
அப்புறம் என்ன?
சமத்துவப்பாடலோடு
சபையை கட்டுவோம் வாருங்கள்!

●

BIO DATA

Name : Rt.Rev.Prof.L. **Joseph Mohan Kumar.**

Soubriquet : Youreka Lemurian, Mohanapiriyan.

Date of birth : 24.06.1968

Parents name : late.Rev.Dr.S. Lawrence. Mrs. Vasantha Jayavathy

Educational qualification :

M.A., B.D, M.Th, P.hd., D.Litt., M.Phil., D.D.

Ordination :

The pastor -TELC

The Tamil Evangelical Lutheran church.(Trangueber . Tamil Nadu)

Bishop consecration : ACI .

The Bishop of Anglican church of India Arch diocese of Travancore and Cochin,
Kerala.

The Bishop of / (CEEC)

The Communication of Evengelical Episcopal churches (Anglican)
India.

Funder and President of :

International Lutheran communication & council.

Kollywood to Golgtha International Cine church.

Inter Religious Ecumenical union.

International christen Tamil Union.

EXPERIENCE :

35 Years Experience of film and media and literature Ministery writter of 20 Book's

Composeed more then 500 song's

Address :

Post bag No: 5313,
Kodambakkam,
Chennai -600 024.
South India.
Email : bishopjmk@gmail.com.

“**சிலுவைச்சித்தர்**” என அனைத்துக் கிறித்தவ இலக்கிய ஊடக உலகில் பரவலாக அறியப்பட்ட லா.ஜோசப் மோகன்குமார் “**மோகனப்ரியன்**” “**யுரேகா லெமூரியன்**” என்றப் புனைப் பெயர்களில் நீண்ட நெடுங்காலமாய், தன் கலை இலக்கியப்பதிவுகளை அறைகூவலாய் அறிவித்து வருகிறார்! யோசேப்பின் பலவர்ண அங்கியைப் போல, பல்வேறு தாலந்துகளை பெற்ற இவரது படைப்புகள் மாற்று விடுதலை இறையியலையும், வர்க்கப்–போராட்டத்தின் வரலாற்றுச் சத்தத்தையும் வலுவாக ஒலிப்பவை! இவரது, “**கவண்கல் கவிதைகள்**” “**தினம் ஒரு தீப்பந்தம்**” “**பகுத்தறிவு கிறிஸ்வதம்**”, போன்ற பல்வேறு தொகுதிகள் பல்வேறு இறையியல் கல்லூரி மாணவர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டவை பாரம்பரியமிக்க தமிழ் சுவிசேஷ லூத்தரன் திருச்சபையின் (TELC) கௌரவ ஆயராகவும், பன்னாட்டு லூத்தரன் கூட்டமைப்பு & பேரவை (ILCC)-யின் தலைவராகவும், இந்திய ஆங்லிக்கன் திருச்சபையில் (ACI&CEEC) பேராயராகவும் பணியாற்றிவரும் இவர், உலகின் முதல் திரைப்பட உலகிற்கான கோலிவுட் To கொல்கதா என்ற திருச்சபையை நிறுவியவர்! இரண்டு வருடங்களாக இறை வேண்டலோடு எழுதப்பட்ட இந்த “**தச்சனின் கதை**”, இயேசு கிறிஸ்துவின் புதுக்கவிதை வாழ்க்கை வரலாறு மட்டுமல்ல, இயேசுவின் விடுதலை இறையியலோடு பல்வேறு இயல்களையும் உள்ளடக்கிய ஆவணப் பதிவாகும்!



பன்னாட்டுக்கிறித்தவத் தமிழ்சங்கம்

(A Unit of ILCC/Gov.Trust No.00433/22)

NITI Aayog Government Of India Ngo Darpan Unique
ID No. For ILCC : TN/2022/0321174

Post Box No; 5313 கோடம்பாக்கம்
சென்னை - 600 024. தென் இந்தியா
மின்னஞ்சல் : bishopjmk@gmail.com